
கம்பன் மலர்

2000



கம்பன் கழகம், கோவை

கம்பன் புகழ் வாழ்க !


கன்னித் தமிழ் வாழ்க !

கம்பன் மலர்

2000

அறிஞர் நா. வரதராசுலு நாயுடு அவர்கள் தரும்

இராமாயணக் குறிப்புகள்-II



கம்பன் கழகம்

மணி மேனிலைப் பள்ளி வளாகம் ★ கோவை - 37

கடவுள் வாழ்த்து

மூன்று உரு எனக் குணம் மும்மை ஆம் முதல்
தோன்று உரு எவையும், அம் முதலைச் சொல்லுதற்கு
ஏன்று உரு அமைந்தவும், இடையில் நின்றவும்,
சான்று உரு உணர்வினுக்கு உணர்வும், ஆயினான்.

கம்பன் புகழாரம்

நீதிக்கோர் உறைவிடமாய், பண்பாட்டின் நிலைக்களமாய் நிகரில்லாத
பாதையிலே அழைத்தேகும் பண்புடைய தோழனுமாய், பாருக்கெல்லாம்
ஆதிபகவன் நெறியை அறிவிக்கும் முரசமாய், அமைந்து நின்ற
வேதத்தின் மறுபதிப்பாய் விளங்குகின்றான்! கம்பன் வெல்க! மாதோ!

— செந்தமிழ் அருட்செம்மல் பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமி



கம்பன் கழகம்

மணி மேனிலைப் பள்ளி வளாகம், கோவை - 641 037

தலைவர் : 'கம்பன் அறநெறிச் செல்வர்'

திரு. ஜி. கே. சுந்தரம்

துணைத் தலைவர்கள் : திரு. ஆர். துரைசாமி நாயுடு
திரு. இ. வேங்கடேசலு
திரு. சி. சௌந்தரராஜ்
டாக்டர். ம. ரா. போ. குருசாமி
திரு. எல். சோமு
திரு. சபா. சிங்காரம்

செயலர் : திரு. க. மீ. வேங்கடேசன் பொருளாளர் : திரு. இரா. கோபாலன்

இணைச் செயலர்கள் : திரு. இராம. இருசுப் பிள்ளை (மலர் பதிப்பாசிரியர்)
திரு. கே. வைத்தியலிங்கம்
திரு. பி. ஆர். ராஜகோபால்
திரு. நா. நஞ்சுண்டன்

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு. பி. கே. வேங்கடாசலக் கவுண்டர் டாக்டர். பா. சம்பத்குமார்
டாக்டர். க. வெள்ளிமலை திரு. பி. வி. பத்மநாபன்
திரு. அருட்பா தங்கவேலு திரு. மாணிக்கம்
டாக்டர். சாந்தா பழனிசாமி திருமதி. மோகனா ரங்கநாதன்
டாக்டர். தரணி பாஸ்கர் திரு. எஸ். கோபால்தாஸ்

வாழ்க வையகம் !

வாழ்க வளமுடன் !



என்னுரை

கோவை கம்பன் கழகம் கடந்த 28 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடந்து வரும் கம்பன் விழாவில் கம்பன் மலர் வெளியிட்டு மகிழ்கின்றது. சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் (2000) அமரர் என். வரதராசுலு நாயுடு அவர்களின் ஆழ்ந்த ஆய்வில் வெளிப்பட்ட இராமாயணக் குறிப்புகள் மட்டுமே வெளியிடப்பெற்று வருகின்றன.

அறிஞர் என். வி. என். அவர்களின் ஆய்வு உளத்தெழுந்த அரிய குறிப்புகள் சிதறிப் பயனற்றுப் போதல் கூடாது எனக் கருதிய கோவைக் கம்பன் கழகத்தலைவர், கம்பன் அறநெறிச் செம்மல் உயர்திரு ஜி. கே. சுந்தரனார் அவர்கள், அவர்தம் குறிப்புகளின் தொகுப்பாக 1999 மலரும், 2000 ஆண்டு மலரும் மணம் பரப்பின் எதிர்கால உலகம் பயன்பெறும் என்று உணர்த்தியதின் விளைவே இம்மலர் (2000).

இம்மலரின் கருத்துகட்குக் காரணமான பெரியவர் அமரர். நா. வரதராசுலு நாயுடு அவர்களை அலுவலர் உலகமும், அறிஞர் உலகமும், நண்பர் உலகமும் என். வி. என். என அன்போடு அழைத்து வந்தமையே அவரின் இனிய இயல்பைக் காட்டும் ஒரு நற்சான்று ஆகும். திரு. என். வி. என். அவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பனிரெண்டாம் ஆண்டு, ஆகஸ்டுத் திங்கள் பத்தொன்பதாம் நாள் (19—8—1912) பூளைமேட்டில் ஒரு வேளாண் குடியில் தோன்றி ஈரோட்டு மகாஜனா உயர்நிலைப் பள்ளி, சென்னை மாநிலக் கல்லூரி, சென்னை சட்டக் கல்லூரி ஆகியனவற்றில் பயின்ற பின்னர், இலண்டன் சென்று நான்காண்டுகள் கற்றுப் பட்டம் பெற்ற பண்பாளர். அவர்கள் கற்றனவெல்லாம் ஆங்கிலத்தின் மூலமே; தாய் வழியாகப் பெற்றனவெலாம் தெலுங்கு மொழியின் வாயிலாகவே; விரும்பிப் படித்தனவெலாம் வடமொழி நூல்களே. என்றாலும், அவர்கள் உற்றனவெலாம் தமிழ் மொழியின்மீது ஆராக் காதல். அவ் ஆராக் காதலால் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்தும் தோய்ந்தும் அவரால் கற்க முடிந்தது; அவற்றின் ஆசிரியர்களின் உள்ளக் கிடக்கைகளை உள்ளவாறு உணர்ந்து உணர்த்த முடிந்தது.

இவர் அரசுப்பணியில் தன் வாழ்வைத் தொடங்கி கடமைகளைக் கண்ணென ஆற்றி மிக மேல் நிலைக்கு வளர்ந்தவர். தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநராக உயர்ந்து நின்ற இவரைச் சில சக்திகள் தேசிய சேமிப்புக் கழகத்தின் நிர்வாக இயக்குநராக மாற்றின. வாழ்வில் வருவனவற்றை எதிர்த்து நிற்காது ஏற்கும் இயல்பினராம் இவர் ஏற்ற அப்பொறுப்பையும் பல ஆண்டுகள் செவ்வனே செய்த பின்னர் இறுதியில் இரண்டு ஆண்டுகள் தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றார்.

பணியில் இருந்த காலத்தும், ஓய்வு பெற்று வாழ்ந்த காலத்தும் ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் உள்ள கறக வேண்டிய நூல்களைத் தேர்ந்து, ''சாந்துணையும் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும்'' என்ற கூற்றுக்கு ஒப்ப, ஒளிமிக்க விளக்கொளியில் லென்சின் துணைகொண்டு, படித்துக் கொண்டே இருப்பார். படிப்பதும் குறிப்பு எடுப்பதும் அவர்தம் பொழுதுபோக்கு. ஒரு முறை பேராசிரியர் டாக்டர். ம. ரா. போ. குருசாமி அவர்கள் ''அய்யா! இவ்வளவு இடர்ப்பாட்டோடு,படித்தலும் வேண்டுமோ எனக்கேட்டபோது, ''படிக்கமுடியவில்லை என்றால் வாழ்வு எதற்கு'' எனச் சொன்னார் என அவர் கூறி மகிழ்வார். கற்பதிலே அவர்க்கிருந்த நாட்டத்திற்கு இதனினும் சான்று வேறு வேண்டுமோ?

இவர் சாந்தி அறக்கட்டளையின் வாயிலாக, 'அமலன் ஆதிபிரான்', 'ஆமென்', 'இரணிய வதைப் பரணி', 'ஆண்டாள் பிள்ளைத்தமிழ்' போன்ற நூல்களை வெளியிட்டுப் பதிப்பாசிரியராகவும் விளங்கினார். நகைச் சுவையோடு பேசும் நல்லுளம் கொண்ட இவர் அகத்திலும் முகத்திலும் தோய்ந்து பொழிவது அமைதி. எனவே, மோன வியோமத்தினிடை வயங்கும் தேவை உணர்ந்த இவர் பேசுவது மிகமிகக் குறைவு. பிறர் மனம் புண்படாது பேசும் பண்பாளர். இவர் தாம் கட்டிய இல்லத்திற்கு ''சாந்தி இல்லம்'' என்ற பெயரிட்டுத் தம் இறுதிக் காலத்தினை அங்குக் கழித்தார்.

இத்தகு சிறப்புக்களை ஒருங்கே பெற்றிருந்த அறிஞர், மனிதம் என்ற மன இனிமை இயல்பைப் பெற்று மிளிர்ந்த மனிதர். அமரர் என. வி. என். அவர்களின் பல்வேறு வகையான கருத்துக் கருவூலங்களின் தொகுப்பே இம் மலர் (2000) இம் மலரில் இடம் பெற்றுள்ள செய்திகளைச் சுவைப்போர், திரு. என். வி. என். அவர்களின், தமிழ் இலக்கண, இலக்கியப் புலமையும், ஆழமான ஆங்கில அறிவும், வடமொழி வல்லமையும் எவ்வளவு அகலமானவை, ஆழமானவை என்பனவற்றை நன்கு உணர்வர். இம் மணக்கும் மலரின் இதழ்கள் பல. அவற்றில் :

கம்பர்பெருமான் கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றப்படும் புகழ்மொழி எப்படி பொருத்தமாகின்றது எனக்காட்டுவது கவிச்சக்கரவர்த்தி கம்பன்; கம்பன், வான்மிகி வாய்மொழிகள் கொண்டு சமஸ்க்ருதமும் தமிழும் நம் நாட்டின் உயர் மொழிகள் என்பதைத் தெளிவுபடுத்துவது அடுத்த கட்டுரை. கடவுள் இராமனாக வந்த அவதாரத்தின் நிலையை விளக்குவது கால் தரை தோய நின்று கட்புலக் குற்றதம்மா என்ற கட்டுரை இராமாயணக் கட்டுரைகளே இடம்பெற வேண்டும் என்ற நோக்கில் இருப்பினும் என் கவனக் குறைவால் ஸம்ஸ்கிருதம் என்ற கட்டுரையும் கட்டுரைகளோடு அச்சகம் அனுப்பப்பெற்றது. அவர்களும் அச்சுக் கோத்துத் தவறு திருத்த என்னிடம் அனுப்பினர். கட்டுரையின் ஆழம் கருதி ஆண்டவன் சித்தம் என ஸம்ஸ்க்ருதம் என்ற கட்டுரையும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரை சமயதத்துவ வாதிகட்கு ஒரு வரப்பிரசாதம்.

குகன் கண்ட பரதன் என்பது பட்டிமன்ற குறிப்பு; குகனின் பெருமை கூறுவது வந்தெதிரே தொழுதானை வணங்கினான்; உரைக்கும் முறையறிந்து உரையாத விடணனின் குறையை விளக்குவது விபீஷணன், அரசன் குடிமக்களின் உடம்பு என்பதன் உயர்வினை விளக்குவது உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்

என்பது. பெண் உடைமைப் பொருளாகக் கருதப்பட்டதனைத் தெரிவிப்பது பெண்ணை ஆக்கிரமித்தல். சீதையின் பெருமையைப் பேசுவது எம்பிரான்தன் துணைப் பெருந்தேவி. வியாக்கியான கர்த்தர்கள் கம்பனைப் பயன்படுத்திக் கொண்டதனைக் காட்டுவது வியாக்யானங்களில் கம்பன்; இராமனும் சீதையும் இதயம் மாறிப்புக்க இனிய செய்தியை இயம்புவது மேவும் மெய். குறிகளால் குறித்தோ பொறிகளால் அறிந்தோ கொள்ளமுடியாத பரத்தினைக் கம்பர் குறிகளால் காட்டிடக் கருதிடும் முயற்சி அடுதத கட்டுரை. ஆசிரியர் வான்மீகியில் தான் அனுபவித்த செய்திகளின் தொகுப்பு அறிய வேண்டியன.

இம்மலரில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகளி பெரும்பாலும் குறிப்புக்களே, எந்தக் குறிப்பையும் விடாமல் அச்சில் கொணர வேண்டும் என்ற முடிவால், சில இடங்களில் தொடர்பு இல்லாதது போலத் தோன்றுவது இயற்கை. என்றாலும், பயன்பாடுமிக்க, போற்றிப் பாதுகாக்கும் சிறப்புமிக்க செய்திகள் தந்த ஆசிரியப் பெருமகனார் நாமம் வாழ்க !


இம்மலரைப் பதிப்பிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த மலர்க் குழுவினர்க்கும், செயற்குழுவினர்க்கும், தலைவர் அறிநெறிச் செம்மல் ஜி.கே.எஸ் அவர்கட்கும் எம் உளம் நிறைந்த நன்றி. சிறப்புறவும் அழகுறவும் இம்மலரை வடிவமைத்து அச்சிட்டுக் கொடுத்த கீதாஞ்சலி அச்சக உரிமையாளர் மா. கோபி அவர்களுக்கும், கடமையில் ஊறித்திளைத்துச் செயல்படும் அச்சகப் பணியாளர்கட்கும் எம் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இம்மலரில் உள்ள செய்திகள், சில இடங்களில் தொடர்பாக இல்லையெனினும், சில இடங்களில் தொட்டுக்காட்டிச் சொல்லப்பட்டிருந்தாலும், பல தலைப்புகளில் கட்டுரைகள் வரைய முயல்வார்க்கும், கம்பனை நடுநிலை நின்று ஆய்வு செய்வார்க்கும் ஒரு வரப்பிரசாதம் என்பது என் கருத்து; வாசகர்தாம் அதனை முடிவு செய்யவேண்டும். எல்லோரையும் வாழ்க வளமுடன் என வாழ்த்தி வணங்குகின்றேன். வாழ்க வையகம் !

இராம. இருசுப்பிள்ளை
மலர் பதிப்பாசிரியர்

2–2–2000





பொருளடக்கம்

முன்னுரை

அமரர் நா. வரதராஜு நாயுடு அவர்களைப்பற்றி இலக்கிய உலகில் அறியாதவா இல்லை. அவர் தேசிய ஆயுள் காப்பு கழகத்தில் பெரும் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர். எனினும், வடமொழி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நல்ல புலமையுடன் விளங்கினார். அவர் தம் வாழ்நாளில் கம்பனைப்பற்றிப் படித்த போதெல்லாம் வெறும் குறிப்பாக மட்டும் சிலவற்றை எழுதி வைக்காமல், தன் சிந்தனையில் உதித்த பல அரிய விஷயங்களைக் கட்டுரைகளாக எழுதி வைத்துள்ளார்கள்.

அவரது கையெழுத்தாகிய அரிய செல்வம் எனது பார்வைக்கும்-பயன் கொள்ளவும் உரிய நிலையில் அவரது குடும்பத்தவரால் என்னிடம் அளிக்கப்பட்டது. அவற்றைப் படிக்கும்போது அவை கையெழுத்துப் பிரதியாகவே இருந்து செல்லரித்துச் சிதைந்து விடலாகாது, பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை அறிந்தேன். எனவே, அவற்றை நமது கம்பன் கழக மலரில் கட்டுரைகளாக வெளிக்கொணர விரும்பினேன். இதனால் அவரது எழுத்துச் செல்வம் பாதுகாக்கப்படுவதோடு உலகுக்கும் பயன்படும் என்று எண்ணினேன்,

அவரால் எழுதப்பட்டவை இராமாயணம் பற்றியவை. கையெழுத்துப் பிரதியாக இருந்தன. சுமார் 400 பக்கங்கள். அவற்றினைப் பிரதியெடுத்துச் சிலவற்றை திரு ம. ரா. போ. குருசாமி அவர்களின் மூலம் வெளியிடுவதற்குரிய அளவில் திருத்தமும் செய்துள்ளேன்.

இவ்வாறாக, சென்ற ஆண்டு மலர் 104 பக்கங்களும் இவ்வாண்டு (2000) மலர் 118 பக்கங்களும் முழுக்க முழுக்க திரு. என். வி. என். அவர்களின் இராமாயணக் குறிப்புகளைக் கொண்டுள்ளன. இவையெல்லாம் இராமாயண ஆய்வாளர்க்கு ஒரு அரிய பொக்கிஷம் என்று கருதுகின்றேன். இம்மலரின் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்ற பேராசிரியர் அருள்நிதி இருசுப்பிள்ளையவர்கள் தம் கடமையைச் செம்மையாகச் செய்துள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்கள். இக்கருத்துச் செல்வத்தைப் பயன் படுத்திக் கொள்ள மனமுவந்தளித்த நா. வரதராஜுலு நாயுடு அவர்களின் குடும்பத் தார்க்கும் சிறப்பாக அவரது குமாரர் வ. அசோக் அவர்களுக்கும் நன்றி.

ஜி. கே. சுந்தரம்
தலைவர்



'கவிச்சக்கரவர்த்தி - கம்பன்'

அறிமுகம்

தமிழ் நாட்டில் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டம் பொதுவாகக் கம்பனையே சுட்டுவது. கம்ப ராமாயணத்தைப் படிக்காதவரும்கூட, கற்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்றே கூறுகிறார்கள். வேறு எந்தப் புலவனுக்கும் மக்கள் வாக்கில் சூட்டப்படாத விருது இது.

ஒரு பழம் பாட்டு :

அம்பிலே சிலையை நாட்டி, அமரர்க்கு அன்று அமுதம்ஈந்த
தம்பிரான் என்ன தானும் தமிழிலே தாலை நாட்டி
கம்பநாடு உடைய வள்ளல் கவிச்சக்கரவர்த்தி பார்மேல்
நம்பு பாமாலை யாலே நரர்க்கும் இன்று அமுதம் ஈந்தான்.

திருப்பாற் கடலிலே மேரு மலையை நாட்டிக் கடைந்து, தேவர்களுக்கு அமுதத்தை எடுத்துத் தந்த திருமாலைப் போல, தமிழ்மொழியைத் தன்னுடைய நாவால் கடைந்து, கவிச்சக்கரவர்த்தி கம்பன் பூமியில் பாட்டுக்களாகிய அமுதத்தை மக்களுக்கு ஈந்தான்.

இப்பாட்டை எப்போது, யார் இயற்றினார்கள் என்பதை அறியோம். இது ஒன்றே, இலக்கியத்தில் கற்பனைக் கவிச்சக்கரவர்த்தி எனப்புகழும் பாட்டு; வேறு சான்றுகள் இல்லை.

'கவி', 'சக்கரவர்த்தி', 'கவிச் சக்கரவர்த்தி' ''கம்பனுக்கு இப்பட்டம் சூட்டப் பெற்றது எப்போது?, யாரால்? ஏன்?''

கவி

இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ் இலக்கிய நூல்களில், மிகப்பழமையான சங்க நூல்களிலும் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவற்றில் - இலக்கண நூலான தொல்-காப்பியத்திலும், 'கவி' என்ற சொல் 'பாட்டு' என்னும் பொருளில் உபயோகிக்கப் படவில்லை, மாறாக, கவிகை, கவிக்குடில், கவி கிடுகு. சேர்தல், மூடுதல், இடிதல், கீழ்நோக்கல் (கவிழ்தல்) என்ற பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

'பாட்டு' என்ற பொருளில், 'கவி' என்ற சொல் சீவகசிந்தாமணியிலும், ஆழ்வார், நாயன்மார்கள் வாக்கிலும் பயிலுகிறது.

ஆனால் ஸம்ஸ்க்ருத (வட) மொழியில், நெடும் பண்டைக் காலத்திலிருந்தே 'கவி' என்ற சொல் மிக உயர்ந்த பொருளில் பயிலும். சில உதாரணங்கள் :-

1. ''வேதோ, வேதவித், அவ்யங்கோ, வேதாங்கோ, வேதவித். கவி :'' என்பது விஸ்ணுஸகஸ்ர நாமம்; மஹாபாரதத்தில் உள்ளது. விஷ்ணுவின் 1000 பெயர்களுள் 'கவி' என்பது 132 - ஆம் பெயர். இப்பெயருக்கு உரைகண்ட சங்கரர் 'க்ராந்த தர்சீ கவி : ஸர்வ த்ருக்' (தாண்டிப்

பார்ப்பவன், யாவற்றையும் காண்பவன்) எனவும், பட்டர் 'க்ராந்த தர்சித்வாத் கவி'' (தாண்டிப் பார்ப்பதால் கவி) எனவும் வகுத்துள்ளனர்.

2. ''கவிம் புராணம் அநுசாஸி தாரம்'' என்பது பகவத் கீதை (8, 9). இங்கு 'கவிம்' என்பதற்குச் சங்கரர் 'க்ராந்த தர்சினம், ஸர்வக்ஞம்' (தாண்டிப் பார்க்கிறவன், யாவும் அறிந்தவன்) எனவும், இராமானுஜர் 'ஸர்வக்ஞம்' (யாவும் அறிந்தவன்) எனவும் உரை எழுதியுள்ளனர்.

3. புராணஸ்ய கவே : தஸ்ய சதுர்முகஸமீரிதா'' எனக் குமார ஸம்பவத்தில். (2.17) காளிதாஸன் 'ப்ரஹ்மாவே முதல் கவி' எனக் கூறுகிறார்.

இது ராபர்ட் ப்ரௌனிங் சொல்லும்

'God is the perfect Poet who in his person acts his own creations' என்பதனோடு பொருந்தும்.

ஆக, 'கவி' என்ற பழைய சொல் ''பொருளை ஊடுருவி நோக்குவோன், மேல்எழுந்தவாறு அன்றி உண்மையைப் பார்ப்பவன், மறைபொருளைக் காண்பவன், முழு அறிவு படைத்தவன், எல்லாவற்றையும் ஒருங்கே காணும் திறம்வாய்ந்தவன்'' என்ற பொருளில் வழங்கியுள்ளது.

மேலும், ஆர்த்ர அந்தராத்மந : (மேகம் போலே உள்ளூர ஈரம் உடையவன்), 'லோக ஹிதாய இவ ப்ரவ்ருத்த (உலக நன்மைக்காக வாழ்பவன்) ஸமஸ்தேஷு அபி ச வஸ்து ஷு சுபம் : பத்ரம் முதம் பச்யந்த (எல்லாவற்றிலும் நன்மையையும் மங்களத்தையும், இன்பத்தையும் காண்பவன்) என்று கவிகளை வட மொழியில் புகழ்வர் : ஷேக்ஸ்பியர்

Finds tongues in trees, books in running brooks, sermons in stones and good in everything என்றதைப்போல.

கம்பன் தரும் இலக்கணம்

கம்பனே கவியின் இலக்கணத்தையும் கவிஞர் இயல்பையும் தன் காவியத்தில் பல இடங்களில் சொல்லுகிறார்; அவற்றில் சில வருமாறு :

''புவியினுக்கு அணியாய், ஆன்ற பொருள் தந்து. புலத்திற்றாகி,
அவி அகத்துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி வளாவி
சவி உறத்தெளிந்து, தண்ணென்று, ஒழுக்கமும் தழுவிச் சான்றோர் கவி''

ஒட்டக்கூத்தர் பாட்டில்

தமிழ் இலக்கியத்திலே 'கவிச்சக்கரவர்த்தி' என்ற சொல் தொடரைக் காண்பது ஒட்டக்கூத்தன் படைப்புகளில் மட்டுமே.

குலோத்துங்கன் கலிங்கத்துப் பரணி கொண்ட வரலாற்றினை அவன்மேல் பாடிய பிள்ளைத் தமிழில் கூத்தன் கூறுகிறார். அவர் குறிப்பிட்டது கம்பனையல்ல.

''பாடல் பெரும் பரணி தேடற்கரும் கவி
கவிச் சக்கரவர்த்தி பரவ''

என அவர் சயங்கொண்டானைப் பாடுகிறார். தக்கயாகப் பரணி இறுதி இரண்டு தாழிசைகளில்

''கோக்கும் தமிழ்க் கொத்தனைத்தும் வாழியே
கூத்தன் கவிச்சக்கரவர்த்தி வாழியே''
''வாழி திசைக் கப்புறத்து நாற்கவி
வாழி கவிச்சக்ரவர்த்தி கூத்தனே''

என முடிவுறுகிறது.

அடியார்க்கு நல்லார் உரையில்

இப்போது கிடைக்காத பரணி நூல் ஒன்றை ஒரு சக்கரவர்த்தி பாடியதாக அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரம் ''இந்திர விழவூர் எடுத்த காதை'' உரைப்பகுதியில் கூறுகிறார்.

எவ்வாறாயினும், தம்மைப்புகழ்ந்து காவியம் இயற்றிய சில புலவருக்கு அரசர் கவிச் சக்கரவர்த்தி பட்டம் சூட்டியதாகத் தெரிகிறது. ஒவ்வொரு தாழிசைக்கும் ஒரு பொன் தேங்காயை உருட்டியதாகவும், அது மூன்று மணிகள் பொதிந்த பொன் தேங்காய் எனவும் கூடக் கதைகள் உண்டு,

ஸம்ஸ்க்ருத இலக்கியத்திலும் கவிச்சக்கரவர்த்திகளைக் காணோம். ஆனால், அதற்கு இணையாக, 'கவி ஸார்வ பௌம' என்ற சொல் தொடரை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வால்மீகிக்குச் சூட்டுகிறார். (கோதாஸ்துதி 7). புலவனுக்குப் புலவன் செய்யும் பாராட்டு.

அவன் வாழ்ந்த காலத்தில் கம்பனுக்குச் செல்வத்தையோ, விருதுகளையோ அரசர் தந்ததாகத் தெரியவில்லை. தந்திருந்தால், சயங்கொண்டாரையும், கூத்தனையும் போல இலக்கியத்தில் அது இடம் பெற்றிருக்க வேண்டும்.

கையாளப்பட்ட பாடல்கள் சிலவே

அரசர்கள் ஒரு பால் இருக்க, புலவர்களே கம்பனைப் போற்றியதாகத் தெரியவில்லை. கம்பனுடைய பாட்டுக்கள் புலவர் வாயிலும் புழங்கவில்லை.

பேராசிரியர் முதல் மணவாள மாமுனிகள் வரை வாழ்ந்த ஜைந, சைவ, வைஷ்ணவ உரையாசிரியர் கம்பனிடமிருந்து கொண்ட எடுத்துக்காட்டுகள் மிகவும் குறைவு; கம்பனைவிடத் தரம் குறைந்தவை என நாம் இன்று கருதும் சீவகசிந்தாமணி, சூளாமணி, வளையாபதி, குண்டலகேசி, பரணிகளில் இருந்து எடுத்தாளப்பட்டவற்றைக் காட்டிலும் கம்பராமாயணப் பாடல்களை அவர்கள் கையாண்டது சொற்பமே.

கம்பன் ஏறத்தாழ 700 குறட்பாக்களைக் கையாண்டது மட்டும் அன்றி பலவற்றிற்கு விளக்கமும் தந்துள்ளார். ஆனால் பரிமேலழகர் எடுத்துக்காட்டாகக் கம்பன் பாட்டு ஒன்றே ஒன்று தான் என்று தோன்றுகிறது. அவ்வாறே, நம்மாழ்வார் பாசுரங்கள் பல கம்பனில் மிளிர்கின்றன. உரையாசிரியர்களும், அரும்பதம் எழுதியவரும் எடுத்தாண்ட கம்பன் வாக்கு 4 அல்லது 5 இடங்களிலேயே.

கவிகளும் மன்னர் தரும் "பரிசும்"

ஆதலின். கவிச் சக்கரவர்த்தி என்று கம்பனைப் புலவர்கள் பாராட்டியது 15-ஆம் நூற்றாண்டுக்குப்பிறகே ஆதல் வேண்டும்.

புலவர்கள் எப்போதும் அரசர்களால் பாராட்டப்பெறுவதை விரும்பி ஏற்கவில்லை; அப் பாராட்டு தமக்குச் சிறப்புத் தருவது எனவும் கருதவில்லை. வறுமையால் அவர்கள் செல்வர் பால் இரக்க நேரிடலாம். ஆனால், அவ்விரப்பு புலவரைத் தாழ்த்துவதாகவும் கொடையாளரை உயர்த்துவதாகவும் புலவர் கருதவில்லை. அக்கால உலகமும் கருத வில்லை.

சயங்கொண்டான் கலிங்கத்துப் பரணி பாடியபோது, அபயன் (குலோத்துங்கன்) அவனுக்குப் பொருள் ஈந்தானாம். பொருள் பெற்றுக்கொண்ட சயங்கொண்டான் தன்னை அவ் வரசனினும் உயர்ந்தவனாகக் கருதிக் கொண்டு அக் கருத்தை உலகுக்கும் எடுத்து அறைந்தான்.

''காவலர் ஈகை கருதுங்கால் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசு ஒவ்வா பூவில் நிலை
யாகாப் பொருளை அபயன் அளித்தான் புகழாம்
ஏகாப் பொருள் அளித்தோம் யாம்''

அபயன் அளித்தது நிலையாத பொருள்; யாம் அவனுக்கு அளித்தது நீங்காத புகழ். மிடுக்கைப் பாருங்கள்!

இந்த மிடுக்கைப் பாரதி வரையில் காண்கிறோம். வறுமையில் வாடும் பாரதி எட்டையபுரம் அரசர் தன்னை வந்து வழிபட வேண்டும் என்று சீட்டு அனுப்புகிறார் :

''பாரி வாழ்ந் திருந்த சீர்த்திப் பழந்தமிழ் நாட்டின் கண்ணே
ஆரிய, நீ இந் நாளில் அரசுவீற் றிருக்கின் றாயால்;
வாரியம் கருதி நின்னைக் கவிஞர் தாம் காண வேண்டின்
நேரில் அப்போதே எய்தி வழிபட நினைகி லாயோ?''

ஒட்டக் கூத்தனும் சயங்கொண்டானும் பெரும் புலவர்கள் எனினும், சக்கரவர்த்தி களால் அவர்களுக்குச் சூட்டப்பெற்ற பட்டம் நிலைபெறவில்லை.

கம்பன் பெற்ற கவிச்சக்கரவர்த்திப் பட்டம்

சக்கரவர்த்தித்வம், ஸாம்ராஜ்யம் என்ற கருத்துக்கள் பண்டைத் தமிழ் மரபுக்கு ஒவ்வாதன. வடநாட்டில் இருந்த அம் முறை தமிழ்நாட்டுக்குப் பரவத் தொடங்கியது பல்லவர் ஆட்சியில் கருத்து ஊன்றியதும் வலிமைபெற்றதும் சோழப் பேரரசில் சக்கரவர்த்தித்வம், ஸாம்ராஜ்யங்கள், தமக்குள்ளே உண்டாகும் முரண்பாடுகளால், பூசல் களால், விரைவில் அழிந்து போகின்றன. அவை வெறுமையானவை, மக்களுக்குப் பயன்தராதவை. அரசர்களையே சமூகத் தலைவராகவும் சிறந்தவராகவும் பகட்டாகக் காட்டுபவை. என்பதைப் புலவர் உணர்ந்தனர். அசுரத் தன்மையில் முடியக் கூடும் என்பதையும் அவர்கள் அறிந்தனர். ரோம சாம்ராஜ்யம் முதல் சோழ, விஜயநகர, முகலாய பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யங்கள் யாவும் இதற்குச் சான்று.

சிறந்த கவிகள் சக்கரவர்த்திகள் ஆக விரும்பவில்லை. சக்ரவர்த்திகளால் கௌரவிக்கப்படுவது தமக்குப் பெருமை தருவது எனக் கருதவும் இல்லை.

கம்பன் இராமாயணம் பாடி அரங்கேற்றிய காலத்தில் எவரும் அவரைச் சக்கரவர்த்தி என்று புகழவில்லை. பிற்காலத்தில் நாம் பெயர் அறியாத புலவன் ஒருவன் ''அம்பிலே நிலையை நாட்டி'' என்ற பாட்டைப் பாடினான். மக்களோ, கம்பன் கவிதைச் சிறப்பை அறிந்து மனமார அவனைக் கவிக்குலத் தலைவனாகப் போற்றினர்.

போற்றுதற்கான காரணங்கள்

போற்றுதற்குக் காரணங்கள் பல ஆகலாம்; அவற்றுள் சில.

1) வால்மீகம் அந்தக் காலத்தில், தமிழ்நாட்டில் நன்கு பயிலப்பட்ட நூல்; ஆனால் கால தேச பேதங்களால் தமிழ் மரபுக்குப் பல இடங்களில் ஒவ்வாததாக இருந்தது. முதனூற் கதையைத் தமிழ் மரபுக்கு ஏற்ப மாற்றி அமைத்து மக்கள் நுகருமாறு கம்பன் நல்கினான்: ''தெய்வமாக்கவி மாட்சி தெரிவிக்க'' ''வையம்... இகழினும்'' இராமாவதாரத்தைப் படைத்தான்.

2) தமிழில் காப்பியங்கள் இருந்தன; எனினும் தண்டி போன்ற புலவர் வகுத்த பெருங்காப்பிய இலக்கணத்துக்குப் பொருந்தும் காப்பியங்கள் உண்டா என்பது ஐயத்திற்கு உரியது. கம்பன் பெருங்காப்பிய கருத்தா என்பதற்காக மக்கள் இப்பட்டம் சூட்டி இருக்கலாம்.

(பெருங் காப்பியங்கள் யாவும் முதனூல்கள் அல்ல. ஹோமரும், அக்காலத்திருந்த பழங்கதைகளைத் தொகுத்துப் பாடியதாகவே கூறுகிறான்; Paradise Lost பழைய விவிலியக் கதையே அன்றோ?)

3) வாழ்க்கையில் ஒருவனுக்கு நேரும் வெற்றி-தோல்வி, எழுச்சி-வீழ்ச்சி, மான-அவமானம், உயர்வு-தாழ்வு, நன்மை-தீமை போன்றவற்றை உரியவாறு வெளிப்படுத்த அவன் அறியான். பெருங்கவிகள் தம் பாத்திரங்களின் மூலமாக நம்மில் பலருடைய மனத்தில் எழும் கருத்துக்களை வெளியிடுகின்றனர்: வெளியிடும்போது அக் கருத்தின் ஆழம், திண்மை, எளிமை, பொருள், செறிவு, தெளிவு - யாவற்றையும் கண்டு நாம் வியக்கிறோம்.

இராமனுக்கோ, வாலிக்கோ, குகனுக்கோ அநுமனுக்கோ நேர்ந்த சூழ்நிலை நமக்கும் நேருகிறது. ஆனால், அவற்றைக் கம்பன் சொன்னவாறு நாம் சொல்ல முடிவதில்லை. ''அடடா, என்மனத்தை உள்ளபடி அறிந்துள்ளான். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு கவிஞன். எவ்வளவு அழகாக என் கருத்தை அவன் அப்போதே சொல்லி வைத்தான். அவன் 'ஸர்வ த்ருக்'; தன் காலத்தில் திகழ்வது மட்டுமின்றி எதிர்காலத்தில் திகழ இருப்பதையும் அல்லவா தன் காவியத்துள் பொதிந்துள்ளான்'' என்று வியந்து கம்பன் இடத்தால் மட்டும் அன்றி, காலத்தாலும் சூழ்நிலையாலும் (தேச, கால, வர்த்தமானங்களால்) கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றுகிறோம்.

4) எத்தனை சந்தங்கள்! ஒவ்வொரு துறையிலும் என்ன ஔசித்யம்!! (தக்கது, தகாதது பற்றிய உயர்வு நவிர்ச்சி) என்ன பொருள் கொண்டு கூட்டு; எப்போதோ நடந்ததைப் பின்னர்க் கொணர்ந்து முடிப்பது.

கவிச் சக்கரவர்த்தி எனப் பாராட்டப் பெறுவதற்கு இவ்வாறு பல காரணங்கள். அவற்றின் நிலைக்களன் கம்பராமாயணம்.

அழகு, பொருள், அறிவு, அனுபவிக்கக் கூடிய இடங்கள், வழிகள், ஒளி, தெளிவு, குளிர்ச்சி, நல்ல ஒழுக்கம் என்ற 9 குணங்களை உடையது பெரியவர்களுடைய பாட்டு.

''கற்பகம் அனைய அக்கவிஞர் நாட்டிய சொல் பொருள் ஆம்
எனத் தோன்றல் சான்றது''

— பம்பைப் படலம் 5

வேண்டியன எல்லாம் தரும் கல்பக மரம் போன்ற கவிஞரின் சொல்லும் பொருளும்போல் தோற்றத்தில் சிறந்தது.

மேற்கூறியது கம்பன் தானே ஆகிச் சொன்னவை; - கவிக் கூற்று

''கவிகள் ஆகுவார் காண்குவார் மெய்ப்பொருள்''

— இரணியவதைப் படலம் 32

இது பிரகலாதன் வாக்கில் வருகிறது.

''நல் இயல்கவிஞர் நாவில் பொருள் குறித்து அமர்ந்தநாமச்
சொல் என, செய்யுள் கொண்ட தொடை என, தொடையை நீக்கி
எல்லையில் சென்றும் தீரா இசை என, பழுது இலாத
பல் அலங்காரப்பண்பே காகுத்தன், பகழிமாதோ!''

— கும்பகருணன் வதைப் படலம் 22

இது இராவணன் இராமனுடைய அம்பைப் பற்றிச் சொல்வது. அது கவிஞருடைய சிறந்த சொல் போன்றது; சொற்களை முறையாகத் தொடுத்த பாட்டுப் போன்றது; பாட்டு சொல்லும் புகழ் போன்றது; பல அணிகளை உடையது.

காவியத்தில் தலைவனையும் தலைவியையும் முதல் முதலாகக் கவிஞன் நுழைக்கும் பகுதி சிறப்பு வாய்ந்தது. சீதாப் பிராட்டி நம் கண்ணுக்கு முன்பு முதலாகத் தோன்றுவது மிதிலைக் காட்சியில்

''பொன்னின் சோதி, போதினின் நாற்றம், பொலி பூவின்
தென் உண் தேனின் தீஞ்சுவை, செஞ்சொல கவி இன்பம்''

என்பது பாட்டு. அவளுடைய திருமேனியின் ஒளியைக் காண்கிறோம்; திருமேனியிலிருந்து பொங்கும் மணத்தை முகருகிறோம்; தேன்போல இனிய மொழியைக் கேட்கிறோம். ஐந்து புலன்களில், கண்களும், மூக்கும், காதுகளும் இந்த இன்பத்தை நுகருகின்றன. ஆனால் தலைவியை நுகரப் புலன்கள் மட்டும போதா. நுண்கருவியாகிய பண்பட்ட மனமும் வேண்டும். மனத்தால் மட்டும் நுகரக் கூடியது கவி இன்பம்; 'செஞ்சொல் கவி இன்பம்' அவள்,

எந்தப் புலன் இன்பமும் இந்த மன இன்பத்திற்கு ஈடாகாது. ஒருவன் அனுபவிக்கக் கூடிய இன்பங்களுள் மிக மிகச் சிறந்தது செஞ்சொல் கவியை அனுபவிக்கும் இன்பமே. இக்கருத்தைக் கொண்டு கம்பன் சீதா பிராட்டிக்கு இவ்உவமையை படைத்தான்.

நுகர்வுத்திறன் சுலபமல்ல

இந்தக்கவி இன்பம் எல்லோராலும் நுகரக் கூடியதா? இல்லை; இல்லை. அவ் இன்பம் நுகரும் ஆற்றல்பெற முழு நல்வினைப் பயன்வேண்டும் என்கிறார் மகாகவி காளிதாசன்.

''அநாக்ராதம் புஷ்பம், கிஸலயம், அலூநம் கரருஹை, அநாவித்தம் ரத்தம், மதுநவம் அநாஸ்வாதித ரஸம், அகண்டம் புண்யா நாம் பலம் இவ.'

முகராத பூ, கிள்ளாத தளிர், தோளாதமணி, சுவைக்காத புதுத்தேன், இவை மூக்கு, கை, கண், நா, ஆகிய புலன்களுக்கு மட்டும் விருந்தாவன. அவை போதா. ஏன்எனில், முழு நல்வினைப்பயன் போன்றவள் சகுந்தலை.

ஆக, கம்பனையும் காளிதாசனையும் இணைத்துப் பார்த்தால், 'செஞ்சொல் கவி இன்பம்' நுகரும் ஆற்றல் ''முழு நல்வினைப் பயன்'' என்பது தெளிவாகிறது.

நல்வினைப் பயனால், நாம் இக்கவி இன்பத்தைத் துய்க்கிறோம். 'கவி இன்ப'த்தைத் துய்க்க இயலாதவர் ''நல்வினைப் பயன்'' இல்லாதவர்.

'கவி என்ற சொல்லைப் பேரின்பமாக, பெறுவதற்கு அரிய பேறாக, ஒழுக்கச் சிறப்பாக, மெய்ப்பொருளாக, அழகின் சிகரமாக யாவற்றினும் உயர்ந்த பொருளாக, கம்பன் கையாண்டார்.

கவிஞர் இந்தப் பண்புகள் யாவற்றையும் ஒருங்கே கொண்டவராக இருந்தனர்; இருக்க வேண்டும் என்பது அக்கால மரபு; அதுவே கம்பனுடைய கருத்து.

சக்கரவர்த்தி

சங்க காலத் தமிழ் மன்னர்கள் அரசர்களே அன்றிச் சக்கரவர்த்திகள் அல்லர். தமிழ் மன்னவர்களையும் அவர்களுடைய கடமை - உரிமைகள், மக்களோடு கொண்டிருந்த தொடர்புகள் போன்றவற்றையும் ஆராயவேறு கட்டுரை வேண்டும். ஆனால், ஒரு மன்னவன் மற்றொரு மன்னவனைக் கீழ்ப்படிய வைத்துத் தன் பிரதிநிதி யாக ஆட்சி செய்வித்தல் சங்க கால மரபுக்கு முரண்பட்டது.

சங்க நூல்களில்

சக்கரவர்த்தி - ஸாம்ராட் - ஸாம்ராஜ்யம் என்ற கருத்துக்கள் வடநாட்டில் அக் காலத்தும் இருந்தன; இருந்தமையைத் தமிழர் அறிந்திருந்தனர்; ஆனால், பின்பற்ற உரியனவாகவோ, பெருமை உடையனவாகவோ அவற்றைச் சங்க காலத் தமிழர் கருதவில்லை. (பின்னர் இந்த நிலைமை மாறியது எனலாம்.)

புறநானூற்றில் ஒரு பாட்டு (175): ''மோரியர், திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைந்த உலக இடைகழி அறைவாய் நிலை இய, மலர்வாய் மண்டிலந்தன்ன நாளும், பலர் புரவு எதிர்ந்த அறத்துறை நின்னே'' என்பது.

மோரியர் சந்திரகுப்தன், அசோகன் வழிவந்த பாடலிபுரத்து அரசர். அவர்கள் கிரேக்க நாட்டிலிருந்து இந்தியா வரை படை எடுத்து நாடு கவர்ந்து, தம் பிரதிநிதிகளை ஆங்காங்கு வைத்துச் சென்ற கிரேக்கரின் ஸம்பந்திகள். கிரேக்கரைப் பின்பற்றி, மோரியர் தமிழ்நாடு நீங்க இந்தியா முழுவதும் நமது ஆட்சியைப் பரப்பினர்; ஆண்டனர். அவர்களுடைய ஆணை உதய கிரிக்கும் அப்பால் செல்லாமல் தடுத்தான், சூரியன். அந்தச்

சூரியனைப் போலவே, மக்களை அறம் வழுவாது காத்தவன் இப்பாட்டால் கூறப்படும் ஆதனுங்கன் என்ற அரசன் - என்பது புறநானூற்றுப் பாடல்.

மோரியர் ஆணை தமிழ்நாட்டில பரவாது தடுத்தவருள் ஆதனுங்கன் ஒருவன் ஆகலாம். அவ் அரசனைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு இலது.

தமிழ்நாட்டில் முடிசூடிய மன்னர் சேர, சோழ, பாண்டியர். முடி சூடாத மன்னர் பலர் இருந்தனர். ஆனால் ஒரு மன்னன் மற்றொரு மன்னனுக்காக (வைஸிராயாக, ராஜப்பிரதிநிதியாக) மக்களை 'ஆள'வில்லை. மன்னனுக்கும் மக்களுக்கும் நேரடித் தொடர்பு இருந்தது. மக்கள் உடல், மன்னன் உயிர்: கம்பன் அதை மாற்றி அமைத்தான்.

மக்கள் உயிர், மன்னன் உடம்பு என்ற கருத்துத் தனியே ஆராய உள்ளது.

கம்பனில் "அரசர்க்கரசன்"

'சக்கரவர்த்தி' என்ற வடமொழிச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லான 'அரசர்க்கு அரசன்' என்ற சொல்லின் இலக்கியப் பிரயோகம் செய்தவனும் கம்பனே.

''அம்மாண் நகர்க்கு அரசன் அரசர்க்கு அரசன்
செம்மாண் தனிக்கோள் உலகு ஏழும் செல்ல நின்றரன்''
— அரசியற் படலம்

அந்த அரசர்க்கரசன் தசரதன், கம்பன் காலத்தில் சங்ககாலக் கருத்து மாறி, ஸாம்ராஜ்யக் கருத்தும் 'சக்கரவர்த்தித்வ'மும் தமிழ்நாட்டிலும் உதித்திருந்தது

தசரதனைப் பற்றி வால்மீகி கூறுவது சிந்திக்க உரியது: ''அநுரக்த: ப்ராஜ-பிச்ச ப்ரஜாச்ச அபி அநுரஞ்ஜதே'' ii 1.14 (மக்கள் அவனுக்கு இனியர்; மக்களுக்கும் அவன் இனியன்)

'கண்ணுக்கு இனியான்' (ப்ரியதர்சன:), 'மனத்துக்த இனியான்' (சித்த ரஞ்ஜன:) என்பன அரசர் கொண்ட விருதுகள்

காளிதாசன் ரகுவின் திக்விஜயத்தைக் கூறுகிறான். ஆனால், அது 'தர்ம விஜயம்': நாட்டையோ, பொருளையோ கவரும் ஆசையால் உந்தப்பட்ட 'லோப விஜயம்' அன்று; அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட அஸுர விஜயம்' அன்று.

வங்க நாட்டை வென்ற ரகு அங்கு இருந்த மன்னருள் சிறந்தவரைப் பொறுக்கி மீண்டும் அந் நாட்டுக்கு அரசர் ஆக்கினான்: எவ்வாறு நாற்றங்காலில் கிறந்த நாற்றுக் களைப் பிடுங்கி, அதே வயலில் திரும்பவும் நடுதலால் விளைச்சல் பெருகுகிறதோ, அவ்வாறு அந்நாட்டிலேயே ஆட்சி பீடத்தில் நடப்பெற்ற அரசர் குடிமக்களுடைய நன்மை கருதி ஆட்சி புரிந்து, நாட்டு வளம் பெருக்கி, பன்மடங்கு அதிகரித்த வருவாயால் ரகுவுக்குத் திறை செலுத்தினர் (ரகுவம்சம் 4.37).

கம்பன் கழகம், சேலம்

T. M. S. வளாகம், 104, சாலை ரோடு, சேலம் - 636 001

தொலைபேசி : 262211



வாழ்த்துச் செய்தி

தித்திக்கும் செந்தமிழால் விழா எடுத்து

எத்திக்கும் போற்றிடக் கம்பன் புகழ் சொல்லும்

கோவை கம்பன் கழகத்தார்க்கு வாழ்த்துப் பல

வைகைபோல் வரலாறாய்த் திகழ்ந்திட வாழ்த்துகிறோம்.

அன்புடன்

என். ராமசாமி உடையார்

தலைவர் கம்பன் கழகம், சேலம்

மற்றும்

நிர்வாகக் குழுவினர்

ஸம்ஸ்க்ருதமும், தமிழும் நம் நாட்டின் தொன்மையான மொழிகள்

வரலாற்றுத் தொடக்க காலத்தில் இந்திய உபகண்டத்தில் ஸம்ஸ்க்ருதமும் அதன் தொடர்பு மொழிகளும் பரவலாக வழங்கின. 'ஸம்ஸ்க்ருதம்' என்ற சொல்லுக்குப் பண்பாடு, திருத்தம், செப்பனிடல் என்பது பொருள்.

அக்காலத்திலேயே தமிழ் மொழியும் வளம் பெற்றிருந்ததேனும் அம்மொழியும் அதைச் சார்ந்த மொழிகளும் இந்திய உபகண்டத்தின தென்பகுதியில் மட்டும் வழக்கில் இருந்தன. 'தமிழ்' என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருள்.

ஸம்ஸ்க்ருதமும் தமிழும் சொல் மரபுகளில் பிரித்துக் கூற இயலாதவாறு அக்காலத்திலேயே தம்முள் பின்னி இணைத்திருந்தன.

மொழிகளின் தோற்றமும் வளர்ச்சியும் மக்களுடைய வாழ்க்கையைப் பிரதி பலிப்பன. வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ப சொற்கள், சொல் தொடர்கள், மரபுகள், யாப்புக்கள், அணிகள் மொழியில் இடம் பெறுகின்றன.

ஒரே குழுவில் புது உற்பத்தி முறைகள், பண்டமாற்றுப் பெருக்கம், வணிக விரிவு, வேற்று நாட்டுத் தொடர்புகள் புதுக்கருத்துக்கள், செயல், கருவி, ஆற்றல்கள் போன்றன மொழிகளைத் தாக்குகின்றன. பிறமொழிகளைப் பேசும் குழுவினரின் தொடர்புகள் மொழிகளை மாற்றுகின்றன; வளப்படுத்துகின்றன.

தேவைகளுக்கு ஏற்ப மனிதன் வகுத்துக் கொண்டவற்றுள் மொழி இலக்கணமும் மொழி விரிவும் அடங்கும். நாளடைவில் பழையன கழிய புதியன புகுகின்றன.

மொழியின் தோற்றம் வரலாற்றுக்கு முந்தியது. மொழியின் வளர்ச்சி வரலாற்றால் ஆராயப்படும். வளர்ச்சியின் வேகம் வாழ்க்கையின் வேகத்தை ஒட்டி அமையும். சில காலங்களில் ஸம்ஸ்க்ருத, தமிழ் மொழிகளில் சிறந்த கருத்துக்களும் உயர்ந்த காவியங்களும் விஞ்ஞான நூல்களும் தோன்றியதும் பல காலங்களில் அவை தேங்கி இருந்ததும், நாளடைவில் பல மறைந்ததும், சூழ்நிலைகளால் மீண்டும் தோன்றியதும் வளர்ந்ததும் மக்கள் சமூகத்தினுடைய நிலையைக் காட்டுவன. மொழி, இலக்கிய, இலக்கண விஞ்ஞான வரலாறுகள் மக்கள் வரலாற்றினின்று வேறு அல்ல.

வால்மீகி நம்நாட்டின் 'ஆதிகவி', உலக இலக்கியத்திலேகூட 'ஆதிகவி'யாகவும் இருக்கலாம். வால்மீகியின் காலத்திலே அமைந்திருந்த, குடி அமைப்பு, ஊர் வகுப்பு, நாடுகள், அரசு, அமைச்சு, நீதி, போர் முறைகள், வணிகம், உழவு, போக்கு வரவு, கல்வி, கலைகள், தொழிற்கூடங்கள் முதலியவை உயர்ந்த சமூக வாழ்க்கையைக் காட்டுகின்றன. அவற்றைக் குறிக்கும் மநுநீதி, வேதங்கள், அவற்றின் அங்கங்களான சிக்ஷவ்யாகரணம், சந்தஸ் நிருத்தம், ஜ்யோதிஷம், கல்பம் முதலியன இன்றும் உள்ளன.

கிரேக்கர்களும், அவர்களுக்குப் பின்னர் ரோமானியர்களும் வரலாற்றை எழுத்தில் வடித்தனர். படைத்தலைவர் அன்றாடநிகழ்ச்சிகளைத் தொகுத்து வைத்தனர். ஆளுகையில் இருந்தவர் மக்களுக்குத் தத்தம் செயல்களைப் பொது மன்றங்களில் அறிவித்தனர். புது ஆக்கங்கள் கல்லிலும், செப்பிலும் பொறிக்கப்பட்டன. இவை வரலாற்றுக்கு ஆதாரங்கள்.

ஆனால், அவற்றிற்கு முன்பே வாய்மொழியாக வந்து, நினைவில் நிலை பெற்றவை இருந்தன. நம் நாட்டின் சுருதி, ஸ்மிருதி எனப்படுபவன அவை. பழைய வீரர் செயல்களை ஊர்தோறும் பாடிச் சென்ற பாணரும் ஒரு வகையில் வரலாற்று ஆசிரியரே. நாம் அவற்றைப் புராணம் என்கிறோம். இவற்றை எல்லாம் ஒழுங்கு படுத்தியே 'இதிகாசம்' எழுந்தது. இவையாவற்றையும் சொன்னவர்களும் கேட்டவர்களும் அவற்றில் கூட்டியும் குறைத்தும் மிகைப்படுத்தியும் சுருக்கியும், மாற்றியும், திரித்தும் அமைத்தனர் என்றால் அது எதிர்பார்க்கப்பட வேண்டியதே.

பல நூற்றாண்டுகள் கழிந்தபின், அந்நூல்களைக் காக்கவேண்டி அப்போதிருந்த உருவத்தில் அவற்றை ஆராய்ந்து ஒழுங்குபடுத்தி, பூர்ஜ பத்ரங்களிலும், பனை ஓலைகளிலும் பெரும்புலவர்கள் எழுதி வைத்தனர். அவை மேலும் சிதையாவாறு உரைகளையும் இட்டுக் காத்தருளினர். இல்காறும் கிடைத்துள்ள எழுத்தும் உரையும் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டன. உரை இட்டுக் காக்கப்பட்டுள்ள வால்மீகி ராமாயணத்திற்குப் பல உருவங்கள் உண்டு. பொதுவாக, அவை இந்தியாவின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளில் வழங்குவன; அப்பகுதிகளில் வாழ்ந்தவரால் உரை இடப் பட்டன.

உரை இடப்படாத கம்பராமாயணமும் பல உருவங்களில் திகழ்ந்தது. அவை 'மர்ரே' பதிப்பிலும் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பிலும் செப்பனிடப்பட்டுள்ளன. இராமாயணகாவியம் தோன்றிய வரலாற்றை வால்மீகி கூறுகிறார்.

இனி, இருகாவியங்களிலும் உள்ள சிறப்புக்களைக் காண தமிழ் நாட்டில் பெரும் பாலோர்க்கு அறிமுகமான கம்பன் காவியத்தை மையமாகவும் வால்மீகியைச் சார்பாகவும் கொண்டு கூறுவேன்.

பாயிரம்

கம்பன் காவியத்தில் பாயிரம் 'தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே' 'அவர் நற்குணக் கடல் ஆடுதல் நன்று அரோ' 'அவர் பாதம் அல்லது பற்றிலர் பற்றிலார்'

என்ற வணக்கத்துடன் தொடங்குகிறது.

வால்மீகியின் காவியம் 'வஸ்து நிர்தேயம்' வருபொருள் உரைக்கும் வகையால் அமையும். வால்மீகி கேட்க காவியத் தலைவன் பண்புகளை நாரதன் உரைப்பதாகத் தொடங்குகிறது; கடவுள் வாழ்த்து இல்லை. அவ்வாறே, கம்பனிடம் காணும் அவை அடக்கமும் அங்கு இல்லை. கம்பன் தன் காவியத்தை அரங்கேற்றப் புக்கதால் அது தேவைப்பட்டது. வால்மீகியின் காவியம் அரங்கேறியது குசலவர்களால். ஆசிரமத்தில் பாடப்பெற்றுப் பின்னர் இராமன் வேள்வி மண்டபத்தில் திகழ்ந்தது.

ஆற்றுப் படலம்

காவியத்தை மழையுடனும் ஆற்றுடனும் தொடங்கும் மரபு கம்பனுக்கு முன்பு தமிழில் காணப்படுவதன்று, ஸம்ஸ்க்ருத நூல் மரபும் அன்று.

முதல் பாட்டிலேயே காளிதாசன் சாயலைக் காண்கிறோம். 'அயோத்தி மக்கள் மநுவின் காலம் தொட்டு இன்றுகாறும் அரசனுடைய ஆணைச் சக்கரத்தினால் தேய்ந்த நெறியிலிருந்து ஒரு கோடு அளவும் புறம் சென்றாரல்லர் என்பது ரகுவம்சம்.

''ரேகா மாத்ரம் அபி க்ஷுண்ணாத் ஆ மநோ : வர்த்மந : பரம் |
நவ்யதீயு ப்ரஜா : தஸ்ய நியந்து : நேமி வ்ருத்தய இரகுவம்சம் ||

நியந்து : அடக்கி ஆள்பவன். இது மக்கள் வாழ்க்கையின் முழுமையைச் சுட்டும். கம்பன் வாக்கிலோ, ஆடவருடைய 'ஐம் பொறி வாளியும்' பெண்டிருடைய 'கண் எனும்... அம்பும் நெறியின் புறம் செலா' என வருகின்றது. அவ்வாறு புறம் செலாமைக்கு அரசன் ஆணையைக் காரணமாகக் கம்பன் கூறவில்லை.

கூர்மையான கொடிய அம்புகளை ஒத்த நீர்த் தாரைகள்
ஸி தீக்ஷ்ண த₄ாரா பதந உக்₃ர ஸாயிக குதுஸம்ஹாரம் 2.4 என்பதும்,

உருக்கிய வெள்ளி போன்ற தாரைகள் வேகமாகச் சொரிய நிஷிக்த ரஜத த்₃ரவ ஸந்நிகாஸா தா₄ரா ஜவேந பாதிதா' (ம்ருச்சகடிக 5.4) என்பதும், ''வான் வெள்ளி வீழ் இடை வீழ்ந் தெனத் தாரைகள்'' என்ற வரியை நினைவூட்டும். 'ஸரயூ மாநஸ சிரஸிலிருந்து பெருகியது' என்பார் வால்மீகி. மாநஸ ஸர ப்ரவ்ருத்தா (1.24.7) இது கம்பன் கூறாதது.

நாடு, 'தேவ மாத்ருகம்' (தேவரைத் தாயாக உடையது) 'நதி மாத்ருகம்' (ஆற்றைத் தாயாக உடையது) என இரு வகைப்படும். நாட்டை 'அதேவ மாத்ருகம்' (தேவரை மட்டும் தாயாகக் கொள்ளாதது) ஆக்கினார் என் முன்னோர். அதனால் மக்கள் இன்பம் உற வாழ்கின்றனர்' என்று இராமன் பரதனிடம் கூறுகிறான். 'அதேவ மாத்ருகோ ரம்ய ஜநபத₃ ஸ்பீத : ஸீ₂கம் வஸதி'' (II.100.43). இக் கருத்து, ''சோலை தோறும் வயல்கள் தோறும் உயிர் என (சரயுநீர்) உலாயது'' என்னும் கம்பன் பாட்டில் தொனிக்கிறது.

ஆகமங்கள் தம்முள் வேறுபட்டன; பயன் (ஸித்தி) அடையக் கூடிய வழிகள் பல; எனினும், அவை உம்மிடமே வீழ்வன. எப்படி? கங்கை பல கால்களாகப் பிரிந்தும் கடலையே அடைவதுபோல.

பஹிதா அபி ஆகமை பி₄ந்தா : பந்தா₂ந: ஸித்தி₄ ஹேதவ: | தவய்யேவ நிபதந்தி ஒகா₃ ஜாஹ்நவியா இவ அர்ணவே''|| (ர.வ. 10·26) இது ''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம் தொல்லையில் ஒன்றே ஆகித் துறை தொறும் பரந்த சூழ்ச்சி'' யை நினைவூட்டுகிறது.

நாட்டுப் படலம்

ஆற்றையும் நாட்டையும் வால்மீகி ஒரே ச்லோகத்தில் கூறிவிடுகிறார். கோசலம் என்ற புகழ் பெற்ற அகன்ற, சிறப்பு மிகுந்த நாடு ஸரயூ நதிக்கரையில் இருந்தது (1.5.5)

இனி 'வாங்க வரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி' என்ற சொல் தொடருக்கு விளக்கம் தெரியவில்லை. திருநாராயணையங்கார் சொன்னதாக, கி. இராமாநுஜயங்காரிடம் நான் கேட்டது வருமாறு :

'பாதே₃ அஸ்ய விஸ்வா பூ₄தாநி த்ரிபாதஃஸ்ய அம்ருதம் தீ₃வி'. இவ் உலகங்கள். யாவும் அவனுக்கு ஓர் அடி. சாகாதவர் விண் உலகம் மூவடி என்பது புருஷ சூக்தம் 1-3 (ரிக் வேதத்தின் பகுதி) இக் கருத்து சாந்தோக்ய உபநிஷத் 3 12.6 லும் உள்ளது. (வேதத்தின் பகுதி) வைணவர் இவ் உலகப் பிரிவுகளை முறையே லீலா, நித்ய விபூதி என்பர். இவற்றில் ஒரு பாதமாகிய இவ் உலகை வாங்குதல் (கொள்ளல்) எளிது மூன்று பாதங்களாகிய அவ் உலகைக் கொள்ளல் அரிது. இந் நான்கு பாதங்களுக்கும் உரிய பங்கைத் தன் காவிய மூலமாக வகுத்தளித்தான் வால்மீகி.

ஆனால், வால்மீகத்தில் அவ் உலகில் நடந்த பகுதி இது. ப்ரஹ்மாவும் தேவர்களும் தம் பங்கு பெற வந்தனர்; (விஷ்ணுவும் வந்தார்) இராவணனுடைய கொடுமையை தேவர் முறையிட, விஷ்ணு தசரதன் மதலையாய் வந்து குறை தீர்ப்பேன் என வாக்களித்தார் (1.15.16). இது நடந்தது இவ்வுலகில்.

கம்பனில் வேள்வி தொடங்கும் முன்பே விண் உலகில் நடந்ததாக, வதிட்டன் மனத்தில் எண்ணினான். வால்மீகி முப்பாத உலகை வகுத்தது புதிராகவே உள்ளது

நகரப் படலம்

வால்மீகியும் கம்பனும் அயோத்தி நகரத்தைக் கூறும் பகுதியில் பெரும் மாறுபாடு இல்லை. சொல் வளமும் பொருள் வளமும் சிறப்பு வாய்ந்தன. அயோத்தி நகரை நிர்மாணித்தவன் மநு (I 5.6). 12 யோஜனை நீளமும் 3 யோஜனை அகலமும் கொண்டது (7) சால மரக் காடுகள் நகரை மேகலை போலச் சூழ்ந்திருந்தன. மாமரங்கள் உத்யான வனங்களில் இருந்தன (I 5-12).

கம்பன் வாக்கில் இராகவன் ''இனிது இருந்து இவ் ஏழ் உலகு ஆள் இடம் என்றால் ஒன்றுமோ இதனின் வேறு ஒரு போகம் உறைவு இடம் உண்டு என வரைத்தல்'' என இராமன் பிறப்பை எதிர்பார்த்தது அயோத்தி. காளிதாசன் வாக்கில் அது இராமன் பிறந்தபோது ''உலகம் முழுவதும் குற்றங்கள் நீங்கி, குணங்கள் வெளிப் போந்தன. மனிதருள் சிறந்தவனான (புருஷ-உத்தம) விஷ்ணுவைப்பின் தொடர்ந்தது பரமபதம் பூமிக்கு வந்தது போலும்' எனக் கூறப்பட்டுள்ளது.

நிர் தோ₃ஷம் அப₄வத ஸர்வம் ஆவிஷ்க்ருத குணம் ஜகத் |

அத்வகா₃த் இவ ஹி ஸ்வர்க₃; காம் கதம் புஹோத்தரம் || (RV 10-73)

கம்பன் கூறாத மாந்தர் பண்புகள் சில :

நிறைவேறாத இச்சை உடையோர், கோழைகள், கொடியர், நாத்திகர், பொய் பேசுவோர், அழுக்காறு உடையோர், புறங்கூறுவோர் அயோத்தியில் இல்லை. (14) பரிதாபத்துக்கு உரியவர் மனம் மருண்டோர், அல்லல் உறுவோர் இல்லை (15) உருக் குலைந்தோர் அரசனிடம் பக்தி இல்லாதோர் இல்லை (16).

க்ஷத்ரியர், ப்ராஹ்மணரைப் பின்பற்றினர்: வைச்யர் க்ஷத்ரியருடைய ஆணையை ஏற்றனர்; சூத்ரர் தம் வேலையைச் செய்ததோடு பிற வருணத்தோருக்கும் பணி புரிந்தனர் (19).

நகரின் நான்கு முகங்களிலும் வாயில்கள் இருந்தன. (ரகுவம்சம் 15-60) கம்பன் வேதம் நாலும் அன்ன வாயில் (21) என்கிறார். நகர மாளிகைகள் உயரத்தாலும் வெண்மையாலும் இமயம் ஒத்தன (I 77-2; II 51-24; 71-20) வெண்மேகங்களை ஒத்தன (II 5-22). இலங்கையிலுள்ள மாளிகைகள் வெண் நிறத்தன எனக் கூறப்படுகிறது (V 2 8, 19, 56).

வயா வ்ருத்தா யத் பரஸ்வேப்₄ய : 'ஸ்ருதௌ தஸ்காதா ஸ்தி₂தா' (ரகு 1-27) (திருட்டு பிறருடைய பொருளினின்று புறக்கணிக்கப்பட்டது, சொல் அளவிலே நின்றது) என்ற கருத்து 'கள்வார் இலாமையால் பொருள் காவலும் இல்லை' என்பது கம்பன் வாக்கு.

நான்கு பாதைகள் கூடும் சதுக்கத்தில் வலம் வருதலை (keep left) வால்மீகி கூறுகிறார் (II 17-16) கம்பன் கூறும் கருத்துக்கள் சில வால்மீகத்தில் இல்லை.

இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்பது காளிதாசன் கருத்தே அன்றி வால்மீகி கூறாதது என மேலே கண்டோம். கம்பன் தெளிவாக, 'செங்கண் மால் பிறந்து ஆண்டு அளப்ப அருங்காலம் திருவின் வீற்றிருந்தமை' எனக் கூறுகிறார்.

'நிலமகள் மங்கல நாண்' என்று அயோத்தியைக் கூறுவது தமிழ் வழக்கு. ஸம்ஸ்க்ருத நூல்களில் எங்கும் மங்கலநாண் இல்லை.

'கான் நிகர் குடிகள்-நகர மக்கள் அரசனை ஒத்தவர் என்பது வால்மீகி கூறாதது. இக்கருத்தை ராமாநுஜர் 'ஸ்தம் பரம் புருஷம் உனபதி' (கீதை 8-10) என்ற இடத்து ''அவன் அந்தப் பரமபுருஷனுடைய இயல்பை அடைகிறான்; அவனுக்குச் சமமான இறைமையை உடையவன் ஆகிறான்;'' என வ்யாக்யாநம் இடுகிறார். சங்கர பாஷ்யம் இவ்விடத்தில் ''பரம புருஷனை அடைகிறான்'' என்பதோடு முடிவுறுகிறது. இராமாநுஜர் கருத்து கம்பனில் படர்ந்துள்ளதற்கு இது ஒரு சான்று.

அரசியல் படலம்

தசரதனுக்கு 8 அமைச்சர்கள் இருந்தனர். அவர்களின் பெயர்கள் த்₄ருஷ்டி, ஜயந்த, விஜய, ஸிராஷ்ட்ர, ராஷ்ட்ரவர்த₄ந, த₄ர்மபால, சுமந்தர். அவர்கள் அரசனுக்கு உகந்த நன்மையைச் செய்வர் : அரசன் உட்கிடக்கையை, அவனின் புறத்தோற்றத்தால் ('இங்கித்') அறிவர்; தம் செயலில் தூயவர்; பணியில் பற்று உடையவர்; (I 6 1-3) இனிமையாகப் பேசுபவர் (1-6-19).

மேலும், 8 புரோஹிதர் சடங்குகளை ஆற்றுவோர் 'ரித்விஜ் இருந்தனர். வஸிஷ்ட, வாமதேவ 'ஸியஜ்ஞ' ஜாபாலி, காஸ்யப, கௌதம, மார்கண்டேய காத்யாயந என்பவர். இவர்களுள் வஸிஷ்டரும வாமதேவரும் மந்திரிகளாகவும் இருந்தனர் (1-6-15).

அமைச்சருள் ஸுமந்தரனும் புரோஹிதருள் வஸிஷ்டனும் முக்கியமான காவிய பாத்திரங்களாக வருகின்றனர் மிதிலையின் புறநகர்ப் பகுதியில் காணும் அகலிகையின் கணவன் கௌதமன் வேறு. அதே பெயர் உடைய தசரதனுடைய புரோஹிதன் வேறு. சித்ரகூடத்தில் காணும் ஜாபாலியும் வேறானவன். இவர்கள் அனைவரும் அரச காரிய நிர்வாகிகள் அல்லர் 'மந்த்ரி' என்பதன் சொல்லின் பொருள் 'மனத்தைக் காப்பவன்' என்பது. இது ஆங்கிலத்தில் conscience keeper என்பது. 'புரோஹிதன், என்ற சொல்லுக்கு (அரசனின்) நன்மையை முதன்மையாகக் கொண்டவன் என்பது பொருள்.

இவர்களைத் தவிர அரசியல் அலுவலர் பலர் இருந்தனர் ஸசிவ, மஹாமாத்ரா, (II 36-16) என்ற உயர்ந்த பதவிகள் குறிப்பிடப்படுகின்றன. 'ஸாத₄நவா' என்ற உபாத்யாயரும் (ஆசிரியரும்) பெயரால் குறிப்பிடப்பிடுகிறார். மந்திரிகள் புரோஹித குடைய உயர்ந்த பண்புகளை முனிவர் புகழ்ந்து கூறுகிறார் (I 6-6-19),

உள்நாட்டு நிகழ்ச்சிகளையும் வெளிநாட்டு அரசரும் பகைவரும் செய்தது, செய்யப்போவது, செய்ய எண்ணுவது ஆகியவற்றை அவ்வப்போது அரசனுக்கு அறிவிக்கும் ஒற்றர் இருந்தனர். (1-6, 9, 19)

அரசன் ப்ராஹ்மணரையும் க்ஷத்ரியரையும் ஹிம்ஸித்துத் திறை பெறவில்லை. (வைசியரையும் சூத்ரரையும் பற்றிக் கூறப்படவில்லை). குற்றவாளிகளை ஒறுப்பதில் அவரவர் வலிமையும் வலிமையின்மையும் அறிந்து அவற்றிற்கேற்ப தண்டனை விதித்தான் (1.6.13).

தசரதனுடைய' ஆட்சி மரபு காவ்யத்தில் பல இடங்களில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது (II 1, 2) ஸர்கங்கள் ராமனுடைய குணங்களை விமர்சிப்பதுபோல அரசின் பண்புகளைக் கூறுவன (II 100) ஆம் ஸர்கம் சித்ர கூடத்தில், ராமனுக்கு அரசன் செய்யவேண்டுவனவற்றை அறிவுரை கூறுவதுபோல் கூறுவதாக அமைந்துள்ளது.

அனுமனிடம் தசரதனைப் பற்றி இலக்குவனுடைய பேச்சு ஒன்று குறிப்பிடத் தக்கது. அவன் (தசரதன்)பால் வெறுப்பு கொண்டவர் இல்லை; (தசரதன்) வெறுப்புக்கு உரியவரும் இல்லை. எல்லாப் பிராணிகளிடத்தும் தசரதன் கடவுளைப் (பிரஹ்மாவை) போல சமமான அன்பு பூண்டிருந்தார்-

> ந த்₃வேஷ்டா வித்₃யதே தஸ்ய ஸ து த் வேஷ்டி ந
> கஞ்சரு/ ஸது ஸர்வேஹி ஆ₄தேஹி பிதாமஹ இவ அபர : (II 4.7)

என்பது வால்மீகம்

ரகுவம்சத்திலும் ரகு குல மன்னர் பண்புகள் கூறப்படும் இடங்களில் எல்லாம்- சிறப்பாக முதல ஸர்கம் 17-ஆம் ஸர்கங்களில் இலட்சிய அரசு கூறப்பட்டுள்ளது.

கம்பனுடைய அரசியல் படலம் பல அரிய கருத்துக்களைக் கொண்டது. தசரதனுடைய அரசியலைக் காட்டிலும் அவன் குணச் சிறப்பைக் கூறுவது.

> ''ஈந்தே கடந்தான் இரப்போர்கடல்; எண் இல் நுண் நூல்
> ஆய்ந்தே கடந்தான் அறிவு என்னும் அளக்கர்; வாளால்
> காய்ந்தே கடந்தான் பகைவேலை; கருத்து முற்றத்
> தேய்ந்தே கடந்தான் திருவின் தொடர் போக பௌவம்''

என்பது. தசரதன் உலகை ஸத்யத்தாலும் இரப்போரை ஈகையாலும், குருக்களைப் பணிவிடையாலும் வீரரை வில்லாலும், பகைவரைப் போரிலும் வென்றான்.

> ஸத்யேந லோகாந் ஜயதி, தீ₃நாந் தா₃நேந ராகவ I
> கு₃ருந் ஸிம்ருஷயா, விரோ த₄நுஷா, யுதி ஸரத்ரவாந் II II 12·29

என் நீண்ட ஆயுட்காலத்தில் விரும்பிய இன்பங்கள் எல்லாம் குறைவறத்துய்த்தேன்,
தீ₃ர் கா₄யு பு₄க்தா போ₄கா யுத₄ ஈபஸிதா (II 4·12)

என்பவற்றின் எதிரொலி

தசரதன் மரணத்தால் சோகம் உற்ற பரதனைத் தேற்றும் இராமன் வார்த்தைகளிலும், தசரதன் பெற்ற ஆயுளும் போகமும் பற்றித் திரும்பத்திரும்பக் காண்கிறோம்.

போ காந் ச அவாப்ய புஷ்கலாந் (T 105·35).
''ஆயு : உத்தமம் ஆஸாத்ய போகாந் அபி ச ராகவ' (36)
நிர்விஷ்ட விஷய ஸ்நேஹ (ரகுவம்சம் 12·1)

கம்பனில் தசரதனே கூறுவன இவை,

''நெடிது நாள் உண்ட, எச்சிலை நுகருவது இன்பம் ஆகுமோ? (1338)

தசரதனை உடலாகவும் அயோத்தி மக்களை உயிராகவும் கம்பன் சிருஷ்டித்த புதுமையை நாம் வியக்கிறோம்

''உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்
செயிர் இலா உலகினில் சென்று, நின்று வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்''
''வெம் பகுதியாம் என
ஒன்றென உலகிடை உலாவி மீமிசை
நின்று நின்று உயிர்தொறும் நெடிது காக்குமே''

என்பன அப்பாடல்கள்.

''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் அதனால்
யான் உயிர் என்பது அறிகை வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே''
(புறம் 186)

'மன்னை இன்றி வைகும் மன்னுயிர் என்னும் காலை
இன் உயிர் இன்றி வைகும் யாக்கையை ஒக்கும்''
பெரியபுராணம் 380

என்பனவும்

இறைவன் 'உயிர்'; உலகம் 'உடல்' என ஸ்ரீ தேசிகனும்
''ஓர் உயிர் உலகுக்கு என்னும் நீ திருவோடு'' (தேசிகன்)
''ஓர் உயிர் எல்லாம் ஏந்த இன்புறுதி'' (மும்மணிக்கோவை 4)
உலகு உடப்பாய்த் தாம் உயிராய் நின்றார் வந்தார் (திருசின்னமலை 5)
'மன் உயிர் எல்லாம் மண் ஆள் வேந்தன் தன் உயிர்' (மணிமேகலை 7-11-12)

என்பனவும் மன்னனை உயிராக மக்களை உடலாகக் காண்பன. இதற்கு மாறுபட்டது கம்பன் கருத்து. தசரதனை மட்டும் அன்றி, இராமனை உயிராகவும் பிரிந்து சென்ற பரதனை உடலாகவும் கம்பன் கூறுகிறார்.

''ஆவி அங்கு அவன் அலது இல்லை, ஆதலான்
ஒவல் இல் உயிர் பிரிந்து உடல் சென்றனவே (1310)

அவ்வாறே இராமன் சுக்ரீவனை உயிராகவும் வானரப்படையை உடலாகவும் கூறுகிறார். 'எழுபது வெள்ளம் யாக்கைக்கு ஓர் உயிர்' (6928) நகர மக்கள், ''இன்உயிர் யார்க்கும் ஒன்றாய்ப் பொரு அரு தேரில் செல்ல, புறத்திடைக் கண்டார் போல்வார்'' (1577) என்ற இடத்து அயோத்தி மக்களுடைய உயிர் இராமன், உடல் மக்கள் என்பது கவிக்கூற்று.

இராமனுக்கு அரசு நெறி புகட்டும் வதிட்டன் கூற்றாகவும் ''வையம் மன் உயிர் ஆக, அம் மன் உயிர் உய்யத்தாங்கும் உடல் அன்ன மன்னன் (1423) எனவும் அவ்வாறே சடாயு தனக்கும் தசரதனுக்கும் இருந்த தொடர்பை 'நீ (தசரதன்) உடல் நான் (சடாயு) ஆவி'' எனத் தசரதன் கூறியதையும் உயிர் கிடக்க உடலை விசும்பு ஏற்றினான், உணர்வு இறந்த கூற்றினாரே (2/12). இவற்றில் பல குழப்பங்கள் உள்ளன.

வடநூலார் இராமன் குணங்களைப்பற்றிக் கூறும் போது மக்களுக்கு வெளியில் உலவும் உயிர் அவன். 'பரஜாநாம் ப ஹி: சர இவ ப்ராணோ' (T 1.19) என்று இராமனை உயிராகக் கூறி,' பட்டாபிஷேகத்துக்குப் பின்பு அவரவர் தம் நாட்டுக்குத் திரும்பும்போது உயிர் உடலைத் துறந்து ஏகுவது போல அவரவர் தத்தம் வீடுகளுக்குச் சென்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

ஜக்முர ஸ்வம் ஸ்வம் க்ருஹம் ஸர்வே தேஹீ தேஹம் இவத்யகந் (VII 4039) இக் குழப்பத்துக்குச் சமாதானம் காண ஒரு கருத்து பயன்படும் 'நாராயணன் பரன், நாம் அவனுக்கு நிலை அடியோம், சோராது அனைத்தும் அவன் உடம்பு' (அம்ருதாஞ்சந் 17) என்பது 'நாராயணன்' என்ற சொல்லின் பொருள்.

பொருள் அழிவு அற்றது (Matter is indestructible). மாறுமே அன்றி அழியாது. அழியாத பொருள்களின் திரள் நாரங்கள; 'அயநம்' என்பது அவை சாரும் இடம். அவ் இடம் ஒன்றோ, பலவோ ஆகலாம். நிலைத்தோ, நிலையாதோ; சுழற்சியிலோ, மாறுதலிலோ இருக்கலாம். பொருள் திரனுக்குச் சார்பிடர் எனவோ, பொருள் திரளைச் சார்பாக உடையது எனவோ [தந் புருஷ ஸமாஸம் வேற்றுமைத் தொகையாகவோ பாஹுவ்ரீஹி ஸமாஸம் அன்மொழித் தொகையாகவோ] விரித்து நாராயண என்ற சொல்லுக்குப் பொருள் உரைப்பர்.

ஏதோ ஒன்று அது சென்று நின்று (சர-அசர) வாழ்உயிர் எலாம் உறைகிறது. உயிர் அற்ற நுண் பொருளோ, பருப்பொருளோ இல்லை. ஒரு சூழ்நிலையில் உயிர் அற்றது எனக் கருதப்படும் அசேதநமும் உயிரும் உணர்வும் உடைய சேதநம் ஆகிறது. இது பரிணாம வளர்ச்சி, படிப்படியாக அது காரணங்களையும் அறிவையும் பெற்று உயர்கிறது. இப் பரிணாம வளர்ச்சிக்கு ஓர் தலைவன் - ஆக்குவோன், ஆட்டுவிப்போன் தேவை என்று கருதியவர், அவ் ஒன்று நாரங்களுக்கு (சராசரங்களுக்கு) அயநம் (நிலை, சார்பு, மூலம்) ஆவான். அன்றி அவற்றைச் சார்பு மற்றும் மூலமாக உடையவன், இந்தக் கருத்தில் யாவுமே அதன் உடம்பு ஆகிறது. அது இல்லாத உருவமோ, அருவமோ இல்லை.

'ஓர் தன்மை அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்' 'மாமேருக் குன்றினும் உளன்', 'இந்நிறை தூணினும் உளன்' நீ சொன்ன சொல்லினும் உளன்'.

'தொட்ட தொட்ட இடந்தொறும் தோன்றுவான்' (6312)
'எங்கும் உளன் ஒருவன்' (8555)
'திரிவனவும் நிற்பனவும் ஞான நாயகன் உருவமே' (8642)
'தயிர்தோய் பிறை எனில் ஆம் வகை கலந்து,
ஏறிய தலைவன் பயிராதது ஓர் பொருள் இல்லது' (9075)

எனப் பல இடங்களில் கம்பன் கூறுகிறார். தலைவன் அனைத்தையும் நிலையாகக் கொண்டிருத்தலால், அவன் நிலைகளும் ஆகிறான்; அனைத்திலும் இயங்குவதால் உயிரும் ஆகிறான். பூவும் மணமும், ஒளி உடைய பொருளும் ஒளியும், குணமும் குணம் உடையதும் பிரித்து எண்ண முடியாதன; பிரித்து ஆராயக் கூடாதன. பொருளும் அதன் ஆற்றலும் அவ்வாறே (Matter is energy, energy is matter).

இவற்றை அறிந்தபின் இக்கேள்விக்கே இடம் இலது அரசனே மக்கள்; மக்களே அரசு. ஆனால், இந்த நிலை சமுதாயத்தில் இன்னும் ஏற்படவில்லை. அது ஒரு இலட்சியமே. அந்த இலட்சியத்தை வாழ்க்கையில் இலக்கியத்தில் எய்தத் தடையாக நிற்கும் பொருளாதார சமுக பண்பாட்டு, கலை, இன, வர்க்க, சாதி, மத வேற்றுமைகள் நீங்க இவ் உண்மை தெளிவாகும். வேற்றுமைகள் உள்ளவரை பொருளும் அதன் பண்பும் வேறு என்ற தோற்றமே ஓங்கும்.

காளிதாசனுடைய இரகு குல மன்னர் ஓர் ஊர் என இப் புவி முழுவதும் காத்தனர் (அந்நய யாஸநாம் உர்வீம் ஸ்ஸாஸ ஏகபுரீம் இவ 1.30) என்றது, கம்பனில் 'வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர் செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான். எனக் காண்கிறோம். அவன் உழைப்பை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உழுவது ஓர் நாஞ்சில் கொண்டு பெருக்க முயலும் முயற்சி 'பத்தி உழவன் கிருஹி' (ஆசார்ய ஹ்ருதயம் 104) எனப் பாராட்டுகிறார். இச் சூத்திரத்தில் உழவன் இறைவன் என்பது குறிப்பிடத்தக்கது. உழவுக்கு இரவி இன்றியமையாதது, ஆதலின் ஆட்சியைப் 'பருதியரம் என நின்று நின்று காக்கும்' என்கிறார் கம்பன்.

திரு அவதாரப் படலம்

தசரதன் தன் குறை நேர்தல் :

தசரதன் வம்சத்தை வளர்க்க மகன் இல்லாத குறையைத் தானே எண்ணி வருந்துகிறான். அக் குறையை நீக்க வாஜமேத யாகத்தைச் செய்ய உறுதி பூண்டதும் அவனே (8.1,2). அவ் உறுதி பூண்ட பின்பே அவையைக் கூட்டுகிறான்; யாகத்தை நிறைவேற்ற அவர் துணையை நாடுகிறான். அனைவரும் அரசன் கருத்தை ஆமோதிக்கின்றனர். அதன் பிறகே மனைவியரிடம் கூறுகிறான். பிள்ளைப் பேற்றிலும் பெண்களின் பங்கு இது ஒரு சான்று. தேரோட்டியான சுமந்த்ரன் அரசனைத் தனிமையில் (9.1) கண்டு முன்பு அங்கநா ட்டரசன் ரோமபாதன், வனத்திலிருந்த விபாண்டகன் மகன் ருஷ்ய ச்ருங்கனைக் கொணர்ந்து அந்த நாட்டில் மழை பெய்வித்ததையும் அவன் மகள் சாந்தாவை ருஷ்ய ச்ருங்கனுக்குத் திருமணம் செய்வித்ததையும் கூறுகிறான். ருஷ்ய ச்ருங்கன் தசரதனுடைய மாப்பிள்ளையாகவும் கூறப்படுகிறான். (1.9.19) சாந்தா தசரதனுடைய மகளோ அன்றி ரோமபாதனும் தசரதனும் ஒரே குலத்தவரோ, அதன் வழி சாந்தா தசரதனுடைய மகள் முறையினளாகி இருக்கலாமோ என எண்ண வேண்டி உள்ளது.

கம்பனில் தசரதன் தன் குறை நேர்ந்தது வதிட்டனிடம். அறுபதினாயிரம் என்ற எண் அவனுடைய ஆட்சிக் காலம் (182). இந்த எண் தசரதனுடைய அவையோரைக்

கூறும் போதும் (668) சனகன் வில்லைத் தண்டில் தாங்கினரைக் கூறும் போதும் கம்பன் வழங்கும் என். தசரதன் தான் ஆண்டதாகக் கூறவில்லை ஓம்பினேன் என்பதே அவன் வழங்கும் சொல. மனம் மறுகுற்று கைகேயிக்குக் கூறும் போதுதான் ' நின் மகன் ஆள்வான் ' ' நீ இனிது ஆள்வாய் ' ' நிலம் எல்லாம் உன் வயம் ஆமே, ஆளுதி ' (1526) என்பான். ஆளுகை ஏச்சுக்கு உரியது; ' ஓம்புதல் ' போற்றற்குரியது இந்திரசித்து, '' மனிதருக்கு அடிமையாய் நீ இராவணன் செல்வம் ஆள்வாய் '' (9100) என்றும், இலக்குவன் பரதன் தான் பெறும் இருநிலம் ஆள்கைவிட்டு இன்று என் ஏவலால் அருநரகு ஆள்வது காண்டி (2413) என்றும் கூறுவது காண்க.

தசரதனுடைய வேள்வியில் ஆவி பெற வந்த தேவர்களுள் பிரமனிடம் முறையிட பிரமன் அங்கு வந்த விஷ்ணுவிடம் நீர் உம்மை நான்கு கூறுகள் ஆக்கிக்கொண்டு மனித வடிவில் தசரதன் புத்திரராக அவதரித்துபோரில் ராவணனைக் கொல்ல வேண்டும் '' விஷ்ணோ; புத்ரத்வம் ஆகச்ச க்ருத்வா ஆத்மாநம் சதுர்விதம் தத்ர தவம் மாநுஷோ பூ$_4$த்வா பரவ்ருத்த$_4$ம் லோக காணடகம் அவத்யம் தேவதை : விஷ்ணோ ஸமரே ஜஹி ராவணம் '' 1.15 21-2 என்று கூறி உம்மைச் சரணடைகிறோம், தத: த்வாம் சரணம் க்தா (15.25) எனவும் கூறினர். விஷ்ணுவும் அதை ஏற்று, அச்சம் தவிர்ப்பீர் மங்களம் ஆகுக. உம் நன்மைக்காக இராவணனைக் குலத்தொடும் கொன்று 11000 ஆண்டுகள் மனித உலகில் வாழ்வேன்'' என்ற வரம் தந்தார். ''ப$_4$யம் த்யஜத, பத்ரம், வோ ஹிதார்த்தம் யுதி ராவணம் (27)ஏவம் தந்தவா வரம் '' (30).

இதுவே வால்மீகத்தில் காணப்படும் முதல் சரணாகதி. இத்தனைப் பிரமாணங் களையும் மீறி, கம்பன் கதையைக் கையாள்வது குறிப்பிடத்தக்கது. 'சரண் அடைந்தோம்' என வானவர் கூறவில்லை. ' வருந்தல். வஞ்சகர்தம் தலை அறுத்து இடர் தணிப்பென் தாரணிக்கு '' என்பதே விஷ்ணுவின் வாக்கு. ' தசரதன் மதலையாய் வருதும் தாரணி ' என்றது விஷ்ணுவான தன்னையே. ' வளையொடு திகிரியும் விரிவாள் பாயலும் இளையர்கள் '. இளையர் இடத்து விஷ்ணு அம்சம் இலது. பிறப்பைக் கூறும் பாசுரம்.

ஒரு பகல்...திறப்கொள் கோசலை மற்ற மூவருக்கும் பரத்வத்தில் பங்கு இல்லை கலைக்கோட்டு முனிவனைக் கொண்டு வேள்வி, செய்விக்கச் சொன்ன வரலாற்றைக் கூறியது வதிட்டன்; சுமந்திரன் அன்று. காளிதாசன் தசரதன் சாபம் பெற்ற வரலாற்றை முதற்கண் கூறுகிறார் (வால்மீகத்திலும், கம்பனிலும் இது தசரதன் இறக்குமுன் கோசலைக்குக் கூறுவதாக அமைந்துள்ளது) சாபம் பெற்ற பதினாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்கு 'மகப்பேறு என்னும் ஒளி இன்மை' தோன்றுகிறது, (ரகுவம்சம் 10.2) ருஷ்ய ச்ருங்கரைக் கொண்டு மகப்பேறு யாகம் தொடங்கினான். அப்போது தேவர்கள் பாற்கடலில் அறிதுயில் அமரும் ஆதி புருஷனை அடைந்தனர் என்பது 8 சுலோகங்களால் ஆன குளகம். அவனை 17 சுலோகங்களில் துதித்து உவப்பித்தனர். விஷ்ணு கேட்க அவர்கள் தாங்கள் ராவணன்பால் கொண்டுள்ள அச்சத்தைத் தெரிவித்தனர். விஷ்ணு 10 சுலோகங்களால் அவர்களின் அச்சத்தை அகற்றினார். பின் தெளிந்த நீர் நிலைகளில் ஒரே சந்திரபிம்பம் பலவாகத் தோன்றுவது போல, விஷ்ணு பல (நான்கு) வகையாகப் பிரிக்கப்பட்ட தன்மையில் அவர்கள் (கோசலை, சுமித்ரை, கைகேயி) கருப்பங்களில் வசித்தார்.

விபக்த ஆத்மா விபு$_4$: தாஸாம் ஏக: குக்ஷிஷீ அநேகதா$_4$ ।
உவாஸ ப்ரதிமா சந்த்ர: ப்ரஸநநாநாம அபார் இவ ॥ RV 10-65
நால்வரும் விஷ்ணுவின் பிம்பமே என்பது கருத்து.

ஆழ்வார்கள் வாக்கில் தனிமுதல்வன் வெங்கதிரோன் குலத்தில் இராமனாகத் தோன்றினார்; தம்பியர் என்ற பெருமை மட்டுமே தசரதனுடைய பிற மதலையர்க்கு உண்டு என்பது போல வெளிப்படுகிறது. அக் கருத்தைக் கம்பன் தொடர்ந்தான்.

வால்மீகத்திலும் இறைவனுக்கு உரிய பண்புகளைத் தம்பியர் கொண்டிருந்ததாக இல்லை. காவ்யத்தில் இராமன் துதி ஒன்றே. அது பிரமனது VI 117 6-31.

இறைமையைக் கூறிட்டாலும் ஒவ்வொரு கூறும் முழுமை உடையது, அளப்பரியது, எல்லை அற்றது. மனத்திற்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்டது எனக் கூறப்படுவது கூறு ஒவ்வொன்றும் அளப்பரியது எல்லை அற்றது, மனத்திற்கும் சொல்லுக்கும் அப்பாற் பட்டது என்பதாகும். அந்த முழுமையினின்று முழுமையை எடுத்தாலும் எஞ்சியது முழுமையே என்பது ஈசாவாஸ்யம்.

தசரதன் பரிவாரங்களுடன் அங்க நாட்டுக்குச் சென்று உரோமபதன் அனுமதி பெற்று ருஷ்ய ஸ்ருங்க முனிவனையும் அவர் மனைவி சாந்தாவையும் அயோத்திக்கு அழைத்து வந்தான். வந்த பிறகு வஸந்த ருதுவில் யாகம் செய்ய மனம் கொண்டான் (12.1). அந்த யாகம் தொடங்க ஓராண்டு சென்றது (13.1). வதிட்டன் விரும்பியவாறு முன்பே தொடர்பு கொண்டிருந்த (பூர்வ ஸம்ப$_3$ந்தி$_4$நம்) மிதிலை அரசன் சனகனையும் (13, 21, 22), காசி, கேகய அரசரையும் யாகத்திற்கு அழைத்தான். யாக பூமியை ஸரயுவின் வடகரையில் அமைத்தான்(4) எனக் குறித்துக் கொள்வதால் அயோத்தி நகரம் தென்கரையில் இருந்தது என எண்ண உள்ளது. வேள்விக்குரிய கலைஞரை முனிவர் கூறுகிறார்: யக்ஞ கர்மம் அறிந்த அந்தணர் அவருடன் பணி புரிவோர், சில்பகாரர், தச்சர், குழி தோண்டுவோர், சோதிடன், பலவித தொழிலாளர், நாடகத் தொழிலாவர், ஆடுவோர். இது போன்றே பல வகைத் தொழிலாளர் பரதனுடன் சித்திரக் கூடத்திற்குச் சென்றதாகவும் முனிவர் வரிசைப் படுத்திக் கூறுவார்.

யாகம் ஓராண்டு நடந்தபின் வேள்வித்தீயில் எழுந்த பூதம் கொணர்ந்த பாயஸம் (16-19) தேவ அன்னத்தில் (16-21). தசரதன் கோசலைக்குப் பாதியும் சுமித்திரைக்கு முதலில் கால்பங்கும், மறுபடியும் எட்டில் ஒரு பங்கும் கொடுத்தான். கைகேயிக்கு எட்டில் ஒரு பங்கும், எட்டில் மூனறு பங்கும் அளித்தான். 'சுதை நிகர் பிண்டத்தையும் பகிர்ந்து மூவர்க்கும் அளித்ததைக் கம்பன் கூறுகிறார். யாருக்கு எவ்வளவு எனக் கூறவில்லை. க்ஷத்ரிய ஜாதியில் பிறந்த 'மஹிஷி' தவிர அரசனுக்கு வைச்ய ஜாதியினர் 'வாவாதா', சூத்ர ஜாதியினர் 'பரிவ்ருத்தி' யாகக் குதிரையைத் தொட்டதாக முனிவர் கூறுகிறார் (14-35). வால்மீகத்தில் கூறப்படும் பல சடங்குகளைக் கம்பன் விட்டுவிட்டார்,

தேவியர் கரு உற்று 12 மாதங்களுக்குப்பின் மக்களைப் பயந்தனர் (18.8). முனிவர் இவ் இடத்தில் இராமன் விஷ்ணுவின் பாதிபாகம் (18-11) எனவும், பரதன் கால் பாகம் (18-13) எனவும் லக்ஷ்மண ஸத்ருக்னர் எஞ்சியதில் பாதி-பாதி எனவும் ''விஷ்ணோ, அரத$_4$ ஸமந்விதென'' எனவும் கூறுகிறார்.

காளிதாசன் ஸமூகத்தில் செவிலித்தாயர் குழந்தைகளுக்குப் பால் அருத்துவது வழக்கமாய் இருந்தது (10-78).

இராமனுக்கும் இலக்குவனுக்கும் இடையே இருந்த தொடர்பை 'நெய்குழல் உறும் இழை' எனக் கம்பனும் 'தான் உடல் படைத்ததே இராமனுக்கு உவந்த தொண்டாற்றவே' ஸர்வ ப்ரியகர தஸ்ப ராமஸ்ய அரி ரீரத : ('8-29) என வான்மீகியும் கூறுகின்றனர்.

திருப் பொலிந்த இலக்குவன் இராமனுக்கு வெளியே உள்ள உயிர்' லக்ஷ்மண லக்ஷ்மீ ஸம்பந்த ; ப₃க்ஷி : ப்ராண இவ அப (18-3)''. மேலும் யுத்தகாண்டத்தில் சாரணன் வாக்கில், இலக்குவன் இராமனுடைய வலதுகை என்றும் வெளியில் உலாவும் உயிர் என்றும் கூறப்படுகிறது. ராமஸ்ய தசிரிணோர பாஹி நித்யம் ப்ராணோச பஹி சர :'' (VI 23-24) எனவும் கூறுவர்.

''எதிர்வார் கார்வர அலர் பயிர் பொருவுவார் களியால்'' என்ற சிறந்த உவமையே காளிதாசனால் 'கோடையின் இறுதியில் கார்மேகங்களைப்போல மக்கள் மனம்தாழ'' அக்குமரர் கவர்ந்தனர் என்று வெளிப்படுகிறது.

''மந : ஜஹ்ரு : நிதா₃க₄ அந்தே ஸ்யாம அபரா திவஸாகிவ்'' (10-8).

மேலும், நான்கு புதல்வரும் அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் உருப் பெற்று வந்ததுபோல் விளங்கினர். முதல்வன் இராமன் அறமூர்த்தி என்பதும், தசரதன் இப்பயன்களை இம்மையிலே பெற்றான் என்பதையும் ''த்ர்ம அர்தவ காம மோக்ஷானாம் அவதார இவ அங்கவாந் (10-84) என்று காட்டுகிறார்.

கையடைப் படலம்

விசுவாமித்திரன் அவையில் தோன்றும்போது தசரதன் இராமன் திருமணத்தைக் குறித்து உபாத்யாயர்களுடனும் பந்துக்களுடனும் சிந்தித்துக்கொண்டு இருந்தான்.

''அத₂ ராஜா த₃சரத₂ தேஷாம தாரகரியாம் ப்ரதி।
சிந்த யாமாஸ தர்மாத்'மா ஸ உபாத்யாய ஸபா₃ந்த₄வ ।। 18-378

இன்னும் இராமனுக்கு முக க்ஷவரம் கூடச் செய்யவில்லை; 16 ஆண்டு நிரம்பவில்லை. குழந்தைக் கல்விகூட முடியவில்லை; அஸ்த்ரங்களை அறியான்; போர்புரியும் வல்லுநன் அல்லன்.'' ஊந ஷோடவர்ஷ காக பக்ஷ த₄ரம்'' (I.19-9); ஊந ஷோடஸ வர்டி (20-2). ''பால : ஹி அக்ருத வித்ய : ... ந ச அஸ்த்ர பல ஸம்யுக்த : நச யுத்₃ந₄ விஸாரத₃ (7) என்பன தசரதன் விசுவாமித்திரனுக்குச் சொல்வன குழந்தை பன்னீராட்டைப் பருவத்தன்; ஓராடை உடுத்திருப்பவன் என இத்நிகழ்ச்சிக்குச் சில நாட்களுள் இராமனுடன் போர் புரிந்த மாரீசன் இராவணனுக்குக் கூறுவன.

''பால த்₃வாத₃ஸ வர்ஷ (III 38-6)
''ஏக வஸ்த்ர த₄'' (14)

திருமணத்திற்குப் பின் சில ஆண்டுகள் அயோத்தியில் வாழ்ந்து, பிறகு கானகம் ஏகும்போது இராமனுக்கு வயது 25 என்பது சீதையானவள், இராவண ஸந்யாஸிக்குச் சொல்வது.

மம பர்தா மஹா தேகா வயஸா பஞ்ச விம்ஸக (III 47-10)
என் கணவன் ஒளி பொருந்தியன்; 25 வயதினன்.

குழந்தைப் பருவம் நீங்கு முன்னரே திருமணத்தைப் பற்றிச் சிந்திப்பது அக்கால வழக்கம் போலும்!

கம்பனில் இராமன் காதல் நோய் உறும் வயது வந்தவனாகக் காணப் படுகிறான். இராமனுடைய 'முதிரா இளமை' கம்பனின் பயிலும் 'படையூற்றம் இலன், சிறியன் இவன்' என்ற சொற்கள் முற்றிலும் வெளிக் கொணரவில்லை.

இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு விசுவாசமித்திரன் தசரதனை வேண்டும் போது, வெளிப்படையாகவே வீரர்கள் நன்கு பயிற்றப்பட்டவர்களான மாரீசனும் சுபாஹீவும் யாகத்திற்குச் செய்யக்கூடிய இடையூறுகளையும் (19, 5). பிரமனால் வரம் பெற்று மூவுலகங்களையும் துன்புறுத்தும் மஹாபல, மஹாவீர்ய ராவணனையும் விசுவாமித்திரர் குறிப்பிடுகிறார். அதனுடன் தான் அறிந்துள்ள இராமனுடைய பெருமையையும் குறிப்பிடுகிறார் (19-14). இவற்றை எல்லாம் கம்பன் விட்டு விட்டார்.

தசரதன் இராமனைப் போருக்கு அழைத்துச் செல்வது உரியது அன்று எனப்பல முறை கூறி, இறுதியில் மறுக்கிறான் (20, 25-26). உணர்ச்சி மிகுதியால் அவன் சொற்கள் குழறிப் பிதற்றல் ஆகின்றன (28), முனிவனுக்குச் சினம் மூளுகிறது.

''முன்பு அளித்த வாக்கைப் பின்பு மறுத்தல் ரகு குலத்துக்கு இழுக்கு. நீர் இது தகும் எனக் கருதினால் நான் சொல்கிறேன்: நீர் உம் பிரதிக்ஞயைப் பொய் ஆக்கி உம் நண்பர் சூழ இன்பமாக வாழும்'' (21-23) எனக் கூறி விசுவாமித்ரன் எழ, வசிட்டன் உடன் எழுந்து அம்முனிவன் பெருமையையும் தசரதன் இழைத்த தவற்றையும் எடுத் துரைக்கிறான். இராமனை விசுவாமித்திரன் காக்கவல்லவன், விசுவாமித்ரன் சொல்வது இராமனுடைய நன்மைக்காக என்ற 3 காரணங்களைக் கூறி இராமனை அனுப்புமாறு பணிக்கிறான். அதில் மூன்றாவது காரணத்தையே கம்பன் கையாண்டுள்ளான்.

'நின் மகற்கு உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள் மறுத்தியோ?' என்பது வால்மீகத்தில் 'நின் மகற்கு உறுதி தரவே முனிவன் உன்னை அண்மி இரந்தான் (21-21) என வருகிறது.

தசரதனுடைய இழிவும் இராமன் விசுவாமித்ரன் பெருமையும் மறுக்கும் போதும் கம்பன் கூறாதன. அவன் வாக்கில் அரசனுக்கு உரிய கம்பீர்யம் காணப்படுகிறது.

தாய் தந்தையர் வாழ்த்தி வழியனுப்ப (க்ருதஸ்வத்யயநும்) வதிட்டன் மங்கள மந்த்ரம் கூற, இராம லக்ஷ்மன் மன எழுச்சியுடன் திருவொடும், பொலிய அழகு ஒளி கால கையில் ஏந்திய வில்லுடனும், வாளுடனும் உத்சாகத்துடன் விசுவாமித்திரனுடன் சரயுவின் தென் கரையில் நடந்து சென்றனர். அவர்களுக்கு வெப்பமும் களைப்பும் தோன்றாதவாறும் உடலுக்கு ஊறு நிகழாதவாறும் முனிவன் அவர்களுக்கு மந்த்ரங்களை.

ஓதினான். பிறகு, அவர்களும்குப் பசியும் நீர்வேட்கையும் எழாமல் இருக்க பல-அதிபல என்ற கலைகளைக் கற்பித்தான் (22-18). எனினும், மாயமானாகி வந்த மாரீசனைக் கொன்ற இராமன் பர்ணசாலைக்குத் திரும்புங்கால், பசி, களைப்பு, நீர் வேட்கையால் வருந்தியதாக இராமாயணம் கூறும் (III 58-19).

அன்றிரவு, அவர்கள் சரயு நதிக்கரையில் புல் படுக்கையில் கௌசிகனின் அன்பு நிறைந்த சொற்கள் தாலாட்ட இன்பமாகத் துயின்றனர் (24).

மறு நாட்காலை கௌசல்யாவின் அழகிய குழந்தையைத் தாய் எழுப்புவது போல, தன் விரதத்தால் உலகிற்குப் பல, நன்மைகள் செய்வதற்5 விசுவாமித்ரன் எழுப்பினான் (282).

வஞ்சர் தீ வினை

போருக்குச் செல்லும் வீரன் பகைவரைக் கொல்லும் நோக்கத்துடன் போகிறான். பகைவரால் கொல்லப்படும் வாய்ப்பு உண்டு என்று அறிந்தும் துணிந்து களத்தில் இறங்குகிறான். நேருக்கு நேர் நின்று போர் புரிய அறிவானே அன்றி மாயையும் வஞ்சமும் அறியான்.

உலகில் மற்றொரு வகையான போரும் உண்டு சொல்வன்மையால் பொய்யை மெய் எனத் தோற்றுவிப்பது, புறங்கூறி இகழ்விப்பது; அறவழிக்குத் தகாத முறைகளால் தற்கால உயர்வு பெறுவது; வேறு திறமை இல்லாத கயவருடைய தீவினைகளால் ஒருவனுடைய மானம் பறிபோக அதைத் தாளாமல் உயிர் நீப்பர் உள்ளனர் உயிர் நீக்காமல் தமக்கு உற்ற பழியைத் துடைக்க அற்றம் நோக்கி எஞ்சுவாரும் உளர். அப்படி எஞ்சுவார் நெஞ்சில் வைகும் ஆராக் கனல் போன்றது ஒரு பாலைவனத்தின் வெப்பம் எனக் கம்பன் கூறுகிறார்.

''விஞ்சு வான் மழையின் மேல் அம்பும் வேலும்பீட
செஞ் செவே செருமுகத்து அன்றியே திறன் இலா
வஞ்சர் தீவினைகளால் மான மா மணி இழந்து
எஞ்சினார் நெஞ்சுபோல், என்றும் ஆராது அரோ (345)

கவிச் சக்கரவர்த்தி நெஞ்சின் கனலைப் பல இடங்களில் உவமையாகப் பயன்படுத்துகிறார்.

'வஞ்சன் பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் (2998) அறன்வலி உடைய நல்லோர்க்கும் உண்டாகும் மான இழப்பும், பழியும், நெடிது நில்லா: விரைவில் அழியும் அவ்வாறு இராமனுக்கு நாகபாசத்தால் உண்டான வடுவும் கருடன் வருகையால் உடனே அழிந்தது.

'அறனே இழைக்கும் உரவோன், வல்லான் ஒருத்தன்
இடையே படுத்த வடு ஆன மேனி வடுவும்' (8265)

இந்திர சித்தன் 'படைகள் வருந்தியதற்கு உவமையாக, தம்பால் பழிவர மனம் அழுங்கிப் பெருமூச்சு விடும் நல்லோரைக் கூறுகிறார்.

'பிறர் முன் சொல்லா, உரை உண்ட நல்லோர் என்ன,
உயிர்த்து உயிர்த்து உழைப்பதானார் (8189)

தஞ்சம் அடையுமுன் அவர் தகுதி அறிந்து தஞ்சம் புகவேண்டும் 'சிறியோரை அண்டித் தம் காரியம் சாதித்துக் கொள்வதிலும், பெரியோரைத் தஞ்சம் அடைந்து காரியம் எக கூடாமையே சிறந்தது என்பார் காளிதாசன் (மேகதூதம்)

இலங்கை எரிந்தபோது, பறவைகள் புகைப்படலத்தின்மேல் எழ அஞ்சி, கடலில் வீழ்ந்து அங்குள்ள மீன்களுக்கு இரை ஆயின. அது, அருள் இல் வஞ்சரைத் தஞ்சம் என்று அடைந்தவர் அனைய (5979) என்ற வஞ்சரை நினைவூட்டுகிறது.

மற்றொரு வஞ்சவினை அறம்கூறும் அவையில் தம் நன்மைக்காகப் பொய்ச்சான்று புகல்வோர் அறம் அல்லா நெறியில் செல்லும் நெஞ்சம் உடையவர். அவர் குலம் அழிவது போல இராவணனுடைய மூல பலம் அழிந்தது என்கிறார்.

''வஞ்ச வினை செய்து நெடு மன்றில் வளம் உண்டு, கரி பொய்க்கும், மறம்ஆர் நெஞ்சம் உடையோர்கள் குலம் ஒத்தனர், அரக்கர்'' (9441) கிங்கரர் வதையிலும் இதே உவமை கையாளப்பட்டுள்ளது.

''பொய்க்கரி புகலும் புன்கணார், குலங்களின்
அவிந்தனர், குரங்கினால் (5546)''

பழிச்சொல்லால், நம் நிலையினின்று இழிந்ததை வால்மீகியும் ஓர் உவமையில் பொதிந்துள்ளார். சுந்தர காண்டத்தில் அசோக வனத்தில் உள்ள சீதையைக் கூறும் |பல உவமையில் ஒன்று 'முன்பு ஏறபட்டிராத பழியால் ஒருவன் புகழ் கீழே வீழ்ந்து கிடப்பது போல' என்பதாகும்.

'அபூ₄தேந அபவாதே₃ந கீர்திம் நிபதிதாம் இவ' (ப.ம.அ) காளிதாசன் குமார சம்ப₄வத்திலும், 'பொய்க்கரி', 'வஞ்சர் சினை' 'தஞ்சம்' போன்றவற்றைப் பன்முறை வழங்கி இருத்தலான் இவை கம்பன் வாழ்க்கையினின்று எழுந்தனவோ என ஐயுற உளது.

முகம் பார்த்தான்

சதானந்தன் சீதையின் பிறப்பு வளர்ப்பு கூறி, 'இவன் (இராமன்) வில்லை ஏற்றின் நன்று; மலர்க் குழல் சீதை நலம் பழுது ஆகாது'' எனத் தன் உரையை முடித்தான்

முனி பகர்ந்த எலாம் உன்னி, விசுவாமித்ரன் சடைமுடி துளக்கிப் போர் ஏற்றின் -இராமனின்-'முகம் பார்த்தான். அவ்வள்ளலும் அம்மாதவத்தோன் நினைந்த எலாம் நினைந்து அந்த நெடுஞ்சிலையை நோக்கினான்''. சைகையால் அறிபவன் இராமன்.

இதற்கு முன்பே, அயோத்தியினின்று முனிவன் வேள்வி காக்கப் புறப்பட்டபோது, இடையில் கொடும் சுரப்-பாலைவனம் எதிர்ப்பட, முனிவன் அருங்குமரர் ''பூவின் மெல்லியர், வருந்துவர் சிறிது'' என மனத்தின் நோக்கினான் (கருதினான்). பின் 'நோக்கினன் அவர் முகம்; நோக்க. நோக்கிடைக்கோக் குமரரும் அடி குறுக', அவருக்கு வித்தைகள் இரண்டும் அருளினான். ''நோக்கினால் கருத்தறிதல் கோசல நாட்டார் இயல்பு '' என நம்பிள்ளை திருவாய்மொழி 6-2-7 ஈட்டில் கூறியது. இத்தகைய சான்று

களைக் கொண்டோ என எண்ண வேண்டி உள்ளது. இராமன் ‘குறிப்பினால் உணரும் கொள்கையான்’ (6029) என்பது கவிக்கூற்று.

வால்மீகத்தில், சனகன் விசுவாமித்திரனிடம் ‘இவ்வில்லை அரச குமாரருக்குக் காட்டுக’ என்றார். முனிவன் ‘குழந்தாய், ராம!, வில்லைப்பார்’ என்றான். இராமன் அவ்வாறே பார்த்து ‘நான் இவ்வில்லைக் கையால் எடுத்து வளைக்க முயல்கிறேன் ‘என்றான். முனிவன் நன்று அவ்வாறே செய்’ என இராமன் முனிவன் சொல்படி (‘வசநாத் முகந’ 1. 67-15) வில்லை எடுத்தான்.

கண் சைகையால் முனிவன் ஆணை இட்டதைக் கம்பனிலிருந்து தியாகராஜர் கையாளுகிறார். இப்பகுதிக்கென மத்யமாவதி ராகத்தில் அழகிய கீர்த்தனம் ஒன்றை அமைத்துள்ளார்.

உன் முன் மயிர்ச்சுருள் அசைந்து அலைவதைக் கண்டு அந்த அரசமுனிவன் உவகையால் எப்படி உள்ளம் பொங்கினானோ? ‘அலகலு அல்லலாடங் கநி ஆ நாண் முனி எடு பொங்கெனோ’ என்பது பல்லவி,

‘முனிவன் கண்ணின் சைகை உணர்ந்து சிவதனுவை ஒடிக்க எழும்போது உன் முகத்திற்குக் களை ஊட்டும் ‘முனிகனுசைக தெலிசி சிவதநுவுனு விரிசெடி ஸமயமுந த்யாகராஜ விநுதுநி மேமுன எஜ்ஜில்து’ என்பது சரணம்.

இராமன் வாயால் கூறாது கண்ணால் கூறும்சோகப்பகுதி ஒன்று உண்டு. சீதையை இராமன் ‘சாதி அன்று தக்கதோர் நெறி போதி’ (10019) என, அவளும் ‘சாதலின் சிறந்தது ஒன்று இல்லை (10028) இளையவனை அழைத்து ‘இடுதி தீ’ என வாயில் கூறினாள். இளையவன் இராமனைத் தொழ, அவன் ‘கண்ணின் கூறினான்.’

‘குறிப்பின் குறுப்பு உணராவாயின் உறுப்பினுள் என்ன பயத்ததோ கண்’ (குறள்) உறுப்புக்களுள் சிறந்தது கண்கள், கண்களின் பயன் பிறர் கருதிய பொருளை உணர்தல்; அவ்வாறு உணராவிடின் கண்கள் இருந்தும் பயன் இல்லை.

மேல் நிகழ்வன கம்பன் வாக்கில் வினைமுற்றுக்களாக உதிக்கின்றன. ‘‘பொழிந்த நெய் ஆகுதி வாய்வழி பொங்கி எழுந்த கொழுங்கனல் என எழுந்தான். அவ்எரி வலம் சுழித்து எழும்’’ (8604). வால்மீகி இவ்வழக்கத்தை இலங்கையிலும் காண்கிறார். அக்ஷகுமாரன் போருக்கு எழும்போதும் (V. 47-2) இந்திரஜித் போருக்கு எழும்போதும் (VI. 80-10) ‘‘மால்விடையும் பொன் நாகமும், நாகமும் நாண நடந்தான்’’ (697).

‘‘ஆடக மால்வரை அன்னது தன்னை
சீதை எனும் பொன் சூடக வால்வளை சூட்டிட நீட்கும்
ஏடவிழ் மாலை இது என்ன எடுத்தான்’’ (698)

கையால் எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார். மலை போன்ற உறுதி உடையது ஆயினும், பெருமுயற்சி இன்றி, மன்மதனுடைய மெல்லிய பூவில்லை நாண் ஏற்றினான்.

‘‘ஆததஜ்ய சைல ஸாரம் அபி ந அதியத்நத: புஷ்பசாபம் பேசலம் ஸ்மர’’ (11-45) என்பதன் எதிரொளி இது.

கம்பராமாயணத்தில், இராவணன் வெண்பொருப்பை எடுத்தத் தோள்களால் எடுக்கலாகாப் பொன்மலையை அனுமன் எடுத்த காட்சி ஒன்று உண்டு, அயர்ந்த இலக்குவனை 'எடுத்து அகல்வன்' என நடந்தான் இராவணன். எழுந்திலன் இளையான். இராவணன் அயல்சார, தூயவன் அனுமன் 'தகவு கொண்டதோர் அன்பு எனும் தனித் துணை அதனால், அகவு காதலால், மகவு கொண்டுபோய் மரம் புதும் மந்தியின் எடுத்தான்'.

For Stony limits cannot hold love out
And love can do that dares lore attempt (R & J II ii)
என்பது ஷேக்ஸ்பியர் வாக்கு.

கல்லும் காதலுக்குத் தடை ஆகா : முயற்சிக்குக் காதல் வெற்றி தரும்.

''நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ஒருத்திப் பணியிலே''—பாரதி

பெண்ணரசி தோன்றினாள்

வில்லை அவைக்குக் கொணர்ந்தபோது அதன் வரலாற்றைக் ''கோதமன் காதலன்'' சதானந்தன் கூறத் தொடங்குகிறான். அதில் ஒரு பகுதி சீதையின் தோற்றம். ''உரம் பொருவில் தலம் வேள்விக்கு ஆதலின்'', எரு இடப்படாத நிலம் சமன் செய்யவே உழப்பட்டது 'உழுதேம்' என்றுகூறி அந்தாதித் தொடையாக 'உழுகின்ற' எனத் தொடங்குகிறார். உழும்போது கொழுவின் முகத்தில் எதிரில் சாலில் நிகழ்ந்தது. பொழுது புலரும் நேரம். புவியின் செல்வம் வெளிப்பட்டது.

ஓர் உழவன் கலப்பைக் கொழு மடுத்தி நிலத்தைப் பல சால் உழுதான். உழுகின்ற கொழுமுகத்தின் உதிக்கின்ற கதிரின் ஒளி பொழிகின்ற புவி மடந்தை திரு வெளிப்பட்டென, புணரி எழுகின்ற தெள் அமுதோடு எழுந்தவளும் இழிந்து ஒதுங்கித் தொழுகின்ற நல் நலத்துப் பெண்ணரசி தோன்றினாள் (682) இவ் எழுச்சியை வால்மீகி சீதை வனத்துக்குப் புறப்படும் தறுவாயில் வைப்பர். 'உத்தே அம்மீமத : காலே கம் ப்ரபா, இவ விஸ்வத: II 39-28 உதய ஞாயிற்றின்ஒளி காலையில் ஆகாயத்தில் எழுவது போல' என்பது இதன் பொருள்.

அதனை வெல்வாள் இங்கு நிலம் இப் பெண்ணுக்கு அரசியை (1118) நிலம்தரு திருவை தந்து பெருமை கொண்டது. இக்கருத்தைக் கம்பன் சூர்ப்பனகை வாக்கில் ''தார்தந்த கமலத்தாளை தருக்கினர் கடைய, சங்க நீர் தந்தது; அதனை வெல்வாள் (சீதையை) நிலம்தந்து நிமிர்ந்தது அன்றே'' (3144) என்கிறார். திருமகள் இழிந்து ஒதுங்குவதை இராமன் வாக்கில்.

''மங்கையர்க்கு ஒதி வைத்த இலக்கணம் வண்ண வாசப்
பங்கையத் தவட்கும். ஐயா, நிரம் பல.........
குயிலுக்கு ஒன்றும் குறைவு இலை (4507)

திருமகளுக்குக் குறை உள்ளதேனும் இவளுக்குப் பெண்மை இலக்கணக் குறை இலது. இராவணன் வாக்கில், ''செந்திரு நீர் அல்லீரேல் அவளும் வந்து ஏவல் செய்யும்'' (7684) என்பதும். கவிக்கூற்றில் ''திருவின் முகத்துத்திரு'' (5340) என்பதும். ''வஸிதாயா ஹி வஸீதா₄ம் ஸரீயாயா : ஸரியாயா : ஸரீ (II 113 2) என்பதுவும் ஒன்றே.

சூர்ப்பணகை வாக்கில், தாமரை இருந்த தையல் சேடியாம் தாமும் அல்லள் (3135) அயோத்தி மக்கள் வாக்கில், சீதை அவள் பிறந்த மண்ணினும் நல்லள் (1352) எனச் சீதை பேசப்படுகிறாள், ஸம்ஸ்கிருதப் புலவர் இவ்வாறே காவிய நாயகியின் தோற்றத்தை வியக்கின்றனர். இவ் எழுச்சியை ஆதிகவி வான்மீகி, சனகன் வாக்கில் வைக்கிறார்.

அத$_2$ மே க்ருஷத க்ஷேத்ரம் ஸாங்கலாத உத்தி$_2$தாதத :
க்ஷேத்ரம் ஸோத$_4$யிதா லப்தா$_4$ நாமநர யீதேதி விஸருதா
பூ$_4$தலாத் உத்த$_3$தா ஸா

நான் கலப்பையால் உழவோட்டி நிலத்தைத் தூய்மை பெறச் செய்யும்போது பூமியினின்று அவள் உதித்தாள். சாலினின்று எழுந்ததால் சீதை என்ற பெயர் படைத்தாள்.

['கார்முக 16, 17 : இருப்பு அனைய' 'உழுகின்ற'
அருமையாக வரும் அந்தாதித் தொடை
இணை ஏறு : கோடி எருது
'பியல்' : பிடரி
'வயிரத் திண்' : 'திண' அன்று வயிரம் போல் திண்மை]

'உரம் பெருவில் நிலம்' : வேள்விக்காதலின் எரு இடப்படாத நிலம் அன்றி ஒப்பற்ற வலிமை உள்ள நிலம். இராமன் சுருதிச் சொல்லால் உழுகின்ற பொழுது ஈன்ற ஒரு மகள் (ஆறுசெல் 28)

சீதை நிலம் தரு திரு : "தார்தந்த கமலத்தாளை..கடைய சங்க நீர் தந்தது; அதனை வெல்வான் (உழ) நிலம் தந்து நிமிர்ந்தது". (சூர்ப்ப சூழ்ச்சி 78)

அவள் 'மண்ணினும் நல்லள்' (மந்திர 39)

இக்கருத்து வால்மீகியின் வருப்பார் II 39-48 ஸ்லோகங்களோடு ஒப்பிடத் தக்கது.
உழுங்கள், சனகன் தவம் பெண் உருவமான ஒளிப்பிழம்பாக வெளிப்பட்டது.

ஸீதை அநுஸூயைக்குச் சொல்லும்போது (II 118 28-9)

சனகன் ஏரைப்பிடித்த கையன் நிலத்தைக் கீறிப் பிளந்து நான் தோன்றினேன். அவன் கைப்பிடியில் தெளிக்க தான்யம் இருந்தது நான் முற்றிலும் மண்தூசியால் மூடப் பட்டிருந்தேன் என்கிறாள் இதைச் சனகன் கூறுவது

'புவி மடந்தை திரு வெளிப்பட்டென'

பூமியின் செல்வம் ஒருங்கு திரண்ட அழகு புணர எழுகின்ற தொத்தாள்.

'தாமரை இருந்த தையல் சேடியாம்தாமும் அல்லள்' (சூர்ப்ப 69)
"இத்திருவை நிலவேந்தர் எல்லாரும் காதலித்தார்" (இரகு வம்சம் 11-54)

சீதை அனசூயைக்குக் கூறுவதுடன் இது முற்றும் வேறுபடும்.

'இயற்கை முறையில் பிறவாதவள் என உரிய அரசர் என்னை மணக்க முன் வரவில்லை. தந்தை துயரத்தில் ஆழ்ந்தார்' என்கின்றார் ஆனால் ஜனகன் கூற்று

ஒளித்திரள் உழுநிலத்தில் தோன்றியது. அரசர்க்கரசன் சனகனுடைய தவம் உருப் பெற்று முன் தோன்றியது ஒப்ப என்பார் பாஸகவி.

இத₃ம் தத் ஸித்ரீமயம் தேஜோ ஜாதம் க்ஷேத்ரஉத₃ராத்ஹலாத்
ஜநகஸ்ய ந்ருபேந்த்ரஸ்ய தபஸ : ஸந்நித₃ர்ஸநம்

சீதையின் உரு அழகோடு குணநலனையும் கவி கூறுகிறார். இதை ஸிதை அநுசூயையிடம் கூறும்போது சனகன் ஒரு கையில் ஏரைப்பிடித்து மற்றொரு பிடியில் தானியம் தெளிக்க இருந்தபோது நிலத்தைக் கீறியபிளவில், மண்ணால் மூடப்பட்டு நான் தோன்றினேன் என்கிறார்.

காளிதாசனில் கூர்மையாக நோக்க வேண்டிய பகுதி ஒன்று ஐந்து பூதங்களான பூ, புனல், தீ, வளி, வெளி என்பனவற்றில் பூமிக்கு நாற்றச்சுவை உண்டு. பூமியின் மணம் உழும்போது வெளிப்படும்; விளைச்சலில் விளங்கும்; வெளிவரும் செடி, கொடி மரங்களால் மக்கள் உணர்வர், உழுகின்ற கொழுமுகத்தால் புரண்ட மண்ணிலிருந்து எழும் மணம் பூமியின் வேட்கையை அறிவிப்பது ''ஸிர உத்கஷணஸிரபி₄'' அதன் மேல் மேகம் படிய, விதை விழ் பூமி பயன்தரும் சிறந்த மண் உடைய மாளவ பீடபூமி மக்களுக்குப் பயன்தரும் வேட்கை நிரம்பி உள்ளது. அதன்மேல் ஏறிப்படிந்து மேலே செல்வாயாக என்பது யக்ஷன் மேகத்தை வேண்டியது. ஸத்₃ய: ஸிர உதகஷ்ண ஸிசபி₄ க்ஷேத்ரம் ஆடுஹ்ய மாலம் ... வீரஜ (மேகதூதம் 16.)

'குணங்கள் - அழகு'
கம்பன் வாக்கில்

குணங்களை என் கூறுவது? கொம்பு இவளைச் சேர்ந்து அவை உய்யப் பிணங்குவன; அழகு இவளைத் தவம் செய்து பெற்றது காண்'' (683) வேறு இடங்களில் சீதையின் அழகைக் கூறுவான். கவிக்கூற்று :

'இப்பாவை தோன்றலால் அழகு எனும்
அணியும் ஓர் அழகு பெற்றதே ! (513)

அழகு இதுகாறும் மகளிர்க்கு ஓரணியாக இருந்தது.
அவ் அணி இவளோடு சேர்ந்து உருவம் பெற்றது,
இவளால் அழகினுக்கு அழகுசெய்தனர்' (1119)

பிறர் தம்மை அணிகளால் அழகு செய்து கொள்ள இவளிடமிருந்து அணிகள் நீங்கினால், அவள் இயற்கை அழகு தோன்றிப் பொலிவுறும்.

உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்பது ஓரார்,
அமிழ்தினைச் சுவை செய்தென்ன அழகினுக்கு அழகு செய்தார்' 1119

அமிழ்து தன்னை நுகர்ந்தாரைப் பிறவற்றை நுகராமல் தடுப்பது. எனவே, அமிழ்துக்குச் சுவை ஊட்டுவது அதற்குக்குறை ஆகும், நிறைவு ஆகாது. இதை 'ஏழைமை' பேதைமை என்கிறார் கவி. தானே யாவற்றுக்கும் அணியாகும் : தனக்குப் பிறிது அணி இலது. 'தான் அணி ஆனபோது தனக்கு அணி யாது மாதோ' (1123) உண்மையில் ஒருவர்க்கு அணி என்பது அவரின் குணநலமும், ஒழுக்கமும் ஆம்.

இராவணன் கண்டன : ''பொற்பினுக்கு அணியினை, புகழின் சேக்கையை கற்பினுக்கு அரசியை கண்ணின் நோக்கினான்'' (3344)

அனுமன் கண்டன : ''இற்பிறப்பு என்பது ஒன்றும் இரும்பொறை என்பதொன்றும் கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்''. (6035)

இராமனும் அமைய நோக்கினான் : ''கற்பினுக்கு அரசினை பெண்மைக் காப்பினை, பொற்பினுக்கு அழகினை, புகழின் வாழ்க்கையை'' திருமணத்துக்குப் பின், சீதையின் அக அழகும் புற அழகும் இராமனை எவ்வாறு கவர்ந்தன என வால்மீகி கூறுகிறார். ''குணாத் ருபகுணாத்ச அவி ப்ரீதி : பூ$_4$யோ அபி வர்த$_4$தே தஸ்யாத்ச ப$_4$ர்தா த்$_3$விகு$_3$ணம் ஹ்ருத$_3$யே பரிவர்த்தே'' (77-27) அவளுடைய குண சௌந்தர்யத் தாலும் அவனுடைய குண ஸௌந்தர்யத்தாலும் அவர்களிடையே காதல் மென்மேலும் வளர்ந்தது. அவள் கணவன் அவளுடைய இதயத்தில் மாறிமாறி ஈரிரு மடங்காகப் பெருகினார்.

குணங்கள் கருப்பொருள் பருப்பொருள் ஒன்றைச் சேர்ந்தே அவை உய்ய வல்லன இன்றேல், குணங்களை மக்கள் அறியார். இவளைச் சேர்ந்து உய்ய வேண்டும் என நற்குணங்கள் யாவும் தம்முள் போட்டி இடுகின்றன. கொம்பு இவளைச் சேர்ந்து அவை உய்யப் பிணங்குவன. இக் கருத்து புதிது. வால்மீகி ராகவனைக் குணங்கள் அலங்கரிக்கின்றன என்பார்.

ராக வம் ரோபயந்தி ஏதே ஷிட்குணா : II 33.12 ஸிதை அனுமனையும் அவ்வாறே புகழ்கிறாள் பலகுணங்கள் உனக்கு அணி ஆகின்றன. அடைமொழிகளைத் தந்துள்ளார். அடைமொழி அது தழுவும் பெயருக்கு ஊறு விளைவிக்கக் கூடும் ஆதலின் அடைமொழிகளைத் தவிர்க்க வேண்டும் - என்ற கருத்து உளது.

ப$_3$ஹவோ கு$_3$ணா : தவய்யேவ ஸோபநா VI 113-38 அழகு மட்டும் அன்றி; தவமும் இவளை அண்டி பிறரால் காணத்தக்கது ஆயிற்று.

அழகு இவளைத்தவம் செய்து பெற்றது காண் (683) என்பதொடு இராமன் வாக்கில் தவப் பாவை (6067) ('தவம் புரியும் பாவை, யான் தவம் செய்து பெற்ற பாவை' 'தவத்தின் உருவாம் பாவை', என்பன அன்றி
அனுமன் வாக்கில் தவம் செய்த தவம் ஆம் தையல் (6037) என்பதும் கவிக் கூற்று.

'இப் பாவை தோன்றலால் அழகு எனும் அவையவம் ஓர் அழகு பெற்றதே' (516) என்ற கருத்துக்களும் காவியத்தில் தொடர்ந்து பயிலும்.

"தள்ளரிய பெருநீதி"

ஒரு பாத்திரத்தைச் சில பாடல்களில் கூறும் கவிஞன் அப்பாடல்கள் ஒவ்வொன்றும் பொருள் ஆழம் கொண்டதாக அமைக்கவேண்டியுள்ளது. பரதனுடைய சிறந்த பண்பு களைக் கூறும் பாடல் ஒன்றில் 'தள்ள அரிய பெருநீதி' என்று நீதிக்கு இரு அடைமொழி களைத் தந்துள்ளார். அடைமொழிகள் அது தழுவும் பெயருக்கு ஊறு விளைக்கக் கூடும் ஆதலின் அடைமொழிகளைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்துளது.

எடுத்துக்காட்டாக ‘பெருநீதி’ என்றதால் ‘சிறுநீதி’யும் உண்டோ?
‘தள்ள அரிய’ என்றதால் ‘தள்ள எளிய’ நீதியும் உண்டோ?

என்ற ஐயங்கள் அடைமொழிகளால் எழுகின்றன. அன்றி, இரு அடைமொழிகளும் ‘நீதி’யைத் தழுவுவனவா? முந்திய ‘தள்ளரிய’ என்னும் அடைமொழி பிந்திய ‘பெரு’ என்பதைத் தழுவி ஒரே அடைமொழியாகி ‘நீதி’யைத் தழுவுகிறதா?

கீதையில் ‘ஸாஸ்வத த₄ர்ம கோ₃ப்தா’ (14.27) என்றுமுள அறக் காவலன் என வருகிறது. இராமானுஜர் என்றுமுள அறம் வேதநெறி என வரை காண்கிறார். சங்கரர் ‘என்றுமுள அறம் என்று’ காண்கிறார். இருவருமே அத்தகைய அறத்தைக் காப்பவன் என்றே கருத்துக் கொள்கின்றனர். ‘நிலத்துள்ள காவலன்’, ‘அறங்காவலன்’ என்று பிரிக்கவில்லை. முதல் அடைமொழி அடுத்த அடை மொழியை வலியுறுத்துமே அன்றி, அதைத்தாண்டியுள்ள பெயர்ச் சொல்லுக்குப் போகாது.

‘தள்ளரிய’ தாண்டுவதற்கு-கடத்தற்குக் கடினமான சில நீதிகள் எச் சூழ்நிலைக்கும் எச் சமுகத்திற்கும் பொருந்துவன: வாய்மை, புறங்கூறாமை போன்றவை சில நீதிகள் குறிப்பிட்ட சூழ்நிலைக்கே பொருந்துவன. கொல்லாமை, கல்லாமை, நியமனங்கள் போன்றவை; இவை பெரும்பாலும் எதிர்மறைப் பண்புகள். ‘பெருநீதி’ எச் சூழ்நிலைக்கும் எச் சமூகத்திற்கும் பொருந்துவது; உடன்பாட்டுப் பண்புகள் கீதை ‘த்₄ருவநீதி’ (18.78) என்னும் ‘ஸத்ய பாரக்ராமம்’ (I 1914) என்ற தொடருக்கு உரை இடும் பெரியவாச்சான் பிள்ளை: ‘‘வேண்டினபோது கொள்ளவும் தவிரவும் ஆம்படி அல்லகாண் இவர் குணங்கள் இருப்பது அவை நித்யமாய்க்காண இருப்பது. அவை இயற்கையாகவே இவருக்கு அமைந்தன’’ என்கிறார். அவை சாஸ்வத தர்₄மம்.

கும்பகருணன் இரு நெறிகளையும் வேறுபடுத்திக் காட்டுகிறான்: ஒன்று ‘‘நீதியால் வந்த ஓர் நெடுந்தரும நெறி’’; மற்றையது, ‘‘அரக்கச் சாதியால் வந்தச் சிறுநெறி’’ முன்னதை அறிவான், பின்னதை அறியான் (7625) ஸ்வ₂தந்தர்யம்-ஒருவன் விருப்பப்படி இயங்கும் உரிமை. இது மனிதனுடைய அடிப்படை உரிமைகளுள் ஒன்று. ஆனால் அது சமூக நியமங்களுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

இராமன் வாக்கில்: வஸிஷ்டன், கோசலை போன்ற பெரியோர் நெடுங்காலம் அயோத்தியிலிருந்து வெளிப்போந்திருந்தது நியாயமே எனக் கூறும் இராமன் ‘சிந்து அநுஷ்டா₂ந நித்யத்வம் ஸ்வாதந்தர்யம் அபகர்ஷதி’ ஆனால், என்றுமுள்ள (தள்ளரிய) சமூக ஒழுக்க நெறி ஒருவனுடைய (உ. ரா. ச. 1.8) சுதந்திரத்தைக் கீழே இழுக்கிறது. முரண்படும் இருவேறு உரிமை கடமைகளுக்குள் சமூகநெறி தனி ஒருவனுடைய நெறியைக் கட்டுப்படுத்தும். ‘நீதி ஆறு’ (10100) நீதி செல்லும் வழி; ‘நீதித் தனி ஆறு’ நீதியின் ஒப்பற்ற நெறி எனவும் பொருள் கொள்ளலாம். ‘தருமம் நீ அலது இன்மை என்னும் தன்மையாய் (10183) என்பதும் பரதனைக் குறித்ததே. ‘பெருநீதி’ பெரும் பயன் அளிக்கும் நீதி, சித்திரக் கூடத்தில் பெருமான் இட்ட கட்டளையை நிறைவேற்றியவன் ஆதலின்.

‘பள்ளம்’: ஆழி, கடல் ஆறுகள் புகும் இடம். பரதன் கடல் போன்றவன் வேறு இடத்தில் ‘‘ஒளியாறு நிறை கண்ணப் பெருங்கடலின் மண்ட’’ (1154) என்கிறார். பிராட்டி கைவளை திருத்துற கடைக் கண்ணினால் இராமனை உணர, அவள் கடைக்

கண்ணிலிருந்து பாய்ந்த ஒளி என்னும் ஆறு இராமனாகிய கடலில் பாய்ந்து நிறைந்தது. அதுபோன்று நீதி எனும் ஆறு பரதன் என்னும் பள்ளத்தில் பாய்ந்து நிறைந்தது.

பரதனைக் 'கடல்' என்றும் இலக்குவனைக் 'கழி' என்றும் பெரிய வாச்சான் பிள்ளை கூறுவார். ''வில்லை ஊன்றிய கையொடும் வெய்துயிர்ப் பொடும், வீரன் கண்கள் நீர் சொரிய, கங்குல் எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்'' (2344) என மஹாத்மாவாகிய லக்ஷ்மணனுடைய (II 86-1) பெருமையைக் குகன் பரதனுக்குக் கூறுவது 'கழியின் பெருமையைக் கடலுக்குச் சொல்லத் தொடங்கினார் என்பது' தன் ஸ்லோக வயாக்யாநம் இளைய பெருமாளுடைய ஆசாரம் அளப்பரியது. அவருடைய குணக் கடலைக் குகன் கையாலே இறைக்கத் தொடங்கினார்.

'கீர்தி ஸ்வயம் வர பதே ப$_4$ரத' (புகழ் தானாகவே வரித்து ஏற்ற தலைவன் பரதன்) என்பார் வேதாந்த தேசிகன் (பாதுகா ஸஹஸ்ரம் 133)

'தகையான்' 'தகைமை': அகங்கார மமகாரங்கள் யான் எனது என்ற எண்ணங்கள் மேடு பட்டிருக்கும் என்பது திருவாய்மொழி (3, 3-4) ஈட்டின் விளக்கம்.

திருமாலுடைய சிறப்புக் குணங்கள் இரண்டு 'ஸௌலப்யம்' அடியார்க்கு எளியன் ஆதல்; 'பரத்வம்' யாவினும் உயர்ந்திருத்தல். இவ்விரண்டனுள் எளிமையே ஏற்றமாம்படி இருக்கிறவனுக்கு 'அவன் உயர்ந்தவன்' என்று சொல்லுகை தாழ்வாகும் பரதன் 'தாதை உதவிய தரணி தன்னைத் தீயவை என்று நீத்து (3837) க்காயும் கிழங்கும் உண்டு பொன்னின் மேனி பொடிஉற' (2391) வைகி, 'இந்திரியங்களை அவித்து இருந்த)' 2514) பரதனுக்கு அத்தகைமையே உயர்வு தருவது. 'மன்னே ஆவான் வருதல்' தாழ்ச்சி ஆகும்.

நீதி ஆறு புக மண்டும் பள்ளம் என்ற சொல் தொடர் பரதனை வாழ்த்தும் பரத்வாஜன் வாக்கில் வால்மீகத்தில் காணப்படுவது மக்களுள் புலி அன்ன சீலத்தாலும் ஒழுக்கத்தாலும் அறிவாலும் சிறந்த உன்னிடம் ஆரியப்பண்புகள் யாவும் தங்கி நிலை பெற்றுள்ளன என்றால் எவரே கொல் உனை வியப்பார். நீர் பள்ளத்துப் பாய்தல் இயல்பே அன்றோ?

ந ஏதத் சித்ரம், நர வயாக்$_4$ரே, சீல வ்ருத்த விதாம் வரே!
யதி ஆர்யம் த்வயி திஷ்டேத் து நிம் ந உத்ஸ்ருஷ்டம் இவ உதகம்! II 113-16

பாஸ நாடகத்தில் பரதனைப் பா கூற்றாக,

'அந்தோ, இத்துணை 'குண நிதி' யான புருஷ-உத்தமனான புத்திரனைப் பெற்றும் அவனுடைய சிறந்த குணங்களைக் காணாது நம் தந்தை விதியின் வலிமையால்,

தம் சிந்தயாமி ந்ருபதி ஸிரலோக யாதம் யே ந அயம்
ஆத்மஜ விஸிஷ்ட கு$_3$ண: ந த்ருஷ்ட:
ஈத்$_3$ருக் வித$_4$ குண நிதி$_4$ம் ஸமவாய்ய லோகே
தி$_4$க் போ! விதே$_4$: யதி$_2$ பலம் புருஷ-உத்தமேஷீ$_2$ II ப்ரதிமா 4-22

தொடர்ந்து 'உம் புகழ் பெற்ற குணங்களால் நான் வெல்லப்பட்டேன்.
ப$_4$வத: க்$_2$யாதை குணை: நிர்ஜித: (23)

தம்பியைத் தமையன் ப₄வாந்,₃ ப₄வத: என்று அழைப்பது பரதனுக்கு இராமன் தரும் அரும் சிறப்பு. கம்பனில் பிறர் கூற்றாக வருவனவே.

'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ' (2337)
எண்ணில் கோடி இராமர்களேனும், அண்ணல் நின்
அருளினுக்கு அருகு ஆவரோ? (10181)

குணத்தால் (பரதன்) வள்ளலை (இராமனை)யே அனையான் அன்று; இராமனினும் உயர்ந்தான்.

'எழிலால் (பரதன்) இராமனை ஒப்பது குகன் வாக்கில் காண்கிறோம். 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' என, பாஸகவியும் அதையே கூறுகிறார்.

'தோள் கண்டார்'–'நோக்கி, நோக்கு நின்றாள்'

ஸம்ஸ்க்ருத மொழியில் அழகைக் குறிக்கும் சொற்கள் பலவற்றுள் மூன்று: 'ஸௌந்தர்யம்', 'லாவண்யம்', 'ஸோப₄ா' என்பன. அவற்றின் 'பிரயோகங்கள்' (கையாளும் திறன்கள்) வெவ்வேறு ஆனவை.

'ஸௌந்தர்யம்'; 'ஸுந்தர' (அழகு) என்பதன் பண்புப் பெயர். அழகின் 'லாவண்யம்': அலை அலையாகப் பரவும் ஒளித்திரள். இதை 'எழில்' என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை (3.19.14). 'ஸோபா' ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் இணைந்திருப்பதால் இருவரிடமும் சேர்ந்த அழகு — இவற்றைக் கம்பனும் வால்மீகியும், காளிதாசனும் அனுபவித்திருப்பதைக் காண்போம்.

இராமனுடைய தோள், தாள், கை என்னும் அவயவங்களைக் கண்ட மிதிலைப் பெண்கள் தம் கண்களை ஓர் அவயவத்தினின்றும் ஈர்த்து வேறு ஓர் அவயவத்தில் செலுத்த இயலாமையால், எவரும் இராமனுடைய திருவடிவின் அழகை முற்றிலும் துய்த்தார் அலர் என்பது கவிக்கூற்று.

பெண்கள் ஆணின் தோளை முதலில் நோக்குவர் என்பது 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' (514) என்பதைத் தொடர்ந்து, சீதையின் நோக்கிய நோக்கு எனும் நுதிகொள் வேல் இணை ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன' (515) என்பதால் காண்கிறோம்.

மேலும், நேரிழை (சீதை) நெடிய நம்பி தோளின் கண் நயனம் வைத்தாள்' (2735) என்றதும், சூர்ப்பணகை இராமனை இப்பெருந் தோளவன்' (2752) என்றதும் வலியுறுத்தும் இலங்கை மகளிரும் 'பாதகன் (இராவணன்) வீரத்தோளின் விக்கம் நினைந்து துளங்குகின்றார்' (5008). தனிமையில் தான் கண்டவற்றின் நினைவுகளைக் கூறும்போதும் சீதையின் மனத்தை ஈர்த்தவை. 'அலங்கல் காடு' (குஞ்சி) எழு, அல்லவேல், மரகதப் பெருங்கல் (புயம்) கண் (532). மேலும் மார்பு, குஞ்சி, வதனம், கைகள் இவற்றைக் கூறி, தோள், முறுவல் தன் உயிரை முந்தி உண்டது என்கிறாள் (534, 536).

மிதிலை மகளிர் கண்டது இராமனுடைய அவயவ 'ஸௌந்தர்யம்'. அந்த ஸௌந்தர்யத்தைக் கண்ட அயோத்தி மக்களுடைய கண்களை வால்மீகி கூறுகிறார்.

வீதிவாய்ச் செல்லும் இராமன் நெடுந்தூரம் சென்றுவிட்ட போதிலும் அவனிடம் வைத்த மனத்தையோ, கண்களையோ திரும்பிப் பெற மக்கள் சக்தி அற்றவர் ஆயினர் என வால்மீகி கூறுகிறார். ந ஹி தஸ்மாத் மந : கச்சித் சக்ஷிஷீ வா நரோத்தமாத் । நர : சக்நோது அபாக்ரஷ்டும் அதிக்ராந்தே அபி ராகவே।। ।। 17.13.

ஸீதையிடம் அவ்வாறே இராவணன் கூறுவது. உன் உடலில் எந்தெந்த உறுப்பைக் கண்டாலும் அந்தந்த உறுப்பில் என் கண்கள் கட்டுண்ணப் படுகின்றன. ''யத்யத் பச்யாமி தே காத்ரம், சீத அம்சி ஸ்த்ருச ஆநநே । தஸ்மிந், தஸ்மிந் ப்ருது₂, ச்ரோணி, சஹி; மம நிபத்₄யதே ।। V20 15. பார்த்த கண்ணை ஈர்க்கிலாக் கள்வனேன்' (1969) என்பது குகன் வாக்கு. தசரதன் வாக்கோ ''இராமனோடு என் கண்கள் போய்விட்டன; இன்னம் அவை திரும்பவில்லை''. 'ராமம் மே அநுகதா த்₃ருஷ்டி அதில் அபிநநிவர்த்திதே' (।। 42.34). தசரதன் 'விழிக்கும் கண் வேறு இல்லான் (1653) 'இல்லா' என ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொள்ளாது முற்றாகக் கொண்டு, ''விழிக்கும் கண் இலேன், நின் கண் மற்று அல்லால்; வேறொருவரோடு என் மனம் பற்றாது'' என்ற பெரியாழ்வார் வாக்கை (5.12) ஒட்டி உரை கொள்ள வேண்டும், 'கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா' ஆகையான்.

ஸம்ஸ்க்ருத இலக்கியங்கள் பலவற்றிற்கு முற்பட்ட ப்ராக்ருத மொழி இலக்கியமான காதா ஸப்தசதியில் ஒரு பாட்டு.

எழில்மிகும் உறுப்பினில் எதில் முதல் பார்வை
விழ்ந்ததோ அதில் ஆழ்ந்ததே அன்றி
மேனி முழுவதும் மேவ எவரும்
கண்கள் ஆரக் கண்டது இவையே (3.34)

— மு. கு. ஜகந்நாத ராஜா மொழிபெயர்ப்பு

உறுப்புக்களுக்கு உரித்தாக்கிய மனத்தையும் இந்திரியங்களையும் உடல் முழுவதற்கும் உரித்தாக்கி அவ் உடலைக் கொண்ட பிற தேவதைகளுக்கு உரித்தாக்கி 'எந்தெந்த தேவதைகளை நம்பிக்கை நிறைந்த பக்தியுடன் வழிபடுகிறானோ அவனுடைய நம்பிக்கையை உறுதி செய்கிறேன்'' என்பது கீதை 7.21. 'தோள் கண்டார்' என்ற பாட்டில் கூறப்பட்ட கை, கால் ஆகிய உறுப்புக்கள் முன்பு பிராட்டியின் வாக்கிலும் பயில்கின்றன.

இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் - தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளுமே, அல
முந்தி என் உயிரை அம்முறுவல் உண்டதே (536)

ஆழ்வார் ஈடுபட்ட செய்ய கமலக் கண்ணும் செவ்வாயும் செவ் அடியும், செய்ய கையும், திருச் செய்ய கமல உந்தியும், செய்ய கமல மார்பும் (திருவாய்மொழி 8.4.7) என்ற இடத்து நம்பிள்ளை உரையை நினைவுபடுத்துகிறது. அண்ணலும் நோக்க அவளும் நோக்க, ''நோக்காமல் பிறந்த முதல் உறவைத் தொடர்ந்த உரிமையால் அவன் பூத்த முறுவலும் அம் முறுவலுக்குத் தோற்று விழும் திருவடிகளும், திருவடிகளில் விழுந்தாரை எடுத்து அணைக்கும் திருக்கைகளும் அணைக்கப்படும் இடம் ஆகிய திருமார்பும் (திருத்

தோளும்)' என. தோள் கண்டவன் தான் அணைக்கப்படும் இடத்தையே கண்டாள்; தடக்கை கண்டவள் தன்னை எடுத்து அணைக்கும் உறுப்பையே கண்டாள்; தாள் கண்டவள்தான் விழப்பற்றுக் கோடான அவன் திருவடிகளையே கண்டாள். தான் காண்பதற்கு முன்போ பின்போ வேண்டி இருந்த உறுப்பைக் கண்டாள் இல்லை.

இனி அவயவ அழகுக்கும் முழுமையான உருவ அழகுக்கும் உள்ள வேறுபாட்டை வேறோர் இடத்தில் நம்பிள்ளை உரையில் காண்போம் ''எங்கும் அழகு அமர சூழ் ஒளியின்'' என்பது திருவாய்மொழி. பகுதி (3.10.9) யை எடுத்து வியாக்யாநம் செய்கிறார். 'அவயவ' ஸௌந்தர்யத்தோடு சேர்ந்த ஸமுதாய ரூப லாவண்ய பிரபையை உடையவன்'' என்பது வாதிகேசரி அழகிய மணவாள ஜீயரின் பதஉரை ஈட்டில் நம்பிள்ளையின் விளக்கம்.

அழகு என்பது அவயவத்தை மட்டும் குறிப்பது. 'சூழ் ஒளி' என்பது அனைத்து அவயங்களும் சேர்ந்த அழகு. பாதாதிகேசம் அவயவங்களைத் தனித்தனி பார்த்தால் இங்கே அழகு குடி கொண்டது, இங்கே அழகு குடிகொண்டது எனனும்படி வானுலகு முழுவதும் ஒளி வெள்ளமிட்டு நிற்கும் 'லாவண்யம்' எங்கும் ஒக்கப் பரந்து அலை எறியும்.

'லாவண்யம்' திருமேனியைச் சூழ்ந்த ஒளி எனவும் திருமேனியிலிருந்து எழுந்து உலகம் முழுவதும் பரந்த ஒளி எனவும் இருவகையாகப் பொருள் கூறலாம். அந்த லாவண்யம் (தேஜஸ்) ஒளி காலும். அவ் ஒளியில் தனித்தனி அவயங்களின் அழகு அடங்கும்.

அவ் ஒளியைக் காணக் கண்கள் கூசும். ஆதலின், கம்பன். ''யாவரே வடிவினை முடிய (முழுவதும்)க் கண்டார்?'' என வியக்கிறார் எனவும் கொள்ளலாம்.

''அழகு எலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்?'' (1136) ''என் பிறங்கு அழகிற்கு எல்லை இல்லை ஆம் (2791) 'அழகு அரு நறவு என, தன் கண்ணும் உள்ளமும் வண்டு என' (1362) இக் காட்சியைக் காளிதாசன் அஜனையும் சம்புவையும் நாயகராகக் கொண்டு நகரப் பெண்கள் செயல்களை ஏறத்தாழ ஒரே அமைப்புள்ள ஸ்லோகங்களில் வருணிக்கிறார்.

அவ் ஒருவனையே இலக்காகக் கொண்டு தம் கண்களால் அவன் அழகைப் பருகினர். ஏனைய பொருள்களை அவர்கள் அறியவில்லை. மற்ற புலன்கள் தத்தம இயக்கம் தவிர்த்துக் கண்களின் வழியாகச் செயல் ஆற்றின.

தம் ஏக த்ருஸ்யம் நயனந : பிப$_3$ந்தயோ
நார்யோ ந ஜக்மு : விஷய-அந்தராணி /
ததா ஹி ஸேஷ - இந்திரிய வருத்தி : ஆஸாம்
ஸர்வ-ஆத்ம நா சக்ஷி : இவ ப்ரவிஷ்ட II KS 7.64

முதல் பாதம், 'தா ராகவம் த்ருஷ்டிபி$_4$: ஆபிப$_3$ந்தயோ' என்பது RV 7.12 'கண் பிற பொருளில் செல்லா : கருத்தெனின் அஃதே' (2791) என்ற சூர்ப்பணகை செயலும் இதுவே. சேக்கிழார் நம்பி ஆரூரர் தில்லையில் பேரின்ப வெள்ளத்தில் திளைத்ததைக் கூறும்போது 'ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள, அளப்பரும் காரணங்கள் நான்கும் சிந்தையேஆக' (252) என்பதும் இதுவே. ஆனால்,

காளிதாஸனிலோ நான்கு காரணங்களும் கண்கள் வாயிலாகச் சிந்தையில் புக்கன (ஷே 'சேஷ இந்த்ரிய வ்ருத்தி: ஸர்வ-ஆத்மநா சக்ஷு ப்ரவிஷ்டா) அப்பர் தில்லையில் புகுவதைக் கூறும்போதும் இவ்வாறே கண்களோடு சேர்த்து பிற இந்திரியங்களும் உருகும் என்று கூறுகிறார். 'கண்ணும் பொழி மழை ஒழியாதே பெய்யும் தகையன, கரணங்களும் உடன் உருகும்' (1437)

கவிகள் அனைவரும் கண்ணே பிற இத்திரியங்களை முன் நடத்திச் சென்று இயக்குவதைக் கூறினரே அன்றி, பிற இந்திரியம் எதுவும் கண்களை இயக்கியதாகக் கூறவில்லை. காழியார் பதிகங்களை ஏழிசையில் வைத்துப் பரவும் பாணரும் பாடினி யாரும் வாசிக்க 'ஞான போனகர் மகிழ்ந்தார்' 'நான்மறையோர் அதிசயித்தார்', 'எவ் உயிரும் மகிழ்வித்தார்', என்றெல்லாம் கூறுங்கால் செவி ஒழிய பிற காரணங்கள் தம் செயல் மறந்ததாகக் கூறவில்லை.

இனி இன்பத்தில் திளைக்கும் ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் ஊட்டும் அழகின் பொலிவைப் பிறர் கண்டு அநுபவிப்பதைப் பார்ப்போம்.

'எங்கும் அழகு அமர் சூழ் ஒளி' என்ற லாவண்யத்தைப் பாட்டின் முதல் அடியில் அநுபவித்த ஆழ்வார் 'அல்லி மலர்மகள் போக மயக்குக்களை அடுத்த அடியில் அநுபவிக் கிறார். (திருவாய்மொழி 3-10-9) உரையைக் கொண்டல்லது மாறன் மனத்தை அறிய நம்மால் இயலாது, எனவே ஈட்டுக்குப் போவோம். முதல் அடியில் அவயவ சோபையைக் கூறி, ஸமுதாய சோபையைக் கூறி, இவை காட்டில் எரித்த நிலவாகாதபடி அநுபவிப்பார் உண்டு என்கிறார் இரண்டாம் அடியிலே.

பூவிலே மணம் ஒரு வடிவு கொண்டாற்போலே நிரதிசய (அதற்கு மேல் ஒன்று உண்டு என்னக் கூடாத போக்யை (இன்ப நுகர்வு உடையவள்) ஆன பெரிய பிராட்டி யாரோடு ஸம்ஸ்லேஷத்தாலே (கலவியாலே) பிறந்த ஆச்சர்யமான (விஞ்சிய) மயக்கம். மயக்கம் கூடலும் (ஒன்று சேர்ந்திருத்தலும்) கலத்தலும் ஆகிய ஆநந்தம் என்பன உரைப் பகுதிகள். உலகின் தலைவனுக்கு (ஸர்வேச்வரன்) மயக்கம் இராது ஆதலின் மயக்கு'- ஆநந்தம் என உரை இடுகிறார்.

இக்கருத்தைக் கம்பனிலும் வால்மீகியிலும் காளிதாசனிலும் நுகர்வோம்.

கடிகமழ் சாலை நின்றும், பெண்ணிடை அரசி வந்தாள் (2788); சூர்ப்பணகை கற்பின் கனலியைக் கண்ணின் கண்டாள் (2789); 'நெடிது நோக்கி நின்றாள்' (2791) இது மிதிலையில், ''அவள் அழகை மாந்தி, தம் சொற்கள் குழறித் தத்தம் தகை தடுமாறி மஞ்சரும் மாதராரும் நின்றார் (1134) என்பதை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

சூர்ப்பணகையின் 'கண் பிற பொருளில் செல்லா; கருத்து எனின் அஃதே' (1134).

'எண் பிறங்கு அழகிற்கு எல்லை இல்லையாம்' ஆனால் காணும் கருவிக்கு எல்லை உண்டு. எத்துணை 'நுண் புலம் நுணங்கு கேள்வி நுழைவினர் எனினும், நோக்கும் (அவர்), கண்புலம் வரம்பிற்று ஆமே; (அவர் காணும்) காட்சி கரையிற்று ஆமே'' (4834) என்பான். வேறு சூழ்நிலையில் அனுமன் 'காட்சி கரை காணாள்' (504) ஆனால் காணும் புலனுக்கு எல்லை உண்டு. சீதையைக் காணும் முன்பே, இராமனைப்

பார்த்துக்கொண்டிருந்து சூர்ப்பணகை திரும்ப நோக்கினாள்; மறுபடியும் பூவையை நோக்கினாள். கமலத்துக் கடவுள் தானே.

ஒரு சிறத்து உணரநோக்கி. உருவினுக்கு உலகம் மூன்றின் இரு திறத்தார்க்கும் செய்த வரம்பு இவர் இருவர் என்றார் (2892) இருவரையும் மாறிமாறி நோக்கி ஒருவரில் மற்றொருவருடைய அழகு பொலிவதை அநுபவித்தாள் சூர்ப்பணகை. இவ் அநுபவம் இராம காதையில் வேறு எந்தப் பாத்திரத்துக்கும் ஏன்? பல ஆண்டுகள் உடன்திரிந்த இலக்குவனுக்கும் கூடக் கிடைத்திராத பேறு.

இருவரையும் தனித்தனியாக வெவ்வேறு இடங்களிலும் சூழ்நிலைகளிலும் கண்ட அநுமனை; ஒத்த ஒழுக்கம். வயது, செயல், குடிப்பிறப்பு யாவற்றாலும் இராமன் வைதேஹியை மனைவியாகப் பெறத் தகுதி உடையவன் என எண்ண வைத்தது.

துல்ய ஸீல வயோ வ்ருத்தாம் துல்ய அபிஜந வக்ஷணாம் ।
ராகவ : அர்ஹதி வைதேஹீம் தம் ச இயம் அஸித ரக்ஷணா ॥ V.16.5

கடல் வரை உள்ள ராஜ்யம் கிடக்க, அனைத்து உலகங்களுமே இவளுக்கு மாறு ஆகா, (14) எனப்பலவாறு அனுமன் புகழ்வது கூடலில் அன்று, பிரிவில். அதனால் இராமாயணக் காவியமே சிறை இருந்தாள் ஏற்றம் என ஆசார்ய ஹ்ருதயம் கூறுகிறது.

காவிய உலகில் இத்தகைய கூட்ட அழகை அநுபவித்தவர் காளிதாசனும் ப₄வபூதி₄யும்.

காளிதாசன் கூறும் வாழ்த்து ஒன்று இங்குக் கருதத்தக்கது. மின்னலும் நீர் உண்ட கரு மேகமும் சேர்ந்தது போல நீவிர் இருவரும் ஒருவருடைய அழகு மற்றவரால் விருத்தி அடைவதற்குக் காரணம் ஆகக் கடவீர். 'அந்யோந்ய சோபா₄ பரிவ்ருத்₃த₄யேவாம் யோக : தடி₃த் தோயத₃யோ, இவ அஸ்து RV 6.65. உமையையும் சிவனையும், அஜனையும் இந்துமதியையும் ஒருங்குக்காணும் நகர மக்கள் வாக்கு, பரஸ்பரம் (ஒருவர்க் கொருவர்) உள்ள காதலினால் அழகு மிகும் இவ் இருவரின் இணைப்பு ஒன்று சேர்ந்திராவிடின் பிரமன் இவர்களுடைய அழகை சிருஷ்டிப்பதில் கொண்ட ப்ரயத்நம் எல்லாம் பயன் அற்றதாக ஆகி இருக்கும்.

பரஸ்பரேண ஸ்ப்ருஹணிய சோ₄பம்
ந சேத்₃ இத₃ம் த்வந்தம் அயோஜயிஷ்யந் ।
அஸ்மிந் த்₃வயே ரூப விதா₄ந யத்ந :
பத்யு : ப்ரஜாநாம் விப லோ அப₄ விஷ்யத் ॥ KS.7.66 RV 7.14

பிரமனுடைய கைவண்மை (கலை)க்கு எல்லை 'சதுராநந சில்ப ஸீமா' (1.73) என்பார் ,லீலா சுகர் சீதைமிடம் காதலை இரக்கிறான். அப்போது இராவணன் சூர்ப்பணகை வாயால் அன்றி, இராமனை நேரில் கண்டிராதபோது உன்னைச் சிருஷ்டித்தபின் உலகை ஆக்கிய பிரமன் அழகைப் படைப்பதினின்று ஓய்வு பெற்று விட்டான். ஏனெனில், உன் ஒத்த அழகுடைய வேறொருத்தியை அவனால் படைக்க முடியாது என்ற எண்ணத்தால்.

த்வாம் க்ருத்வா உபாத மந்யே ரூப கர்தா ஸ விஸ்வக்ருத் ।
ந ஹி ரூப-உபமா ஹி-அந்யா தவ-அஸ்தி சுபத்ரஸநே ॥ V 2 ம ந: 13

நாடக உலகிலே துன்ப இயலின் உச்ச கட்டம் சாகுந்தலத்தின் ஐந்தாம் அங்கம். சகுந்தலையைத் துஷ்யந்தன் அவைக்கு அழைத்துச் சென்று, அவளை அடையாளம்கண்டு கொள்ளாத அரசனுக்கு அறிமுகப்படுத்துகிறான். ஸார்ங்கரவ :

த்வம் அர்ஹதமிம் ப்ர அக்₃ர ஸா : ஸம்ருதோ அஸிந
ஸகுந்தலா மூர்திம் தீம் ச ஸ்த்க்ரியா ।

ஸமாநயந் துல்ய குணம் வதூ வரம்
சிரஸ்ய வாச்யம் த கூ௩ந : ப்ரஜாபதி II 5.15

நீர் யோக்யதை உடையவருள் முதன்மையானவர் என்பதை யாம் அறிவோம்; சகுந்தலா (இல்லற) ஒழுக்கத்தின் பண்புகளின் உருவம். ஒத்த குணங்களை உடைய இளம் பெண்ணையும் உரிய மணமகனையும் இணைத்ததால் நெடுங்காலமாகப் பிரம்மனுக்கு உற்ற பழிச்சொல் நீங்கியது. (ஒருமித்த தகுதி அற்ற ஆண், பெண்களைத் தம்பதி ஆக்குவது விதியின் பிழையால் நேர்ந்த பழி).

கமலத்துக் கடவுள் ஆண், பெண் என்ற இரு திறத்தாருக்கும் அழகின் எல்லையாக இவ் இருவரையும் படைத்தான் என்ற சூர்ப்பணகை 'அவ்விருவரும் ஒன்று சேர்ந்திராவிடின் அவ் அழகின் பயன்தான் என்ன? என்ற பகுதியை எண்ணவில்லை. அதையும் எண்ணி இருப்பின் இகழ்விப்பேன் இவளை' (2793) என்ற கருத்து எழுந்திராது; 'உள்ளம் கதித்தில் (2796) இராது; பின்னர் இராவணனுக்கு 'அன்னவள் தன்னை நின்பால் உய்ப்பல் (3147) யான் கொண்டு ஊடாடும் வண்ணம் இராமனைத் தருதி என்பால்' (3145) என இவ அரிய சேர்த்தியைப் பிரிக்க முயல்வதும் நிகழ்ந்திராது. இவற்றால்தான் கம்பன் கூறுகிறான். 'கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கலாமோ' (3150)

ஒழுக்கத்தாலும், கருத்தாலும், கொள்கையாலும், வயதாலும் உருவத்தாலும் முற்றிலும் ஒத்த கணவன் மனைவியரைக் காணல் அரிது. அவனை ஒத்த அவளோ, அவளை ஒத்த அவனோ உலகில் இலர் என்பதால் அன்றி ஊழ் அத்தகையோரை ஒன்று கூட்டாமையாலே ஒவ்வாதாரை நாம் உலகில் காண்கிறோம்.

மாலதீ மாதவத்தில் ஒரு வாழ்த்து !

ஒருவரிடம் உள்ள நலங்களையும் பண்புகளையும் மற்றொருவர் மேலும் சிறக்கச் செய்வதற்காகப் படைக்கும் தொழில் கைவந்த பிரமன் மேற்கொண்ட பணி பயன் தருக; உமக்கும் (உன்னைக் காண்போருக்கும்) மன எழுச்சி உண்டாகுக.

வரியாந் அந்யேரன்ய ப்ரகுண நிர்மாண நிபுண
வ்யாபார : பலது ச மநோஜ்ஞ : ச ப௴வது 1.16. இவை 'சோபா'

என்பதன் பொருளை விளக்குவன. ஆழ்வார் பாட்டில் (திருவாய்மொழி 3.10,9) அழகு (ஸௌந்தர்யம்) லாவண்யம் 'ஒளி'; 'மலர்மகள் போக மயக்கு 'ஸோபா' என்பனவற்றை முறையே 'தோள் கண்டார் அழகிற்கு எல்லை இல்லையாம்' 'பொருதிறத்தானை நோக்கி பூவையை நோக்கி நின்றாள்' என்பவற்றின் வாயிலாகக் கம்பன் காட்டுகிறார்.

அந்தமில் நோக்கு இமை அணைகிலாமையால்

பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள் (518). இராமன் மேல் வைத்த கண் வாங்க இலாது, இமைத்திலாது பிராட்டி ஓவியப் பாவை போன்று நின்றதைக் கவி கூறுகிறார். இது சீதைக்கு மட்டும் நிகழ்வது அன்று. கோலம் கொண்ட சீதையின் 'தூய் வடிவு கண்டார் அமைத் திரள்கொள் தோளியரும், ஆடவரும் எல்லாம் இமைத்திலர்' உயிர்த்திலர்கள், சித்திரம் எனத்தாம்' (1145) இலங்கையிலும் இராவணன் அந்தப்புர மகளிரும் அரக்கன் மேல் வைத்த சிந்தையர், வாங்கும் உயிர்ப்பினர், பாத்திரம் புரை நாட்டம் பதைப்பு அற சித்திரங்கள் என இருந்தார் சிலர்' (5004).

தேவர் நாட்டம் இமையாது எனினும், அவர் உடல் அசைவு உடையவரே. இராமன் வில் இறுத்த போது, அவ் அசைவும் தவிர்ந்து 'விண்ணார் உயிருடை உடம்பும் எல்லாம் ஓவியம் ஒப்ப நின்றார்' காளிதாஸன் இவ்விடத்தில் மிதிலை நகர மக்கள்

இராமனுடைய அழகைப் பருகுவார், கண்கள் இமைத்தலும் மனத்தை ஏமாற்றுவதாகும் என்றனர். மந்யதே ஸம் பிப₃தாம் விலோசநை பக்ஷ்மபாதம் அபி வஞ்சநாம் மந: RV1136.

முதல் வரி வேறு பதிப்புகளில் 'நோக்கிணை அமைகிலாமையால்' என்று உள்ளது. 'அமைகல்லா' என்ற சொல்லுக்கு மதுரைக் காஞ்சி 343 உரையில் நச்சினார்க்கினியர், 'பார்த்த பார்வை மாறுதல் அமையாத' என வகுத்துள்ளார். 'அமைக' பொருந்துக என்ற பொருளில் மேலும் பல இடங்களில் பயின்றுளது (குறுந்தொகை 117 ஐயரவர்கள் உரை) பொருள் ஏறத்தாழ ஒன்றே எனினும் இமைகள் 'அணை' வதற்குக் கூறுவதில்லை. நயனங்கள் அமைய (2735) என்றே கம்பன் கூறுகின்றான். எனவே இமை அணைவதைக் கூறுவதினும் 'கண்இணை' அமைகில்லா என்பது சிறந்ததாகத் தோன்றுகிறது. ''சிந்தையும் நிறையும் மெய்ந்நலனும் பின் செல மைந்தனும் முனியொடு மறையப் போயினான்''. இவ் அடிகள் 'என் நலனும் என் நிறையும் என் சிந்தையும் ... கொண்டு என்னை ஆளும் கொண்டு ... போயினாரே' என்ற திருமங்கை ஆழ்வார் பாசுரத்தை அடி ஒற்றியது.

அங்கு வ்யாக்யாநத்தில் கூறுவது; அவனுக்கு உரியது ஆறில் ஒரு கூறே உரியது. ஆயினும் என் உடைமைகள் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு போனான் 'என் நலம்' என்பது என் அழகு, மாமை, இளமை என்ற உருவப் பண்புகளையும், நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற உள்ளுறை பண்புகளையும் குறிக்கும். 'நலன்' பிறரை அழிப்பதே அன்றிப் பிறரால் அழிக்க ஒண்ணாதது.

'நிறை' : ஸ்த்ரீத்வம், பெண்மை - அடக்கம். நிறை ஒன்றே பெண்ணைப் பெண் ஆக்குவது. இயல்பான அடக்கற் கருவி, 'நிறை எனும் அங்குசம்' பயன்படாது நிமிர்ந்து போனது, 'சிந்தை : பெண்மைக்கு அடியான மனம். நலன் என்பது கூடலிற் பொலிவு; பிரிவில் துயர் என்பது 'நீங்கும் கால் நிறம் சாய்ந்து, புணரும் கால், புகழ்பூத்து, நாம் கொண்ட குறிப்பு இவள் நலம்.'' 'சுடர் நோக்கி மலர்ந்து, ஆங்கே படில் கூம்பும் மலர் போல், என் தொடர் நீப்பில் தொகும் இவள் நலம்' என்பன தலைவன் கூற்று. (கலித்தொகை 78).

என் நெஞ்சும் நாணும் நலனும் இவை எல்லாம்
மன்னன் புனல் நாடன் வவ்வினான் - என்னே
அரவு அகல் அல்குலாய் ஆறில் ஒன்று அன்றோ
புரவலர் கொள்ளும் பொருள். (தலைவி கூற்று முத்தொள்ளாயிரம் 89)

'ஆட்கொண்ட' செயல் அடிமைச் சமூகத்தின் சாயலைக் காட்டும். பெரியோன் ஒருவனுக்கு அடிமையாக இருப்பதைத் தம் சிறப்புக்களில் முக்கியமானது ஆக அடிமையும், ஆட்கொள்வது தன் கடமையும் உரிமையும் என ஆண்டவனும் கருதினர். சமூகமும் ஏற்றுக் கொண்டது மனைவி - கணவன் தொடர்பும் அடிமைத் தனத்தைப் பின்பற்றியது.

கம்பனில் அடிமைச் சமூகம் பெரிதும் பேசப்படுவதில்லை; ஆட்கொண்டதை இவ்விடத்தில் விடுத்துள்ளார்.

'அடிமையில் சிறந்தேன்' (6508) என வேறு சில இடங்களில் குறிப்பிட்டுள்ளது உபசார வழக்கு ஆகலாம்.

கால் தரை தோய நின்று கட்புலக்குற்றதம்மா!

சுக்ரீவன் : தேறினான் தேவர்க்கெல்லாம் தேவராம் தேவர் என்றே' இவ்வசரே,
கருடன், இந்திரன், பிரம்மன், தேவர்கள், விராதன், வகந்தன்-பிரமன்.
இது அனைய வால்மீகியில் இல்லை.

இலக்குவன் : 'மறைகளே தேறத்தக்க, வேதியர் வணங்கற் பால
இறையவன் இராமன் என்னும் நல் அறமூர்த்தி என்னில்
பிறை எயிற்று இவனைக்கோறி' என்று ஒரு பிறைவாய்வாளி
நிறைஉற வாங்கி விட்டான்...(9169)

இராமனுடைய தெய்வத்தன்மையைப் பிற பாத்திரங்கள் அவனுக்கு உணர்த்த வேண்டி இருந்தது

அனுமன் : ''கையில் ஏந்தி சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்து தொல்லை, ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டயோத்தி வந்தான் (5884)

கவி : 'வான்நின்றிழிந்து...ஊனும் உடலும் உயிரும்...
கழல்வேந்தை, உளன் என்ப (1313)

இராம காவியத்தில் இராமனுக்கு அமைந்தவை பெரும்பாலும் குணங்களே. மயக்கம், தளர்ச்சி ஆகிய தாமஸ குணங்கள் உண்டான சந்தர்ப்பங்கள் இவை.

பிரமன் : மன்னர் தொல்குலத்து அவதரித்தனை; ஒருமனிதன்
என்ன உன்னலை, உன்னை, நீ; இராம, கேள், இதனை
சொன்ன நான்மறை முடிவினில் துணிந்த மெய்த்துணிவு
நின் அலது இல்லை... (100 45)

இந்திரன் : தோய்ந்தும் பொருள் அனைத்தும்... வேதநெறி முறையின்நேடி ஆய்ந்த அறிவின் உணர்வே.

க்ருஷ்ணன் : என்னை நீ புகலக்கேண்மோ! எங்கும் ஆய் யாவும் ஆகி மன்னிய பொருளும் யானே; மறைக்கு எலாம் முடிவும் யானே என்று, தன் நிலை அவற்குக் காட்டித் தத்துவம் தெளிவித்தானே.

'பரு வரு கானக மலரினால் எமைப்
பொரு அரு பூசனை புரிதி, ஐய

இராமன் தளர்ச்சி

இடம்படு மானம் துன்பம் இரண்டும் வந்து உற்ற போழ்தில்
மடித்த வாயன் வயங்கும் உயிர்ப்பினன்.
துடித்து விம்மி ஒடுங்குறு தோளினன்' - அயாமேகி

'இன்றே இறவாது ஒழியேன்; எமரோ
பொன்றாது ஒழியார், புகல்வார் உளரால்

இலக்குவன் வரக்கண்டு, அந்தோ கெடுத்தது என உன்னி உன்னி அழியாத உள்ளம் அழிவான் (சடாயு 69)

(கவி) 'ஆயிரம் பெயரினானும் அருந்துயர்க் கடலுள் ஆழ்ந்தான்.
'பெய் இருதாரைக் கண்ணீர்ப் பெருந்துளி பிறங்கவானின்
வெய்யவன் தன்னைச் சேர்ந்த நீல் நிற மேகம் ஒத்தான் (நாகபாச 221)

'ஆகுலித்து அழுதான்' (பிரமாத்திர 192)

'தக்கதோ இது நினக்கு' எனத் தனிமனம் தளர்ந்தான்; பொருமினான் அகம்; பொங்கினான்; உயிர் முற்றும் புகைந்தான்; குருமணித் திருமேனியும் மனம் எனக் குலைந்தான்; தருமம் நின்று தன் கண்புடைத்து அலமற, சாய்ந்தான்'

அறத்தை வெறுத்தல் :

எம்பியே இறக்கும் என்னில்', எனக்கு இனி இலங்கை வேந்தன் தம்பியே! புகழ்தான் என்னை? பழி என்னை? அறம் தான் என்னை?

இளையவன் இறந்தபின் எவ்வம் என் எனக்கு? அளைவுறு சீர்த்தி என்? அறம் என்? ஆண்மை என்? Scapegoat பலிஆடு, பழிக்கு இரை சீதை என்று ஒருத்தியால் உள்ளம் தேம்பிய பேதையேன். சிறுமையால் உற்ற பெற்றியை யாது என உணர்த்து-கேன்! உலகொடு இவ் உறாக்காதை வன் பழியொடும் நிறுத்திக் காட்டினேன். மாயா சீதை கிளை உறு சுற்றம் என்? அரசு என்? கேண்மை என்? விளைவுதான் என்? மறைவிதி என்? மெய்ம்மை என் தாதையை இழந்தபின், சடாயு இறந்தபின் காதலின் துணைவரும் மடிய, காத்து உழல் கோது அறு தம்பியும் விளிய, கோள இலன் சீதையை உவந்துளான் 'என்பர், சிறியோர் பெண் உரை மறாது போனதால் ஆயது இப்பழி உடை ஆனி [மரணப்] அன்பினீர்! யாது யான் இயம்புவது? உணர்வை ஈடுஅறச் சேதியா நின்றது, உன் ஒழுக்கம் செய்தியார்; சாதியால்; அன்று எனின், தக்காது ஓர்நெறி போதியால் என்றனன்.

ஒருநிலைமையனாம் இயன்பு
ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்

'அசையாத சிந்தை...அழியாத உள்ளம். ஒருகாலும் நிரம்பாத இயல்பினை உடைய அவா. சீவன்முத்தன் 'பசையற்றால், அன்றே அப்போதேவீடு அதுவே வீடு விடாமே'

கம்பராமாயணம் பாத்திரப் படைப்பு

'நடையில் நின்று உயர் நாயகன்'
தன் நிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்

முறை, குறை

தெய்வம்-அவதாரப் definition மேல் நின்று வான்நின்று இழிவது

மனிதன்

மனிதனும் தெய்வம் ஆகலாம்,
'ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்ற தன்றே

அவை Thesis × Anti Thesis கொள்கை × முரண் கொள்கை

முடிவுரை

கம்பன் உலகியல் அறிந்தவன் கவிச்சக்ரவர்த்தி அவனுடைய மனம் அவன் அறிந்த உலகால் பண்பட்ட மனம். அவ் உலகம் (சூழ்நிலை) அவனுடைய பாத்திரங்களிலும் இலட்சியங்களிலும் பிரதிபலிக்கிறது. [Every man's mind is modified by all the objects of nature and art; it is the mirror upon which all forms are reflected and in which they compose one form]

புற உலகில் கடவுள் தன்மையாகக் கருதப்படும் அரக்கத் தன்மை இலது. உலகம் இருமை உடையது. கொள்கை × முரண் கொள்கை → ஒருமைப் பாட்டுக் கொள்கை Poets are in one sense the creators and, in another, the creations of their age. From this subjection, the leftiest cannot escape. Shelly. பாத்திர கர்த்தா எல்லாக் குணங்களும் கவர்ந்தவன்.

அவனுடைய பாத்திரம் எப்படி சுத்த ஸத்துவமோ, ரஜஸோ, தமஸோ கொண்டிருக்கும்? கலந்தது முறையே!

Thesis × Anti Thesis → Synthesis இதுவே வாழ்க்கைச் சுழல்

முறையும் அல்ல, குறையும் அல்ல-இயல்பு,
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதன்றே

பாத்திர கர்த்தா — கவிச்சக்கரவர்த்தி
இரண்டும் கலந்தவன் ஆதலின் பாத்திரம் எப்படிச் சுத்த ஸத்துவம் ஆகும்?
இரண்டுக்கும் இடைப்பட்டவன் இல்லை. இரண்டையும் கவர்ந்தது முறையே!

காட்டுக்குச் சென்ற தவம்

எந்தத் தெய்வத்தின் அவதாரம்?
திருமால் — all தெய்வம்
[சிவனோ அல்லன்]
அனுமன் 'என்புருக' திருமால்

அருத்தி வேரியர் × எல்லாப் பெருஞ்செல்வமும்
கடவுளுக்குக் காப்பியம் எழுத இயலாது. மனிதனுக்கே எழுதமுடியும்
சிறந்த காப்பியமும் ஆய்தற்குரியது

முறை—குறை

பல்வேறு, அறிவு, உணர்வு துணைகொண்டு அறிதல் —1

இது காரைக்குடி கம்பன்விழா பட்டிமன்றக் குறிப்பு

பழைய ஸம்ஸ்க்ருத நூல்களில்...

ஸம்ஸ்க்ருதம்

வரலாற்றுக்கு முத்திய காலத்திலிருந்து அண்மைக் காலம் வரையில், நமது இந்திய உபகண்டத்தில் விஞ்ஞானம், தத்துவம், அறம், பொருள், இன்பம், கலைகள், வரலாறு போன்ற எல்லாத் துறைகளிலும், படித்த மக்களுடைய பொது மொழியாக இருந்தது 'ஸம்ஸ்கிருதம்'. அம்மொழி அறியாதவர் பாமரர், சூத்திரர்; அம்மொழி பயின்றவர், உயர்ந்தோர் ஆரியர். பிறப்பால் வந்த உயர்வு—தாழ்வுகள், செய்தொழிலால் வந்த உயர்வு—தாழ்வுகள், அறிவால் வந்த உயர்வு - தாழ்வுகள்—வர்க்கவருண வேற்றுமைகள்—யாவற்றுக்கும் ஸம்ஸ்க்ருதம் அடிகோலியது. ஸம்ஸ்க்ருத மொழியைப் படித்த வர்க்கத்தனர் வளர்ந்தனர்: அரசர்கள் போற்றினர்; கோவில்கள் கொண்டாடின. சிறந்த இலக்கியங்கள், சாத்திரங்கள் அம்மொழியில் எழுந்தன. எண்ணங்கள் பரவுவதற்கும், அறிவு வளருவதற்கும், நம் உபகண்டத்தில் வேறு எம்மொழியைக் காட்டிலும், ஸம்ஸ்க்ருதமே பெரிதும் உதவியது. அதன் இடத்தை ஓரளவே ஆங்கிலம் சென்ற நூற்றாண்டில் கொண்டது. இன்னமும், ஹிந்தியோ, வேறு எம்மொழியுமோ ஸம்ஸ்க்ருதத்தின் இடத்தைக் கொள்ளவில்லை. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நாட்டின் பல இடங்களில் வாழ்ந்த அறிஞர் பலர் முயன்று இழைத்த மரபு சிறிது காலத்தில் அகலாது :

ஸம்ஸ்க்ருதம் 'தேவபாஷை' என்ற கருத்து இடைக் காலத்தில் ஏற்பட்டது. அதாவது அம்மொழியை நம் உலகில் பேசுவோர் அதிக நாம் காணாதபோது வேறொரு உலகில் பேசுவோர் உளர் என்பது கருத்து. அன்றி, இறந்தவரை 'அமரர் அமரத்வம் எய்தினர், தெய்விகம் அடைந்தார்' என்னும் வழக்கம்போல, இறந்த மொழி எனக்கொண்டு, ஸம்ஸ்க்ருதத்துக்கு 'அமர மொழி' எனப் பெயர் சூட்டினர். இவை தவறு. ஸம்ஸ்க்ருதம் சாகவில்லை; சாகவும்! கூடாது. அம்மொழியை அறிந்தவர் குறையக்குறைய நாம் பல வரலாற்று அறிவையும் பல கலைச் செல்வங்களையும் இழந்தவர் ஆவோம். தமிழ் நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டும், மற்ற மாநிலங்களில் ஸம்ஸ்க்ருத மொழியைப் படிப்பவர் தொகை வளர்வதை நாம் காண்கிறோம். இதனால், நாம் பின் தங்கிப் போவது கண் கூடு.

முக்கியமாக, இந்திய மக்களுடைய எண்ணத்தின் தோற்றத்தை நமக்கு அறிவிக்கும் நூல்கள் ஸம்ஸ்க்ருதத்தில் உள்ளன. அவ் எண்ணம் தோன்றி, வளர்ந்து, மாறுபட்டு, முரண்பாடுகளிலிருந்து புது இணைப்பு உண்டாவதையும், பொருள் வாதத்தின் பல கூறுகளும், எண்ணவாதத்தின் பல சமயங்களும் தம்முள் இகலுவதையும் ஸம்ஸ்க்ருதத்தின் துணைகொண்டே, நாம் பார்க்கமுடியும். தமிழ்மொழி சங்க காலத்தில் முதிர்ந்த வளர்ச்சி பெற்றிருந்தது. ஆனால், அதற்கு முன்பு, அவ்வளர்ச்சியின் அடித் தளங்களையும் அறிவதற்கு வேண்டிய அடிப்படைகள்—கல்வெட்டு, சில்லுகள், அகழ் பொருள்கள், மொழிதோன்றும் கருத்துக்கள், வாழ்க்கைச் சூழ்நிலை, போன்றவை—இன்னும் நமக்குக் கிடைத்தில. அவ்வளர்ச்சி பிரதிபலிக்கும் எண்ணங்களை ஸம்ஸ்க்ருதத்தின் மூலமாகவே நாம் பெற முடிகிறது. 'கடவுள்' என்ற கற்பனையும் தமிழுக்கு ஸம்ஸ்க்ருதத்திலிருந்தே வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. எழுத்து, சொல் போன்ற குறியீடுகள் தோன்றாத காலத்தில் மனித வாழ்க்கையிலிருந்து எழுந்த எண்ணங்கள் இருந்தன. அவ் எண்ணங்கள் கேள்வி வாயிலாகப் பரவின. அக்கால வரலாற்று உணர்ச்சி அது. அவற்றைக் கேள்வி (ச்ருதி) என்றே சொன்னார்கள், ச்ருதிதான் வேதம்; எவராலும் இயற்றப்படாதது அ-பௌருஷேயம் என்றனர்; ஏற்றுக்கொள்ள

வேண்டியதே. காதலால் கேட்டதற்குச் சான்று இராது; இன்னார் இயற்றினார் எனக் கூற இயலாது அன்றோ? காதால் கேட்டு மனத்தில் இருத்திக் கொண்டனர்; நினைவில் கொண்டது 'ஸ்ம்ருதி' (நினைவு). அக்காலத்தில் மொழிக்கு வரி வடிவு இன்மையால், கேள்வியும் நினைவும் ('ச்ருதி', 'ஸ்ம்ருதி') இன்றி அமையாதன ஆக இருந்தன.

வரி வடிவம் இல்லாத காலத்தில், மொழியின் ஒலி வடிவம் திருத்தமாக இருந்தாலே, கேள்வி அறிவும் திருத்தமாக இருக்கும், அதற்காக, ஒலி வடிவத்தை ஆய்ந்து வரையறுத்தனர்; அது 'சிக்ஷ' எனப்படும். ஒலி வடிவத்தில் நினைவில் கொள்ளுவதற்கு, பாட்டு வடிவம் உரை நடையைக் காட்டிலும் எளிது. ஒரு வகையாகப் பாட்டு வடிவத்தையும் வரையறுத்தனர். அது 'சந்தஸ்' எனப்படும்.

இவ்வாறே, அவசியம் நேர, 'வ்யாகரணம்' (இலக்கணம்), (மொழிப் பிறப்பு). 'ஜ்யோதிஷம்' (வான நூல்), 'கல்பம்' (சடங்கு முறைகள்) இவற்றைச் சமூகம் வகுத்துக் கொண்டது. இவ் ஆறும் வேதத்தின் அங்கங்கள் எனப்படும். நாளடைவில் 'தர்க்கம்' (முறை, நியதி). 'மீமாம்ஸம்' (உரிய பொருளை அறிவும் முறை) போன்ற சாத்திரங்கள் தோன்றின.

உடல் உழைப்பும் மன உழைப்பும், உழைப்பின் பாகுபாடும் எவ்வாறு சமூகத்தை இயக்கின. எந்த நிர்ப்பந்தங்களால் புது சாத்திரங்கள், சடங்குகள், மரபுகள் உண்டாயின என்பதை ஸம்ஸ்க்ருதத்தின் வளர்ச்சி நமக்கு அறிவிக்கிறது. காரணம், சமூகம், வாழ்க்கை அவற்றின் விளைவு சாத்திரம்.

சாத்திரங்களும், இதிஹாஸங்களும், புராணங்களும், அறம், பொருள், இன்பம் நூல்களும் எவரோ ஒருவருடைய மனத்தில் தாமே எழவில்லை. வால்மீகி, வியாஸர், மநு, பராசரர், சுகர்போன்ற பெரியார் வாழ்ந்த சமூக வாழ்க்கையிலிருந்தே எழுந்தன. வேதருஷிகளும் இதற்கு விலக்கு அன்று.

எண்ண வாதம்

மனிதனுடைய சூழ்நிலை, வாழ்க்கை காரணமாக அவனுடைய எண்ணங்கள் தோன்றின. ஒவ்வொரு எண்ணத்திற்கும் காரணம் அவனுடைய வாழ்க்கை, பாரம்பரியம், குடும்பம், உடல் அமைப்பு, ஆரோக்கியம், தொழில், சமூகத்தில் அவனுடைய பங்கு, உழைப்பு, கல்வி கேள்வி-போன்ற யாவும் இவ்'வாழ்க்கை' என்ற சொல்லில் அடங்கும். இவ்'வாழ்க்கை'யுடன் அவன் வாழும் சமூக அமைப்பு, அவ் அமைப்பால் உண்டாகும் அழுத்தங்கள்-நெகழ்ச்சிகள் சமூகத்துக்கும் அவனுக்கும் உள்ள தொடர்புகள், போன்ற சூழ்நிலையில் அடங்கும். இவை யாவும் இணைந்தாலே எண்ணம் தோன்றுகிறது.

புறப்பொருளின்மீது புலன்கள் பொருந்துவதால், அப்பொருளின் அமைப்பு ஒருவனுடைய மனத்தில் படிகிறது. வழியில் உள்ள 'கல்'லின் மீது கண் என்னும் புலன் பொருந்துகிறது. முன்பே, பல கற்களைப் பார்த்திருத்தலால், 'கல்' என்னும் பொதுப் பொருள்வோடு ஒத்த தன்மை கொண்ட இக்கல்லின் உருவம் மனத்தில் படிந்து. 'இது ஒரு கல்' என்ற படிவம் மனத்தில் உண்டாகிறது. அதைப்பற்றி அவன் நினைக்கலாம் நினைக்காமல் போகலாம். உணரலாம்; உணராமல் போகலாம், பொருட்படுத்தலாம் பொருட்படுத்தாமல் போகலாம். ஆனால், நினைப்புக்கும் உணர்வுக்கும், பொருட் படுத்தலுக்கும் அடிப்படை அந்தக் கல்தானே.

புறப்பொருள் ஒரு செயலாகவோ, வேறொரு கருத்து ஆகவோ இருக்கக்கூடும். ஒரு செயலை 'வீரம்' எனவும், இன்னொன்றை 'நீதி' எனவும், மற்றொன்றைக் 'காதல்' என்றும் கூறுகிறோம். சில செயல்களைப் புகழ்கிறோம்; சிலவற்றை இகழ்கிறோம்.

இவை அனைத்துக்கும் அடிப்படை வீரமோ, நீதியோ காதலோ பொருந்திய செயல் ஆகிய 'பொருள்'. கணிதத்தில் ஒரு புனைவுகோள் வருகிறது. நியூடன் வானத்துக் கோள்களின் இயக்கம் குறித்து அறிவித்த 'நியதி' என்று வைத்துக் கொள்வோம். அதுவும் ஒரு கருத்து. நம் மனதில் படியும் கருத்து உருவ அடிப்படையில் அக்கருத்து உருவம் ஒரு பொருளைக் குறித்த செயலே.

பொருள் நுண் பொருள் ஆகலாம்: பருப்பொருள் ஆகலாம்; 'கல்' போன்ற உருவம் திண்மை உடைய 'புறப்'பொருள் ஆகலாம்; அன்றி 'வீரம்' போன்ற 'அகப்' பொருள் ஆகலாம்; அன்றி, புனைவு கோளாக மட்டும் நம் மனத்தில் புகலாம். எவ்வாறு ஆயினும், மனத்தில் புகுவதற்கு அடிப்படை 'பொருள்'.

'மனம்' என்பது மூளையின் இயக்கம். மூளைக்கு இரு கூறுகள் உண்டு. குடல், இதயம் போன்ற உடல் உறுப்புகளில் மூளையும் ஒன்று என்பது ஒரு கூறு. உடலின் மற்ற கூறுகளை உணர்ந்து யாவற்றையும் செயல்படுத்தும் உறுப்பு என்பது மூளையின் மற்றொரு கூறு. மூளை பல படிமங்களைத் தன்னுள் புதைத்து வைத்திருக்கிறது. மூளையின் சிறப்பு மற்றும் சிறப்பின்மையை அது தன் செயல்களை ஆற்றும் வேகத்தையும், தன்னுள் பொருள்படிமங்களை வைத்திருக்கும் திறனையும் அவற்றை உபயோகிக்கும் திறனையும் கொண்டு அறியலாம். இங்கு மூளையின் இயக்கமே மனம் என்பது அறிந்தால் போதும்.

மூளையில் கணந்தோறும் புறப் பொருள்களின் படிமங்களைப் புலன்கள் படிய வைக்கின்றன. அவற்றில் சில கிரகிக்கப்படுகின்றன; சில புறக்கணிக்கப்படுகின்றன. கிரகிக்கப்படுவன முன்பு இருந்த படிமங்களுடன் இணைந்து கருத்து உதிக்கிறது. கருத்து உதிக்கும்போது, சில முரண்பாடுகளும் உதிக்கலாம். 'முன்பு தான் பார்த்த கல்லின் உருவம், நிறம், கனம் வேறு ஆக இருந்ததே; இதுவும் கல்தானா?'' என்ற முரண்பாடு தோன்றலாம். அவற்றைப் பகுத்து ஆய்வது விவேகம்; சிறப்புத் தன்மை. நான், நீ, பறவை, ஆறுஎன்ற வேறு பாட்டு அறிவு. 'நான்' என்ற தன்மை உணர்ச்சி இந்த விவேகம் உண்மையை அறிய உதவுகிறது.

மூளையின் மேலும் பல படிமங்கள் பதியும்போது மேல் கூறிய படிப்படியான வளர்ச்சிகள் உண்டாகி, இறுதி உண்மை புலப்படும், முதலில் இந்த உண்மையும் ஒரு புனைவு. அந்தப் புனைவை உறுதிப்படுத்துவது, அன்றி மறுப்பது அநுபவம். புனைவும் அநுபவமும் இணைபிரியாது சென்றால் மட்டுமே உண்மையை நெருங்க முடியும், மெய்ப் பொருள் காணமுடியும்.

இதுகாறும், கூறியன அனைத்தும் 'பொருள் வாதம்'

எண்ண வாதத்தினர் மனம் தனித்து நின்று இயங்கக்கூடும்; பொருள்—அறிவுக்கும் சூழ்நிலைக்கும், மூளைக்கும் மனத்துக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்கிறார்கள். புலன் அறிவுக்குப் புறம்பானது உண்டு. அது அறிவுக்கே எட்டாதது. அது நமக்கு எண்ணத்தையும் விவேகத்தையும் மெய் அறிவையும் தருகிறது. புனைவும் அநுபவமும் பிரிந்து வேறு வழிகளில் செல்கின்றன. இந்திரியங்களுக்கு (புலன்களுக்கு) இந்திரியம் ஆவது; தீக்கு வெப்பம் தருவது; சூரியனுக்கு ஒளி தருவது. இது இந்திரியங்களிலிருந்து, தீயினின்று, சூரியனிடமிருந்து வேறுபட்டது.

உடல் வேறு; உடலில் உறையும் உயிர் (ஆத்மா) வேறு. மூளை வேறு; மனம் வேறு; அறிவு வேறு. உலகத்தின் காரணத்தை உலகத்திற்குப் புறம்பேதான் காண வேண்டும். அவ்வாறே, நம் பிறப்பின் காரணத்தை, நம் வாழ்க்கையின் சீருக்கும்

கேட்டிருக்கும் காரணத்தை, நமக்குப் புறம்பேதான் காண வேண்டும். நம் நாட்டில் இவற்றை 'பிரஹ்மம்', 'கர்மபலன்' போன்ற பல பெயர்களால் குறிப்பிடுவர். இவை யாவும் 'எண்ண வாதம்'.

ஆராய்ச்சியின் தொடக்கத்திலிருந்து பொருள் வாதத்திற்கும் எண்ண வாதத்திற்கும் போராட்டம் இருந்துகொண்டே வந்திருக்கிறது. அப்போராட்டத்தால், எண்ண வாதமும் பொருள் வாதமும் இரண்டுமே பல மாறுதல்களை அடைந்துள்ளன; இன்னமும் மாறிக் கொண்டிருக்கின்றன.

இந்தியப் பொருள்வாதம் பார்ஹஸ்பத்யம், ஸாங்க்யம், லோகாயதம், சாருவாகம், நாஸ்திகம், ஸம்சயம் என்ற பல பெயர்களுடன் பல காலங்களில் விளங்கிற்று. அவையும் நாளடைவில் எண்ண வாதங்களாகத் திரிந்தன.

இந்திய எண்ண வாதம் வேதத்துக்கு உட்பட்ட மதங்கள் எனப்படும் (ஸாங்க்யம்) யோகம், நியாயம்—வைசேடிகம், மீமாம்ஸை, வேதாந்தம் என்ற பிரிவுகளிலும், தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தம் என்ற மேலும் ஒரு பிரிவிலும் விளங்கிற்று. இது தத்துவ ஆராய்ச்சி, பல கடவுளர்களை உண்டாக்கி, அவர் பெருமையைக்கூற சைவம், வைணவம் கௌமாரம், காணாபத்யம், சாக்தம் போன்ற கடவுள்—மதங்களாகப் பிரித்து, அவற்றை நிலைநாட்டுவதற்குத் தக்கவாறு தத்துவங்களையும் மக்கள் அமைத்துக் கொண்டனர். இது கடவுள் நிலை. இவற்றை ஒட்டிய கடவுள் நெறி மதம் இவை போதா எனச் சாயிபாபா போன்ற புதுக் கடவுளர்களையும் பன்றிமலை போன்ற குருமாரையும் சிலர் உண்டாக்கினர். ஏன்? தம் தளைகளினின்று விடுதலைபெற வேறுவழி காணாத மக்களின் அவலக்குரல் இவ் வடிவு எடுக்கிறது. தம் கவலைகளை மறக்க இவ் வழிபாடுகளைக் கொள்கின்றன. காலத்திற்கேற்ப மக்கள் பொருளையும், உழைப்பையும், மனத்தையும், பொதுவாகச் சமூகத்தையும் ஆளும் வர்க்கம் இந்தப் பூச்சாண்டிகளைக் காட்டி மக்களை மயக்குகிறது.

பொருள் வாதத்தினர் தம்முள் முரண்படுவதும், எண்ண வாதத்தினர் தம்முள் முரண்படுவதும் உண்டு. அம் முரண்பாட்டால் சமூகம் முன்னேறியும் உள்ளது; பின் சென்றதும் உண்டு. பொருள் வாதம் எண்ணவாதக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதும் எண்ண வாதம் பொருள் வாதக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதும் உண்டு. ஆனால், அவற்றிற்கிடையே உள்ள அடிப்படை வேறுபாடுகளை அறிந்தவர் இத் தோற்றங்களால் மயங்கார்.

சுபக்கம் — பர பக்கம்

நான் ஒரு கொள்கையை ஸ்தாபிக்க முற்படும்போது அக் கொள்கையின் அடிப்படை ஆதாரம் எது? அந்த ஆதாரத்திலிருந்து அக் கொள்கை படிப்படியாக எப்படி வளருகிறது? அக் கொள்கையின் இறுதி நிலை எது? அது என்னையும் சமூகத்தையும் எவ்வாறு பாதிக்கிறது? அதை எதிர்ப்பன எவை? தழுவுவன எவை? அவற்றை எதிர்ப்பன வற்றின் ஆதாரங்கள், கொள்கைகள், விளைவுகள் எவை? அவைகள் ஏன் பொருந்தா? தழுவுவனவற்றின் வரையறைகள், வரம்புகள், கட்டுப்பாடுகள் எவை? என் கொள்கை ஏன் அவற்றினும் சிறந்தது? என்பனவற்றைத் தொகுத்து ஆராய வேண்டும்.

உதாரணமாக, ''மக்கள் நலனுக்கு ஜனநாயக அரசு சிறந்த அமைப்பு'' என்பதை ஸ்தாபிக்க வேண்டி இருப்பின், முதலில் ஜனநாயகம் இன்னது என்பதை உறுதி செய்ய வேண்டும். மற்ற ஆட்சி முறைகள் இன்ன என்பதை அறியவேண்டும். மக்கள் நலன் என்ன? அதை அளப்பது எப்படி? என்பனவற்றை வகுத்துக் கொள்ளவேண்டும். ஜனநாயகம் உண்டாவதன் சூழ்நிலை, அதன் வளர்ச்சி, இறுதி நிலைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஜனநாயகத்தை எதிர்ப்போர் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதைத்

தெரிந்து கொள்ள வேண்டும், ஜனநாயகத்தின் நன்மை தீமைகளைப் பகுத்து அறிய வேண்டும். பிறகுக்குச் சொல்லவேண்டும்.

இது 'சுபக்கம்'-என் கட்சி. என் கட்சிக்கு எதிர்வாதம் இன்னது என்பதைச் சொல்வது 'பரபக்சம்'. பரபக்கத்தை கண்டித்து என் பக்கத்தை நிலைநிறுத்துவது வாதத்தின் முடிவு. 'சுபக்கப்' இன்னது என்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டால், பரபக்கம் வாதி சொல்லலாம்; 'என் எதிரியின் வாதம் இப்படிப் பட்டது. அது பொருந்தாத வாதம். அவன் எவ்வளவு முட்டாள் பார்த்தாயா-இந்தச் சிறு விஷயத்திலும் அவன் தவறி இருக்கிறானே' என அவனுடைய வாதத்தை இகழ்ந்து, கேலி செய்து, மக்களுடைய கைத் தட்டலைப் பெற்றுவிடலாம். மக்களில் பெரும்பாலோர் 'அவன் அப்படிச் சொன்னானா? சொன்னது உண்டேல் அவன் சொன்ன, அல்லது எழுதிய இடத்தைக் காட்டு' என்று கேட்பதில்லை.

இதே நிலை பொருள் வாதத்திற்கு ஏற்பட்டது. வேத-உபநிஷத் காலங்களில் மக்கள் யாவற்றையும் துருவி ஆராய, சந்தேகங்கள் இருந்தால் அவற்றை வெளிப்படுத்த, விளக்கம் பெற, உண்மையை நாட, ஆர்வத்தோடு இருந்தனர். ஆனால், கி. பி. 7—8 நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அந்நிலை அழிந்து கேள்விகளைக் கேட்பதற்கே அச்சம் கொண்டவர் ஆயினர். உண்மையை நாடும் ஆர்வத்திற்குப் பதிலாக பிறர் சொல்லில், நம்பிக்கை கொள்ளவேண்டும் என்ற கருத்து பரவியது. தம் முயற்சியை மறந்து, பிறர் முயற்சியில் தம் அறிவை வளர்த்தனர். அது பிறருடைய முயற்சியில், பிறருடைய உழைப்பில் சிலர் தம் வயிற்றை வளர்க்கத் தொடங்கிய சமூகத்தின் அறிகுறி.

நாளடைவில் உண்மைநாடுவோரின் சந்தேகங்கள் அகன்றன. அறிவாற்றல் பக்தி யாகப் பரிணமித்தது, (அவ்வாறு பரிணமிக்க வேண்டும் என்பதே ஸ்ரீபாஷ்யத்தின் மங்கள ஸ்லோகத்தில் ராமானுஜரின் வேண்டுகோள்.) இந்த சமூக மாறுதலுக்கு, வேதத்துக்குப் புறம்பானவை என்றுக் கருதப்பட்ட கொள்கைகள் தடைஆக நின்றன. அவற்றை, இந்து மதஸ் தாபகர் நீக்கி விட்டனர். அடியோடு அழித்தும் விட்டனர்.

பவுத்தரையும் சைனரையும் இந்துக்கள் ஆக்கினர்; நாடு கடத்தினர்: கழுவில் ஏற்றினர். அவர்கள் கண்ட பல்கலைக் கழகங்கள் நாலந்தா, தக்ஷசிலா போன்றவை பரப்பிய ஒளி மங்கியது. இவர் கண்ணில் படாத சில சிற்பங்கள், மலைக்குகைகளில் எஞ்சின.

ஆனால், ஆசார்யர்களுடைய கொள்கைக்குப் புறம்பான கருத்துக்கள் இருந்தன என்பதை மட்டும் அவர்களால் மறைக்க முடியவில்லை. அக்கருத்துக்களை வென்றோம் என மக்களிடம் சொல்ல வேண்டி இருந்தது. இக்காரணங்களுக்காக, அங்கங்குச் சிதறிய சில சூத்திரங்களைச் சொல்லி, 'இது அவர்களுடைய சுபக்கம், நம்முடையபரபக்கம்' என மக்களை, நம்பச்செய்து அக்கருத்தைச் சிதைத்து, வெட்டி வெற்றி கொண்டனர். அவ்வாறு, பரபக்கத்தில் சிதறியுள்ள சில சூத்திரங்களைக் கொண்டே, இன்றைக்கு நாம் பிருஹஸ்பதி, கோதமன், போன்றவருடைய வேதத்திற்குப் புறம்பான கொள்கையின் அடிப்படையை அறிய வேண்டி உள்ளது; பிருஹஸ்பதி, கோதம, கபில, சுபக்க நூல்கள் இல்லை.

வேறு விதமாகவும், இந்தக் கொள்கை-வெற்றி நிகழ்ந்தது. உரைகளை எழுது வோர் தம் திறமையால் முதல் நூலைத் திரித்து நூலாசிரியர் போக்குக்கு மாறாக உரை

இட்டனர். உதாரணமாக கபிலர் என்னும்-வேதருஷியால் இயற்றப்பட்ட 'ஸாங்க்யம்' நமக்குக் கிடைக்கவில்லை. அதைத் தழுவி, கௌதம புத்தர் சொன்னதாக அவருடைய சீடர் எழுதி வைத்தவையும் கௌதமப் புத்தர் காலத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு வாழ்ந்த அசுவகோஷர் எழுதிய புத்த சரித்திரமும் நமக்குக் கிடைக்கின்றன. அவருடைய அறநெறி (தம்மபதம்)க்கு உரை எழுதிய நூல்கள் பல திபேத்துக்கும் சீனாவுக்கும் குடியேறி விட்டன. புத்த மதத்துக்குத் தத்துவ நூலான 'ஸாங்க்ய காரிகை' என்ற தொகுப்பு ஈச்வர கிருஷ்ணரால் வெளியிடப்பட்டது. அக்காரிகைக்கு ஆதி சங்கர பகவத் பாதாளின் ஆசார்யரான கௌட பாதர் உரை இட்டருளினார். இவ்வுரை காரிகையை அத்வைத வேதாந்த நூல் ஆக்கிவிட்டது. ஆனால், அந் நூலில் 62-ம் சூத்திரம் 'கடவுள் இல்லை' என்று சொல்லுவதாக இருந்திருக்கக்கூடும் என இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் 'கீதாரஹஸ்ய'த்தில் லோக மான்ய பாலகங்காதரதிலகர் அப்பிராயப் படுகிறார். இக்காரணத்திற்காக கௌடபாதரோ, வேறு எவரோ, அந்தச் சூத்திரத்தை நூலிலிருந்தே அகற்றி விட்டார் எனவும்திலகர் சொல்கிறார். அந்தச் சூத்திரம் இருந்திருக்கலாம் எனவும் அதன் மூல வடிவத்தை அந்நூலில் திலகர் தந்துள்ளார்.

தமிழில் 'சிவஞான போதம்' போன்ற பல நூல்களிலும் மணிப்ரவாளத்தில் திருவாய் மொழி ஈடுமஹாப்ரவேசத்திலும் ஆசிரியர் பரபக்கமாகச் சொல்வதைக் கொண்டே வெவ்வேறு சமயங்களின் அடிப்படையை அறிகிறோம். சுபக்க நூல்கள் தமிழில் இருந்தனவாகத் தெரியவில்லை.

ஸம்ஸ்க்ருதத்தில் பொருள்வாதக் கருத்துக்களின் முதல் நூல்களுக்குப் பதிலாக நமக்கு இப்போது கிடைப்பன உபநிஷத்துகள் பிரமசூத்திரங்கள் போன்றவற்றின்- உரையாசிரியர்-சங்கரர், ராமாநுஜர் போன்ற ஆசார்யர்கள்-நூல்களுக்கு உரை எழுதும் போது மேற்கோளாகக் காட்டும் சில சூத்திரங்களும், மாதவாசாரியார் தமக்கு முந்திய மதக் கருத்துக்களைத் தொகுத்து எழுதிய 'ஸர்வமத ஸங்க்ரக'மும், கிருஷ்ண, மிசிரர் வேதாந்த தேசிகர் போன்றவர் தம் பிரபோத சந்திரோதய, ஸங்கல்பஸுர்யோதய காவியங்களிலும் பிற நூல்களிலும் பழைய கொள்கைகள் இன்ன என்று கூறி அவற்றைக் கண்டிப்பனவும்.

மேலே நான் கூற உள்ள பண்டைய பொருள் வாதக் கருத்துக்களைக் கணிப்போர் மேற்கண்டவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பார் ஹஸ் பத்யம்

வேதருஷிகளில் ஒருவர் ப்ருஹஸ்பதி. அவர் தேவகுருவாகவும் சொல்லப் படுகிறார். அவர் பெயரால் வழங்கப்பட்ட கொள்கைத் தொகுதி பார்ஹஸ்பத்யம் என்பன. அவை பெரும்பாலும் அக்கால வழக்கத்தில் இருந்த சில மரபுக் கோட் பாடுகளைத் தகர்ப்பனபோலக் காணப்படுகின்றன. தாமாக ஒரு கொள்கையை நிலைநாட்டுவன அன்று. வாதங்களுடைய ஒருமுறை தன் கொள்கையை எடுத்துக் கூறாமல் பிறருடைய கொள்கையை மறுப்பது. ஆதலின், 'பார்ஹஸ்பத்யத்'தை விதண்டாவாதம் என்பர்.

'பார்ஹஸ்பத்யம்' கூறும் சில விஷயங்கள் :

வேதத்தை உச்சரிப்பதால் மட்டும் பயன் இல்லை. பொருள் தெரிந்து பயில வேண்டும். இல்லையேல், தவளைகள் மழைக்காலத்தில் கூச்சலிடுவது போல ஆகும்.

பல இடங்களில் மந்திர உச்சரிப்பே பயன் தரும் எனச் சொல்லப்படுகிறது. இன்றும், நம் சமுகத்தில் பொருள் தெரியாமல் திருமணம், புண்யாஹவசனம், சந்தியா வந்தனம் போன்ற சடங்குகளிலும், ஹோமங்களிலும், அர்ச்சனையிலும் மந்திர உச்சாடனத்திற்கே பலன் உண்டு எனப் பலர் நம்புகிறார்கள். இதை அக்காலத்திலேயே ப்ருஹஸ்பதி மறுத்தார். சாந்தோக்ய உபநிஷத பொருள் அறிந்து சடங்கு செய்வது பொருள் அறியாமல் செய்வதிலும் அதிக பலனைத் தரும் என்கிறது. ஜைமினியின் மீமாஸ்ஸை உள் பொருளையும் அறிய வேண்டும் என வலியுறுத்துகிறது.

என்றும் உள்ள உண்மைகள் 4 பூதங்கள்: நிலம், நீர், தீ, காற்று இவையே. இறைவனை உண்மை (ஒரு 'தத்துவம்') என ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த 4 பூதங் களின் சேர்க்கையே உடலும் புலன்களும், பொருளை அறிதலும். பூதங்கள் 'அசத்'. அந்த 'அசத்'திலிருந்து உயிர் உண்டாயிற்று. வேறு ஒருவர் உண்டாக்கவில்லை. புலன்கள் (சுவை, ஊறு, ஒளி,. ஓசை, நாற்றம்) அவற்றின் கருவிகள் (வாய், உடல், கண், செவி. மூக்கு.) செயல்கள் (உண்ணல், தொடுதல் காட்சி, கேள்வி, முகர்தல்) இவையே அறிவிற்கு ஆதாரம். இந்தச் சக்திகள் குறைய அறிவு குறையும். அவை இன்றேல் அறிவும் இல்லை.

உடல், புலன், பொருள் அறிவு—இவற்றின் சேர்க்கையிலிருந்து உணர்ச்சி ('சைதந்யம்') உண்டாகிறது. 'சைதந்யம்' என்பது இங்கு உபயோகிக்கப்படும் சொல். அச்சொல்லுக்கு விளக்கம் வேறு இடத்தில் காணலாம். 'சைதந்யம்' மனித குலத்தின் சிறப்பு. அது உடலின் மூலமாக வெளிப்படும். உடல்—புலன் தொடர்பு அறிவது 'ஷேத்ரக்ஞம்' இன்பம் ஒன்றே குறிக்கோள்; அடைய வேண்டுவது புருஷார்த்தம். மரணத்திற்குப் பிறகு வாழ்வு இல்லை; வேறு உலகம் இல்லை. உடம்பு அழிய உயிர் எஞ்சுவது இல்லை.

'கர்ம பலன்' என்பது முந்திய அனுபவமே. தீயைத் தொட்டோ, பிறர் தொட்டதைக் கண்டோ, கேட்டோ, 'தீ சுடும்' என்பதை அறிகிறோம். நாம் இப்போது தொட்டால் சுடும். தொடுவது 'கர்மம்'. சூடு உறுவது 'காம பலன்'. சோளம் விளைப்பது 'கர்மம்', அவ்விதை முளைத்துப் பயன் தருவதற்கு வேண்டுவன செய்வது 'கர்மம்'. விளைச்சல் 'கர்ம பலன்'. அந்த அளவுக்கே, கர்மமும் பலனும் தொடர்பு உள்ளன. அதாவது, முந்திய அனுபவத்தைக் கொண்டு காரண காரியத் தொடர்பு அறிதல்.

இவை ப்ருஹஸ்பதியின் பொருள்வாதக் கருத்துக்களில் சில. அவற்றின் தொடர்பும், ஒன்று சேர்ந்த ஆராய்ச்சியும், நமக்குக் கிடைக்கவில்லை.

இக் கருத்துக்களில் சிலவற்றைத் தழுவி எழுந்தன. கோதமனுடைய 'உடலும் உயிரும் ஒன்றே' அதாவது 'உயிர் இன்றி உடல் இயங்காது; உயிரின் தன்மையைக் காண உடல் வேண்டும்' என்னும் தேஹ-ஆத்ம-வாதம். 'யாவும் அணுத்திரள்; அணுக் களின் சேர்க்கையால் பல்வேறு வகையான உடல்களைக் காண்கிறோம்' என்னும் கணாத வாதம் இதனோடு தொடர்பு உடையதே. 'இணைப்பு' (யோகம்) என்பதையே வாழ்க்கை நெறியாகவும், குறிக்கோளாகவும் கொண்ட பதஞ்சலியின் யோக சாத்திரம் இத்தன்மையதே. இவற்றில் உலகத்துக்குப் புறம்பான, அறிவுக்கு எட்டாத ஒரு பொருள் குறிப்பிடப்படவில்லை.

குகன் கண்ட பரதன்

''வற்கலையின் உடையான்'' ''நம்பியும் என் நாயகனை'' ''உண்டு இடுக்கண் ஒன்று உடையான்'' ''நின்றவனை நோக்கினான் திருமேனி நிலை உணர்ந்தான்'' ''துன் என்றான்'' ''விலிகையினின்று இடைவீழ, விம்முற்று நின்று ஒழிந்தான்'' ''ஒரு தனியே தான் வந்தான்''.

கி. வா. ஜ. ''கம்ப சம்பிரதாயம்
''தழுவி நட்டார்''
''எல்லியும் பகலும் போலத் தழுவினன்''
அகத்தியனி - அடிபணிந்தான்
உரோமபாதன் - தழுவினன்

'வந்து' எதிரே 'தொழுதான்' (பரதன்) 'வணங்கினான்' (குகன்) ஒருதனியே தான் வந்தான். நெறி எதிர் நின்றனன். நின்றவனை நோக்கினான் திசைநோக்கித் தொழுகின்றான்.

(பரதன்) மலர் இருந்த (குகன் உடைய) அவன் அவனும் 'மூன்றுலகும் ஈன்றானைப் பெற்றதால் பெருஞ்செல்வம் யான் 6-ம் வேற்றுமைத் தொகை

'அடிவீழ்ந்தான்'	:	இராவணன், துளஸி
'தந்தையினும்'	:	எனக்கும் மூத்தான்
தகவு	:	நடுவு நிலைமை (பொறுமை, தகுதி) தந்தை வழுவினன் See ஆசார்ய ஹ்ருதயம்
சிந்தையினும்	:	Mental
சென்னியினும்	:	Physical
'சீர்த்தி'யான்	:	சீர்மை குகன்
'தழுவினன்'	:	'தழுவின' புளிஞர் வேந்தன் தழுவப்பட்ட

கேட்டனன் கிராதர் வேந்தன்
மீட்டும்[ம்] மண் அதனில் விழ்ந்தான்—[முன்பு] நீட்சி 54
உயிர்ப்பைமீட்டு : திரும்பப்பெற்று

பூட்டிய கையன் — கிடந்தவாரே புகழுற்றான்
எடுத்து அணைக்க வில்லை : முன்பு அணைத்தானா?
'பரதன் குணத்திற்காகக் காலில் விழுந்தான்' அப்போது அவனுடைய நிலை-
'எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பாரோ பிழைப்பு' ஆயிரம்
இராமர் கேழ் ஆவரோ'
நினைவரும் குணக்கொண் டன்றோ இராமன் மேல...'

மனப்பான்மை : பரதன்- உண்டு இடுக்கண், ஒன்று
டையான் உங்கள்குலத்தனி
நாயகர்க்கு உயிர்த்துணைவன்

மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய நண்பன் — என்முன்னே அவற்காண்பன். திசை

நோக்கித் தொழுகின்றான்.

குகன்-நினைவருங் குணம் கொடன்றோ இராமன் மேல் நிகழ், காதல்

தென்கரையில் உள்ளான் : திருமேனி நிலை உணர்ந்தான் துண் என்றான்'

கி. வ. ஜ. அடிபணிந்தவனே தழுவப்படுவான்
வணங்கியவள் அன்று
இரு பாத்திரங்கள் சந்திக்கும் இடங்கள் எயினர் கோன் - குமரன்
(யார் பெருமாள், ஆழ்வார் செய்தது; கம்பனன்று)

அ. ச. ஞா. பாத்திரம் அமைக்கப்படும் சூழ்நிலை Instinct வஞ்சனையால் அரசெய்திய
நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்
No Selfconciousness

எஸ். இராம-இரு அடைமொழிகள் - மலர் அவன்
தகவு சீர்த்தியான்

குகன் பரதனை எவ்வாறு கண்டான்
பரதன் குகனைஎவ்வாறு கண்டான்
காலச் சூழ்நிலை - முன்னோர் மொழிந்தது
பாத்திரச் சூழ்நிலை
கம்ப சம்பிரதாயம்

பட்டி மன்றக் குறிப்பு

கம்பரின் தனிப் பாடல்கள்

ஆழியான் பள்ளி யனையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே - பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையில் பூட்டுகின்ற
நாணே யகல நட.

மங்கை யொருபங்கர் மணிமார்பி லாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே - திங்களையும்
சீறியதன் மேலூரும் தெய்வத் திருக்கோளே
ஏறிய பண்பே யிறங்கு.

வந்தெதிரே தொழுதானை வணங்கினான்?

'மழுங்காத ஞானமே படையாக மலர்உலகில்
தொழும் பாயார்க்கு அளித்தால்' (திருவாய் மொழி 3-1-9)

தொழும் மரபு; அடிமை; தொழும்பன்=நீசன், தொழுது=அஞ்சலி பண்ணி (தேவாரம்-5-21-8) தொழற்குக் கை, தொழுதகையுள்ளும் படை ஒடுங்கும் (குறள் 828) தொழுகையர், அழுகையர், துவள்கையர் (திருவசகம் 369) விழுப்பொருளே, தொழுப்பு அடியோங்கள் வாழச் செய்தானே - தொழு படியோங்கள் (திருவாசகம் 374) தொழும் புகந்து கடைப்பட்டேனே (திருவாசகம் 436) தொழில்=ஏவல் தொழுதி : இனம், கூட்டம் (பெரும்பாண் 406) தொழுவர் : 'சிறுகுடிப்பெருந் தொழுவர்' (மதுரைக் 1212.) நெல் அரி தொழுவர், (புறம் 24, 209). 'தொழுது தோன்ற' (-முல்லை 56), வணங்கி, விளங்க இருண்ட குஞ்சி மண் உறப்பணிந்து, மேனி வளைத்து, வாய் புதைத்து நின்றான்.

வணக்கம்=ஆஸ்ரயணம் (கம்பன்), வணக்கு=தோற்பிப்பது (கம்பன்) வணங்க = அடிமை ஒழுக்கம்பூண (கம்பன்). வணங்கும் = உபாஸிக்கும் (கம்பன்) வணக்கம் = முன்னர் தாழ்ந்திருத்தல் 'சொல் வணக்கம்' 'ஒன்னார் கண் கொள்ளற்க, வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் - குறள் 827,' தலையே நீ வணங்காய்' (தேவாரம்) வணக்கு='முடக்கம்'. 'வாளைப்பகுவாய் வணக்குறு மோதிரம்' (சிலப்பதிகாரம் 6.95) வளைதல்=வாளையப் பகுவாய் கருப்ப வணக்குறுத்து (நெடுநல் 148), வணங்கு இறை பணைத்தோள் (மதுரைக 414); வணர் : வளைவு ; 'வணர் கோட்டுச்சீறியாழ்'—புறம் 155 இராவணன்,

'குலைவுறல் அன்னம் முன்னம் யாரையும் கும்பிடான்'
''அணங்கினுக்கு அணங்கனாளே ! ஆசைநோய் அகத்துப் பொங்க
உணங்கிய உடம்பினேனுக்கு உயிரினை உதவி உம்பர்க்
கணங்குழை மகளிர்க்கெல்லாம் பெரும்பதம் கைக்கொள் என்னா,
வணங்கினன். உலகம் தாங்கும் மலையினும் வலிய தோளான்''-(3388)
''தறை வாய் வந்து அவன் அடிதொழுதலும்
கறைவாள் பட ஆவி கலங்கினள் போல்
இறைவா இளையோய் என ஏங்கினளால்
பொறைதான் உரு ஆனதோர் பொற்பு உடையாள்'' (3389)

குடிமை மூன்றுலகும் செயும் கொற்றத்து முடியின்மீது முகிழ்த்துயர்கையினனாகிய குகன், ஏழை, ஏதலன், மாமழைமான் மடநோக்கி உன் தோழி-உம்பி, எம்பி, தோழன் நீ எனக்கு என்றெல்லாம் கூறி கூரணிந்த வேல்வலவன் குகனோடும் கங்கைதென்னில் சீரணிந்த தோழமை கொண்டுள்ளான் இராமன். (தேசிகனுடைய ஆதித்யம் ஏற்காதது) குன்று உரைத்தாலும் கூடாக்குவுத்தோள்; நிலத்தைக் கூட பின்திரைத்து, அருக்கன் தன்னை விரித்து, மீன்தொக்கது ஒன்று நின்று இமைக்கின்றது அன்ன முடியடி நெடிதின் வைத்தான்.

வணங்க நெற்றிநிலத்தைத் தொட்டது தண்டனிடுவது போல - தண்டு போல;
(court ettiquette)

(இராமனும் குகனும் already 52.80 Sumantra goes upto Ganga stops Sumantra and Guha there Guha goes not fery them 71 takes. Only Sumantra offers to go to forest - not Guha) வள்ளல் தாதை வரம் என்னும் வானோர் தவத்தால் அழியா அழகுடையான் வெய்யோன் ஒளி தன் மேனியில் விரிசோதியின் மறைய இடையாளொடும் இளையானொடும் போனான். நெடுநாடவை போனார், கங்கையை மேவினார், தபோதனர் அண்மினார், இனிய மாதவப் பள்ளி கொண்டு எய்தினார். அறிஞர் காதற்கு அமை விருந்தாகி, மெல் அடகு உண்டு விளங்கினான்.

ஆயகாலையில், ஆயிரம் அம்பிக்கு நாயகன் போர்க் குகன், கழலினான், புருவத்தான், மேனியான், மருங்கினான், சிருங்கிபேர நகர் உறை வாழ்க்கையன் ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தன் இருந்த வள்ளலைக் காண வந்து எய்தினான். தவப்பள்ளி வாயிலை நண்ணினான்.

கூவாமுன்னம் சேவிக்க வந்தெனன் நாவாய் வேட்டுவன் நாயடியேன் என்றான். இருண்ட குஞ்சி மண் உறப் பணிந்து, மேனி வளைத்து வாய் புதைத்து நின்றான் இருத்தி ஈண்டு எம்மொடு ... ‘குடிக்கிடந்து ஆக்கம் செய்து நின் தீர்த்த அடிமைக் குற்றேவல் செய்து, உன் பொன் அடிக்கடவாதே’ (திருவாய் 9.2.2.) ஆக்கம் செய்தல் : குடியில் பண்டு இல்லாத நன்மைகளை உண்டாக்குகை’ ஜநக தசரத வஸுதேவ குலங் களுக்கு மூத்த பெண்ணும், நடுவில் பிள்ளையும் கடைக்குட்டியும் போலே இவரும் பிறந்து புகழும் ஆக்கமுமாக்கி அஞ்சிறையும் அறுத்தார்’. ஜ்யேஷ்டரான பெருமாளுடைய விஸ்லேஷத்தில் சேற்றிலே தரைக் கிடைக் கிடந்து ப்ரேம விசேஷத்தாலே இக்குடிக்குப் பண்டில்லாத ஏற்றத்தை உண்டாக்கினார். (மன்புகழ் பெருமை உன் மரபினோர் புகழ்கள் எல்லாம் உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்)

மூன்றுவகை இராமாயணப் பாத்திரங்கள் கவிக்கூற்று : போர்க் குகன்’ என்னும் நாமத்தான் (குகன் எனும் பெயரிய கூற்றின் ஆற்றலான்) ஆயிரம் அம்பிக்கு நாயகன்; துடியன், நாயினன் தோல்செருப்பு ஆர்த்த பேர் அல் தொடுத்தன்ன குஞ்சியன்; அடியன் அல் செறிந்தன்ன நிறத்தினான் எண்ணெய் உண்ட இருள்புரை மேனியான்;

நீர் முகில் இடியினோடு எழுந்தால் அன்ன ஈட்டினான்,
தும்பி ஈட்டம் புரை கிளை சுற்றத்தான்;
அரை தாழவிட்ட செந்தோலன், தயங்குறச்
சுழலவிட்ட தொடு புலி வாலினான்;
பெண்ணைவன் செறும்பின் பிறங்குச் செறி
வண்ணவன் மயிர் வார்த்து உயர் முன் கையன்;
கண் அகல் தட மார்பு எனும் கல்லினன்;
காயும் வில்லினன் வில்லின் கல்வியான் குனிப்புறும்
புருவப்போர் விலான், வளபணை விலரினன் மல் உயர் தோளினன்;
கச்சொடு ஆர்த்த கறைக் கதிர் வாளினன் கட்டிய சுரிகையன்;

நச்சி அராவின் நடுக்குறு நோக்கினன்;
இந்திரன் வக்கிராயுதம் போலும் மருங்கினான்;
ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தன்;
திமிர்ந்த கூட்டச் சுற்றமும், தானும் உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
அன்பின் இறைஞ்சினான்; பணிமொழி கடவாதான்; பருவரல் இகவாதான்;
பிணி உடையவன் என்றும் பிரிவினன்.

1. பரதன் இப்படை கொடு பார் கொண்டு ஆன்மறம் கருதி ... விரதம் உற்று இருந்தவன் மேல் வந்தான், இது சரதம்

2. ஆற்றாது பின்னும் பகர்வான் (குரங்கின் எள்ளற்குறு போர்செய எண்ணினன் என்றும் இன்னல் ஊன்ற) உணர்ந்திலன் சுமந்திரன். 'கங்கை இருகரையுடையான் —

'கற்காணும் அழகு அமைந்த மேனியான் விடணனைச் சேர்க்கும்போது இலக்குவனைக் கேட்கவில்லை. சுக்ரீவன், நீலன் சாம்பவன், மாருதி'

அங்கதன் தூதில் மறுத்துரைத்தான்.

[இவையெலாம் தொழுதவன் யார்? வணங்கினவன் யார் என அறிய உதவலாம்.]

வந்து எதிரே தொழுதானை வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும் தலைவணங்கும் அவனும் அவன் அடி வீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினான் - தகவு உடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்

தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்கணானை
எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை? என்ன,
முழுதுலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன்; அதனை நீக்க, மன்னனைக் கொணர்வான் என்றான்.

விபீஷணன்

விபீஷணன் ராவணனுடைய சபையில் செய்த தவறுகள் : (வான்மீகி)

1. சீதையைக் கவர்ந்தது தவறு அவளை ராமனிடம் திரும்பத் தரவேண்டும் 9:16-22

2. இராவணனிடம் உண்மையைச் சொல்ல அவையோர் அஞ்சுகின்றனர் 10:24-25

3. அமைச்சர் தவறு செய்யும் அரசனைப் பலாத்காரத்தாலும் திருத்தக் கடமைப் பட்டவர் 14:19

4. போருக்கு எழுமுன் தன் வலியும், மாற்றான் வலியும் போர் நிலையில் ஏற்படக் கூடிய மாறுதல்களையும் ஆராய வேண்டும் 22

5. இராமனை வெலற்கு அரிது : இராமன் இங்குள்ள வீரர் அனைவரிலும் சிறந்தவன் (14 : முழுவதும்.) இவற்றுக்கு இராவணன் விடை ஏதும் பகரவில்லை. முதல் முறை அவையைக் கலைத்துவிட்டான். இரண்டாவதாக, விடணன் இராவணன் மனைக்குச் சென்று தனிமையில் கூறியபோது (ஸர் 10), தான் 'என்றும் போருக்கு அஞ்சியதில்லை 'பயம் நயச்யாமி' (101.28) என விடணனை அனுப்பி விட்டான் (விஸர் ஜயா மாஸீ 10.29). மூன்றாம் முறை விபீஷணன் சொன்னபோது விடை இறுத்தவன் இந்திரஜித். அவன் பேச்சு தற்பெருமையைக் காட்டுவது. இந்திரஜித் விபீஷணனைச் சிறு தாதை என்கிறான் (தாத ஞிஷ்ட 15.3) ஆனால் விபீடணன் இந்திரஜித்தைச் சிறுபிள்ளைத்தனம் (பாலத்வம்) முதிராத புத்தியுடையவன் (சுவி பக்வ புத்தி 15.9) என்பதும் மேலும், 'அவன் மூடன் தேர்ச்சி பெறாதவன், அடக்கம் அற்றவன் எனப்பல அடுக்கு மொழிகளை உபயோகிப்பதும் (15.22) சற்று பண்பற்ற தன்மையைக் காட்டுகின்றன. இறுதியாக, மறுபடியும் சீதையை ''செல்வம், ரத்நங்கள், ஆபரணங்கள், வஸ்த்ரங்கள், மணிகள் இவற்றுடன் இராமனிடம் சென்று சேர்ப்பித்து (நிவேத்ய) இனி சோகம் அற்று வாழ்வோம் (15-24) என்பது இராவணனுடைய ஒரே மறுமொழியைத் தூண்டுகிறது.

இம் மறு மொழி விபீஷணனுடைய வாதங்களுக்கு விடை கூறுவது அன்று. விபீஷணனுக்கு ஒரு உட்கருத்தைக் கற்பனை செய்து, அதனை வெளிப்படை ஆக்கி அவனுக்கு அவதூறு உண்டாக்குவது.

'நீ ஞாதி (16.3.9) (தந்தை வழி தொடர்புடையவன்) ஞாதி எப்போதும் மறைமுக எதிரி. என் அழிவை, பரிபவத்தை நாடுகிறாய். நான் மூவுலகுக்கும் நாயகனாக இருப்பதை உன்னால் பொறுக்கமுடியவில்லை; நீ கீழ் மகன்; சிற்றினம் சேர்பவன் (அநார்யண 11.15). நேரே விடைதர இயலாதபோது மாற்றானுடைய மறைமுக நோக்கம் இது ஆகலாம்' எனக்கூறி அதை மறுப்பது போல் அவனைக் கடிவது ஒரு வகையான வாதம். அதை இராவணன் கையாளுகிறான்.

விபீஷணன் தன் நேர்மையை மெய்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. நீ திகைத்துள்ளாய்; கயவர்களால் சூழப்பட்டுள்ளாய்! உன் உள்ளம் பண்பாடு அழிந்துள்ளது. (16, 19, 20) கால (சூழ்நிலை) வசத்தன் ஆனாய் என முன்பு மாரீசன் சொன்ன ச்லோகத்தையே எடுத்துக்காட்டுகிறான் (மந்திரத்தில் காண்க.)

உனக்கு நன்மை உண் ாகுக : நான் செல்கிறேன், நான் இன்றி நீ சுகமாய் இரு. (ஸ் வஸ்தி தே அஸ்து) கமிஷ்யாமி, ஸுகிபவ மயாவிநா : 16-25)

இறுதியில் இராவணன் சொன்னான் குலத்தைக் கெடுக்க வந்தவனே. மற்றொருவன் இவ்வாறு கூறி இருந்தால் ஒரு முகூர்த்தத்தில் அவன் இல்லாதவன் ஆகி இருப்பான். பழி உனது' (16-16) என்றதும் விபீஷணன் நான்கு ராக்ஷஸருடன் எழுந்தான். நேரே ராமலக்ஷ்மணர் உள்ள இடத்துக்கு ஐவரும் வந்தனர். நான் ஜடாயுவைக் கொன்றவனும் அரக்கியர் நடுவில் சீதையை வைத்திருப்பவனுமான ராமனுடைய தம்பி. என் சொல்லைக் கேளாது விபரீதமாக எண்ணும் ராவணனால் அவமதிக்கப்பட்டு, பற்ற வந்த அசுரரிடம் மனைவி மக்களைத் துறந்து ராமனைச் சரண் அடைந்தவன் (த்யக்த்வா புத்நாம்ச தாராம் ச ராகவம் சரணம் கத 17. 16). எல்லா உலகங்களுக்கும் புகலிடமானவனிடம், இராமனிடம் விபீஷணன் வந்து நின்றான் என்று விரைவில் விண்ணப்பம் செய்யுங்கள் ஸர்வ லோக சரண்யாய விபீஷணம் உபஸ்திதம் 17.17. ராமன் தன் படைத்தலைவரோடு மந்திரம் கொண்டு விபீஷணனை அழைத்து வரச்செய்கிறான். விபீஷணன்

பவந்தம் ஸர்வபூதாநாம் சரண்யம் சரணம் கத : |
பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநிச ||
பவந்கதம் ஹிமே ராஜ்யம் ஜீவிதம் ச ஸுகாநிச (19-5, 6)

இலங்கையையும் நண்பரையும் செல்வத்தையும் துறந்து எல்லா உயிர்களுக்கும் புகலிடமான உன்னை நான் தஞ்சம் அடைகிறேன்.

என் ராஜ்யம், உயிர், நகர்கள் எல்லாம் தேவரீர்வசம் உள்ளன. இவனுக்கு ராஜ்யம் ஏது? இராவணன் அரசன் அவனுக்குப்பின் இந்திரஜித்துக்கு உரிய ராஜ்யத்தை ராமனுக்கு வசப்படுத்த இவனுக்கு உரிமை ஏது? இதனாலும் இராவணனுடைய வாதம் நியாயப்படுத்தப்படுகிறது.

இராமனுடைய வாக்யம் எதிர்பாராதவாறு வருகிறது. சரணமடைந்த தண்டக முனிவருக்கு அன்று அபயம் அருளியதுபோல் அருளுவேன். இங்கு அரக்கருடைய வலிமையையும் மெலிவையும் உள்ளவாறு எனக்குச் சொல்வாயாக

(ஆக்யாஹி மம தத்த ரேந ராக்ஷஸா நாம் பலாபலம்-19.7)

அவனும் அவ்வாறே சொல்கிறான்.

அபயம் தந்து விபீஷணன் சரணாகதியை ஏற்றுக்கொண்டதைக் காணோம். ஆனால், போர்க்களத்தில் கும்பகரணன் விபீஷணனைக் கண்டபோது, குலம் அழியாமல் காக்க நீ ஒருவனே உளை ஆனாய். இராமனுடைய அநுக்ரஹத்தால் லங்கா இராஜ்யம் பெற்றாய். நீ இப் போரில் காப்பாற்றப்பட வேண்டியவன்; இது உண்மை என வாழ்த்துகிறான்.

ஸந்தா நார்தம் த்வம் ஏவ ஏக : குலஸ்ய அஸ்ய பவிஷ்யஸி
ராகவர்ய ப்ரஸாதாத் த்வம் ரக்ஷஸாம் ராஜ்யம் ஆப்ஸ்யஸி
ரக்ஷணீயோ அஸி, மேவத்ய ஸத்யம் ஏதத் ப்ரவிமதே || (67.142)

இந்த ச்லோகங்கள் இடைச் செருகல் எனச் சில உரை ஆசிரியர்கள் கருதுகின்றனர். அவற்றில் கம்பன் சாயலைக் காண்கிறோம். இராமன் இவற்றைக் கேட்டதும்

' அஹம் ஹத்வா தசக்ரீவம் ஸ ப்ரஹஸ்தம் ஸஹஆத்மஜம்
ராஜா நம் த்வம் கரிஷ்யாமி ஸத்யம் ஏதத் ச்ருணோதுமே ||' 1919.

(நான் இராவணனை ப்ரவபத்துடனும் அவன் மக்களுடனும் கொன்று, உன்னை அரசன் ஆக்குவேன் இது உண்மை கேள் நீ) என்று இராமன் கூற, விபீஷணன் தலையால் வணங்கி (22)

ராக்ஷஸாநாம் வதே ஸாஹ்யம் லங்காயா ச ப்ரதர்ஷணே |
கரிஷ்யாமி யதா ப்ராணம் ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம் || 23

அரக்கரைக் கொல்லவும் இலங்கையை ஆக்ரமிக்கவும் நான் உதவி புரிவேன்; உயிரைக் கொடுத்தும் சேனையுள் புகுந்து போர் புரிவேன் என்றவுடன் இராமன் அவனைத் தழுவி, லக்ஷ்மணனை அழைத்து 'விடணனுக்கு' அரக்கர் அரசனாக இப்போதே முடி சூட்டுவாய் என ஆணை இட்டார். அவ்வாறே கடற்கரையில் நடந்தது. இராவணவதத்துக்குப்பின் மற்றொரு முடிசூட்டு விழா இலங்கையில் நடைபெறும். (VI 112) வீடணன் இராவணன் அவையினின்று நீங்கிய நிகழ்ச்சி வால்மீகத்தினைத் தழுவியது.

' முன்புற அனையர் (இராமலக்குவர்) பால் அன்பு முற்றினை '
'நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை' ' அரசின் மேல் ஆசை ஊன்றினை '
'பழியினை உணர்ந்து யான் படுக்கிலேன் உனை' என்பன முதனூலின் சாயல்.

' ஒல்லை நீங்குதி விழி எதிர் நிற்றியேல் விளிதி ' என்பது கம்பனுடையது.

வீடணன் இராமனுடைய பாசறைக்கு வந்தது இரவில் 'இருளிடை எய்துவது (இராமன் பால் செல்வது) இயல்பு அன்றாம்' எனக் காலை வரை ' மறைந்து வைகிறார் ' என்ற பாட்டு வால்மீகத்துக்கு முரண் என்பது மட்டும் அல்ல; சரணாகதிக்கு தேச கால நியமம் இல்லை. விபீஷணன் ஜாம்பவான் இரவில் வந்தது ஐயுறத்தக்கது என்பது ஆக்ஷேபம். அனுமன் அவனை ஏற்பதற்கு இடத்தையும் காலத்தையும் பொருட்படுத்த லாகாது என்றான். கம்பன் செய்த மாறுதல் இந்த வாதத்தை நிலைநாட்ட இடம் தருவதில்லை. அனுமனுடைய வாதத்தை ஏற்றுக் கொண்டதே இக் கொள்கைக்கு ப்ரமாணம். '' உறுதி உணர்த்தினேன் உணரகிற்றிலை அத்த என் பிழை பொறுத் தருள்வாய் என உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான் ''

காலையில் வானரர் மருங்கு அடைந்த இவ் ஐவர் அரக்கரை மயிந்தன் துமிந்தன் என்ற இரு வானரர் வினவ, அவர் இலங்கையை துறந்த வரலாற்றினை உரைத்தனர். அனுமன் ஏவலால் மயிந்தன் இராமனிடம் கூற. இராமன் அருகில் உள்ள நண்பர்களைப் பார்த்து, ''இவன் கைப்புகற் பாலனோ ? கழியற் பாலனோ? இயம்புவீர்'' எனப் பல கருத்துக்கள் எழுந்தன. இறுதியில் மாருதி, இவன் வரவு நல்வரவே என்ற ' அமுத வார்த்தை செவிமடுத்து இனிது மாந்தி 'நன்று நன்று' என இராமன் இசைந்து

' வெற்றியே பெறுக, தோற்க வீர வியாது வாழ்க
பற்றுதல் அன்றி உண்டோ அடைக்கலம் பகர்கின்றானை '?

எனப் பல காரணங்களையும் முற்கோள்களையும் காட்டி ''இராமா அபயம் என்ற பொழுதத்தே அபயதானம் ஈதலே கடப்பாடு '' என, சுக்ரீவனை, 'கோது இலாதவனை நீயே என் வயின் கொணர்தி' என்றான்.

இங்கு இதுகாறும் வீடணனுக்கு அடைக்கலம் அளித்ததாகவோ 'அபயம்' என்றதோ இக் காவியத்தில் இல்லை. வீடணன் மயிந்தனிடத்தும் அவ்வாறு சொல்ல வில்லை. எனினும் 'என்னை உவந்து அருளி மீளா அடைக்கலம் உதவினானே' என்றதால் அவன் மனத்து ஏயது (6386)' அடைக்கலம் புகுவது என்பது தெளிகிறோம்.

சுக்ரீவன் வீடணனிடம் சென்று தாமரைக்கண்ணன் நின்பால் அபயம் வழங்கினன் என, வீடணனுடைய மெய்ப்பாடுகளையும் பேச்சுக்களையும் அழகாகக் கூறுகிறான் கவிச்சக்கரவர்த்தி.

வீடணன் சென்று வள்ளலை மண்ணில் மார்புற வணங்கினான். இராமன் புல்லினன் என்று தோன்ற இருக்கை ஈந்தான். வீடணன் கேளாமலே 'இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்றான். இலக்குவனைப் பார்த்து 'சூட்டுதி மகுடம்' என்றான். அப்போது இராமன் வாக்காக எழுந்தது 'எம்முழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய, நின்னொடும் எழுவர் ஆனோம்' என்ற வாசகம். வீடணன் 'நாயக நாயினேனை உடன் உதித்தவர்களோடும் ஒருவன் என்று உரையா நின்றாய், அடிமையில் சிறந்தேன் என்னா'. ஆனால் வீடணனோ, 'அடிசூடும் அரசை அல்லால் அரசாக எண்ணேன் மற்றரசு தானே' என்ற பரதக் கருத்தை பின்பற்றி 'இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' எனத் தொடுகழல் செம்பொன் மேனி சென்னியில் சூடிக் (9953). கொண்டான்.

வீடணன் இதை மறுக்கவில்லை. 'உய்ஞ்சனென் அடியேன்' என்று வணங்கினான், ஏற்றுக் கொண்டான், ஏன் எனில் நாயகன் மலர்க்கழல் நணுகி நம் மனத்து ஏயது முடித்தும் (6386). எனவே, இவன் மேயது, ஏயது என்ன என்று கூறவில்லை. எனினும், இராமன் குறிப்பால் உணர்ந்து கேளாமலே அரசை நல்கினான். 'அரசின்மேல் ஆசை ஊன்றினை' (6370) என்று இராவணன் சொன்னதும் சரியே. ஆனால் அரசை ஏற்றும் முடிசூடல் சடங்கை வீடணன் ஏற்கவில்லை. அது இராவண வதைக்குப் பிறகே நடைபெறும். ராமன் விபீஷணனைப் பற்றி எண்ணியது.

மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் இதஞ்சந ।
தோஷோ யதிஅபி தஸ்ய ஸ்யாத் ஸதாம் ஏதத் அகர்ஹிதம் ॥ (1.18,3)

நட்பு உணர்ச்சியோடு வந்து அடைந்தவனை எக்காரணத்தாலும் கைவிடேன். அவனிடம் குற்றம் இருந்தாலும், அவனை ஏற்பதை நல்லவர் இகழார். நண்பனுக்கு உரிய மனப்பான்மையை ராமன் கண்டான். அநுமன் அவனைப் புகழ்ந்ததாலும் ராவணனால் துரத்தப்பட்டதாலும். எனினும், 'தம்பி' எனச் சொல்லவில்லை. போர் தொடக்கத்தில் 'ஸகா மம விபீஷண' (37-35). என் தோழன் விபீஷணன் என்றே குறிப்பிடுகிறான்.

நாக பாசத்தால் ராம லக்ஷ்மணர் கட்டுண்டபோது விபீஷணன் இராமனை வந்து அடைந்த கருத்து வெளிப்படுகிறது.

யயோ: வீர்யம் உபாச்ரித்ய ப்ரதிஷ்டா காங்க்ஷிதா மயா
தௌ இராமா தேஹ நாசாய ப்ரஸுப்தௌ புருஷர்ஷபௌ
ஜீவந் அத்ய விபந்நோ அஸ்மி நஷ்டராஜ்ய மனோரத । VI 1.50, 18-19

யாருடைய வீரத்தை அண்டி என் ஆசை நிறைவேறுவதை நிலை பெறுத்தினேனோ அவர் இருவரும் உடல் வலிமை இழந்து உறங்குகின்றார்கள். என் உயிர் அழிந்தது. அரசு

பெறும் ஆசையும் அழிந்தது என்பன வான்மீகம். கம்பன் இவ்வளவு தெளிவாக வீடணனின் தன் இரக்கத்தைச் சொல்லவில்லை.

'தேசத்தால் என்னை' 'அறியத்தேன் நான்' என்னே சிந்திப்பார்

''அத்தலைக்கு அல்லேன் யான் ஈண்டு அபயம் என்று அடைந்து நின்ற இத்தலைக்கு அல்லேன்'' எனப் புலம்புகிறான், உடன் பிறப்பு என்பதைப் பாராட்டுபவன் இந்திரஜித். பிறப்பினும் ஒழுக்கத்தைப் பாராட்டுபவன் விபீஷணன். இந்திரஜித்தின் குற்றச்சாட்டு:

ந ஞாதித்வம் ந ஸௌஹார்தம் ந ஜாதி தவ துர்மதே ।
ப்ரமாணம் ந ச ஸொதர்யம் ந தர்மோ தாம் தூஷணெ ॥ VI 57-12

புத்நி கெட்டவனே, உனக்கு ஞாதி என்ற எணணம் இல்லை, நட்பு இல்லை, பிறப்பு பற்றிய எண்ணம், இல்லை, உடன் பிறப்பை முக்கியமாகக் கொள்வதில்லை, ராக்ஷஸ தர்மத்தை அழிக்கிறாய் என்றான் இந்திரஜித்,

ஸ்வஜநம் உத்ஸ்ருஜ்ய பர ப்ருத்யத்வம் ஆகத ॥

உற்றாரை விட்டுப் பிறனுக்குப் பணியாளன் ஆனாய். ''க்வச ஸ்வஜந ஸம்வாஸ க்வ ச நீச பராச்ரய : 14'' உற்றாரோடு வாழ்வதெங்கே? கயவர்க்கு ஆட் செய்வதெங்கே: குணவான் வா பரஜந ஸ்வஜநோ நீக்னோ அபிவா? நிர்குண : ஸ்வஜந ச்ரேயான் ய பர பர ஏவஸ : ॥ 15 மாற்றான் பண்பு நிறைந்தவனாகட்டும் : நம்மவன் பண்பற்றவனாக இருக்கட்டும். பண்பற்ற நம்மவனே சிறந்தவன்; மாற்றான் என்றும் மாற்றானே, இது ராக்ஷஸதர்மம்.

விபீஷணன்]தன் கொள்கையை அறிவிக்கிறான். ''குணோய; ப்ரதமோ ந்குணாம் தத்மே சிலம் அரோக்ஷஸம்? தர்மாத் ப்ரக்யுத சீலம் ஹி புருஷம் பாப நிச்சயம் । த்யக்தவா ஸிகும் அவாப்நோதி ஹஸ்தாத் ஆசீ விஷப் யதா ॥ 1921''. மக்களுக்குப் பண்பு முதன்மையானது. அநு என் கடைப்பிடிப்பு. ராக்ஷஸர்களுடையது அன்று. எவருடைய ஒழுக்கம் அறத்தினின்று வழுவியதோ எது பாவச்செயல் என்பது உறுதியோ அதைத் துறத்து சுகம் பெறுவர் கையிலிருந்து விஷப்பாம்பை உதறித் தள்ளுவதுபோல உதறுவதே என் கோட்பாடு. இறுதியிலும், இராவணன் இறந்த பின்பும் அவனுடைய தீச்செயல்கள் விடணன் மனத்தில் நிறைந்திருத்தமையால் 'தம்பி' என்ற முறைப்படி ,ஈமச் சடங்குகளைச் செய்ய அவன் ஒருப்படவில்லை.

''த்யக்த தர்மஸ்ரதம் க்ருரம் ந்ருசம்ஸம் அந்ருதம்ததா ந அஹம் அர்ஹாமி ஸம்ஸ்கர்தும் பரதார அபிமர்சநம் ॥'' அறத்தைக் கைவிட்டுக் கொடியனாய், கருணை அற்றவனாய், பொய்யனாய், பிறன் மனைவியை விழைபவனாய் உள்ளவனுக்கு நான் ஸ்மஸ்காரம் செய்யக் கடமைப்பட்டவன் என எண்ணுகின்றான். இதற்குச் சான்று ''ராவணோ ந அர்ஹதே பூஜாம் பூஜ்யோ அபி குரு கௌரவாத்'' 15. முத்தோன் கௌரவிக்கப்பட வேண்டியவன். எனினும், ராவணன் பூஜிக்க உரியவன் அன்று. இந்த வாதம் விபீஷணன் உடன் பிறப்புக்கு வைத்திருந்த மரியாதையைக் காட்டுகிறது.

மரணாந்தாதி வைராணி நிர்வ்ருத்தம் ந : ப்ரயோஜநம்
க்ரியதாம் அஸ்ய ஸம்ஸ்காரே மம அபி ஏஷ யதா தவ ॥

எந்தப் பகைமையும் மரணத்தோடு முடிந்தது. நம் குறிக்கோளும் அடைந்து விட்டோம். ஆதலால் அவன் எப்படி உனக்குத் தமையனோ அப்படியே எனக்கும் (நீ செய்யாவிட்டால் நான் செய்வேன்)ஸமஸ்காரம் செய்யக்கடவாய் என்று இராமன்தான் சொல்கின்றான்.

கம்பன் ராமன், ''வீடணா தக்கது அன்றால், என்னதோ இறந்துளான்மேல் வயிர்த்தல்? நீ இவனுக்கு கடன் செயத்துணிதி'' என்றான். தலைமகன் அருள வீடணன் இராவணன்மேல் விழ்ந்து அரற்றினான், தோழமையையும் ஸஹோதரத்வத்தையும் மூவர் வாயிலாக விளக்கியதோடு ஒப்பு நோக்கி நான்காவதானதை, கம்பன் சொல்லாததைச் சுட்டி முடிக்கலாம்.

வாலி இராவணனை வாலிடை தூங்கச் சுற்றிச் சிந்துரக்கிரிகள் தாவித்திரிந்தனன். இறக்கியபின் இராவணன் வாலியின் வீர்ய பலகாம்பீர்யங்களைப் புகழ்ந்து 'உன்னோடு நெடுங்காலம் நட்புப் பூண விரும்புகிறேன் என்றான். (இருவருக்கும் ஒரே சபலம் உண்டு: அது பெண்கள் பால் வைத்த நேயம். அவன் பகைமைகொண்ட காரணம் அனுமன் வாக்கில், ஸத்ர ஹேதோ (V 35.35) 'எவ்வளவு நாகரீகமாக சீதைக்குச் சொல்கிறான்'.) இராவணன் வாக்கில் ''ஒங்கு சுழல் சான்றும் உண்டால்! என தீ வளர்த்து நட்டனர்''. ராவணன் வாக்கில்

> தாரா புத்ரா! புரம் ராஷ்ட்ரம் போக ஆச்சாதன போஜ நம் ।
> ஸர்வம் ஏவ அபிபக்தம் நௌ பவிஷ்யதி ஹரீச்வர ॥ VI 34.41

குரங்குத் தலைவனே! மனைவியர், புத்ரர், நகரம், நாடு, இன்பம், ஆடை, உணவு, யாவும் நமக்குள் வேறுபாடு இன்றி இருக்கட்டும் என்கிறான். ஆண் மனைவி மக்களையும், அரசன் நாட்டையும் ஊரையும் தம் உடைமையாகக்கருதிய காலம் அது! அதனுடன் சகோதரத்வமும் தொடர்கிறது:

> தத ! ப்ரஜ் வாலயித்வா அந்நிம் தௌ உபௌ ஹரிராக்ஷஸௌ
> ப் ராத்ருத்வம் உபஸ ம் பந்நௌ பரிஷ்வஜ்ய பரஸ்பரம் ॥

பிறகு கொழுந்துவிட்டு எரியும் தீயின்முன் குரங்கும் ராக்ஷஸனும் ஒருவரைஒருவர் தழுவி உடன் பிறந்தமையைப் பெற்றனர்.

இராமனும் சுக்ரீவனும் கம்பனில் தீ எழுப்பி நட்புப் பூணவில்லை ''ஏகம் ஸுகம் துக்கம்'' இது வால்மீகி 5.17 ''நின்னைச் செய்தவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு உற்றவர் எனக்கும் உற்றார். உன்கிளை எனது என் காதல் சுற்றம் உன் சுற்றம் நீ என் இன் உயிர்த்துணைவன்'' என்று காணப்படுகிறது. பழைய சமூகத்துக்கும் புதுச் சமூகத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு.

கம்பனுடைய சமூகத்தில் 'தம்பி' என்ற உடல் உறவு 'ஸகா' என்ற மன உணர் விலும் சீரியதாகக் கருதப்பட்டது. அதனால், இம்மூவர் ஸகாக்களையும் தம்பி என்ற பெருமையைத் தந்தான். ●

'உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்'

'தசரதனுடைய அரசியலைக் கூறும் கவிச்சக்ரவர்த்தி கம்பனின் சொற்றொடர் இது'

''வயிர வான்பூண்அணி, மடங்கல் மொய்ம்பினான்,
உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்,
செயிர் இலா உலகினில், சென்று, நின்று, வாழ்
உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான். —177

என்பது முழுப்பாட்டு. 'தசரதன் பிற உயிர்களையெல்லாம் தன் உயிரைப் போலக் காப்பதால் அவ்வலியோன், இயங்குவன ஆகவும், இயங்காதன ஆகவும் வாழ்ந்திருக்கும் உயிர்களெல்லாம் குடிகொண்ட ஒரே உடல் ஆனான்' என்பது கருத்து 'மொய்ம்பினான்' எழுவாய்; ஆயினான் பயனிலை 'உயிரெலாம்' என்றதனால் ஓர் அறிவு உயிர் முதலாக ஆறறிவு உயிர் ஈறாகப்-புல்லும் மரமும் தொடங்கி, விலங்கு, பறவை, மக்கள் ஈறாக எல்லா உயிர்களையும் 'தன் உயிர் ஒப்ப ஓம்பினான்' என்பது தெரிகிறது. அவன் 'இரப்போர் கடலையும் பகை வேலை'யையும் கடந்தவன். அவன் முதாதையர், 'புலிப் போத்தும், புல் வாயும் ஒரு துறையில் நீர் உண்ண உலகாண்டவர்': முதாதையருள் ஒருவன் 'மென்புறவின் மன்னுயிர்க்கு தன்னுயிரை மாறாக வழங்கினவன். ஆதலால் அவனுடை நாடு 'செயிர் (பகைமை, சினம்) இலா உலகு' 'சென்று வாழ் உயிர்' தாமாக இயங்கவல்ல மக்கள், விலங்கு, பறவை, போல்வன; நின்று வாழ் உயிர்',-மரம், செடி, புல் போல ஒரிடத்திலேயே இருந்து வாழ்வன. இந்த இருவகை உயிர்களிலும் உறையும் ஒரே உடம்பு ஆயினன் தசரதன். அவன் உடம்பு ஆனது எவ்வாறு? உயிர்கள் யாவற்றையும் ஓம்பலால் அரசன் உடம்பு ஆயினான்,' அஃதாவது, உடம்பு உயிரை ஓம்புகிறது. இக்கருத்தை இனி ஆராய்வோம்.

முதலில் ''உயிர் என்ன? 'உடல் என்ன' அவற்றின் இணைப்பு என்ன?'' என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

உடல் பருப்பொருள்; அதை நாம் ஐம்புலன்களாலும் அறிகிறோம். உயிர் நுண் பொருள்; எப்புலனாலும் அதனை அறிவதில்லை; அதை இயக்கத்தால் அறிகிறோம், புலன்களால் அறிவதில்லை; நுண்பொருளை அறிய புலன் உணர்வுகள் பதிவும் 'மனம்' தேவைப்படுகிறது. அறிபவன், அறிவு, அறியப்படு பொருள் என்ற பாகுபாடு உண்டாகின்றன. 'அறிபவன் நான்' என்று (அஹங்காரம்) தன்மை உணர்ச்சியும், 'என் அறிவு இது' என்ற அறிபவனுக்கே உரிய தன்மை உணர்ச்சி தரும் [மமகாரம்] எண்ணமும், 'அறியப்படு பொருளின் இயல்பு இன்னது' என்ற காரணம் தோன்ற, மறைந்திருந்த நுண்பொருள் விளங்குகிறது.

மின்விசையை நாம் புலன்களால் காணவோ, கேட்கவோ, உறவோ, முகரவோ, சுவைக்கவோ முடியாது. அதனால் உண்டாகும் ஒளி, சுழற்சி போன்ற இயக்கத்தால் மின்விசையை மனதில் அறிகிறோம். ஆனால், மின்-உயிர் உள்ள பொருள் அன்று.

உயிரின் இயல்புகள் எவை? உயிர் என்கிற நுண் பொருள் எந்தப் பருப் பொருளைச் சார்ந்து உள்ளதோ, அந்தச் சார்பின், இணைப்பின், இயல்புகளைக் கொண்ட உயிர் இன்னது எனத் துணிய முடியும். 'ஊனைக் குறித்த உயிர்எல்லாம்' ''எல்லா உயிர்களும் உடம்பைத் தனக்கு நிலைக்களனாக் கொண்டு அதனை விடா'' (குறள் 1013) என்றவாறு, நிலைக்களனைக் கொண்டே உயிரை அறிய முடியும், நேரடியாகக் காண முடியாது. உடம்பிற்குள் உயிர் இருத்தலை அறிவது எப்படி? உயிர் உண்மையைக் காண்பதற்குச் சான்றுகள் பல உண்டு :

1. மாறுபாடு : உயிர் உள்ளனவற்றிற்கு வளர்ச்சியும் தேய்வும் அவற்றிலேயே அமைந்துள்ள சக்திகளால் நிகழக் கூடியன. உயிர் அற்றனவற்றின் இயக்கம் அவற்றில் இயற்கையாக இல்லாத புறச்சக்திகளால் நிகழ வேண்டியது.

2. புலன் உணர்வு : உயிர் உள்ளன தம் புலன்களில் ஒன்றாலோ, பலவற்றாலோ புற உலகை உணர்கின்றன. உயிர் அற்றனவோ இப்புறவுலகு உணர்ச்சி அற்றன. ஆதலால் உயிர் உள்ளவற்றிற்கே மனம், அறிவு இருக்கக்கூடும்.

3. இனப்பெருக்கம் : உயிர் உள்ளனவற்றிற்கு அமைந்த கண்ணறைகள் கூடுகின்றன, குறைகின்றன, வளர்கின்றன, மாறுகின்றன, உண்டாகின்றன. உயிரற்றன அணுத்திரள்களாக இருப்பினும் அவை தாமாகக் கூடுவதும் குறைவதும் இல்லை. உயிர் அற்றனவற்றிலிருந்து உயிருள்ளன தோன்றுவதில்லை.

உடலை உந்துவிக்க உயிர்தேவை; உடல்வளர உயிர் தேவை. உடல் உணர உயிர் தேவை. ஆனால் அவ்வுயிர் தனித்து இயங்கவல்லது அன்று உடல் மூலமாகவே இயங்கும்.

மேலும் உயிர் உடல் அழியாமல் காக்கிறது. எனினும், உயிர் உடலைக் காப்பதற்காக மட்டும் இருப்பது அன்று. மேற்கூறிய சான்று இன்றேல் உடல்காப்பு இலதாகும்.

உடல் உயிரைத் தாங்குகிறதா? உயிர் உடலைத் தாங்குகிறதா? என்ற ஐயம் எழுவது இயல்பு. உடல் உயிரின் நிலைக்களம். ஆதலால் உடல் உயிரைத் தாங்குகிறது. ஆனால், உயிராலே உடலின் இயக்கம், வளர்ச்சி, உணர்ச்சி, பெருக்கம் என்பவை நேரிடுகின்றன.

எண்ணவாதத்தினர் கூறுவது : உடலில் உயிர் இருப்பதால் எவ்வாறு உடல் நிலை பெறுகிறதோ, அவ்வாறு இறைவன் சராசரங்களை [சென்று, நின்று வாழ்வனவற்றையும், வாழாதவற்றையும்]த் தனக்கு உடலாகக் கொண்டிருப்பதால் அவை நிலைபெறுகின்றன. அவன் சராசரங்களைத் தன் இருப்பிடமாக உடையவன் அதனால், அவன் இல்லாத இடம் இல்லை. இறைவன் 'உடல்மிசை உயிரென பரந்து உளன்'-உடம்புக்கு உயிர், தாங்கிக் கொண்டு இருப்பதாய், ஏவுவதாய், காப்பதாய், யஜமானத்தன்மை உடையதாய் இருப்பது போல, இதை ஒப்புக் கொள்வதால் உடம்புக்குர், உயிருக்கும் வேறானது ஒன்றும் இருக்கிறது ; அஃது உள்ளும் புறமும் நிறைந்து இருக்கிறது. ஆதலால் சித், அசித், ஈசுவரன் என மூன்று உண்மைகள் உள, 'அவன் தொட்ட, தொட்ட இடந்தொறும் தோன்றுவான்; அவன் எங்கும் 'இருப்பதால்' உலகம் இருக்கிறது; உடல்-அஃதாவது உலகம் அழிந்தாலும் உயிர் அழியாது; உயிரும் இறைவனும் அழிவற்றன. நிற்பன. ['உலகு உடம்பாய்த் தாம் உயிராய் நின்றார்'] என்பன பெறப்படுகின்றன,

3 : இப்பாட்டு இராமன் பிறப்புக்கு முன் தசரதனுடைய கோலநாட்டு ஆட்சியில் மக்கள்-அரசன் தொடர்பைக் கூறுவது அம் மாக்களில் 'கொள்ளை' [பெரும்பான்மையோர்] 'தோன்றிகர் குடிகள்' ஒவ்வொரு குடிமகனிடமும் 'கோன் தன்மை'-அரசப் பகுதி இருந்தது. அக்கொள்கையே அந்நாட்டில் சிறந்தது. 'கோன் நிகர்குடிகள் தம் கொள்ளை சான்றது.' (சான்றது-சிறந்தது) உயிரின் நோக்கத்தை உடல் நிறைவேற்றுவது போல், குடிகளுடைய விருப்பத்தை அரசன் நிறைவேற்றினான்.

விசுவாமித்திரன் இராமனை அனுப்ப வேண்டுமெனச் சொன்னதனைக் கவிக் கூற்று 'உயிர் இரக்கும்' கொடுங் கூற்றின் உளையச் சொன்னான் என்பதாம். விசுவாமித்திரன் 'மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலென... இராமனைக் கொண்டு ஏகினான்.

இராமன் திரும்பியபோது, தசரதன் 'முன் பிரிந்ததோர் ஆவிவந்தென்ன வந்து அரசன் மாடு அணுகினான்'. இவ்விடங்களில் தசரதன் உடல்; இராமன் உயிர்.

அரசன் உடலாகவும், மக்களை உயிராகவும் கூறும் கருத்தை வதிட்டன் இராமனுக்குக் கூறும் உறுதி மொழியிலும் காண்கிறோம். 'வையம் மன்னுமிராக, அம் மன்னுயிர் உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னன்' என்பதாம். அதையே மாற்றி, 'அரசு இல் வையகம்... உள் உறை உயிர் இலா உடல்...ஒக்குமே', என அரசனை உயிராகவும், நாட்டை உடலாகவும் பரதனிடத்து வேறுவகையாக அதே வதிட்டன் கூறுவது வியப்பினைத் தருகிறது.

தசரதன் இறந்தபின் அவன் காட்டிய நெறி பிறழ்ந்ததோ? தசரதனே இராமனை 'என்மகன், என்கண், என்உயிர்' எனக் கைகேயியிடம் தன் உள்ளக் கிடக்கையைக் கூறுகிறான் தசரதன் உடல்; இராமன் உயிர்.

சடாயு, தசரதன் இறந்ததை எண்ணி அரற்றும்போது, தசரதன் சம்பரனைத் தடிந்த அந்நாள் சடாயுவிடம் 'நீ உடல்; நான் ஆவி' என்று சொன்னதாக நினைவு கூறுகிறான். இங்கும் தசரதன் உயிர்; சடாயு உடல்.

தசரதன் மந்திரத்தில் 'இராமனுக்கு அரசை நல்கி வனத்தை நண்ணுவேன்; யாது நும் கருத்து'' என உடல் உயிரைக் கேட்கிறது, இராமனின் சிறந்தவர் இல்லை; நிற்கு மாதவம் அல்லது ஒன்று இல்' என உயிர் உடலிடம் சொல்லுகிறது.

தசரதன் ஆவி போனபின்பு, பருப்பொருளாகிய உடல் அழிய, நுண்பொருளாகிய உயிர் எனும் குடி மக்களுடைய சொல்லையோ, செயலையோ காவியத்தில் நாம் காண்பதில்லை. கவிச்சக்கரவர்த்தி கூறுவது இதுவே. மக்கள், 'இன்னற் சிறையின் இடைப்பட்டார், இருந்தார், அவர்கள் அழியவில்லை'. மக்களை உடலாகக் கொண்டால், தசரதனாகிய உயிர்நீங்கியதும், அவர்கள் அழிந்திருப்பார்கள் அன்றோ?

சுக்கிரீவன் இராவணனுடைய மகுடமணிகளை வலியால் வாங்கி இராமன் திருவடிகளில் சூட்டி நின்றபோது 'எழுபது வெள்ளம் யாக்கைக்கு ஓர்உயிர் எய்திற்று அன்றே' என்கிறார் கவி. இங்கு, சுக்கிரீவன் உயிர்; வானரப்படை உடல். சுக்கிரீவ-னிடத்துத் தசரதநெறி பிறக்கிறது.

சீதையை உயிராகவும், இராமனை உடலாகவும் கொண்ட இடம் உண்டு, மாரீசனைக் கொன்ற பிறகு பர்ணசாலைக்குத் திரும்பும் இராமனைக் கவி : 'கூடு

தன்னுடையது பிரிந்து, ஆர்உயிர் குறியா, தேடி வந்து, அது [உயிரைக்] கண்டிலது ஆம் என நின்றான் என்பார்.]

4. இனி மற்ற கவிகள் எவ்வாறு இத்தொடர்பைக் கூறியுள்ளனர் என்று காண்போம்.

''நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம் 186)

இஃது அரசனுடைய கடமையைக்கூறும் மோசி கீரனார் கூறுவது. மக்களுக்கு நெல்லும் உயிர்அன்று. ஏனெனில், உயிரைத் தரும் நெல்லையும், நீரையும் ஆக்கும் முதற்காரணம் மன்னவனுடைய செங்கோல். ஆதலின் அரசன் குடிமக்களுக்கு உயிர் ஆவான். இதை அரசன் அறிய வேண்டும். புறநானூற்றை ஒட்டி, இக்கருத்தைச் சிந்தாமணியும், மணிமேகலையும், பெருங்கதையும் வலியுறுத்துகின்றன.

வால்மீகி, குடிமக்களுடைய உடலுக்கு வெளியில் உலாவும் உயிர் ('ப்ரஜாநாம் பஹிச்சர இவப்ராணே:' II 1.19) என இராமனைக் குறிப்பிடுகின்றார். இராம பட்டாபிஷேகத்துக்கு வந்து விடைபெற்றுச் சென்றவர் உயிர் உடலைநீங்குவது போல இராமனைப் பிரிந்தனர் (தேஹி தேஹம் இவத்யஜன் VI 40.19) இங்கு விடைபெறுவோர் உயிர்; தசரதனைப் போலவே இராமன் உடல்.

5. கம்பன் தன் இலட்சிய நாடாக வருணிக்கும் தசரதனுடைய கோசலத்தில் மக்கள் உயிர்; மன்னன் உடல். மக்கள் இருப்பதால் மன்னன் 'இருக்கிறான்'. மன்னனுடைய அறச்செயலுக்கும், ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் மக்களே காரணம் ஆயினர். மக்கள் ஒவ்வொருவருக்கும் மன்னன் உறைவிடம் ஆயினான். ஒவ்வொருவரிடமும் அரசுத் தன்மை குடிகொண்டு மன்னனாகிய உடல் அழிந்தாலும், குடிகளாகிய உயிர் நிலைத்திருக்கும்.

கம்பனுடைய கருத்து, எண்ண வாதத்திற்கு முரண் பட்டது.

''சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய் !
வெறியன எய்தி, நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்'' — 4126

''நாயகன் அல்லன்; நம்மை நனிபயந்து எடுத்து நல்கும்
தாய்'' என, இனிது பேணி, தாங்குதி தாங்குவாரை;
ஆயது தன்மையேனும், அறவரம்பு இகவா வண்ணம்,
தீயன வந்தபோது, சுடுதியால் தீமையோரை'' — 4128

பெண்ணை ஆக்கிரமித்தல்

சூர்ப்பணகை இராவணனுக்குக் கூறுவன :

1. அரக்கர் புகழ் மாசுண்டது : அம் மாசு நீக்குதல் உன் கடன்

2. சீதை அழகியவள் : உனக்கு ஏற்ற 'பார்யா'

3. 'யான் கொண்டு ஊடாடும் வண்ணம் இராமனைத் தருதி என் பால்'

முதல் இரண்டும் வால்மீகிக்கும் கம்பனுக்கும் பொது. மூன்றாவது கம்பனில் மட்டுமே உள்ளது: வால்மீகியில், நேர் மாறாக, கரனிடம் சென்று இராம லஷ்மணருடைய அழகை வருணிக்கிறாள். எனினும், அவர்களைக் கொல். அவர்களுடைய குருதியை நான் குடிப்பேன்; சீதையைக் கொல்லுவேன் என்கிறாள்.

அரக்கர் புகழ் மாசுண்டதற்கு இராவணன் சிற்றின்பத்தில் திளைத்து அரசாட்சியைப் புறக்கணித்தும், எல்லைப் புறத்தில் நடப்பனவற்றை அறியாததுமே காரணங்கள் எனக் கூறுகிறாள். அரசனுடைய நல்ல பண்புகளைக் கூறி அவற்றை இராவணன் கடைப்பிடியாமையை எடுத்துக் காட்டுகிறாள்.

நாட்டின் சிறந்த பொருள்களை அரசன் தன் உடைமை ஆக்கலாம் என்ற கருத்தை விசுவாமித்ரன் வதிட்டனிடம் இருந்த பசுவைத் தன் வயம் ஆக்க முனையும்போது சொல்லுகிறான். வதிட்டன் அவ்வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. விசுவாமித்திரனுடைய முயற்சி தோல்வி உறுகிறது.

அவ்வாதம் உண்மை எனினும், சீதையையும் சிறந்த பொருள்களில் ஒன்றாக சூர்ப்பணகை கருதுவது ஏற்றுக் கொள்ள இயலாதது. பெண்ணுக்கு உணர்ச்சிகள் உண்டு, விருப்பங்கள் உண்டு, ஆணைப் போலவே செயலாற்றும் உரிமை உண்டு என்பனவற்றைச் சூர்ப்பணகை சிந்திக்கவில்லை. ஆனால், இராவணன் சிந்திக்கிறான், காம உணர்ச்சி உடையவன் ஆயினும் அவளைப் பலாத்காரமாகக் கொள்ள முயலவில்லை; காரணம் புஞ்ஜிகஸ்தலா சாபம்.

அவனுடைய வாதங்கள் :

1. எனக்கு இணங்கினால், நீ செல்வம் பெறுவாய், உலகின் ஆட்சி பெறுவாய், பிற சிறந்த பெண்களின் ஏவல் பெறுவாய், என் பணியும் பெறுவாய்.

2. இராமன் வலிமையில் தாழ்ந்தவன், சுகங்கள் அற்றவன் தோல்வி உறுவான்

அதனால் ஒவ்வொரு முறை அவளை இரக்கும்போதும் தன் பெருமையைக் கூறுவதோடு அவளுக்குத் தான் பணி செய்வதன் குறிப்பாக அவள் அடியில் வீழ்கிறான். தன்னுடைய பிற மனைவியருடன் துய்க்கும் இன்பத்தையும் துறக்கிறான். ஒருவன் மனை உற்றாள் பொன் அடி தொடித்தொழ மறுத்தல் புகழ் போலாம் சரம் வீரம், வாரம் ஆவது மற்றொருவன் புணர்தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கும் அதே போலத்தான்.

தனக்கு இணங்காத ரம்பா (புஞ்ஜிகஸ்தலா) வைப் பலாத்காரமாக அனுபவித்துப் பெற்ற சாபம் அவனுடைய நினைவில் நிற்கிறது.

இவை பண்பாடு அற்ற சமூக நிகழ்ச்சிகள். இராவணன் பண்பாடு உடையவன் என்பதை அவன் மும்முறை இரப்பும் காட்டுகிறது. அவளைக் கொல்லுவேன், உண்பேன் என மிரட்டியது அவன் உண்மையாகச் செய்ய நினைத்தன அல்ல [இந்திரன் - அகலிகை வேறு கதை: அவளிடம் தான் யார் என்று சொன்னான். அவளோ இந்திரனுடன் கலவி பற்றி ஆசை கொண்டாள். வால்மீகி (48.19) ''புக்கு அவளோடும் காமப்புது மணவின் தேறல் ஒக்க உண்டு இருத்தலோடும் உணர்ந்தனள் தக்கது அன்று என ஓரான்''. [கம்பன்]

பெண் ஒரு போகப் பொருள் 'என்பதால், அவளை உடல், பணம், புகழ் வலிமை உடையவன் அடைய உரியவள் என்பது தெளிவு. ஆதலின். பெண்ணுக்காக தம் வலிமையை உணர்த்த ஆண் முற்பட்டான். வாலியும் மாயாவியும் பெண் காரணமாகப் போர் புரிந்தனர்: வாலி வென்றான் - எந்தப் பெண் என்பது குறிப்பிடப்படவில்லை.

வலிமை பொருந்திய, பொருந்தியவனாகக் கருதும், ஆண் பெண்ணைத் தன் 'போகப் பொருள்' எனக் கருதினால் அவ்வாறே வலிமை பொருந்தியவளாகக் கருதும் பெண்ணும் ஆணைத் தன் போகப் பொருளாகக் கருதியதற்கும் சான்று உள்ளது.

(சூர்ப்பணகை வால்மீகத்தில் தன் மோகவிடாய் தீர்த்துக் கொள்ள ராமனையும் லக்ஷ்மணனையும் அணுகினாள் என்பது வால்மீகி. ராமனைக் காமுற்றாள் என்கிறான் கம்பன்.

இரண்டிலுமே, அவள் கொண்ட விடாய்க்காகவோ, காமுற்றதற்காகவோ அவள் ஒறுக்கப்படவில்லை. சீதையைக் கவர முயற்சித்ததற்காகவே ஒறுக்கப்படுகிறாள்)

அயோமுகி:

''உன் மணித்தட மார்பு புணர்ந்து என் இன் உயிரைக் கடிது ஈகுதி இவ் உரை கூறிடின் நின் உடல் கூறிடும்''

''கொற்றவ! நீ எனை வந்து உயிர் கொளப் பெற்றிடின் இன்று பிறந்தனென் வவ்வா ஏகினள்-அவள் நாசி பிடித்து ஈர்த்தான்''

சூர்ப்பணகை:

''யான் கொண்டோடும் வண்ணம் இராமனைத் தருதி என்பால்''.

''மனையின் மாட்சியை அழித்து இழி மாதவப் பன்னி, அகலிகை'' அவள் உடன்பட்டு அழித்தாள், ஆசையால் அழிந்தாள், தன் மனையின் மாட்சியை அழித்துக் கொண்டாள்.

மனையின் மாட்சி ஒரு ஆணுக்கு ஒரு பெண். ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்; என்ற அடிப்படையில் அமைந்தது. தசரதன், வாலி ராவணன் மனையின் மாட்சியைப் பேண வில்லை. வால்மீகத்தில் உருமையையும் தாரையையும் கொண்ட சுக்கிரீவனும், அனுமனுக்கு 16 பெண்களை மனைவியாக அளிக்க முன்வந்த பரதனும்கூட மாட்சியைப் பேணவில்லை.

வால்மீகத்திற்குப்பின் வந்த பல ஸம்ஸ்க்ருத நூல்களில் நாம் காணும் பெண்கள் கணவனுடைய இன்பத்திற்காகத் தம் உணர்ச்சிகளைத் துறந்தவர் அன்றிக் கட்டுப் படுத்தியவர்,

பாஸனின் ஸ்வப்ந வாஸவதத்தம், காளிதாசனின் மாளவிகா அக்நிமித்ரம், ஹர்ஷனின் ரத்நாவளி போன்ற நாடகங்களின் காவிய நாயகிகள் தம் நாயகருடைய மகிழ்வுக்காக அவருக்குப் பிற பெண்களை மணம் செய்விக்கின்றனர். சாகுந்தலத்தில், சகுந்தலை தன் கணவர் விரும்பிய பிற பெண்களுடன் எவ்வாறு பயிலவேண்டும் என அறிவுரை கூறுகிறாள்.

நம்மாழ்வார் ஓர் நாயகி கூற்றாக உகக்கும் அந்த ஆய்ச்சியையும் மனையின் மாட்சியை அழித்து இழி பன்னியாகக் கருத இடம் உண்டு. ஆனால், ஆண் உயர்வு பேணும் சமூகம் அவளை இகழ்கிறது.

அப்பாட்டிற்கு உரை காணும் ஈடு, முக்கறைச்சி என்று சூர்ப்பணகையை இகழ்கிறது. பல பெண்டிர் தன் கணவனை விரும்பிக் கலப்பது பெருமைக்கு உரியது எனத் தலைவி எண்ண வேண்டும் போலும்!

கம்பனுடைய சூர்ப்பணகையும் தான் இராமனை அடைந்த பின் சீதையும் அவனோடு இருப்பதைத் தவறாகக் கருதவில்லை. ''கார்பறியும் தோளானைக் கைவிடீர் எனினும் யான் மிகையோ!'' என்கிறாள். மாற்றாள் இருப்பதிலும் அவளுக்கு ஆஷேபம் இல்லை இலக்குவன், இராமனுடைய ஆணையால், தன்னை அங்க ஹீநம் செய்ததையும் அவள் பொருட்படுத்தவில்லை, தலைவன் திரு உள்ளக் கருத்து அதுவாயின் அவ் அங்கம் அவளுக்கும் தேவை அற்றது.

''மீக்குயரும் நெடுமுக்கு மடந்தையர்க்கு மிகை அன்றோ?''
''கொண்டாரே கொண்டாடும் உருப் பெற்றால் கொள்ளீரோ?
கண்டாரோ காதலிக்கும் கட்டழகும் விடம் அன்றோ?''

காளிதாஸனில் ஒரு தலைவி 'பெண்ணின் இயற்கை அழகும் ஆடை அணிகளனாலான எழுச்சியும் காதலனைக் கவர்வதற்காகவே அன்றோ?' என்கிறாள். இந்தக்கருத்துக்களை வால்மீகத்தில் காண்பதில்லை. 'மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்' என்ற சூர்ப்பணகையின் இயற்கை உணர்ச்சி இந்நோக்கில் பண்பற்றது.

கம்பன் காவியம் ஒருவனுக்கு உரிய ஒருத்தி என்ற நிலைமையை வலியுறுத்துவது. ஆண்-உயர்வு கொள்கை பரவிய சமூகத்தில், உடைமை ஆண்வழி இறங்கும்போது, குழந்தை எந்த ஆணுக்குப் பிறந்தது என்ற வினா எழுவதும் அதற்கு விடை காண்பதும் அவசியமாகின்றன. அவ்வழியைக் காக்க அவ் ஒருத்தியைப் பிறர் துய்க்காமல் காக்க வேண்டி உள்ளது. (ஒருவனே பலரோடு தொடர்பு பூண்வதால், ஆண் உயர்வு வலு உடையது ஆவது அன்றி, அவனுடைய உடைமையைப் பெறுவதில், அன்றிப் பகிர்வதில், தடை இராது: பெண்ணுக்கு உடைமை இருந்தால் மட்டுமே அத் தடை இருக்கக்கூடும்!)

சிறிதுகாலம் இராவணன் சீதையை இராமனிடமிருந்து பிரித்தாலும் 'அவளுக்கு உற்றபழியும், அது துடைக்க அவள் தீக்குளிப்பதும் மட்டும் அன்றி' பின்பு நிறைந்த கருஉற்ற காலத்தும் இராமனால் முற்றிலும் துறக்கப்பட்டதும் இக் கருத்தின் விளைவுகள். போரில் வென்றும் அவள் பிறன் கைப்பட்டதால் இராமன் - சீதை இருவருடைய இல்வாழ்க்கையும் அழிந்தது.

பால் இன்பம், ஒத்த காமம் உடைய ஆணும் பெண்ணும் ஒருங்த நுகர்வது. அந் நுகர்வு இன்பம் தரும். விருப்பம் இல்லாத பெண்ணைக்கூடுவது துன்பம், வெப்பம் தரும்.

'நாலாயிர வ்யாக்யானங்களில் கம்பன்'

நாலாயிர திவ்ய ப்ரபந்தம் என வழங்கும் இருபத்தி நான்கு நூல்கள் பன்னிரு புலவர்களால் இயற்றப்பட்டவை, அவர்களுள் பதின்மர் ஆழ்வார்கள். ஒருத்தி அவ் ஆழ்வார்களுள் ஒருவருடைய வளர்ப்புப் பெண் ஆண்டாள், மற்றொருவர் 'தேவு மற்றறியேன்' எனக் குருகூர் நம்பியின் பாவின் இன்னிசை பாடித் திரிந்த மதுரகவி, இவ் இருபத்தி நான்கு நூல்களுக்கும் உரை இட்டருளியவர் பெரியவாச்சான் பிள்ளை. சில நூல்களுக்கு மட்டுமே வேறு சிலர் உரை செய்துள்ளனர். அவ் உரைகளுள் சிறப்பாகப் போற்றப்படுவது திருவாய்மொழிக்கு 'தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறி தன்னை வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை எழுதிவைத்த ஈடு'

உரைகள் அனைத்தும் ஸம்ஸ்க்ருதமும் தமிழும் கலந்த மணிப்ரவாள நடையில் அமைந்தவை. பாட்டின் பொருளை விளக்கவும், தன் கொள்கையை நிலை நிறுத்தவும் உரையாசிரியர் ஆயிரக்கணக்கான மேற் கோள்களை அங்கங்கு எடுத்துக் காட்டியுள்ளனர். பெரும்பாலும் அம் மேற்கோள்கள் வேதங்கள், உபநிஷதங்கள், வால்மீகி இராமாயணம், மஹாபாரதம், புராணங்களினின்று எடுக்கப்பட்டவை, எனினும், சில இடங்களில் பரிபாடல் குறுந்தொகை, கலித்தொகை, திருக்குறள், கம்பராமாயணம் போன்ற நூல்களைக் கையாண்டுள்ளனர். உரையாசிரியர் அனைவரும் இருமொழிப் பயிற்சியுடன், இருமொழிப் பற்றும் உடையவர் என்பதில் ஐயம் இல்லை.

கம்பராமாயணப் பாடல்கள் இவ் உரைகளில் பயின்றுள்ளதைப் பார்ப்போம்.

1, ஈக்கள் வண்டொடு மொய்ப்ப, வரம்பு இகந்து உள் தெளிவின்றி தேக்கு எறிந்து, தப்புனல் வருகிறது சரயு ஆற்றில் (ஆற்றுப்படலம் 10) வண்டு ஆற்று நீரில் மொய்க்குமா என்ற ஐயம் எழுந்தது போலும்! பெரிய வாச்சான் பிள்ளை 'வண்டு அறை மாநீர்' என்ற பெரிய திருமொழி (1.1.10) உரையில் இவ் ஐயத்தைப் போக்க மேற்கோள் காட்டியுள்ளார்.

2. 'வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இனிது அரசு செய்கிறான் தசரதன். (அரசியல் படலம் 12) 'ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்' (திருவாய்மொழி 4.1.1) ஈடு உரையில் மேற்கோள் கம்பன் பாட்டு.

3. 'தோள் கண்டார் தோளே கண்டார்; தாள் கண்டார் தாளே கண்டார்; தடக்கை கண்டாரும் அஃதே (உலாவியல் படலம் 19) இக்கருத்து 'எங்கும் அழகு அமரும் ஒளியன் என்ற திருவாய்மொழி (3.10.8) ஈடு வ்யாக்யானத்தில் பயின்றுளது. பாதாதி கேசம் அவயங்களைத் தனித்துப் பார்த்தால் இங்கே அழகு குடி கொண்டது. இங்கே அழகு குடிகொண்டது என்னும்படி இருத்தல்.

4. சீதை அசோக வனத்தில் அனுமனிடம் கூறுவது 'தீவினை தீர் வரம் வேண்டினாள் தொழுது' என்று விளம்புவாய் (சூடாமணிப்படலம் 35) தலைமகளைப் பிரிந்த தலைவி தோழியிடம் 'நம் கண்களால் கண்டு தலையில் வணங்கவும் ஆம் கொலோ'

என்ற (திருவாய்மொழி 5.3.1)க்கு அரும்பதம் அருளிய ஜீயர் கம்பன் பாடலை மேற்கோள் காட்டியுள்ளார்.

5. 'இலங்கை ஒள் எரி மண்டி உண்ண செந்தீ உண்டு தேக்கிட்டதே' என்ற திருவாய்மொழிக்கு (2.1.3) ஈடு வியாக்யானம் அரும்பதம் எழுதிய ஜீயர் 'செந்தீ இத்யாதி கம்ப நாடகத்திலே' என இடம் குறிப்பிட்டுள்ளார். கம்பன் பாட்டு இப்போதுள்ள பதிப்புகளில் 'நெருப்புத்தின்று தேக்கிடுகின்றது' எனக் (இலங்கை எரியூட்டு படலம் 40) காணப்படுகிறது. 'செந்தீ என நம்பிள்ளை காலத்திருந்த பாடலில் இருந்திருக்கலாம்- அன்றி, அவர் நினைவிலிருந்து எழுதி இருக்கலாம்.

வருணனை வழி வேண்டி, புல்லில் கருங்கடல் நோக்கி கருணை அங்கடல் கிடந்தனன்' (கடல் சீறிய படலம் 2). ஒரு கடலை நோக்கி மற்றொரு கடல் கிடந்தது. இக்கருத்தில் யாப்புண்டு திருவாய்மொழி வியாக்யானத்தில் 'நின்ற ஆறும், இருந்த ஆறும், கிடந்த ஆறும் நினைப்பு அரியன்' (5.10.6) என்ற இடத்தும், ஞாலத்தூடே நடந்தும், நின்றும், கடந்தும் இருந்தும்' (6.9.3) என்ற இடத்தும் நம்பிள்ளை நினைவு கூர்வார்.

வ்வாக்யானத்தில் உள்ள கம்பன் மேற்கோள் 'கருணை அம் கடல் துயின்றனள்' என்பது இப்போதுள்ள கருணை அம் கடல் கிடந்தனன் என்ற பாடம் அன்று.

இவை அன்றிக் கருத்தொற்றுமை பல இடங்களில் காணக் கிடக்கிறது. அவற்றுள் ஒன்றுமட்டும் காண்போம்.

'மைய கண்ணுள் மலர்மேல் உறைவாள் உறை மார்பினன்
செய்யகோலத் தடங் கண்ணன் விண்ணோர் பெருமான்'

என்பது திருவாய்மொழி (4.5.2) வ்யாக்யானம், 'செங்கண்மால் தம் திருக்கண்களால் எப்போதும் பிராட்டியை நோக்கி இருந்ததால், பிராட்டியின் திருமேனி செந்நிறம் பூண்டது. மையுண்ட கண்ணாள் எப்போதும் பெருமாளைப் பார்த்தலால் அவர் திருமேனி கருமை ஒளி பெற்றது; இக்கருத்து.

பஞ்சு அணி விரலினார் தம் படைநெடும் கண்கள் எல்லாம்
செஞ்செவே ஐயன் மெய்யில் கருமையைச் சேர்ந்தவோ தாம்
மஞ்சன மேனி யான்தன் மணிநிறம் மாதரார்தாம்
அஞ்சன நோக்கம் பார்க்க இருண்டதோ அறிகிலே மால் - உலாவியல் படலம் 10

என்ற கம்பன் பாட்டை அடி ஒற்றி உள்ளது.

★

மூவகை உலகும் ஆய், குணங்கள் மூன்றும் ஆய்
யாவையும் எவரும் ஆய், எண் இல் வேறுபட்டு
ஒவல் இல் ஒரு நிலை ஒருவன் செய்வினை
தேவரும் முனிவரும் உணரத் தேயு மோ? — 6251

கருமமும், கருமத்தின் பயனும், கண்ணிய
தருமுதல் தலைவனும் தானும் தான்; அவன்
அருமையும் பெருமையும் அறிவரேல் அவர்
இருமை என்று உரைசெயும் கடல் நின்று ஏறுவார் — 6252

‘மேவும் மெய்’

தசரதன் சொன்னதாகக் கைகேயி இராமனிடம் கூறியது ‘நீ போய் தாழ் இரும் சடைகள் தாங்கி, நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி, ஏழ் இரண்டு ஆண்டில் வா’ என்பது. இராமன் இப்பணி தலைமேல் கொண்டு, அவள் அடியினை இறைஞ்சி, தாதை பாதம் திசைநோக்கித் தாழ்ந்து, அங்கிருந்து சென்றான்.

சடை புறக்கோலம், தவம் அகக்கோலம். கானம் நண்ணுவதும் துறைகள் ஆடுவதும் இப்பதினான்கு ஆண்டுகளிலும் செய்ய வேண்டுவன.

முதனூலில் ‘பதினான்கு ஆண்டுகள் வனத்துக்குப் போ’ சடையும் மரவுரியும் தரி’ என்றே உளது [II.18-357] சீதையின் வாக்காக வீர, உனக்கு நாள்தோறும் பணி செய்து, புலன்களை அடக்கி, பிரமசரியம் பூண்டு உன்னோடு வனத்தில் இன்புறுவேன்.’ ஸிஷ்ருடி !மாணா தே நித்யம் நியதா ப்ரஹ்ம சாரிணீ ஸஹ ரம்ஸ்யே த்வயா வீர வனேஷீ மதுகந்திஷீ II, 23-17) என்று காணப்படுகிறது ‘தவம்’ வருகிறது. தவம் இன்பமன்றோ?

கம்பர் அவர்கள் வனம் புகும்போது ’விளையாடினள் போனாள்’ [கங்கைப் படலம் 6] என்பார். இயற்கை வளங்கள் பல காண்பார், ‘மெய் உறல் காணும் ஆசையால் ஒழுங்குறத் தழுவுவென், ஒன்றும் காண்கிலென்’ ‘தேன்பொதி தொண்டை அம் சேயொளித் துவர்த்த வாயமுது உண்டனெ’ [அயோமுகிப் படலம் 96, 97] போன்ற பகுதிகள் உருவெளியில் நிகழ்வன, பண்டை நினைவுகள் ஆகலாம்.

வனவாசத்தின் பதினான்காம் ஆண்டு இன்பம் முதிர்ந்த தருணம் இராமனும் சீதையும் நகர மாந்தர் போற்ற அயோத்தியில் பஞ்சவடி எனும் பருவச் சோலையில் வாழ்கின்றனர். வட இந்தியாவில் மழைக்காலத்துக்குப் பிறகு மாசற்ற ஆகாயத்தில் சரத்கால சந்திரன் தோன்றுவது அழகிய காட்சி. அச்சந்திரன் கணந்தோறும் வளர்ந்து ஒளிமிகுந்து நள் ஆகாயத்தில் முழு அழகுடன் விளங்கும் தறுவாயில் பூமியின் நிழல் அதன்மேல் பட்டு ஒளி குன்றத் தொடங்கினால் மக்கள் மனம் எப்படிப் பதறும் அவ்வாறு இராமனும் சீதையும் முதிர்ந்த இன்பம் துய்க்கும் போது சூர்ப்பணகை நிழல் அவர்களுடைய இன்பத்தின்மேல் படுகிறது.

சூர்ப்பணகை முதலில் இராமனை மட்டும் கண்டதாகக் கம்பன் கதையைக் கொண்டு செல்கிறாள். [முதனூலில் இருவரையும் ஒருங்கே கண்டதாக உள்ளது] காதல் கொள்கிறாள். காதல் சக்தி வாய்ந்தது. அச்சக்தியை எவ்வாறு உபயோகிக்கிறோமோ அதை ஒட்டி வாழ்க்கை அமைகிறது. நல்ல வழியில் உபயோகித்தால் உயர்வு பெறுவோம் கெட்ட வழியில் உபயோகித்தால் தமக்கே அன்றிப் பிறருக்குக் கேடு தரும். இரண்டாம் முறை சூர்ப்பணகை காமமுதிர்ச்சியில் உள்ளபோது சீதை இராமன் இருக்கும் இடத்துக்கு வருகிறாள். இருவரையும் ‘நெடிது’ நோக்குகிறாள். அவளுடைய ’கண் பிற பொருளில் செல்லா; கருத்து எனில் அஃதே இங்கு அவள் கண்டது இராமனும் சீதையும் ஒன்று கூடி இருக்கும் சேர்த்தி அழகு. அச்சேர்த்தியைக் காணும் கண் பிறபொருளில் செல்லா

கருத்தும் அவ்வாறே, 'கமலத்துக் கடவுள் தானே, ஒரு திறத்து உணர நோக்கி, உருவினுக்கு, உலகம் மூன்றின். இரு திறத்தார்க்கும் செய்த வரம்பு இவர் இருவர்' என்றாள்.

அழகு சேர்த்தியில் ஒளிரும் ஆணும் பெண்ணும் ஒருவர் பால் ஒருவர் கொண்ட காதல் நிறைந்து வழியக் காண்பதைக் காண்போர் பாக்கியம் செய்தவாரவர். இதத்குப் பொருள் கூறும் வகையில் காளிதாசன் ரகுவம்சத்தில் கூறுவது ஆராய உரியது.

'பரஸ்பரேண ஸ்ப்ருஹணீய சோபாம்
ந சேத் த்வயே ரூப விதான யத்ந:
பத்யு: ப்ரஜாநாம் விபலோ S பவிஷ்யத்'

(ஒருவரை ஒருவர் விரும்புகின்ற இச்சேர்த்தி அழகு பிரமன் எடுத்த முயற்சிக்குப் பலன் அளித்தது. வெறும் உடல் அழகை மட்டும் இவ் இருவருக்கும் தந்து, இவ் அன்போடு கூடிய சேர்ந்தியையும் அளித்திராவிடின் அவர்களுக்கு அழகை அளித்த முயற்சி வீணாகி இருக்கும்)

பவபூதி சேர்த்தியில் ஒருவருடைய பண்புகள் மற்றொருவர் உடன் இருப்பதால் உயர்ந்து பொலிகின்றன. அப்பொழிவு பிரமனுடைய கைவன்மைக்குப் பலன் அளித்த துடன் மக்களை மகிழ்விப்பதும் ஆயிற்று' என்பார் மலதீ மாதவர்களை நோக்கி, [வரீயான் அந்யோந்ய ப்ரகுண குண நிர்மாண நிபுணோ விதாது வ்யாபார: பலது ச மனோஜு : ச பவது]

இச்சேர்த்தி அழகை அனுபவித்த சூர்ப்பணகை அவ் இருவர் திருமேனியையும் பார்த்தால், அவர்கள் 'மேவும் மெய்' உடலுறு புணர்ச்சி, உள்ளவராகத் தோன்றவில்லை. 'பூவைப்பூ வண்ணத்தான் : மின்னைப் போல் இடையாள்' இருவரும் ஒன்றாக வாழ்ந்த வராயின் எவ்வாறு மெய் மேவாது இருத்தல் இயலும்? ஆதலால் அவள் 'என்னைப் போல் இடையே வந்தாள்' என்ற முடிவுக்கு வருகிறாள். இது அரக்கர் குலத்துக்கு ஏற்ற முடிவு. தாங்க அரும் தவம் மேற்கொண்டு 'இவர்கள் நின்றதை அவள் அறிந்துகொள்ள வில்லை. சீதையே சொன்ன நியதா ப்ரஹ்மசாரிணீ' சூர்ப்பணகை அறியாள்.

இத்தவறான முடிவுக்கு வந்தபின் 'இகழ்விப்பேன்' இவளை என்னா, (என) இராமனை விளித்து, ''வரும் இவள் மாயம் வல்லள்''; ''வஞ்சனை அரக்கி; ''அவளை விலக்குதி' என்பாள். 'மேவும் மெய் உடையன் அல்லன்' என்ற உடன்பாட்டு எதிர் மறைக்கும் ஒருபொருள் உண்டு. ஒரு காலத்தில் 'மேவும் மெய் உடையன்'; இப்போது 'அல்லன்' என்பது உடையனோ, அல்லனோ என்ற ஐயக் குறிப்பும் தொக்கு நிற்கும். இப்பொருள் தரும் உடன்பாட்டு எதிர்மறை வினைகள் பலவற்றைக் கம்பனில் காணலாம்; 'கண்ணிற்பல கண்டேன் அல்லேன்' 'எனக் காணாது முனிவன் மகன்மேல் அம்பெய்த தசரதன் கூற்று [நகர் நீங்கு படலம் 82]. 'இந்நிலையான் உடன் துயில்வார் உளர் அல்லர்' என இராவணன் மாளிகையில் மகளிரைக் கண்ட அனுமன் கூற்று. [ஊர்தேடு படலம்].

"இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்"

திரிஜடைக்கும் சீதைக்கும் நிகழ்ந்த உரையாடலை ஸம்ஸ்கிருத கவி ஹநும நாடகம் என்ற நூலில் அமைத்துள்ளார்.

சீதை : 'குளவி வேறு இனப் பூச்சியைக் கொட்டிக் கொண்டே இருந்தால் அப் பூச்சி குளவி ஆகிவிடும் என்ற நியாயம் உண்டே; அதை எண்ணி அஞ்சுகிறேன்.

த்ரிஜடை : 'அதனால் என்ன? நீ ஏன் அஞ்சவேண்டும்'

சீதை : 'நான் எப்பொழுதும் இராமன் நினைவாகவே இருக்கிறேனே ஒருக்கால், நான் இராமனாகி விடுவேனோ என்பதே என் அச்சம்'

த்ரிஜடை : 'இராமன் ஆனால் நல்லது தானே. எல்லோரும் இராமனாக ஆசைப் படுகிறார்கள்'

சீதை : 'நான் ஆண் ஆகிவிட்டால் அவரோடு இன்பம் துய்ப்பது எப்படி?

த்ரிஜடை : இராமனும் உன்னையே நினைத்திருக்கிறான். அவன் சீதையாகி விடுவான் நீ ஆணாகவும் அவன் பெண்ணாகவும் மாறி இன்பம் துய்க்கலாமே!

கம்பன் மிதிலையில் அவர்கள் இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினசர்' என்றான். அனுமன் வாக்காக, சீதையிடம் 'ஆண்தகை நெஞ்சில் நின்றும் அகன்றிலை; ஈண்டு நீ இருந்தாய்: ஆண்டு அங்கு எவ் உயிர்விடும் இராமன். எனவும் இராமனிடம், 'கண்ணினும் உளை நீ; தையல் கருத்தினும் உளை நீ; நின்னைப் பிரிந்தமை பொருந் திற்று ஆமோ! ' என்றான்.

இராமன் சீதையும் மாறிப் புக்கனர்.

நன்று ஆருக உலகுக்கு! என முதலோன் மொழி நவின்றான்;
'பின்றாதவன் உயிர்மேல் செலவு ஒழிக' என்பது பிடித்தான்;
'ஒன்றாக இம் முதலோன் படைதனை மாய்க்க' என்று உரைத்தான்
நின்றான், அது துரந்தான்; அவன் நலம் வானவர் நினைந்தார், 9068

நாராயண நரர் என்று இவர் உளராய், நமக்கு எல்லாம்
வேராய், முழுமுதல் காரணப் பொருளாய், வினை கடந்தோர்
ஆராயினும் தெரியாதது ஓர் நெடு மாலையின் அகந்தார்
பாராயண மறை நான்கையும் கடந்தார்; இவர் பழையோர். 9073

''உயிர்தோறும் உற்றுளன், தோத்திரத்து ஒருவன்'' என உரைக்கும்
அயிரா நிலை உடையான் இவன்; அவன், இவ் உலகு அனைத்தும்
தயிர் தோய் பிரை எனல் ஆம் வகை கலந்து, ஏறிய தலைவன்;
பயிராதது ஓர் பொருள் இன்னது என்று உணர்வீர்

இது பரமால்—9075

'எம்பிரான் தன்துணைப் பெருந்தேவி'

பெருந்தேவி என்றசொல் கம்பன் காவியத்தில், அனுமன் வாக்கிலே, மும்முறை பயின்றுவ்ளது. மும்முறையும் சீதையைக் குறித்தே. முதன்முறை, அசோக வனத்தில் அனுமன் சீதையைத் தன் தோளில் எழுந்தருளுவித்து இராமனிடம் சேர்ப்பிக்க வேண்டுகோள் விடுத்து, அவள் மறுத்தபோது அனுமனுடைய சிந்தையில் இச்சொல் ஊறியது. 'நன்று, நன்று, இவ்வுலகுடை நாயகன்தன் துணைப் பெருந்தேவி தவத்தொழில்', என்று சிந்தை களித்து உவந்து எய்தினான்.

இரண்டாம் முறை, அனுமன் இலங்கையினின்று மீண்டு. பிராட்டியின் நிலைமையை இராமனிடம் விண்ணப்பம் செய்யும்போது, 'உன் பெருந்தேவி என்னும் உரிமைக்குத்... தலைமை சான்றாள்' என்றான்.

மூன்றாம் முறை இராவண வதைக்குப்பின், இராமனுடைய வெற்றியைப் பிராட்டிக்கு விண்ணப்பம் செய்யும்போது, 'எம்பிரான் தன் துணைப் பெருந்தேவி தயா என? நின்றனன். 'பெருந்தேவி' என்னும் சொல்லுக்கு 'இராமனுக்கு ஒத்த பெருமை யுடைய தேவி' என்பது பொருள்.

'தேரணிந்த அயோத்தியர்கோன் பெருந்தேவி கேட்டருளாய்,' என்ற பெரியாழ்வார் திருமொழி (3.10.4) க்கு உரைகூறி வந்தாராம் இராமாநுசர். அவருடைய சீடர் கூரத்தாழ்வாருடைய குமாரர் பராசர பட்டரை இராமாநுசர் தம் சீடராகவே கொண்டிருந்தார். பட்டர் வயதில் இளைஞர். 'பெருந்தேவி' என்றதால் பெருமாளுக்குச் 'சிறுத்தேவி'யும் உண்டோ? என்று கேட்டாராம். இராமாநுசர், 'ஒழுக்கத்தாலும், பருவத்தாலும், குடிப்பிறப்பாலும் வைதேஹீ பெருமாளுடைய பெருமைக்குத் தகுந்த தேவி; ஒரு சிறுத்தேவி உண்டாய்ப் பெருந்தேவி என்கிறது அன்றே - பெருமாள் ஏகதாரவ்ரதர் ஆகையாலே' என்றாராம். 'துல்ய சீல வயோ வ்ருத்தாம், துல்ய அபிஜந லக்ஷணாம், ராகவோ அர்ஹதி வைதேஹீ' என்பார் அனுமன் வாக்கில் வால்மீகி (V.16.5) எம்பிரான் தன் துணைப்பெருந்தேவி' என்ற சூழ்நிலையை இங்கு ஆராய்வோம்.

இராவணனை வெற்றிகொண்டபின், ஐயன் ஆணையால், இளவல் இலக்குவன் வீடணனுக்கு முடி சூட்டினான். இராமன் வீடணனுக்கு நீதிகள் பலகூறி, 'உயர் கீர்த்தியோய், மன்னி வாழ்க!' என வாழ்த்திய பின்னர் மாருதியை நோக்கினான். 'துப்பு உறழ் செய்யவாய் மணித்தோகைபால், செப்புறு, இப்படிப்போய்' (பவளம் போன்ற சிவந்த வாயை உடைய அழகிய மயில்போன்ற சீதையிடம் இப்படிப்போய்ச் சொல்) என்றான். 'என்ன செப்புவது?' என இராமன் கூறவில்லை. அப்போதுதான் சீதையின் நினைவு வந்தது போலும்!

வால்மீகத்தில் இக்கூற்று தெளிவாக உளது. 'சொல்லின் செல்வ! கவி அரச! நல்லோய்! விபீஷண மஹாராஜாவுடைய அநுமதி பெற்று, இலங்கையுள் புக்கு, வைதேஹிக்கு. என்னுடைய, சுக்கிரீவனுடைய, இலக்குவனுடைய நலன் யாவும் கூறி,

போரில் இராவணனை வென்றதையும் கூறி, அவளுடைய மறுமொழியைக் கொண்டுவா'' (VI.112 24-6) என்கிறான் இராமன். அனுமனும் முறை வழுவாமல் விபீஷணனுடைய அநுமதி பெற்றே அசோகவனம் புகுவான் (113 2). அனுமன் கண்ட சீதை போர் முடிவு அறியாள். இன்னமும் மரத்தடியில், துயரில் ஆழ்ந்து, அரக்கியரால் சூழப்பட்டு, குலைந்து வருந்துகிறாள். அவன் வணங்கினான்; சீதை மன அமைதி பெற்றாள்.

கம்பனில், மாருதி 'அணங்குசேர் கடிகா (சீதை இருந்த அழகிய சோலையை) அண்மினான். 'ஏழை சோபனம், ஏந்திழை சோபனம், வாழி சோபனம், மங்கல சோபனம்' எனப்பாடினான் திருநாமங்கள்; ஆடினான்; கைகளைத் தலைமேல் கூப்பி நின்றான். அரக்கன் அழிந்ததும், ஆரியயானை வென்றதும் சொன்னான். வால்மீகத்தில் இந்த மெய்ப்பாடுகள் இல. ஆனால், அனுமன், இராமன், சுக்கிரீவன் இலக்குவன் நலத்தையும், விடணன் உதவியால் பகைவரை இராமன் வென்றதையும், இராமன் ஆணையின்படியே கூறிச் சிலவற்றைச் சேர்த்துக்கொண்டான். 'உன் பிரபாவத்தால் போரில் வெற்றி கிட்டியது; உன்னை மீட்கும் பிரதிக்ஞையை நிறைவேற்ற, இராமன் உறக்கமின்றி அணைகட்டினான்' என்றான். (111:10-1)

கேட்ட சீதை உவகைப் பெருக்கால், உடல் பூரித்து, கேதுவினின்று விடுபட்ட முழுமதிபோல் முகம் பொலிய, அழகிய புருவங்கள் வளைய, கொங்கையில் வேர்வை அரும்ப, நினைத்தது ஒன்று நுவல்வது ஒன்றாகத் தன்தகை தடுமாறி நின்றாள்; முன்பு 'மஞ்சரும், மாதராரும்தம் சொற்கள் குழறித் தத்தம் தகை தடுமாறக் காரணமாக இருந்த சீதையே இந்நிலை எய்தினாள். இன்ன சொல்லுவது என்ற நினைவிலாது நெடிது இருந்தவளை அனுமன், 'உவகையின் விம்மலோ? தூது பொய் என்றோ?' எனக் கேட்டான். அவள் 'இயம்புவது யாது எனநோக்கி, நோக்கி, அரிது என நொந்துளேன்; பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ? (யான் பெற்ற இப்பேறு பைத்தியத்தையும் தருமோ?) நீ கொணர்ந்த நற்செய்திக்கு என்ன பேற்றினை (உனக்கு) ஈவது? என்பதை உன்னி, உரைமறந்து ஒவினேன்,' என்றாள். 'அவனுக்கு உலகம் மூன்றும் உதவினாலும் அவை அளவில் குறைந்தனவே; மேலும் அவை நிலையிலாதன அன்றோ?' என நினைந்து, 'என்தலையினால் தொழவே தகும்' என்ற நாச்சியார் சொற்களைக் கூறினாள்.

வால்மீகத்தில் சீதை, பொன்னோ, வெள்ளியோ, மணியோ, மூவுலகங்களுக்கும் அரசோ உனக்குக்கைமாறு ஆகாது', (113.20) இந்நற்செய்திக்கு இணையாக நான் தரக்கூடியது எதுவும் இல்லை' என அனுமனைப் போற்றுவதுடன் நிற்பாள்.

துளஸிதாஸன் இவ்விடத்தில் ''சீதை, 'நீ கொணர்ந்த நற்செய்திக்கு மூவுலகங்களும் ஈடாகா' என; அனுமன், 'நான் போர்க்களத்தில் அரக்கரை வென்ற இராமனை எவ்வித ஊறும் இன்றிக் கண்டது முதல் மூவுலகங்களையும் ஆள்கின்றேனே! என; சீதை, 'நற்குணங்கள் யாவும் உன்னிடம் உறைக; சேவினுடன் (இலக்குவனுடன்) கோசலபதி என்றும் உன் நெஞ்சில் வீற்றிருக்க' என்ற வரம் நல்கினாள்'' எனக் காட்டுகிறான்.

பிராட்டி, 'என் இனிச் செய்திறம், சொல்!' (இனி என்ன செய்யவேண்டும்) என்றாள், அனுமன், 'பிராட்டி! எனக்கு அளிக்கும் வரம் ஒன்று உண்டு. திரிசடை தவிர ஏனைய அரக்கியரைச் சுட வேண்டுவேன்; அவர்கள் மேனியை நகத்தால் பிளந்து இயமனுக்கு இரையாக்குவேன்; அவர் குடலை வெட்டி. குருதியைக் குடித்து, உடலை அழித்து உண்பேன்', என்றான். அரக்கியர் அஞ்சி, 'அன்னை! நின்பாதமே சரண்' என

விளம்பினர். அன்னை 'அஞ்சல்மின்' என, மாருதிமுகம் நோக்கி, 'இவர் என்ன தீமை இழைத்தார் - அவன் (இராவணன்) சொன்ன சொல்லின் அல்லது? யான் இழைத்த வினைப் பயனால் இது நேர்ந்தது. (சீதை அயோநிஜை, அவளுக்கு முற்பிறப்பில் இழைத்த தீவினை இலது; இப்பிறப்பிலே, இளைய பெருமாளை நொந்து, தகாதன சொல்லி, பாகவத அபசாரம் பட்டதே இவளுடைய பண்டைத் தீவினை; அதன் விளைவே இவள் பட்டபாடெல்லாம் எனக்கருத இடமுள்ளது.) கூனியினும் கொடியவரா இவர்? (அவள் கூனியை நோவது இவ்வோரிடத்திலேயே) அவருடைய மனத்துக்கு நோய் செயல்!' என்றாள்.

இது பிராட்டியின் சரணாகத ரக்ஷணம்; சரண் அடைந்தோரைக் காத்தல்.

இவ்விடத்தில் வால்மீகியை உரையாசிரியர் துணைக்கொண்டு பார்ப்போம்.

அனுமனுடைய குணங்களை வானளாவப் புகழ்ந்தாள் சீதை. அப்புகழ்ச்சி நின்றதும், அதுவரை எதிரில் கைகூப்பி நின்ற அனுமன்: ''தேவி உன்னைப் பயமுறுத்திய இவ்வரக்கியரை நான் கொல்ல நீ அனுமதிக்க வேண்டும். இவர்கள் கொடுமையே உருவானவர்கள்; கொடுமைமையே ஆசாரமாகக் கொண்டவர்கள்; இராவண னுடைய ஆணையால் மட்டுமன்று; இவர்களுக்கு இயற்கையாக உள்ள கொடுமைக் குணம் உன்னைத் துன்புறுத்த இவர்களைத் தூண்டியது. இவர்களைத் தண்டிக்க வேண்டும்; என் முட்டியால் பின்புறம் குத்த வேண்டும்; தோள்களால் இடிக்கவேண்டும்; விலாவில் முழங்காலால் முட்டவேண்டும்; பற்களால் கடிக்கவேண்டும்; காது மூக்குகளை அறுக்க வேண்டும்; மயிரைப்பிடித்து இழுக்க வேண்டும்; கீழே வீழ்த்தி உதைக்கவேண்டும்- இவற்றை-எல்லாம் செய்ய எனக்கு வரம்தா!'' (113.30-6) என்றான்.

இவ்வேண்டுகோளைச் சீதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவள் திரிசடையின் இடையீட்டால் முன்பே அரக்கியர்க்குச் சரண் தந்துள்ளாள்; அதை அனுமனும் மரக் கிளையில் இருந்து கேட்டிருந்தான். இப்போது, தனது இயற்கையான கருணை பொங்க (க்ருபணா), கன்றுக்கு இரங்கும் பசுபோல் ('தீனவத்ஸலா') அரக்கியருக்கு இரங்கி, ஆராய்ந்து ('விம்ருச்ய'), நீள நினைந்து (சிந்தயித்வா) இவ்வாறு பேசுகிறாள்

நான் இராமனைக் கணவனாகப் பெற்ற நற்பேற்றில் ஏதோ தீங்கு விளைந்தது. கண் இலான் நல்வினையால் கண் பெற்றுக் கொடுவினையால் அதை இழந்தது போல-('பாக்ய வைஷம்ய தோஷாத்'); முன்பு செய்த தவற்றால் (புரஸ்தாத் துஷ்க்ருதேன') இத்துணை அல்லல் எய்தினேன்; (''துஷ்க்ருதம்' என்பது மான்பின் போன இராமன் அலறியதாக மாரீசன் குரல் கேட்டதும் இலக்குவன் போகாது ஒழிய, அவனைக் கடுஞ்சொற்களால் நொந்தமை, இன்னமும் அவன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தன) என் விதியின் பிழைக்காக நீ இவர்களை ஒதுக்கலாகாது. இராவணன் ஏவலால் இவர்கள் என்னை மிரட்டினார்கள்; இவ்வபலைகளை அன்றே நான் மன்னித்து விட்டேன். அப்படி அவர்கள் தவறே புரிந்திருப்பினும், அதைத் தவறு என முடிவு செய்யவோ, நீ கோரும் அனுமதி தரவோ, எனக்கு என்ன உரிமை உண்டு? அவர்களை ஒறுக்க உனக்கு யார் உரிமை தந்தனர்? நீயும் நானும் ஏன் அவர்களுக்கு ஊறு இழைக்க வேண்டும்?' (113.38-42)

இங்கு, நாம் மறக்க முடியாத ஒரு கதையைச் சீதை சுட்டிக் காட்டுகிறாள். அக்கதை, தமிழ் நாட்டில் பிறந்த கோவிந்தராஜர் என்ற வால்மீகியின் உரையாசிரியரால் விளங்குகிறது.

ஒரு புலி வேடனைத் துரத்திக் கொண்டு போயிற்று. வேடன் அருகில் இருந்த மரத்தில் ஏறிக் கொண்டான். அதற்கு முன்பே அங்கு ஒரு கரடி இருந்தது.

புலி கரடியிடம் கூறிற்று : 'இவ்வேடன் நம்மிருக குலத்துக்கே பகைவன்; இவனைக் கீழே தள்ளிவிடு'

கரடி கூறிற்று : 'இருக்கலாம்! ஆனால், இவன் நானிருந்த மரத்தை அண்டிய'தால் என்னிடம் சரண் புகுந்தவன் ஆகிறான் சரண் அடைந்தவனைக் கைவிடமாட்டேன். இவ்வாறு சொல்லிவிட்டுக் கரடி உறங்கிற்று.

சற்றுநேரம் கழித்து, புலி வேடனிடம் கூறிற்று : 'எனக்குப் பசியாக இருக்கிறது; நீ அந்தக் கரடியைக் கீழே தள்ளி விட்டால், நான் அதை உண்டு பசியாறி உன்னை விட்டுவிடுகிறேன்.'

வேடன் கரடியைத் தள்ளி விட்டான். கரடியோ தனக்கு இயற்கையாக உள்ள லாகவத்தால், மரத்தின் கிழ்க்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு விழாமல் தப்பி மேலே ஏறிக் கொண்டது.

அப்போது, புலி கரடியிடம் சொன்னது : 'நான் முன்னமே சொன்னேனே; இந்த மனிதன் நன்றி கெட்டவன். சரணம் அடைந்தவனைக் காப்பாற்றுவேன் என்ற உன்னையே தள்ளிவிட்டான் பார்த்தாயா? இனியும் அவனை வைத்திருக்க வேண்டியது இல்லை, தள்ளிவிடு!'

கரடி சொன்னது : 'இருக்கலாம். எவனோ ஒருவன் தன் ஒழுக்கத்தினின்று வழுவினான், அறத்தைக் கொன்றுவிட்டான் என்றால், அதற்காக நான் என் தருமத்தைக் கைவிடக்கூடாது. இன்னமும் அவன் சரண் புகுந்தவனே. அவன் தீயோனாக இருக்கலாம்; இருந்தாலும் அவனைத் தள்ளுவது அறத்தினின்று நான் தவறியது ஆகும். என் அறத்தைக் காப்பது என் கடமை', என்று வேடனைத் தள்ள மறுத்து விட்டது.

இதை 'ருக்ஷேண கீத' : என்ற சொற்றொடர் (113-43) காட்டுகிறது. சீதையின் வாக்கில் அனுமனுக்கு 'நல்லோய்', ('ஸௌம்ய') 'வீர', 'குழந்தாய்' (வத்ஸ) போன்ற அழகிய சொற்களே பயிலும்; ஆனால் இவ்விடத்தில் மட்டும் 'குரங்கே (ப்லவங்கம) என்ற சொல் பயில்வது குறிப்பிடத்தக்கது.

மேலும், 'சிரியோர் பிறருடைய தீச்செயல்களைப் பின்பற்றமாட்டார்கள். பிறருடைய நற்செயல்களைப் பின்பற்றித் தம் ஒழுக்கத்தைப் போற்றிக் காப்பர். ஒழுக்கமே சான்றோர்க்கு அணி', ('ஸந்த : சரித்ர பூஷ்ணா : 113.43) என்பாள்.

உலகில் பல தவறுகளுக்குக் காரணமான மனப்பான்மை இது : 'பிறர், உயர்ந்த இடங்களில் மக்களால் வைக்கப்பட்டவர், மக்களால் போற்றப்படுவோர், அறத்தினின்று வழுவினர்; ஆதலின், இதுகாறும் வேறு எவரும் செய்யாத தவற்றை நான் செய்தேனா? அத்தவற்றுக்காக அவர்களை ஒறுக்காமல் என்னை ஒறுக்க முற்படுவது ஏன்?' இப்போக்கைக் கண்டிப்பது கரடியின் ஒழுக்கம்.

பிராட்டி மேலும் கூறுவாள் : பெரியவாச்சான் பிள்ளையின் உரையைத் தழுவி எழுதுகிறேன்.

'அரக்கியர் இழைத்தது தவறு என்றே கொண்டாலும் தவறு இழைக்காதவர் மட்டுமா காக்க உரியவர்? திரை நீக்கிக் கடலாடப் போமோ? அலையும் ஓயாது, நீராடவும் போவதில்லை; பாவங்களும் நீங்கா, எவரையும் காக்கப் போவதும் இல்லை. நான் தவறவில்லையா? இராமனுக்கு உரியவளாக இருக்கவேண்டிய நான், என் உயிர் எனக்கு உரிமை என்று கருதி இராமன் என்னை மீட்காவிடில் இரண்டு திங்களில் உயிர் துறப்பன் என்று உன்னிடம் கூறி அனுப்பியது என் தவறன்றோ? இராமன் தவறவில்லையா? ஓர் அம்பால் அரக்கர் குலத்தைக் கொன்று என்னை மீட்காது இவ்வளவு காலம் பிரிந்திருந்தது தவறு ஆகாதா? நீ தவறவில்லையா? இராமன் என்னைக் கண்டுவர ஆணையிட்டதை மீறி இங்கு நீ செய்யப் புகுந்தது உன் தவறு அன்றோ?'

உலகில் தவறு இழைக்காதவர் ஆர் உளர்? தீயோர் ஆகட்டும், நல்லோர் ஆகட்டும், கொல்லத் தகுந்தவரே ஆகட்டும், பெரியோர் செய்யத் தக்கது ஒன்றே! அவர்கள் பால் இரங்குதல், கருணைகாட்டுதல் ஆம்.

'பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் அதாபிவா
கார்யம் காருண்யம் ஆர்யேண ந கஸ்சித் த அபராத்யதி (113-45)

என்பது அழியாத வாக்கு, அடுத்துக் கூறுவாள். 'கொடியோரையும், பாவிகளையும், உலகைத் துன்புறுத்துவோரையும்கூட நாம் நலம் அறச் செயலாகாது; நலம் அறுமாறு செய்வது, செய்யப்பட்டோனுக்கு மட்டும் அன்று, செய்தோனுக்கும் இழுக்குத் தரும்.

இங்கு, நாம் ஊன்றிப் பார்க்க வேண்டிய கருத்துக்கள் பலவுள. குற்றங்கள் இருவகைப்படும். (i) ஒருவன் மற்றொருவனுக்கு இழைக்கும் தீங்கு (Private wrong) (ii) ஒருவன் சமூகத்திற்கு இழைக்கும் தீங்கு (Public wrong). முந்தியவற்றுள் சில பிறன் பொருளைத் திருடுதல், பிறன் உடலுக்கோ, மனத்துக்கோ, மானத்துக்கோ ஊறுசெய்தல் போன்றன. பிந்தியது சமூக உரிமைகளை அழித்தல், பொதுமக்களுக்கு உரிய பொருளைத் தனியுடைமை ஆக்கிக் கொளல், பொதுமக்களுடைய குடிநீரையோ, உணவையோ கெடுதல் போன்றன.

முதலாவதைக் குறள் ஆசிரியர் கூறுகிறார் :

'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு' (987)

இது சான்றோர் இலக்கணம். தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும், (இழிவுசிறப் பும்மை), சான்றாண்மை உடையவர் இனியவற்றைச் செய்வர்; இன்றேல், அவருடைய சால்பு என்ன பயனை உடையது?

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314)

இது துறவோர்க்கு உரியது. தமக்கு இன்னாதவற்றைச் செய்தாரைத் தண்டித்தல், அவ்வின்னா செய்தாரே நாணம் அடையும்படி அவர்க்கு இனியனவற்றைச் செய்து, இன்னா, இனியன இரண்டையும் ஒருங்கே மறத்தல். மறவாவிடின் அவை பின்னும் வந்து கிளைக்கும் ஆதலின்,

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (579)

இஃது அரசனுடைய பண்பு. தம்மை வருத்தும் தன்மைஉடையார் இடத்தும், கண்ணோட்டம் செய்து, அவர் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசனிடம் இருக்க வேண்டிய சிறந்த குணம்.

இம்மூன்று குறள்களாலும் முறையே, பொதுவாகச் சான்றோர்க்கும், துறவிகளுக்கும். அரசனுக்கும் இன்னாசெய்தாரை அவரவர் ஒறுத்தலும், பொறுத்தலும் கூறப் பட்டன. இவை அவர்மாட்டு வேறொருவர் செய்த தீங்கு (Private wrong)-வேடன் காடியிடத்தும், அரக்கியர் சீதையிடத்தும் செய்த தீங்குகளைப் போல.

வேந்தனுக்கு (தலைவனுக்கு) இரண்டு இயல்புகள் உண்டு. (i) தனி மனிதன் என்ற பொது இயல்பு, (ii) தலைவன் என்ற சிறப்பியல்பு. பொது இயல்பை முன்பு கண்டோம். சிறப்பியல்பை இனிக் காண்போம்.

சமூகத்திற்கு இன்னா செய்தாரை, (Public wrong) ஒறுத்தல் வேந்தன் தொழில், கடமை. அவ்வாறு ஒறுத்தல் தனி மனிதனுடைய தொழில் அன்று - ஏனெனில், சமூகத்தில் முறைசெய்து காப்பாற்றுவதற்காக வேந்தன் இறைஎன வைக்கப்பட்டவன்.

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (549)

குடிமக்களைப்பிறர் நலியாமல் காத்து, தானும் நலியாதுபேணி, அவருடைய குற்றங்களை ஒழித்தல் அரசனுக்குப் பழியன்று; அவனுடைய கடமையே. அரசன் குடிமக்கள் செய்யக் கூடிய குற்றத்தை நீக்க வேண்டுமே அன்றிக் குற்றவாளியை நீக்கக் கூடாது. குற்றவாளியைப் 'பொன்றுவித்தல் மரபு' அன்று.

ஆனால், கொடியாரைக் கொல்லலும் உண்டு.

'கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்' (550)

அரசன்; தீ வைப்பவர், நஞ்சிடுபவர் போன்ற சமூகத்துக்குக் கொடுமை செய்பவரைக் கொலை செய்து தண்டித்தல் உழவன் பயிரைக் காப்பதற்காகக் களை வெட்டுவதை ஒக்கும். 'தகவு இல கண்டக்கால் வன்கண்ணராகி ஒறுக்க! நீ மெய்கண்ட தீமை காணில் ஒப்பநாடி அத்தக ஒறுத்தி!' என்பனவும் இதையே கூறும்.

தனக்கு இன்னா செய்தாரைப் பொறுத்தல் சான்றோர்க்கு அழகு; சமூகத்துக்கு இன்னா செய்தாரை ஒறுத்தல் அரசனுடைய கடமை-தனி மனிதன் என்ற பொது இயல்பில். இன்னாசெய்யப்பட்டானுடைய கடமையோ, உரிமையோ அன்று.

சீதைகண்டது 'தனக்கு இன்னா' செய்த அரக்கியரை. அவர்கள் தவறு செய்தார்கள் என்பதற்காகச் சீதை தன் அறத்திலின்று வழுவவில்லை. மேலும், அவள் அனுமனுக்குச் சொன்ன கருத்து வருமாறு 'நான் பெருமாளிடம் அடைபவருடைய குற்றத்தை மறைத்து, குணத்தை மட்டும் எடுத்துக்கூறி, அவரை ஏற்கவேண்டும் எனப்

புருஷகாரம் செய்பவள்; நீயோ ஆசார்யன் நிலைமையில் உள்ளாய்! நாம் இருவருமே இவ்வரக்கியரைக் கைவிட்டால் அவருக்குப் புகல் ஏது?'

சீதை பொறுத்தலே அறிவாள், ஒறுத்தலை அறியாள். 'அஜ்ஞாத நிக்ரஹா' என்பார் பிள்ளை.

இந்நிலையில் தான் கம்பன் 'எம்பிரான் தன் துணைப் பெருந்தேவிதயா', எனவும், வால்மீகி இதே கருத்துள்ள 'யுக்தா ராமஸ்ய, பவதீ, தர்மபத்நீ குணாந்விதா' எனவும் அனுமன் வாயிலாகச் சீதையைப் பாராட்டுகின்றனர். 'உன் பெருந்தேவி என்னும் உரிமை' என அனுமன் இராமனிடம் சொல்வதை வால்மீகி சீதையிடமே சொல்ல வைக்கிறார்.

தமிழ்நாட்டில் பிறந்த வடமொழிப் புலவர் பட்டரோ 'ஸ்ரீ குண ரத்ந கோசம்' என்ற நூலில் சீதையை உரைகல்லாகக் கொண்டு இராமன் மதிப்பிடுகிறார்.

'தாயே, மைதிலி! நீ அரக்கியரால் துன்புறுத்தப்பட்டாய்! அத்துன்பத்தின் ஈரம் புலராத முன்பே, அந்த அரக்கியரை அனுமனிடமிருந்து நீ காப்பாற்றினாய்! அச்செயலால் இராமனுடைய கூட்டத்தின் பெருமை குறைந்தது.

மாத : மைதிலி, ராக்ஷஸிஸ் த்வயி ததைவ
ஆர்த்ராபராதா : த்வயா
ரக்ஷந்த்யா பவனாத்மஜாத் லகுதரா
ரா ம ஸ் ய கோஷ்டீ க் ருதா

தமிழ்நாட்டில் பிறந்த மற்றொரு வடமொழிப் புலவர் வேதாந்த தேசிகன் 'எம்பிரான்தன் துணைப் பெருந்தேவி தயா' என்ற கருணையையே உருவகமாக்கி, 'தயாசதகம்' என்ற நூலை இயற்றியுள்ளார். அக்காவிய நாயகி தயா பெருமாளுடைய தேவி.

★

வான்நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப-
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்ப, கோல் துறந்து
கானும் கடலும் கடந்து இடுக்கண் தீர்த்த கழல் வேந்தன்

—அயோத்தியா காண்டம்

பேதியாது நிமிர் பேத உருவம் பிறழ்கிலா
ஓதி ஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும்
வேதம், வேதியர், விரிஞ்சன், முதலோர் தெரிகிலா
ஆதி தேவர், அவர் எம் அறிவினுக்கு அறிவு அரோ

—ஆரணிய காண்டம்

மூன்று உரு எனக்குணம் மும்மை ஆம் முதல்
தோன்று உரு எவையும், அம் முதலைச் சொல்லுதற்கு
என்று உரு அமைந்தவும், இடையில் நின்றவும்,
சான்று உரு உணர்வினுக்கு உணர்வும், ஆயினான்

— கிட்கிந்தா காண்டம்

குறிகளால் காட்டிடக் கருதிடும் முயற்சி

1. இத் தலைப்பு பாரதி வாக்கு. சிதைந்த ஒரு பாட்டின் பகுதி. விதியே, தமிழச் சாதியை என் செய நினைத்தாய்? ...என்பதன் மெய்ப் பொருள் எனக்கு உணர்த்துவாய், ஏனெனில், 'சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும், திருக்குறள் உறுதியும், தெளிவும், பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும், 'எல்லை ஒன்று இன்மை' எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழச் சாதியை அமரத் தன்மை வாய்ந்தது' என்று உறுதி கொண்டிருந்தேன். ...எனினும் ...கலங்கிடாதிருந்த எனைக் கலக்குறுத்தும் செய்தி ஒன்று, அதனைத் தெளிவுறக் கேட்பாய் ...வானம் பொய்க்கின் மடிந்திடும் உலகுபோல் தானமும் தவமும் தாழ்ந்திடல் பொறுத்து ஞானம் பொய்க்க நசிக்கும் ஓர் சாதி. ...பொய்ம்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள் பொய்ம்மை ஆகிப் புழு என மடிவர். ...செய்கையும் சீலமும் குன்றிய பின்னரும் உய்கைக் குரிய வழி சில உளவாம்... அது : 'நன்மையும் அறிவும், எத்திசைத்து எனினும் யாவரே காட்டினும் மற்று அவை தழுவி வாழ்வீராயின் அச்சம் ஒன்று இல்லை'.

2. நன்மையும் அறிவும் எத்திசைத்தன? யாவரே காட்டினர்?

3. பொருளை, பிரித்து அறிதல் தொகுத்து அறிதல்.

   i) 'பொருள்' என்பது யாது?

   ii) 'எல்லை' என்பது என்ன? 'எல்லை ஒன்று இன்மை' பொருளுக்கு அடையாவது எப்படி?

   iii) 'குறிகளால் கம்பன் காட்டுவது எதனை?

   iv) அம் 'முயற்சி' யின் பயன் என்ன?

4. 'பொருள்' - பருப் பொருள், நுண் பொருள்

   i) பருப் பொருள் எல்லை உள்ளது; அதை வடிவம், நிறம், பருமன், மணம், ஊற்று இவற்றால் பிரித்து அறியற்பாலது.

   ii) நுண் பொருள் புலன்களால் அறியக் கூடியது, அறியக் கூடாதது என இருவகைப்படும்.

   அறியக் கூடிய ஒலி, ஊறு (மென்மை, தன்மை) ஒளி (நிறம்) சுவை மணம் யாவும் நுண்பொருள்களே. அவ் அவற்றிற்கு உரிய நரம்புகளை அவை இயக்குவதால், மனதில் படிவது (படிவம்) எண்ணங்களை இயக்குகிறது. அவையும் பொருட்களே.

   அறியக் கூடாத பொருட்கள் : குணம், அழகு, கற்பு, தவம், அறம், வீரம், புகழ், பழி, மெய், பொய், போன்றன அவை, பருப் பொருட்களைச் சேர்ந்தே, நாம் அறியற்பாலன.

5. பருப் பொருட்களைக் கம்பன் பல இடங்களில் கூறியுள்ளான் : ஆறு, நாடு, நகரம், தானை, மக்கள், கழனி, மதில், கொடி, மனை, பொன், மணி, மலர், இருக்கை, வில், பறவை, தேர், தானை, மக்கள், புலன்களால் அறியக் கூடிய நுண்பொருட்களையும் கூறி உள்ளான் : ஓதை, நிறம், நாற்றம், மென்மை, தன்மை யாவும்.

6. புலன்களால் அறியக் கூடாத நுண் பொருட்கள் - பிற பொருட்களைச் சேர்ந்தே காண வேண்டுவன : சூழ்நிலையில் காணக் கிடைப்பன.

குணம் : 'குணங்களை என் கூறுவது? கொம்பிவளைச் சேர்ந்து அவை உய்யப் பிணங்குவன.

'அழகு' : 'அழகிவளைத் தவம் செய்து பெற்றது காண்'
'அழகெனும் அணியும் ஓர் அணி பெற்றதே'

'கற்பு' : 'கற்பின் நின்றன காலமாரியே' (Concretisation)

'அறம்' : 'அறங்கள் நாறு மேனியார்' இணர் வந்து தோன்றுதல்?
'மெய் அறமூர்த்தி' உருவம், Personification

'தவம்' : 'தவம் செய்த தவமாம் தையல்'

'புகழ்' : 'தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயு' 'எம்பியோ தேய்ந்தான்? எந்தை புகழன்றோ தேய்ந்தது'

'பழி' : 'உயிர் கொடுத்துப் பழி கொண்ட பித்தன்'

'பொய்' : 'பொய்யினும் பெரிய மெய்யான், பொருப்பினைப் பழித்த தோளான்'

'உண்மை' : 'உண்மையாம் எனப் பெரியது, வென்றியின் உறையுள்'

'சொல்' : 'நீ சொன்ன சொல்லினும் உளன்'
'இன்பமும் துன்பந்தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே'

7. அழகு, இன்பம், துன்பம் - இவை எழுப்பும் உணர்ச்சிகள் சொல்லால் கூற முடியாதன : மனத்தால் அறியவே முடியும். ஒளி, நாற்றம், சொல் பொன்னின் சோதி, போதினின் நாற்றம், பொழிபூவின் தென் உண் தேனின் தீஞ்சுவை, செஞ்சொற் கவி இன்பம்'. புலன் இன்பத்திலும் அறிவின்பம் அனைத்தினும் சிறந்தது.

Medium of Poetry is the most powerful of the media of Art. Poetry is the queen of all arts; it appeals to the mind which is the queen of all senses.

— Aristotle

On a poet's lips, I slept
Dreaming like a love adept
In the sound of his breathing kept...
From these create he can
Forms more real than living man
Nurselings of immortality. — Promethew-Shelley

புலன் உணர்ச்சிகள் சொல்லுக்கு எட்டா; அறிவுக்கு எட்டும்.

8. இனி 'எல்லை' வரம்பு.
பெருமை → FINITE - DE-FINITE - DEFINITION
சிறுமை → INFINITE - INFINITESIMAL
கம்பன் பலவற்றிற்கு 'எல்லை உண்டோ?' என

'அழகு' → | 'என் பிறங்கு அழகினுக்கு எல்லை இல்லையாம்'
| ஆர்உழை அடங்கும்?
| 'அழகினுக்கு அவதி இல்லை?'

'மோகம்' → | 'மோகத்துக்கு ஓர் முடிவும் உண்டாம் கொலோ?'
| மூர்க்கன் முடித்தலை அற்ற போதன்றி ஆசை அறாது?

வலி — 'மனிதன் நோன்மை வரம்புடைத்தன்று'

வெப்பம் — 'விதியின் வெய்யன படைக்கலம்', 'விதிகாயினும் வெலற்கரியான்'

கால எல்லை i) மூர்க்கன் முடித்தலை அற்ற போதன்றி ஆசை ஆறாது'

ii) 'பாவம் தோன்றிய காலமே தோன்றிய பழையோர்'

உலகங்கள் iii) 'எல்லை நீத்த உலகங்கள் யாவும்'

9. 'மும்மைத் தாய காலமும் கணக்கும் நீத்த காரணன்'
'சான்றுக்குச் சான்று இல்லை' authority
''அளவையால் அளந்து, 'ஆம்' 'அன்று' என்று அறிவுறும் அமைதி
உளவை யாவையும் உனக்கில்லை; உபநிடதத்து உனது
களவை ஆய்ந்துஉறத் தெளிந்திலது ஆயினும், கண்ணால்
துளவை ஆய் முடியாய் 'உளைநீ' எனத் துணியும்'' (10056)
எல்லை, அவதி, வரம்பு, காலம், அளவை கணக்கு நீத்தல் இவை யாவும் நம் அறிவின் (எண்ணத்தின்) எல்லை, அவதி...யே அன்றி, பொருளின் தன்மைகள் அல்ல. பொருளின் தன்மை, அதன் தன்மையினின்று வேறுபட்டது, Subjective Objective.

சிலர் 1 Vps-ஐயும் அறியவல்லர். ஒலியின் எல்லை, ←32 Vps — 1024 Vps→ கருவிகள் - tolerance என்ன என்று கேட்கிறோம். ±-0001cm - காலத்தின் எல்லை Geological ages, light years — ஒளியின் எல்லை. ultra violet-Infra Red. X-ray.

இவை அண்மையில் அறிது கூறப்பட்டன.

மனிதனுடைய அறிவின் எல்லை அகன்று வருகிறது — விஞ்ஞான வளர்ச்சியால். அவ் அறிவு புலன்களால் உண்டானதே; பௌதிகப் பொருளான மூளையில் எழுந்ததே. The development of the mind is the process of man's evolution. Mind is the highest form of matter.

இவற்றைச் சொற்களால் கூறுவது எப்படி? — tending to Infinity

i) தாழ் நவை தீர் உலகெலாமாக...

ii) குணங்களை... மேவாதவர் இல்லை; மேவினரும் இல்லை; வெளியோடு இருள் இல்லை மேல் கீழும் இல்லை. மூவாதமை இல்லை, மூத்தமையும் இல்லை; முதல் இடையோடு ஈறு இல்லை, முன்னோடு பின் இல்லை.

iii) அளவையால் அளந்து பாழிய பணைத்தோள் வீர...
ஊழிஆர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' காலம்
Infinity is not describable

'முன் ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும் உன் நாள் உலவாய் நீ என்போல் உளை' (ego)

Infinite Tyranny - Even for a Short period

'இற்றை நாள் வரை, யான் உள நாள் முதல், இப்பேர் சொற்ற நாவையும் கருதிய மனத்தையும் சுடும்என் ஒற்றை ஆணை.'

Infinite faith

சாணினும் உளன்; ஓர் தன்மை, அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்' சொல்லும் பொருளே
Infinite self confidence

'முன்னையோர் இறந்தாரெலாம்... என்னையே எண்ணி யான் இந்நெடும் பகை தேடிக்கொண்டேன்'

10. எல்லை இன்மையைக் குறிகளால் காட்டுவது, எண்ணத்தால் காட்ட முயல்வது. 'செஞ்சொல் கவி'இன்பம்' எண்ணத்திற்கு மீறியவை. அளவையாலே உவமையாலே சொற்களாலே எண்ணங்களை வெளியிட வேண்டும். சொற்களே கவிஞனுடைய கருவிகள். 'பொருள்' சொல்லுக்கும் பொருளே (matter); ஆதலின், எதையும் பொருளைக் கொண்டே (materials) கூற உரியது.

11. கவிஞனுடைய முயற்சி × விஞ்ஞானியின் முயற்சி. கவிஞனுடைய கலை, பொருளைக் கொண்டு எழுந்தது: கவிஞன் சமூகச் சூழ்நிலையில் தாண்டிப்பார்ப்பவன். விஞ்ஞானமும் பொருளைக் கொண்டு எழுந்தது. பொருள் முதல் வாதம், விஞ்ஞானி பொருளின் கூறுகளையும், இயக்கத்தையும், முடிவையும், ஆராய்கிறான்; பொது நியதிகளை ஆராய்கிறான். Reasoning, Analysis, Law of motion, classification, pattern பொருளின்பொதுத் தன்மையை ஏற்றுக்கொண்டு, அத்தன்மையை மனிதகுல முன்னேற்றத்துக்கோ, தனி ஒருவன் முன்னேற்றத்துக்கோ (இலாபத்துக்கோ) பயன்படுத்துவதை ஆராய்கிறான்.

Fundamental Research-Applied Research

கவி இந்த ஆய்வுகளைத் தாண்டிக் கடந்த நிலை நன்று இருக்குமாயின், கனவு காண்கிறான். ஒவ்வொரு சமயம் பெரும்பான்மை அவன் நிற்கும் உலகத்தும் புறம்பே போய்விடுகிறான்-உலகத்தொடர்பு அறுகிறது. loses touch with reality உலக உண்மைக்கு மாறுபட்ட நிலையில் கொண்டுபோய் விடுகிறது. அங்கு, அந்நிலைக்கும் தான் காணும் உலகிற்கும் மாறுபாடு காணும்போது, மனக்குழப்பம் உண்டாகிறது. inability to reconcile.

வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்'
'மதியின் பிழை அன்று, மகன் பிழை அன்று, மைந்த
'விதியின் பிழை, நீ இதற்கு என்கொல் வெகுண்டது'

'மன் இழைத்ததும், மைந்தன் இழைத்ததும், முன்
இழைத்த விதியின் முயற்சியால்'
'அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துரந்தனள்'

என்பன எழுகின்றன. The unknown cause is equated to god and falt : that stops further investigation. அறியாமையே விதி, கடவுள் ஒரு hypothesis (இருக்கிற தென்று வைத்துக்கொள்வோம்; விளைவுகள் என்ன? இல்லை.........?)

12. இன்மையின் குறி 0 — இந்தியாவில் தோன்றியது.
பெருமையின் குறி ∞
இன்மைக்குக் குறி இட்டால், அது உண்மையாமோ?
பெருமைக்குக் குறி இட்டால், அதன் பெருமை குன்றுமோ?
வளர்ச்சியின் குறி $\frac{dy}{dx}$
பரப்பு, கனம், தொகுப்பு பரிமாணக் குறி $\int \cdot\cdot \int\int$
காலத்தின் குறி — light years, geological ages
வேகத்தின் குறி — speed of light
தோன்றுவது ஒரு பகுதி, தோன்றாதது ஒரு பகுதி Complex No.
தோன்றாதது Force Work Power Radiation (Radio active degemenation)
Dyne Erg Watt

கொண்டு கூட்டு

1. பொருள் பருப்பொருள், நுண்பொருள் என இரு வகைத்து. நுண்பொருள் புலன் களால் அறியக் கூடியன, பருப்பொருள்களைச் சார்ந்த எண்ணத்தால் அறியக் கூடியன என இரு வகைப்படும்.

2. பொருளின் எல்லை நம் அறிவின் (எண்ணத்தின்) எல்லையே. (எண்ணமும் பொருட்பிண்டம் ஆகிய மனிதன்மூளை புலன்களால் இயக்கப்பட்டு எழுவது.

3. எல்லையை எண்ணத்தால் காட்டலாம் : உவமையால் காட்டலாம்.

4. பொருளுக்கும் (செயலுக்கும்) எண்ணத்திற்கும் முரண்பாடு நேரும்போது மனக் குழப்பம் உண்டாகிறது. செயல் ஒன்றே அக் குழப்பத்தை நீக்க வல்லது.

5. கம்பன் பொருளைக் குறிகளாற் காட்டிடும் முயற்சி பொருளுக்கும் எண்ணத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டுதலே. சில குறிகள்; இன்மை 0 இந்தியாவில் தோன்றியவை: இன்மைக்கு ஒரு குறி இட்டால், அது உண்மை $\frac{0}{\infty}$ ஆகிவிடு கிறது. எண்ண முடியாத பெருமைக்கு ஒரு குறி இட்டால், அது ∞ ஆகிறது.

6. பாரதி கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என ஏன் சொன்னார் என நாம் உணர்தல் இயலாதது.

அறிய வேண்டியன

கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்

இராமனுடைய தூதனாகச் சென்ற அங்கதன் எண்ணுவது : மேகம் அமுதத்தையே மழையாகப் பொழிந்தாலும் மூங்கில் பூக்காது, காய்க்காது. அவ்வாறே, இப்புல்லனிடம் இராமனுடைய அறிவுரை பயன் தராது. 6-16

தவளையைப் கொல்வதால் சிங்கத்தின் பெருமை ஓங்குமா? உன்னைக் கொல்வதால் வானரத் தலைவருக்கு, இப்போது புகழ் மேலும் ஓங்காது, 6-23

வளைந்த வில் போன்ற சொற்களால், அங்கதனுடைய வாய் உமிழ்ந்த சரங்கள், இராவணனுடைய நெஞ்சில் தீயை மூட்டின. தன் நெஞ்சில் நின்ற இருப்புச் சலாகையை இராவணன் மறுமொழி என்ற இடுக்கியால் குத்தி எடுத்தான்-தற்புகழ்ச்சியில் திளைத்தான் 6-23.

இராமன் மானிடன் தானா? காமதேனுவும் பசு தானா? கல்ப தருவும் மரம் தானா? கங்கையும் ஆறு தானா? அன்ன தானமும் பிற தானங்களுள் ஒன்றா? அமுதமும் ஓர் உணவு தானா? கருடனும் ஒரு பறவை தானா? சேடன் பாம்பு தானா? சிந்தாமணியும் ஒரு கல் தானா? 6-26

தீய வழியை நாடுவோன், ஆசை உடையவன், உலுத்தன், எண்ணும் திறமை இல்லாதவன், முற்றிலும் வறிஞன், தற்பெருமை பாராட்டுவோன், மிக்க வயோதிகன், தீரா நோயுற்றவன், என்றும் சினம் உடையவன், திருமாலைப் புறக்கணிப்பவன் வேத வல்லுநரை வெறுப்பவன், தன் உடல் இன்பத்தை மட்டும் பேணுபவன், பாவங்களின் உருவம், இவர்கள் வாழ்தலினும் இறத்தல் நன்று.

உன் செல்வம் ஆணிவேர் அற்ற மரம்; பிறர் துயரத்தால் பெற்றது, அவ் ஆக்கத்தில் உன் முயற்சி சிறிதே. பிறர் உழைப்பையே நம்பி உள்ள செல்வம் விரைவில் அழியும். மழையால் வரும் ஆற்று வெள்ளப் பெருக்கு மழை நின்றதும் வற்றிப்போகும். ஊற்று நீரையும் உறை பனியையும் தோற்றுவாயாகக்கொண்ட ஆறே என்றும் வற்றாத ஜீவநதி.

ராமபக்தியே அத்தகைய தோற்றுவாய்.

பெரியாரைப் பேணி தமராக் கொளல்

சித்திர கூடத்தில் சனகன் மனைவி சுநயனா கோசலையின் பாதங்களைப் பற்றிக் கொண்டு கூறுவது.

சிறியோருடைய பெருமை பெரியோரைச் சேர்ந்தொழுகலால் உண்டாவதே. தீயின் புகைமேலே எழும்புவது அதன் கீழே உள்ள நெருப்பால் அன்றோ ! மலை உச்சியில் உள்ள புல்லையும் மரங்களையும் தாங்குவது மலையே அன்றோ !

மக்கள் சூரியனுக்குக் கருப்பூர ஆலத்தி எடுக்கின்றனர். அதனால் ஒளி பெறுவது சூரியன் அல்ல; கருப்பூரம் தான். சூரியனைக் காண கருப்பூரம் உதவுவதில்லை.

இராமனுக்கும், இரவிகுலத்துக்கும் என் மகள் சீதையால் என்ன பணிபுரிய முடியும்? அவளன்றோ, இராமனை அடைந்ததால் பெருமை அடைகிறாள்?

பரதன், இராமனிடம் சித்திரகூடத்தில் 'எதற்குமே விதியின்மேல் பழிபோடுவது மனிதர் வழக்கம். என் துர்பாக்கியம், என்னை ஈன்றாளின் நேர்மையற்ற ஆசை, என்னை ஆளுடையவன் என்பால் கொண்ட அன்பு, காலத்தின் கோலம் யாவும் ஒன்று சேர்ந்து என்னை இந்நிலைக்குக் கொணர்ந்துள்ளன.'

பகலில், போகவேண்டிய பாதை அறியாது, தடுமாறுவோன் தன் தவறுக்கு சூரியன்மீது பழிபோடுவது போலும் இது. 2-267

சித்திரகூடத்தில் ஸுநயநாவின் வாக்கு வாழ்க்கையில் இன்ப-துன்பங்கள், நன்மை-தீமைகள் கலந்துள்ளன. ஆனால், நாம் காண்பதாகக் கருதுவதும், கவல்வதும், துன்பம் தீமைகளைப் பற்றியனவே.

காகங்களும், ஆந்தைகளும், வாத்துக்களுமே எங்கும் காணப்படுகின்றன. அன்னங்களைக் காண்பது அரிது.

மேலும், விதியின் கொடுமையை அடிக்கடி நினைக்கிறோம். அதே விதி நமக்குச் செய்த நன்மைகள் சிலவே ஆயினும் அவற்றை நினைப்பதில்லை. விதி நம் வாழ்க்கையில் புகுந்து விளையாடுகிறது : விளையாட்டுக்கு முறை ஏதும் இல்லை. குழந்தைகளின் விளையாட்டைப் போலவே தன் இச்சைப்படி. 2-281

இயற்கையை வெல்ல முடியுமா? பெண் ஒருத்தி அழகிய ஆணைக் கண்டு காமுறுவாள் ஆயின். அவளுக்குத் தன் உடன் பிறந்தார், தந்தை, தனயன் யாவரையும் புறக்கணிப்பாள்.

சூரியகாந்தமணி சூரியனைக் கண்டதும் ஒளிகாலுவதை அதனால் தடுக்க இயலாது. காம நெகிழ்ச்சியும் அத்தகையதே. 2. 17-3

சூர்ப்பணகையின் காமத்தை இலக்குவன் கூற்றில்; பிறருக்கு ஏவல் செய்வோன் இன்பத்தை விழைவது போலும், பரம ஏழை பிறருடைய நன் மதிப்பை நாடுவது போலும், களவும் கள்ளும் பேணுவோன் செல்வத்தை விரும்புவது போலும், பாதிவிரத்யத்தினின்று வழுக்கிய பெண் நற்கதி வேண்டுவது போலும், உலுத்தன் புகழைத் தேடுவது போலும், பற்றுக்கள் அறாதவன் வீடு பேறு போலும், ஆகாயத்தைக்கறந்து பால்குடம் நிரப்புவது போலும் அவளுடைய ஆசை. 2.17-8

சூட்டிட நீட்டும் ஏடவிழ் மாலை

இராமன் வில்லை முறித்ததும், மக்கள் ஆரவாரித்தனர், ஆடவர் ஜாஞ்ஜா, மிருதங்கம், சவகப், பேரி, தபலா, டோல் போன்ற இசைக் கருவிகளை முழங்கினர்; பெண்கள் மங்கள கானம் பாடினர். சீதையின் தாய் வெய்யிலால் வறண்ட பயிர் மழையால் தழைத்தது போலத் தோன்றினாள். சனகன் வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டுச் சோர்ந்தவன் காலில் தரை தட்டியதுபோல உயிர் பெற்றான், சீதை சாதக பறவை மழை நீர் பெற்றது போலக் களித்தாள்.

சதானந்தன் ஆணை இட, சீதை, நான்கு தோழியர் புடைசூழ, சனகன் அன்றே முடித்த விர்வஜித் யாகத்தின் மணம் கமழும் வெற்றி மாலை ஏந்தி, அன்னப்பேடைபோல

நடந்து வந்தாள். இராமன் அருகில் வந்ததும் நாணி நின்றாள். காதல் ஓங்க, இராமனை நோக்கினாள். இராமனுடைய முகஒளியால் செயல் இழந்து, தெளிவுற்று அம்மாலையை இராமன் தோளில் அணிவித்தாள். 1-263

பற்றுக்களால் ஐயமும் அச்சமும்

ஆசை அறாதவனும், உலுத்தனும், பிறரை ஐயுறுவதும் அஞ்சுவதும் இயல்பு.

நாய் ஒன்று வறண்ட எலும்புத் துண்டை கடித்துக் கொண்டிருக்கிறது. அவ் வழியே சிங்கம் போய்க் கொண்டிருக்கிறது. தன் எலும்புத் துண்டைச் சிங்கம் கவர்ந்து விடுமோ என ஐயுற்று அஞ்சிய நாய் அந்த துண்டை வாயில் கவ்விக்கொண்டு ஓடுகிறது.

அவ்வாறே, தேவர் தலைவன் இந்திரன் நாரதனைக் கண்டதும், தான் ஆயிரம் வேள்விகளை இயற்றிப் பெற்ற பதவியையும், தான் நுகரும் செல்வச் சிறப்பையும் நாரதன் பறித்து விடுவானா என்ற ஐயத்தையும், அச்சத்தையும் கொண்டான். 1.125

அவை யடக்கம்

உயரமாகப் பறக்கும் வல்லமை உடைய கருடனாலும் சூரியனை அடைய இயலாது; கொதுகாலும் இயலாது.

இராமனுடைய புகழைப் பிரமனாலும் கூற இயலாது; என்னாலும் இயலாது. இதை அறிந்தும் யான் இம் முயற்சியை ஏற்றுக் கொண்டேன். அம் முயற்சியைப் பாராட்டுவீராக.

வால்மீகியும் நாரதனும் புகழாத ராம குணாதிசயங்களை நான் கூற முடியும் என்ற கருத்தால் அன்று; என் மனத் திருப்திக்காகவே எழுத முற்பட்டேன்; பிறருக்காக அன்று. 1.7;...?

தெருண்ட மேலவர் கீழ்வர்ச் சேரினும் அவர் புன்மையை மாற்றுவர்

சுடர் மணிகள் இமைக்கும் நெற்றிக்கு அருகில் கொடிய நச்சுப்பையுடன் பல்லும் உளது. எனினும் மணியை நச்சு அணுகாது. மணியின் ஒளி நச்சையும் நிறம் பெறச் செய்யும்.

நல்லோர் தீயோர் அருகில் இருந்தாலும் அவரைத் தீமை அணுகாது. நல்லோ ருடைய சகவாசம் தீயோரைப் புனிதமாக்கும். 1.3.5

பாதரஸம் பட்டதும் பித்தளையும் பொன் ஆகும்.

காவியப் பொழிவு

மணி, மாணிக்கம், முத்து முறையே நாகம், மலை, யானையினின்று கிடைத்தாலும், அவை தத்தம் பிறப்பிடத்தில் ஒளி கால்வதில்லை. அரசனுடைய மகுடத்திலும், அழகிய பெண்ணின் மேனியிலுமே அவற்றின் பெருமை விளங்கும். அவ்வாறே, கல்வி கேள்விகளில் சிறந்த கவிஞனுடைய பெருமை அவனுடைய கவியில் விளங்கலும் பக்திப் பொருளால் மட்டுமே விளங்கும். பக்தியை உட்கொண்டிருந்தால், கலைமகள் பிரமலோகத்திலிருந்து மகிழ்ச்சியுடன் அக்கவிஞனிடம் ஓடோடி வருவாள். தோ 1.11.

ஓர் அழகிய நங்கை தேர்ந்த அணிகலன்களைப் பூண்டிருக்கலாம்; எனினும், தகுந்த ஆடை அணியாவிட்டால், அணிகள் விளங்கா.

அவ்வாறே, கவிதைக்குரிய முறையான யாப்பு, அணிகளைப் பெற்றிருந்தும், இராமன் பெயர் பொதிந்திரா விட்டால், காவியம் பொலிவு இராது தோ 1.10.

கம்பனும் துளசிதாசரும்

இத்திருவை நிலவேந்தர் எல்லோரும் காதலித்தார் எனச் சீதையை மணம்புரிய வந்த அரசர்களைக் கம்பன் குறிப்பதைத் துளசிதாசர் :

கருடனைப் போன்று உயரத்தில் விரைவாகப் பறக்க ஆசைப்படும் காகம்; சிங்கத்துக்கு உரியதை விரும்பும் முயல்; காரணமின்றிப் பிறன் மீது சினங்கொள்வோன் தன் உயர்வை நச்சுதல்; சிவனிடம் பகைமை கொண்டவன் செல்வத்தைச் சேர்க்க முயல்வது. இரவலர்க்கு ஈயாத உலுத்தன் புகழை நாடுதல்; ஆசைகளுக்கு அடிமையானவன் தூய வாழ்க்கையைப் பேணுதல்; திருமால் அடியார் அல்லாதவன் துறக்கம் அடைதல் இவை பயன் தரா; அத்தகையது சீதைபால் அவ் அரசர் கொண்ட காதல். தோ 1.267

உண்மையும் கரவும்

உண்மையோடு கரவு கலந்தால் உண்மை நிலைபெறும், கரவு வெளியேறும்.

பாலுடன் நீர் கலந்தால் வேற்றுமை தெரிவதில்லை. அதில் வஞ்சமெனப்படும் புளிப்பு கலக்கும் போது, பால்-நீர் வெளியேறி, பால், திரிந்து உண்ணற்கு இனிய 'பனீர்', நிலை பெறுகிறது. ஸோ 1.57.2

கால் நகம் முதல் உச்சிவரை வெகுளியில் தோய்ந்த பரசுராமன் இராமனை ஏசல் :
அடடா, பால் வடியும் முகம்; காளகூட விஷம் நிரம்பிய மனம்
புகழ் என்னும் வெள்ளை சாத்திய உடல்; மை எனக் கருத்த உள்ளம் 1.277.4

இந்திரனுடைய மகன் ஜயந்தன் இராமனுடைய வல்லமையை அறிய' காக வடிவில் வந்தது கடலின் ஆழத்தை ஓர் எறும்பு அளக்க முயல்வதை ஒக்கும் 3.1.3

காலத்தால் ஆற்றா நன்றி

உண்ணும் நீர் வேட்கையால் உயிர் இழப்பான் ஒருவற்கு, அவன் செத்தபின் அமுதக்கடலில் குளிப்பாட்டுவேன் எனக் கூறுவதால் பயன் என்?

நீர் வற்றிக் காய்ந்துபோன பயிருக்கு மழையால் பயன் என்?
உரிய காலத்து உதவாது பின்னர் கழிவிரக்கப்படுதலால் பயன் என்? 1.261

சனகன் அவையில் வில் இறுக்க எழும் இராமனைக் காதல் தீயால் வாடும் சீதை காண்கிறாள். அவளுக்கு ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகத் தெரிகிறது. அவளுடைய எண்ணங்களைக் கவி கூறுகிறார்.

யான் கண்ட சில...

இராமன் ஏன் ஒரே அம்பால் இராவணன் உரத்தைக் கிழிக்கவில்லை என்ற சீதைக்குத் திரிசடை கூறுவது.

இராவணன் இதயத்தில் நீ வாழ்கிறாய், உன் இதயத்தில் இராமன் வீற்றிருக்கிறான். இராமன் (விஷ்ணுவின்) வயிற்றில் எல்லா உலகங்களும் உள்ளன. இராவணன் இருதயத்தில் பாணம் விடுவதால் அவை அனைத்தும் நாசம் உறும். அது தகுமா ?

அதனால், அவன் தலைகளை அறுத்தால், அவன் புத்தி பேதுறும். உன்னையே எண்ணும் தியாக நிலை தடுமாறும். அப்போது இராமன் அவன் நெஞ்சில் அம்பு செலுத்துவான். 6.99 (சந : சௌவாய்)

அயோத்தியில் இராமன் வானரருக்கு நன்றி கூறும்போது, 'உம் உதவியால் நான் இராவணனைவென்றதும் வீடணன் இலங்கை அரசன் ஆனதும்' என, வானரரே 'கொதுகு கருடனுக்கு என்ன உதவி செய்யக் கூடும்?' என எண்ணி, நாணி நின்றனர்.
6.118.5

விலங்கு பறவை ஊர்வன ...

நகர மக்கள் பரதனைப் புகழும்போது பாம்பின் கொடுமையையும் அதனால் உண்டாகும் பாவத்தையும் பாம்பின் தலையில் உள்ள மணி பெறுவதில்லை. அந்த மணி விஷத்தை முறிக்கிறது. வறுமையை அகற்றுகிறது. 2.184.4

பரதனுடைய பண்புகள் பல கவிஞராலும் புகழப்படுபவை. தன் புகழ் கேட்ட பரதன் '' என் செயல், பேச்சு, உள்ளம் யாவுமே இராமனால் பண்படுத்தப்பட்டவையே உயர்த்தப்பட்டவையே '' எனத் தோள்களை உயர்த்தி அறைகிறான்.

''கிளி பேசுகிறது; குரங்கு, கரடி போன்ற விலங்குகள் ஆடுகின்றன. அவற்றைக் கேட்டும் கண்டும் மக்கள் மகிழ்வர். ஆனால், அப் பேச்சும் ஆட்டமும் அவற்றின் திறமையைக் காட்டுவன அல்ல. அவற்றைப் பழக்கிய ஆசானின் திறமையையே காட்டும் அவ்வாறே .. 2.299.4

இராமன் காட்டுக்குப் போவான் என்பதை அறிந்த துயரத்தில் கோசலை கூறுவது:

யானைகள், சிங்கங்கள், அரக்கர் தொடங்கிய பல பயங்கர பிராணிகள் திரியும் இடம். காட்டில் இராமன் தனியே இயங்குவது விஷப் பூண்டுகள் நிறைந்த கானில் ' ஸஞ்ஜீவனி ' மூலிகை ஒளி காலுவதை ஒக்கும். 2-59 D

இவ்வாறே, இராமன் சீதையைத் தன்னோடு காட்டுக்கு வராமல் தடுக்கக் கூறும் இடத்தில் அமைகிறது.

'தேவர்நாட்டுப் பொய்கையில், கமலவனத்தில் வாழும் அன்னம் உவர் நிலத்தில் வாழ முடியுமா?

சிறந்த மாம் பிஞ்சுகளை உண்டு வாழும் பறவைக்கு முட்புதரில் என்ன உணவு கிடைக்கும்? ' 61-3

கைகேயி மாளிகையில் இராமன் கண்ட தசரதன் பெண் சிங்கத்தைக் கண்ட முதிய யானை போலக் காணப்பட்டான். 2-40 D

உவமை—விலங்கு

பரதன் கேகயத்துக்குச் சென்றிருந்தபோது இராமன் அவனை நினைந்திருந்தது, கரையில் முட்டை இட்டு நீரில் வாழும் ஆமை எங்கிருந்தாலும் தன் முட்டையை எப்போதும் நினைந்திருப்பது போலே. 2.7-4

இராமனுடன் போர்புரிய எண்ணிய அரசரிடம் சனகன் கூறுவது: கருடனுக்கு எதிரில் காகம், சிங்கத்துக்கு எதிரில் நரி போலும் இராமன் முன்பு நீவிர் உலுத்தனும் திருடனும் புகழை விரும்புவதும், காமுகன் களங்கமற்ற வாழ்க்கையை நாடுவதும், அரியின் திருவடியைப் புறக்கணிப்போன் வீடு பெற விரும்புவதும் போல்வது நீர் சீதையை அடைய முயல்வது. அது விண். 1.267-1, 2

மயிலின் உருவம் அழகியது; குரல் இனியது. ஆனால். அது உண்பதோ விஷப் பாம்புகளை. அவ்வாறு, மூடர் புற அழகால் கவரப்பட்டு உண்மையான இயல்பை மறக்கின்றனர்.

இயற்கை

சுகன், சாரணன் என்ற ஒற்றர் வாயிலாக இராமன் இராவணனுக்கு விடுத்த திருமுகத்தைக் கண்ட இராவணன் கூற்று:

பூமியில் படுத்துக்கொண்டு கை நீட்டி ஆகாயத்தைப் பிடிக்க முயல்வது ஒக்கும். இந்த எளியதாபதன் தன் சொல்மேதையால் என்னை வெல்ல எண்ணுவது. 5-57.1

சித்திர கூடத்தில் பரதனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி வனவாசத்திலிருந்து இராமன் அயோத்திக்கு மீளாது, அங்கே வதியச் செய்யுமாறு தேவர் ஸரஸ்வதியைக் கேட்கின்றனர். அப்போது ஸரஸ்வதி கூற்று:

பரதனுடைய உறுதி நான் செய்யக்கூடிய எந்த மாயையையும் கடக்க வல்லது; இரவியை மதியின் ஒளி மங்கச் செய்யுமா? இராமனும் ஸீதையும் பரதனுடைய மனத்தில் குடிகொண்டுள்ளனர். அவ் ஒளி உள்ளவரை அவர் மனத்தை இருள் கவ்வுமா? ''

இதைக்கேட்ட தேவர் பகல் பறவைகள் இரவில் செயலிழந்து தவிப்பதுபோல ஆயினார் 2.295. 3, 4

இராமன் கார்காலத்தின் காட்சிகளைப் பல உவமைகளால் இலக்குவனுக்குச் சொல்வது:

கீழோர் நேயம்போல மின்னல் தோன்றியதும் மறைகிறது. மேகம் கீழே பூமிக் கருகில் வந்து மழை பொழிவது, பொது மக்களுடைய அறியாமைக்கு இறங்கி வந்து தம் அறிவை அவருக்கு ஊட்டுவதுபோல. மழைத் தாரைகளின் வீச்சை மலை பொறுத்துக் கொள்கிறது. கயவர் சொற்களைப் பெரியோர் தாங்கிக் கொள்வதுபோல. சிற்றாறுகளில்

கரைகாணா நீர் நிரம்பி வழிந்து ஓடுகிறது; சிறு செல்வம் ஈட்டியதும் புலவோர் வரை யரை அறியாது ஆரவாரிப்பது போல தெளிவிலாக் கலங்கல் நீர் பரந்து பாய்ந்து பூமியை மறைக்கிறது, உலகத்தாரை மாயை மறைப்பதுபோல. பல இடங்களிலிருந்து வரும் நீர் ஒன்றுகூடி ஏரிகளில் தேங்குகிறது. நற்குணங்கள் நல்லோரிடம் சென்று தேங்குவது போல. ஆற்றுநீர் கடலில் சேர்கிறது, பல்உயிர்களும் இறுதியில் பரமாத் மாவை அடைவது போல. 4.4. 1-4

நிலத்தில், பசும் புல் படர்ந்து வழிகளை மறைத்துவிடுகிறது. பொய்ஞ் ஞானமும் குதர்க்க வாதமும் மெய் அறிவை மறைப்பது போல. 4-14 D

நாற்புறமும் பாவும் தவளைகளின் ஒலி, வேதங்களைப் பயிலும் சிறாரிடமிருந்து எழும் 'சந்தஸ்' போன்றுளது. புதுத் தளிர்களும் மொட்டுக்களும் மரங்களிலும், கொடி களிலும் தோன்றுவது பகுத்தறியும் மக்கள் மனத்தில் மலரும் புதுக்கருத்துக்கள் போல. வேனிற்காலப் பூக்கள் இலைகளை உதிர்க்கின்றன நல்ல அரசாட்சியில் கேடு சூழ்வோர் முயற்சிகள் உதிர்ந்து வீழ்தல் போல மண்துகள்களால் வேறு எதுவும் காணப்படாதது சினம் மூள 'அறம் காணப்படாதவாறு. வயல்களில் தானியம் நிறைந்து காணப்படுவது. பிறருக்கு உதவுவோன் செல்வம்போல. கார் இருளில் மின்மினிப் பூச்சிகளின் ஒளி பாசங்குக்காரர் ஒன்றுக்கூடித் தம்மை அறிவித்துக்கொள்வது போல. மழைநீரால் வயலில் வரப்புகள் அழிந்து விடுகின்றன, சுதந்திரம் பெற்ற பெண்கள் நிறை அழிவது போல. உழவர் களை கட்டவர் தளை விட்டெறிவது போல. சக்ரவாகப் புட்கள், ஆகாயத்தில் காணப்படுவதில்லை, கலியுகத்தில் அறம் காணப்படாதவாறு.

உவர் நிலத்தில் மழை பெய்தும் புல்லின் தலை காண்பதரிது. பக்தர் மனத்தில் காமம் தலை எடுக்காததுபோல. நிலம் பல்லுயிர்க்களால் பூண்டுமுதல் ஐயறிவுப் பிராணிகள் வரையவும் விளங்குகிறது. நல்ல ஆட்சியில் மக்கள் சிறப்புடன் வாழ்வது போல, இங்கும் அங்கும் மழைக்கு ஒதுங்குகின்றனர். பாதசாரிகள், ஞானம் உண்டாகப் புலன்கள் ஒடுங்குமா போல. —4.15

அவ்அப்போது பெருங்காற்று விசி மேகங்களைச் சிதறடிக்கிறது : குலத்தில் தீய மகன் ஒருவனால் ஒழுக்கமும் செல்வமும் ஒருங்கே சிதறண்பது போல.

ஆகாயத்தில் மேகங்கள் கவிழ்ந்து இருள் மூடுவதும், சூரியன் அவ்வப்போது தோன்றி ஒளி தருவதும், கூடா நட்பால் அறிவு மழுங்கிவதும், நல்லவருடன் பயில்தலால் அறிவு ஒளிர்வதை ஒக்கும். 4.15-D

குளிர் மிகும்போது ஈக்களும் கொசுக்களும் அழிகின்றன, அந்தணன் சாபத்தால் குடும்பம் அழிவதுபோல. அழுக்கு இலது, பூமி பொலியுடன் விளங்குகிறது; தருமக்கலை வல்லுநன் உள்ள அரசவை போல. 4.16.3, 4

சுமந்திரன் திரும்பியபோது தசரதன் அமுதம் அற்ற சந்திரன் போலத் தோன்றினான். 2,148.2

நீர் வற்றவற்ற தடாகத்தில் உள்ள தாமரைமலர் வாடுவது போன்றான். 154.1

நந்திக் கிராமத்தில் பரதனுடைய வாழ்க்கையைக் கூறும் கவி உபயோகிக்கும் உவமைகள்.

சரத்ருதுவில் நீர் தெளிந்து சுருங்கி உள்ளது ; எனினும், அக்காலத்தில் பயிர்கள் செழித்து வளர்கின்றன; தாமரையும் கொடிகளும் ஒளி பெறுகின்றன.

பரதனுடைய நிர்மல மனமாகிய வானில் உள்ள தாரகைகள் அமைதி, புல னடக்கம், செயலடக்கம், உபவாசம் ஆகியவை.

பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் இராமன் மீள்வான் என்ற உறுதியான நம்பிக்கையே அவ்வானின் துருவமீன், இராமனைப் பற்றிய நினைவே வானின் ஆகாய கங்கை (நெடுந் தொலைவில் உள்ள விண்மீன்களின் ஒளித்திரள் - Milky way) இராம னிடத்து அவன் கொண்டுள்ள அன்பே களங்கமற்ற தேய்வற்ற முழுநிலா. அந்நில வொளியில் பரதனுடைய பக்தியும் பூசனையும் பாதுகைகளின் பாலன ஆயின,

பரதன் கூறுவது :

இராமனை வனத்துக்கு அனுப்பவும், நான் அரசாளவும், தந்தை ஆணை இடச் செய்த என் தாயின் சூழ்ச்சிக்கு, நானும் உடந்தையாக இருந்தேன் என உலகோர் என்னைப் பழிக்கலாம். அப்பழிமொழிகளை ஏற்க நான் பிறந்துளேன். இருக்கட்டும். நீர் உள்ள இடத்தில் சேறும் இருத்தல் இயற்கை. 2,182-2

கம்பன்—அப்பிணி அவிதந்தது

இராமன் வனத்துக்குப் போவான் என்பதை அறிந்த நகர மக்கள் 'இரவு இல்லாத பகல் போலவும் மதி இல்லாத இரவு போலவும் உயிர் இல்லா உடல் போலவும் இராமன் இன்றி இந்நாடு ஒளி இழந்து செயல் அறப்போகும்'. 2-50.சா. 2

ஆனால். இராமனுடைய மனநிலை வேறு.

இளம் யானை பிடியுண்டு, அரச பதவி என்னும் தறியில் கட்டுப்பட இருந்த அச்சமயம், தளைகள் நீங்கிக் காட்டுக்குள் ஓடும் அவ் யானையைப் போல, இராமன் ஆனந்தம் அடைந்தான். 2,51 தோ

சொல்லும் பொருளும் போலே: நீரும் நீர் அலைகளும் போலே நீர் அலைகள் வெவ்வேறாகக் காணப்படினும் அவற்றில் நீர் ஒன்றே. 1.18 D

இலக்குவனுடைய துடுக்குத் தனத்துக்காகப் பரசுராமன் இராமனைத் தண்டிக்கக் கோடரியை ஓச்சுகிறான்.

இராமன் புன்னகையுடன் கூறுவது இலக்குவனுடைய துடுக்குப் பேச்சுக்காக என் மீது சினம் பூண்கிறீர்.

கொடியோர் நேர்மை அற்றவரை அஞ்சி அணுகார்; நேர்மையையே எதிர்ப்பர். ராகுவும் வளைந்த சந்திரனைப் பற்றுவதில்லை; பூர்ணசந்திரனையே பற்றும்.

திருமணத்துக்குப்பின், சீதையுடன் இராமன் அயோத்திக்கு எழுந்தருள்வதைக் கவி வர்ணிக்கிறார் :

காளமேகம் ஆகாயத்தில் தோன்றுவதை ஒத்தது. இராமனின் தோற்றம்; தேவர்கள் சொரியும் கற்பகப் பூமாலைகள் வானில் பறக்கும் கொக்குகள்; தோரணங்களில் தொங்கும் ரத்நங்கள் வானவில் (இந்திர தனுஷ்); மாடங்களில் மிடையும் பெண்கள் மீன் இனங்கள்; பேரிகை, முழவு ஒலி, இடி: நடமாடும் இரப்போர், சிறுபறவைகள், தவளைகள், மயில்கள்: அவ் ஊரின் தோற்றம் வறட்சிக்குப்பின் பெருமழையில் நனையும் பயிர் போன்றது.
1.347. 1-3

தசரதனுக்கு ஜனகன் சீதையுடன் பல சீதனப் பொருள்களைத் தருவது :

கடலுக்குத் தர்ப்பணம் (திருப்தி) செய்யச் சிறாங்கை நீரைச் சொரிவது ஒக்கும்.
வணங்கிய தலையும், குவித்த கைகளும். பணிவார்ந்த (அன்பு நிறைந்த) நெஞ்சுமே அன்றோ தேவர்கள் வேண்டுவது 1.326 ச 1

இராமன் சிறியன் ஆகிலும் வில்லை எடுத்தான். உருவு கண்டு எள்ளாமை வேண்டும். சிறிய உருவினனான அகத்தியன் எங்கே? கரைகாணாக் கடல் எங்கே? அவன் கடலைக் குடிக்கவில்லையா? சிறிய இரவி மண்டலம் மூவுலகங்களிலும் இருளை நீக்க வில்லையா?

பிரதாப் பானு என்ற அரசர் மலை உச்சியில் புல்லும் ஆழ்கடலின்மேல் நுரையும் பெரும் புவியின்மீது மண்துகளும் உள்ளன போன்று, பெரியோர் புல்லரைத் தாங்குதல் இயற்கை.
167-4

மனித இயல்பு

இலங்கையிலிருந்து திரும்பிய அனுமனுடைய வருகை மயேந்திர மலையில் உள்ள வானரருக்கு நீர்சுருங்க உலரும் நிலையில் உள்ள தடாகத்து மீன்களை வெள்ளம் வந்து உயிர்ப்பித்தது போன்றது. 5.28-3

இராவணனுடைய அறியாமையையும் தற்பெருமையையும் அங்கதன் பழிப்பது:
விட்டில் விளக்கில் விழுந்து மாய்வதையும், கழுதை பொதி சுமப்பதையும் வீரமாகவோ, பேராற்றலாகவோ எவரும் கருதுவதில்லை; அவற்றைப் போற்றுவதும் இல்லை.
6.29 தோ

அங்கதன் திரும்பிச் சென்ற பின், மண்டோதரி மீண்டும் இராவணனிடம் மன்றாடும்போது சொல்வது :

விதி தடியால் அடித்தோ, ஆயுதத்தால் தாக்கியோ மனிதனைக் கொல்வதில்லை. கால அடைவில் அவனுடைய அறம், வலிமை, ஆய்வுத்திறன் ஆகியவற்றைச் சிறுகச்சிறுகப் பறித்துக்கொண்டு விடுகிறது. இறுதியாக, அவன் மரண நிலையை அடையும்போது அவன் புத்தியை மயக்கி விடுகிறது. 6.37:4

கீதையிலும் புத்தியின் அழிவு, எல்லாம் அழியும் கடைநிலையாகக் கூறப்படுகிறது. 2.63

இராவணன் அவைக்கு அங்கதன் இராம தூதனாகச் சென்றபோது ஒரு பலப் பரீக்ஷை நடக்கிறது. அவன் ஊன்றிய காலை எடுக்கப் பல அரக்க வீரர்கள் முனைந்து தளர்ந்தனர்.

கோடி இன்னல்கள் வந்துற்ற போதும், நல்லோர் இதயம் நீதி நெறியினின்று பிறழாதது போன்று அங்கதனுடைய பாதம் பூமியிலிருந்து அசையவில்லை. 6.34 D2.

நல்லோரை அடக்கி ஆள முயலும் கொடிய மன்னன் ஆணையைப் போல இராவணனுடைய அம்புகள் பயனற்றன. 6.92.2

இராமன் அம்புகளால் இராவணன் தலைகளை அறுக்க அறுக்க அவை மீண்டும் முளைத்தன என்ற கருத்துக்குக் கவி கூறும் உவமைகள்:

அ) உலக இன்பங்களை நயந்தவாறு துய்ப்பவனுடைய ஆசைகள் நாள்தொறும் புதியனவாகப் பெருகுவதுபோல. 6.92 D

ஆ) புனிதக் கோயில்களில் ஒருவன் இழைக்கும் பாவம் வேறு இடங்களில் இழைக்கப்படும் அதே பாவங்களினும் பெரிதாவது போல. 97D

இ) முதலாளிக்கு இலாபம் பெருகப்பெருக ஆசையும் பெருகுவதுபோல 6.102.1

இராமனைக் காட்டில் விட்டு மீளும் சுமந்திரன் மன நிலைமையைக் கவி பல உவமானங்களால் காட்டுகிறார்.

உலுத்தன் புதைத்து வைத்த தனத்தைப் பறிகொடுத்தது போலவும், வீரன் போரில் தோற்று, ஆயுதங்களைக் களத்தில் போட்டு ஓடியது போலவும், உயர்குலத்தில் பிறந்து, வேத விற்பன்னன் ஆகி, ஒழுக்கத்தில் சிறந்த அந்தணன் கள் குடியன் ஆகி தன் நிலைமையைக் கண்டு கழிவிரக்கப் படுதல் போலவும், நற்குலத்தில் பிறந்த நங்கை நல் ஒழுக்கத்தினள் ஆகியும், பதிவிரதை ஆக இருந்தும், ஊழ்வினையால் கணவனால் துறக்கப் பட்டவள் ஆதல் போலவும் இருந்தான். 2.144.4, 144D, 145.1

பரதன் கைகேயியைக் கடிந்துரைக்கும் சொற்களில் ஒன்று.

நீ மரத்தை வெட்டி வீழ்த்திய பின், அதன் கிளைகளுக்கு நீர் வார்க்கிறாய். மீன் பிழைக்க வேண்டி தொட்டியில் உள்ள நீரைத் திறந்து விடுகிறாய். 161. 1, 2

இராமன்-மரம், நீர். பரதன்-கிளை, மீன்.

ஒருவனைக் கிரகங்கள் துன்புறுத்துகின்றன; அவன் வாதரோகத்தால் நலிகிறான். அவனைத் தேள் கொட்டிவிட்டது; மேலும் மது அவன் மதியை மயக்குகிறது. அத்தகைய வனுக்கு மருந்து ஏது? 2.180 D

கைகேயி தன் செயலுக்கு நாணமோ, அதைக் கூறுவதில் தயக்கமோ இன்றி, நடந்தவற்றை இராமனிடம் கூறுகிறாள். அவளுடைய சுடுசொற்கள் அம்புகள்; நாக்கு வில்; எய்வதற்கு தசரதன் இலக்கு.

சொல் அம்புகள் அவன் மருமத்தைத் துளைத்தன. கொடுமை வீர உருவை எடுத்துள்ளது. 2.41.1,2

சித்திரக்கூடத்தில் இராமனும் இலக்குவனும் ஸௌமித்திரையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்க, அவள் தன் மடியில் அவர்களை இருத்தினாள்.

ஸௌமித்திரையின் துன்பமும் இன்பமும் கலந்த நிலையைத் தன்னால் கூற இயலாது எனக் கவி கூறுகிறார்.

''உணவின் ருசியை அறிவான் எனினும் மூங்கையான் அதைக் கூற வல்லவன் ஆகலன்'' :

மக்கள் இயல்பு

தசரதன் கைகேயியிடம் இராமனுக்கு முடிசூட்டுவது பற்றிச் சொன்னபோது கைகேயி தன் சினத்தையும் மனத்துள் பொதிந்திருந்த பொறாமை உணர்ச்சியையும் அடக்கி வைத்திருந்ததற்கு உவமை.

ஒருவனுடைய திருட்டு வெளிப்பட்டபோது, அத்திருடன் அரசனால் கொல்லப் பட்டபோது திருடனுடைய மனைவி எவ்வாறு அரசனையோ, நீதிபதிகளையோ குறை கூற முடியாமல் துன்பத்தைத் தன் மனதுள் பொதிந்து வைத்திருப்பாளோ அவ்வாறு கைகேயி தன் எண்ணங்களைக் கரந்திருந்தாள். 2.27.3

சீதையும் இராமனும் ஒருவரைஒருவர் கண்டு காதல் கொண்டிருந்தனர். வில்லை எடுக்கும்போது சீதையின் பிறழும் கண்கள் இராமனையும் வில்லையும் மாறி மாறி நோக்குகின்றன.

சந்திர மண்டலம் போன்ற திருமுகத்தில் காமதேவனின் கொடியில் உள்ள மீன்கள் ஆடிக்கொண்டிருந்தன போலும்! 1.2581

இராமன் வில்லை நாணேற்ற அருளுமாறு சிவனைத் தொழுகிறாள். இயற்கை யான நாணம் அவள் வாய் ஒலியை வாய்க்குள் அடக்கிவிடுகிறது. கண்ணில் தோன்றிய நீர்த்துளி ஒன்று கண் ஓரத்தில் நின்றது. உலுத்தன் தன்னிடம் உள்ள தங்கத்தைப் பிறர் காணாதவாறு மறைத்தல் போல. 1.259.1

இராமன் சீதையை நோக்கி வில்லையும் பார்த்தது, கருடன் ஒரு பாம்பைப் பார்ப்பது போலே 1.259.4

இராமன் சீதையின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்டான். அவளுக்கு எவ்வொரு கணமும் ஒரு யுகமாக் கழிவது அவன் அறிந்து, வில்லை எடுக்க விரைந்தான். ஏன் : தாக விடாயால் உடலிலிருந்து உயிர் பிரியும் தறுவாயில் எங்கோ அம்ருத தடாகம் இருக்கிறது என அறிவது, என்ன பயன் தரும்? நீர் வற்றிக் காய்ந்தபோன பயிரை மழை காக்க வல்லதா? தகாத செய்கைக்குப்பின் கழிவிரக்கம் வீண் அன்றோ? 1.761.1,2 சானகி மேலும் தளரா முன் வில்லை நோக்கி நடந்தான்.

சிவ தனுசைப் பலர் எடுக்க இயலாமைக்கு உவமை: காமுகன் சொல் பத்தினிப் பெண்டிரை அசைக்க முடியாமை.

அவ் அரசரை மக்கள் இகழ்ந்ததற்கு உவமை: பற்றறுத்தல் இல்லாத துறவியை மக்கள் இகழ்வது போலே.

இராவணனைக் குறிப்பிடும் கவி : எவ்வாறு ஒவ்வொரு இலாபமும் மேலும் பிறர் பொருளை வௌவும் ஆசையைத் தூண்டுகிறதோ அவ்வாறு அவன் உடல்வலிமை, செல்வம், மக்கள், சேனை யாவும் நாள்தோறும் வளர்ந்தன. வெற்றி, புகழ், அதிகாரம், அறிவு யாவும் புதிது புதிதாகப் பெருகின. (6.102.1)

இராமனையும் சீதையையும் கண்ட அயோத்தி மக்கள் கொண்ட மகிழ்ச்சி ''யோகி யாவற்றினும் சிறந்த உண்மையைக் கண்டது போலவும்; நோயாளி (ரோகி) மருந்து (அம்ருதம்) பெற்றது போலவும்; வறிஞன் வேண்டுவன தரும்மணி (ஸ்பர்சவேதி) பெற்றது போலவும்; குருடன் விழிபெற்றது போலவும்; மூங்கையான் நாவில் ஸரஸ்வதி நடமாடியது போலவும்'' இருந்தது.

ஆனந்தத்தில் திளைத்தனர். 1.350.3,4

பரத்துவாசன் பரதனிடம் இராமனுக்கு அவனிடம் உள்ள அன்பைக் கூறுவது : அறிவற்ற மனிதன் எவ்வாறு இன்ப வாழ்க்கையை - 'லௌகீக ஜீவன ; புலன் இன்பங்களில் ஈடுபடுவதை விரும்புகிறானோ - அதை ஒத்தது இராமன் உன்னிடம் கொண்டுள்ள பற்று 2.208.3

பூ மரம் செடி

பூசுண்டி கருடனுக்குக் கூறுவது. முரட்டுத்தனமாக, பணிவின்றி ஞானியிடம் ஒருவன் அபசாரப் பட்டால், ஞானியின் சினம் கணமேனும் காத்தல் அரிது. சந்தன மரத்தையும் மிக உரசினால் தீப்பொறி எழும்பும் அன்றோ? 7.111-8

பரதன் கைகேயியின் மாளிகையை அடைந்தான்.

கைகேயி வனத்திற்குத் தீ இட்டு. அத்தீயால் அனைத்து உயிர்களும் அழிவது கண்டு ஆனந்தப்படும் கீழ்ச் சாதிப் பெண் போன்று இருந்தாள். 2.159-3

இந்திரனைப் பற்றிக் கவிக்கூற்று. தேவர் தலைவன் கபடம், கயமை ஒழுக்கம் உடையவன். பிறருக்கு ஊறு இழைத்தேனும் தன் நலத்தை நாடுகிறான். பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் அவன் இயற்கை புன் காகம் போன்றவன் : பிறரை ஏமாற்றுவதும் திருடுவதும் அழுகலில் விருப்பமும் அவன் இயற்கை.

இராமனையும் வஞ்சிக்க எண்ணித் துணை நாடினான் அம்முயற்சி வெல்லவில்லை 2.302-2

நல்லோர் தமக்குத் தீமை புரிந்தவருக்கும் நன்மையே புரிவர். தன்னை வெட்டிய கோடரிக் காம்பையும் மணக்கச் செய்கிறது அன்றோ சந்தன மரம்? 7.37-4

கடலை வற்றச்செய்ய இராமன் அம்பு தொடுப்பதைக் கூறும் காக பூசுண்டி கருடனிடம் சொல்வது : செயல் முற்றப் பலவகை உபாயங்களைக் கையாளவேண்டும்.

தென்னம்பாளையைச் சீவினால் காய்ப்பிடிப்பு அதிகரிக்கும். நீசனிடம் பணிவும் வேண்டுகோளும் பயன்தரா; திட்டுவதும் மிரட்டுவதுமே பயன்தரும். 5.58D

மத்தளம், மடையன், சூத்திரன், விலங்கு, பெண்-இவை அடி, உதைக்கு அஞ்சிப் பணிபுரிவர் ('அச்சமே கீழ்களது ஆசாரம்') 5.59-3

அசோக வனத்தில் இராமன் நினைவாகிய திரையை இடையில் இட்டு சீதை இராவணனுக்குக் கூறும் அற உரை தாமரை செங்கதிரோற்கு அல்லால் அலராது; மின் மினிக்கு அலருமோ? (5.9.4) இராவணனைக் குறித்த கவிக்கூற்று. அமுதம் போன்ற மழை பொழிந்தாலும், மூங்கில் பூவோ, பழமோ தராது, அவ்வாறு, பிரமன் போன்ற குரு கிடைத்தாலும் மூர்க்கனுக்கு அறிவு வாராது. 6.16 ஸோ 2

அங்கதன் இராவணனுக்குக் கூறுவது: இலங்கை முதிர்ந்த அத்திப்பழம் போன்றது. நீ அதில் வாழும் சிறுபுழு, (அப்பழத்தின் சுவையும் அளவும் அன்றி வேறு அறியாய்)

நான் சிறு குரங்குதான். அந்தப் பழத்தோடு உன்னையும் சேர்த்து விழுங்கி விடுவேன். ஆயின் இராமன் ஆணை அது அன்று. 6.34-2

இதைக்கேட்ட இராவணன் சினச் சிரிப்புடன் 'அடடா, என்ன உவமை! உவமையால் பொய்யை மெய்யாகக் கருதுகிறாய். இத்தகைய தற்பெருமை உன் தந்தை வாலிக்கு இல்லை; அத்தாப(இராமஇலக்குவ)ரடமிருந்து கற்றாய் போலும்!

கும்பகருணன் போர்க்களத்தில் வானரரும் கரடிகளும் எறிந்த கற்களையும் மரங்களையும், விட்ட குத்துக்களையும் தாங்கியது. மதயானை மீது, மரங்களிலிருந்து பூச்சொரிய, அது அசையாது நிற்பது போன்றது. 6.65-3

வானரர் அவன் முகத்தில் மூக்கிலும் காதிலும் நுழைந்தது. வெட்டுக்கிளித்திரள் மலைக்குகையில் புகுந்தன போன்றது. 67-2

இராவணன் போர்க்களத்தில் இராமனிடம் ஓடிச் சென்று, தன் வீரத்தை அறிவிக்க, இராமன் சொல்வது: வீண்பிதற்றல் வேண்டாம்; யான் கூறுவதைப் பொறுயுடன்கேள். மக்கள் மூவகைப் பட்டவர்; ரோஜா போன்று பூவாகவே வாடிப்போவர். மா போன்று பூவாகிக் கனித்து பழமும் ஆவர்; காய்ப் பலா போன்று பூ இன்றிப் பழமே ஆவர்.

சிலர் இயல்பு சொல்லோடு எஞ்சும்;
சிலர் இயல்பு சொல்லிலும் செயலிலும் பொருந்தும்;
சிலர் இயல்பு செயலில் மட்டும் இருக்கும். 6.90 ச

கவி கூறுகிறார்: இராவணன் மாரீசனை மிக்க பணிவுடன் வணங்குகிறான், தலைவன் தன் காரியம் கைகூடுவதற்குக் கொடுமையை மறைத்துக் கொண்டு தன் ஏவலாளருக்கும் பணிவது இயற்கை, அங்குசம், வில், பாம்பு, வளைந்தே பிறரைத் துன்புறுத்தும்.

அகாலத்தில் பூக்கும் பூக்களைப்போல, கயவனுடைய வணங்கிய வாய்ச் சொல்லும் கேடு சூழ உள்ளது என்பதற்கு அறிகுறி, 3.24-4

சரத் காலத்தில் தாமரை பூத்த தடாகங்கள் நிர்க்குண ப்ரஹ்மம் (குணங்கள் இல்லாத முழுமுதல் ஸகுண ப்ரஹமம் (குணங்களுடன் கூடிய முழுமுதல்) ஆகக் காட்சி அளிப்பன போல உள்ளன. 17.1

மேகங்கள் இல்லாத ஆகாயம் பொலிந்து விளங்குவது ஹரி பக்தன் ஆசைகளை அறுத்து பொலிவுடன் விளங்குவதுபோல உள்ளது. 16-4

இரவில் சக்ரசாதகவாகப் புட்கள் (மழை நீரின்றி) துயர் உறுவது பிறர் தசல்வத்தைக் கண்டு பொறாது குமுறும் புல்லரைப் போன்றுள்ளது. 17-2

சந்திரனைக் காண வெப்பம் தணிந்தது நல்லோரைக் கண்டதுமே தாபங்கள் விலகுவது போன்றது. 17-3

கவிஞன் கலை வெறும் எழுத்துக்களாலும் பொருளை உரைப்பது. அவன் எதையும் சிருஷ்டிப்பதில்லை. பிறர் செயலையேதான் அறிந்த அளவு கூறுகிறான். அச்செயலே கவிஞனை ஊக்குகிறது. ஆற்றங்கரையில் கோரைப் புல்-மூங்கிலில்-எப்போதே வண்டு இட்ட துளையில் காற்று புகுந்து இனிய கானத்தை இசைக்கிறது.

கவிஞன் அத்தகைய மூங்கில் துளை; பெரியோர் செயல்களே காற்று. அவற்றின் இணைப்பால் கவி எழுகிறது.

சொல்லும் பொருளும் தளத்தின் போக்கை ஒத்துச் செல்லும் நாட்டியம் போலச் செல்கின்றன. 2.141-2, 3

இராமனும் பரதனும் ஒருவர்பால் மற்றொருவர் கொண்ட அன்பு எனும் காற்று துளஸி எனும் புலவனின் கவிதையை உண்டாக்குகிறது.

மில்டனுடைய கடுஞ்சொற்கள் அரசனை எதிர்க்க மக்களிடம் உணர்வுகளை எழுப்புகிறான். 'அவ்வன்மையை எங்குப் பெற்றாய்? ' எனக்கேட்ப அவன் கூறியவிடை : உருவம் தந்தது என் சொற்களுக்கு உன் கடுமையே.

கவி கூறுவது : கைகேயி தசரதனிடம் வரங்களைக் கேட்டு எழுந்து நின்றாள். பாவம் என்னுப் மலையில் பிறந்த சினம் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று; இரு வரங்களும் அவ் ஆற்றின் இரு கரைகள்; கூனியின் சொற்கள் அதன் நீர்ச் சுழல்; தசரதன் ஆற்றங்கரைமரம் (வேர் அடி மண் அரிக்கப் பட்டதால்) வீழ்ந்து கிடக்கிறான்; விபத்து என்னும் கடலுக்கு ஈர்த்துச் செல்லப்படுகிறான். 2.34.1, 2

ஒரு கையால் ஒருவன் பூக்கொய்கிறான். இருகை கூப்பும் அஞ்சலியில் அப்பூவை வைத்துத் தெய்வத்தை வணங்குகிறான்.

அப்பூவைக் கொய்த கரமும் கொய்யாத கரமும் ஒருங்கே மணக்கின்றன.

அவ்வாறு பெரியோர் தமக்குத் தீங்கு செய்தவரையும் நன்மை செய்தவரையும் சமமாக எண்ணுவர். 1-3 தோ

பிற :

இந்திரஜாலம் செய்கிறவன் தன் வித்தையால் பிறரை மயக்குகிறான்; ஆனால் அவனுடைய உதவியாளன் மயங்குவதில்லை. கடவுள் மாயையால் பிறர் மயங்குகிறார்கள்: பக்தன் மயங்குவதில்லை. 7.104.4

கடவுள் பக்தி இல்லாமல் நற்குணங்கள் மட்டும் இன்பம் தாரா. உப்பு இன்றிப் பிற சுவைகள் கொண்ட உணவை மக்கள் ருசியார். 7-84-4

இராவணனுடைய வீரப்ரதாபங்களுக்கு எதிரில் இராமனுடைய எளிய நிலைமையைக் கண்டு அஞ்சிய வீடணனுக்கு இராமன் கூறுவது :

கேள்; வெற்றிக்கு வேண்டுவன ஆடம்பரங்கள் அன்று. வெற்றி இரதத்தின் சக்கரங்கள் வீரமும், உறுதியும்; கொடிகள் சத்தியமும் நல் ஒழுக்கமும்; வலிமை, பகுத்தறிவு அடக்கம், பிறர் நன்மை பேணல் - இவையே குதிரைகள்; பொறுமையும் தண்ணளியும் கடிவாளங்கள் ; இறைவன் பணியே தேரோட்டி; பற்று இன்மையும், போதும் என்ற மனப்பான்மையும் கேடயமும், வாளும்; கொடை மழு; புத்தி வேல்; சிறந்த விஞ்ஞானம் வில்; அழுக்கற்ற அசையாத சிந்தை தூணி; நடுவுநிலைமை, புலன் அடக்கம், சமூகக் கட்டுப்பாடு நியமம் அம்புகள்; பிளக்க முடியாத கவசம் பிராமணரையும் குருவையும் பூசித்தல்; இவையே வெற்றிக்கு வழி; வேறு இல்லை. 6.80. 1-4

முற்றிலும் வெறுக்கத்தக்க, பயங்கரமான, குருதி ஆறு; அரக்கர் படையும், வானரப்படையும் இரு கரைகள்; ரதங்கள் மணற் புளினங்கள்; சக்கரங்கள் நீர்ச்சுழிகள் எண்ணற்ற யானை, குதிரை, காலாள், வேறுவேறு கழுதைகள், காலாட்கள் இவ் ஆற்றில் உள்ள திமிங்கிலங்கள், மீன்கள். அம்புகளும், வேல்களும், தோமால்களும் பாம்புகள்; விற்கள், எழும்பும் அலைகள்; கேடயங்கள் பெரும் ஆமைகள் இவ்வாறு அப் போர்க்களம் காட்சி அளித்தது. 6.87 D

பரதன் கைகேயியின் செயலைப்பற்றிக் கூறுவது:

காரணத்தினும் காரியமே (செயலே) வலிமை உடையது, கொடிது. ததீசியின் எலும்பால் வஜ்ராயுதம் செய்யப்பட்டது; எலும்பிலும் வஜ்ரம் கொடிது. கனியிலிருந்து எடுக்கப்படும் உலோகக் கரு மண்ணும் கல்லும் போன்றதே; ஆனால் அதிலிருந்து பெறும் இரும்பு வலிது. 2.179 D

இக் கொடுமையும் வலிமையும் காரண-காரியங்களின், இடைவெளியில் உள்ள, மனித உழைப்புச் சேர்க்கையால் உண்டாவது. கோசலை தசரதனுக்கு ஆறுதல் கூறி ஊக்கப்படுத்துகிறாள். நாத! இராமன் பிரிவு கரைகாணக் கடல். அயோத்தி அக் கடலில் தத்தளிக்கும் நாவாய்; ஊர் மக்கள் அந்த நாவாயில் பயணம் செய்வோர்; நீர் படகைச் செலுத்தும் மீகாமன். நீர் உறுதியுடன் நாவாயைச் செலுத்தாவிடின் மக்கள் மூழ்கிவிடுவர். ஆதலின் எழுக, நடாத்துக. 2-154-2,3

இலக்குவன் பரதன் சேனையைக் கண்டு பொங்கி எழுவது புழுதி பூமியில் படிந்து கிடப்பதே. (நாம் புழுதி போலத் தள்ளப்பட்டோம்) ஆனால், ஒருவன் அதை உதைத்தால் தூளி கிளம்பித் தலையிலும் விழும் அன்றோ?

(நம்மை எதிர்த்துப் பரதன் வர, நாம் கிளறி எழுவது இயற்கை) 2.229 D

இராமன், இலக்குவனைச் சமாதானப்படுத்துவது :

சூரியவம்சம் என்ற பொய்கையில் பிறந்து வளர்ந்த அன்னம் பரதன் : நன்று-தீது அறியும் மனப் பக்குவம் பெற்றவன். மூ உலகும் பெறினும் நெறிபிறழாதவன். பாற் கடலைச் சில கஞ்சித்துளிகள் (மோர்ப்பிறை) திரிக்க வல்லனவா? இருள் இரவியை விழுங்க வல்லதா? ஆகாயத்தை முகில்கள் மறைக்க வல்லனவா? குளம்படி நீர் கடல் குடித்த குறுமுனியை மூழ்கடிக்குமோ? கொதுகுகள் பல கூடி மலையை எடுக்க முடியுமா? பரதனைத் திரிக்கவோ, மாற்றவோ இயலாது. 2.131.132.1,2,3

சித்திரக் கூடத்திற்கு பீல், கோல், கிராதர் முதலிய வனத்தில் வாழும் மக்கள் இராமன்பால் கொண்ட அன்பில் திளைத்து, தேனும் கனியும் கிழங்கும் கொண்டு வந்தனர். அயோத்தி மக்கள் அதனைக் கண்டு வியந்ததைக் கவிக் கூற்றாக: 'தெப்பத்தில் ஏற்றினால் இரும்பும் மிதக்கும் அன்றோ? இராமனுடைய கருணையால் இவ் எளியோரும் உஜ்ஜீவித்தனர் (பெருவாழ்வு) எய்தினர்'. 2.251.ச

இராமனுடைய கடவுள் தன்மையை அறியாமல், ஸதி அவனை மயக்க எண்ணி பொய் உருவைக் காட்டித் தவறு செய்து விடுகிறாள். பின்னர், அவள் தன் செயலுக்கு வருந்தி கழிவிரக்கப்பட்டுச் சொல்வது :

''பாலில் நீர் கலந்தாலும் பார்ப்பதற்குப் பால் போலத்தான் தோன்றுகிறது. ஆனால், அதில் மோர்ப்பிறை ஊற்றினால் (புளிப்புச் சேர்ந்தால்) நீர் வேறு பால் வேறாகத் திரிந்து விடுகின்றது; இரண்டின் சுவையும் வேறானவை என்பதைக் காட்டும் அன்றோ''? - ஸோரடா 57.2

புறத்தோற்றத்தின் கபட உருவம் பிரிதொன்றன் சேர்க்கையால் வெளிப்படுகிறது.

இராமனிடமிருந்து பிரிவால் உண்டான துன்பக்கடலில் மூழ்கி இருந்த பரதனைக் கரை ஏற்ற வந்த நாவாய் போல அனுமன் பிராமண வடிவில் அவன் முன் தோன்றினான். 7.1. D

அரசு

இராமனுடைய குணங்களைக் கூறும் கவி :

தலைவன் எந்தச் சூழ்நிலையிலும் தன் பணியாளனுடைய தாழ்ந்த குணங்களை (தவறுகளை)ப் பெரிதாகக் கருத மாட்டான்; பொது இடத்தில் வெளிப்படுத்த மாட்டான்; தனிமையில் அவர்களைத் திருத்த முயல்வான். 7.1.3

'இராம ராஜ்யம்' என்ற சொல் தொடர் ஹிந்திமொழி பேசுவோரிடை பெரும்பான்மை வழக்கில் உள்ளது, அக்கருத்து துளசிதாஸின் ராமசரிதமான ஸத்திலிருந்து பெறப்பட்டது.

இராமனுடைய அரசின் இயல்புகளை விரிவாகக் கவி கூறுகிறார். அவற்றுள் சில : ஒவ்வொருவரும் தம் வர்ணத்துக்கும் (ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஸ்ய, ஸூத்ர)

ஆஸ்ரமத்துக்கும் (ப்ரஹ்மசர்ய, க்ருகஸ்த வானப்ரஸ்த, ஸந்யாஸ) உரிய நெறியில் சென்றனர்; வேதங்கள் விதித்த ஒழுக்கத்தைப் பின்பற்றினர்; அதனால், இன்பம் பெற்றனர். அச்சம், சோகம், நோய்-ஏதும் அவ் அரசில் இல்லை. (7.20.D உடல்பற்றிய துன்பமோ, இயற்கை விளைத்த அல்லலோ, தெய்வம் தந்த துயரோ எவருக்கும் இலது. வேதங்கள் அறைந்த நீதியை வழுவாது கடைப்பிடித்தனர். (ஒருவர் பால் மற்றொருவர்) பரஸ்பர அன்புடன் வாழ்ந்தனர் 6.22 D)

இளமையில் சாதல் இல்லை; உடலும் மனமும் பிறருடைய பாதிப்புக்குள்ளாக வில்லை வறுமை இல்லை; துக்கம் இல்லை; இரக்கப்படத் தக்கவன் இல்லை; அறிவற்றவன் இல்லை; அங்க ஹீனன் இல்லை; அனைவரும் அழகியோர்; குணவானையும், பண்டிதனையும், அறிவாளியையும் அனைவரும் மதித்தனர்; நன்றி கொன்றவன், வஞ்சனையாளன் இலர். 21-14

அனைவரும் வள்ளல்கள், ப்ராஹ்மணருடைய திருவடிகளைச் சேவிப்போர்; ஆண்கள் ஒரே மனைவியை உடையோர்; மணமான பெண்கள் மன, மொழி, மெய்களால் தம் கணவனுடைய நலத்தையே நாடுவர் 22.4. பொதுவாக, அரசன் நான்கு உபாயங்களைக் கைக்கொண்டு வெற்றியை நாடுவான். ராமராஜ்யத்திலோ, தண்டம் (கோல்) முக்கோல் பகவர் கையில் மட்டுமே இருந்தது அன்றி வேந்த ஒறுத்தலில் இல்லை பேதம் வேறுபாடு நாட்டியத்தில் மட்டுமே பயிலும்; பகைவரைப் பிரிப்பதில் அன்று. பறவைகளும் விலங்குகளும் தம் இயற்கையான பகைமையை மறந்து ஒருங்கே குலாவின; யானையும் சிங்கமும் ஒருங்கே வாழ்ந்தன. வயல்களில் தானியங்களும், மரங்களில் பழங் களும் எக்காலத்தும் இருந்தன; வேண்டுவோர் வேண்டுவன எடுத்துக்கொண்டனர். பசுக்கள் அனைவருக்கும் பால் பொழிந்து தந்தன. நீர்நிறைந்திருந்தன; நீர் வளம் எங்கும் நிறைந்திருந்தது. ஆறுகளும், குளங்களும் கரைகளை மீறவில்லை. தாமரைப் பூத்து பொய்கைகளை மறைத்திருந்தது. உலகமே இன்பமயமாக இருந்தது. சந்திரனுடைய அமுத கிரணம் அதிக குளிர் இன்றியும், சூரியனின் ஒளி அதிக வெப்பம் இன்றியும் மிதமாக இருந்தன. மலைச்சுரங்கங்களில், உயர்ந்த ரத்நங்களும், கடல் அலைகளில் முத்துக்களும் மக்களுக்குக் கிடைத்தன. மக்கள் வேண்டும் அளவு, வேண்டிய இடங்களில் மேகங்கள் மழையைப் பொழிந்தன (23.) கடைகளில் எல்லா வகைப் பண்டங்களும் கிடைத்தன எவரும் விலைபேசுவதில்லை. அங்கிருந்த வணிகர் ஒவ்வொருவரும் குபேரனை ஒத்தனர்.

இராவணனுடைய அவையில், அவன் மகன் ப்ரஹஸ்தன் கைகூப்பிச் செய்யும் விண்ணப்பம். தலைவ, நீதிக்குப் புறம்பானதைச் செய்ய வேண்டாம். உன் அமைச்சர் மதிகுறைவு உடையோர். 6.8 D

அவர் மூர்க்கர். அவர் சிற்றறிவும் முகஸ்துதி (டகுர் ஸோஹாதி) செய்யவே பழகியது. இவரால் உனக்கு நன்மை உண்டாகாது. இவ் உலகில் அத்தகைய மனிதர் (உனக்கு எதிரில் இனியவை கூறுவோர்) மிகப்பலர் உள்ளனர். நீ கூறும் தற்புகழ்ச்சியை யும் அவர் விரும்பிக்கேட்பர். ஆனால், உனக்கு நன்மைதரும் செவிகைக்கும், சொற்களைக் கூறுவோர் மிகச் சிலரே. 6.9.1,4.

தசரதன் இராமனுக்கு முடிபுனைய எண்ணி, அதை அவையோரிடம் கூறினான். இச் செய்தியை இராமனுக்கு அறிவிக்க வதிட்டனை அனுப்பினான். வதிட்டன் கூறியதும்

இராமன் நெஞ்சு நொந்து "நால்வரும் ஒன்றாகப் பிறந்தோம். உணவு, உறக்கம், விளையாட்டு யாவும் குழந்தைப் பருவம் முதல் வேறுபாடு இன்றி நுகர்ந்தோம். காது குத்தல் நூல் பூணல், திருமணம் போன்ற சடங்குகள் எமக்கு ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. இப்போது மூவரை விட்டு, மூத்தவன் என்பதால், நான் முடி சூடுவது முறை ஆகுமா? அது குற்றமற்ற இவ் வம்சத்துக்குக் களங்கம் உண்டாக்காதா"? என்கிறான்.

இராமன் இலக்குவனை அயோத்தியில் தங்கி பரதன் ஆள உதவுமாறு பணிக்கும் போது கூறிய ஒரு வாக்கியம் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் அவனைப் பேணும் மக்கள் துன்பம் உழல்கின்றனர் என்றால், அவ் அரசன் நரகத்திற்குப் போதல் உறுதி. இந்த சௌவாயிக்கு வேறொரு பொருளை உரை ஆசிரியர் கூறுவது: எந்த நாட்டில் மக்கள் அவரவர் உழைப்பின் பயனை முற்றும் பெற இயலாமல் வருந்துகின்றனரோ அந்நாட்டு அரசன் நரகத்துக்குப் போவான். 2.71.3

வனத்தில் இராமன் ஆட்சியைக் கவி உருவகப்படுத்துகிறார் :

அழகில் வானமே அவனுடைய நாடு. மலை அவனுடைய கோட்டை; ஆசை இன்மையும், நன்மை-தீமைகளைப் பகுத்தறிதலும் ஆகிய அறிவு அமைச்சர்; அடக்கமும் நீதியும் பணியாளர்; அமைதியும் அறிவும் அரசமா தேவிகள்; வனத்தில் உள்ள உயிரினங்கள் மக்கள்; வனமே அவனுடைய செல்வம் (பொக்கிஷம்). அவ் ஆட்சி அனைவருக்கும் இன்பம் பயந்தது. 2-234-3,4.

சூர்ப்பணகை இராவணனைப் பழிப்பது :

நீதி அற்ற அரசு, அறம் அற்ற செல்வம், கடவுளுக்கு அர்ப்பணம் செய்யாத தொழில், பகுத்தறிவு அற்ற கல்வி இவற்றை ஒருவன் பெற்றதால் வீண் சிரமமே படுகிறான், பயன் பெறுவதில்லை. பற்றுக்களால் துறவியும், புல்லிய மந்திரத்தால் அரசும், செருக்கால் அறிவும், கள் குடியால் நாணமும், வினயம் இன்மையால் அன்பும், மதத்தால் குணமும் விரைவில் அழிகின்றன. நீயோ இவை அனைத்தும் உடையை.
3.21.4, 5,6.

சமூக மரபுகள்

மூன்று நாள் தவம் கிடந்தும் வாராத கடல் அரசன்மீது சீறி இராமன் கூறுவது :

மூர்க்கனுக்குப் பணிவும், திரிந்த மனம் உடையவனிடம் அன்பும், இயற்கையாக உழுத்த குணம் உள்ளவனுக்கு நீதியும் செருக்கு நிறைந்தவனுக்கு ஞானமும், பிறன் பொருளை வவ்வ எண்ணுவோனுக்கு வைராக்யமும், (பற்றின்மை), சினந்தனுக்கு அமைதியும், காமநெறியில் உழல்பவனுக்குக் கடவுள் பக்தியும் உபதேசிப்பது உவர் நிலத்தில் விதைத்துப் பயிர் விளையும் என எதிர்பார்ப்பது ஒக்கும். 5.58-1, 2

ஸேது கட்டி வானரர் இலங்கையை அடைந்ததும் அங்கு இருந்த வனங்களில் பழங்கள் பழுத்துத் தொங்குவதைக் கண்டு வியந்தனர்.

இராமனுடைய அனுமதி பெற்று அப்பழங்களைத் தின்று மகிழ்ந்தனர்.

அங்குச் சில அரக்கர் தென்பட வானரர் அவர் மூக்கையும் காதுகளையும் கடித்து, அவரை இராமன் புகழ்பாடுவித்து, நாட்டியம் ஆடச் செய்து உயிரோடு விட்டனர். 6.6-4

தூதனாகச் செல்லும் அங்கதன் இராமனுடைய பெருமையைக் கூறும்போது,

''காதலில் ஆகட்டும், போரில் ஆகட்டும் ஒருவன் தனக்கு ஒத்தவரையே நாட வேண்டும், ஒரு சிங்கம் தவளையைக் கொன்றால் அதை எவரும் புகழமாட்டார்.''

என் தலைவன் உன்னைக் கொல்ல மாட்டான்; அவனைச் சரணடைந்து விடு''
6-23 தே 3

இதைக்கேட்ட இராவணன் சினம் பொங்க,

''நீ குரங்கு என்பதைக் காட்டிவிட்டாய். குரங்குகளின் இயற்கை தன்னை ஆதரிக்கும் குரங்காட்டியின் ஆணைப்படி நடப்பது: குரங்கு ஓடும், நடக்கும், ஆடும், இவற்றை எளிதாகவும், சாதுர்யமாகவும்கூடச் செய்ய வல்லது, பிற மக்களை மகிழ்வித்து குரங்காட்டிக்குக் காசுகள் சேர்த்துத் தரும்.

உன்னை இயக்கும் இராமன் ஆகிற குரங்காட்டியைப் புகழ்ந்து, எல்லாப் பணி விடையும் செய்து உன் குலத்தை நிருபித்துவிட்டாய். 6.24.1-3

அங்கதன் இராவணனுடைய சிதைவை வருணிக்கிறான்.

நீ உயிர் உள்ளபோதே வாழ்வு இழந்துவிட்டாய். குல ஒழுக்கத்திற்குப் புறம் பானவன், காம வசப்பட்டவன், மடையன், உலுத்தன், வறிஞன், மானம் இழந்தவன், மிக்க வயோதிகன், தீராத நோயாளி, எப்போதும் சினம் கொள்பவன், கடவுளைப் புறக்கணிப்பவன், வேதங்களுக்கும் நல்லோர்க்கும் பகைவன், தன் உடலையே சிறப்பாகக் கருதி வளர்ப்பவன் அனைவரிடமும் குற்றம் காண்பவன், பாவங்களின் களஞ்சியம்—இப் பதினாலு வகை மக்களும் இருந்தும் இறந்தவர் ஆவர். 6.31.1,2

பெண்கள் முன்தானை விரித்து மன்றாடுதல் :

இராமன் மணக் கோலத்தில் மிதிலை நகர வீதிகளில் திருமண மண்டபத்துக்குச் செல்லும்போது நகர மகளிர் தம் முன்தானயை விரித்துப் பிரமனிடம் திருமணம் விரைவில் நடைபெறுக: எமக்கு அத்திருமணத்திம் இனிய கீதங்களை இசைக்கும்பேறு வாய்ப்பதாக'' என வேண்டுகின்றனர். 1.320-ச

மண்டோதரி இராவணன் பாதங்களில் தலைவைத்து, முன்தானையை விரித்துத் தன் வேண்டுகோளை ஏற்குமாறு பணியும் மரை இலங்கையிலும் காண்கிறோம். 6.62

திலகம் : இராமன் நெற்றியில் திலகத்தின் ரேகை ஒளிர்ந்தது. 1.219-3
விசால திலகம் 1.243-3

பரதன் கோசலநாட்டுச் செல்வத்தை இராமனுடையதாகவும் இராமனைத் தன் ஆண்டான் (ஸ்வாமி) ஆகவும் கருதினான்.

''பாவங்களில் தலையாயது அரசனுக்குத் துரோகம் செய்வது. அடிமையின் தலையாய பண்பு பிறர்கூறும் இகழ்ச்சியைப் பொருட்படுத்தாமல் ஆண்டானுக்குப் பணிபுரிவது. 2.186-2, 3

கைகேயியின் தூய மனத்தை மந்தரை திரிக்க முயன்றபோது, அவளுடைய பேதைமையை எண்ணி கைகேயி புன்னகை பூத்தாள். அதற்குக் காரணம் மந்தரைபால் அவள் கொண்ட இரக்கம்.

''பாவம், காது கேளாதவர், முடவர், கூனர், குருடர் போன்றோர் கோணல் புத்தி, தீய குணம் உடையராதல், இயற்கையே. அதிலும், அவர் பெண்களாகவோ, பணியாட்களாகவோ இருந்துவிட்டால் இவ் இயற்கை மிகுந்து தோன்றும்'' 2-14D

என எண்ணி, அவளுக்கு மந்தரைபால் இரக்கமும் நகையும் தோன்றின.

இராமன் சீதையுடன் அயோத்திக்குத் திரும்பியபின் இரவில் இராமன், சிவன், குரு, அந்தணர்-இவரை நினைந்து உறங்கினான். 1.357

மாமியர் ஸீதையின் அழகை மாந்தி நாகம் தன் மணியைக் காப்பதுபோல அவளைக் காத்து அணைத்துக்கொண்டு உறங்கினர் 1.358-2

குகன் இராமன் அருகில் இலைக்கலங்களில் (தொன்னைகளில்) இன்ப, தூய பழம் கிழங்குகளைச் சமர்ப்பித்தான். சீதை, இலக்குவன், சுமந்திரனுடன் இராமன் அவற்றை உண்டான். 2.89, 4

குகன் பரதனுக்கும் இச்செயலை இவ்வாறே கூறுகிறான். 2.124-2 கம்பன் கூறுவதும் இவ்வாறே. வால்மீகி அவர்கள் வனவாசத்தில் புலால் உண்டதாகக் கூறுகிறார். ஆனால், குகன் பரதனைக் காணச் செல்லும்போதோ கிழங்கு, பழங்களுடன் பறவை, மான் மீன் முதலியவற்றைக்கொண்டு வருகிறான். 2.193, 1, 2

இராமன் வனத்துக்குச் சென்றபின் அயோத்தியின் நிலைமையை வருணிக்கும் துளஸி :

ஊர் மக்களுக்குத் தாம் சந்திக்கும் பிறர், பயங்கரமான விலங்குகளாகத் தோன்றினர். நண்பகலிலும் ஊர் இருள் சூழ்ந்ததாகத் தோன்றிற்று; வீடுகள் சுடுகாடு போலவும், சுற்றத்தாரும் நண்பரும் பூதங்கள் போலவும், குழந்தைகள் யமதூதர் போலவும், அவர் கண்களுக்குத் தோன்றினர். மரங்களையும், சோலைகளையும், உத்யான வனங்களையும் பார்க்கவும் மக்கள் அஞ்சினர். 2.83-3, 4

பரதன் குகனைத் தழுவினான். தேவர் பாராட்டிப் பூ மழை சொரிந்தனர் :

'நிழல் பட்டாலும் திட்டுப்பட்டுக் குளித்துத் தூய்மை பெற வேண்டிய இழி சாதியில் பிறந்த குகனைப் பரதன் பெரும் ஆனந்தத்தால் மயிர்க் கூச்சு எரிய மார்பில் அணைத்துக் கொண்டானே' என வியந்தனர். கங்கையைச் சேர்ந்த கழு நீரும் கங்கை ஆகிறது. இராமன் பெயரைச் சொல்லும் சண்டாளன், புலையன் சாதியிலிருந்து வெளியேற்றப் பட்டவன், வெளிநாட்டான் (யவனன்), காட்டுமிராண்டி, வேடன்-அனைவருமே புனிதம் பெறுகின்றனர். 2.194-4, D அவ்வாறே குகனும் உயர்ந்தான்.

சித்திரக் கூடத்துக்கு வதிட்டன் வர, இராமனுடன் அனைவரும் அவரை எதிர் கொண்டழைக்கச் செல்கின்றனர். குகன் அவர் அருகில் செல்ல அஞ்சி, தொலைவிலிருந்து

தன் பெயரைக் கூவி வணங்கினான். அவனிடம் வந்து வதிட்டன் அனைவரிலும் இடைப் பட்ட சாதியனைப் பூமியிலிருந்து வாரி எடுத்தார். இச்செயலை அனைவரும் போற்றினர். 2.243-3, 4

உலகின் வாய் அரசன். வாய் உண்ணுகிறது, பருகுகிறது. உண்ணும் சோறும் பருகும் நீரும் உடல் முழுதும் பரந்து, எல்லா அங்கங்களுக்கும் வலு ஊட்டி, உடலைப் பாதுகாக்கவே. அவ்வாறே அரசனுடைய நுகர்வுகளும் மக்களுக்காகவே அன்றித் தனக்காக அன்று. 2-315

கந்தர்வ உருக்கொண்ட கவந்தனுக்கு இராமன் கூறுவது: பிராமணன் சாபம் இட்டாலும், அடித்தாலும், உடைத்தாலும், கொடுமை இழைத்தாலும், வன்சொல் வழங்கினாலும், ஒழுக்கமும் பண்பும் அற்றவன் ஆனாலும், அவன் பூசிக்க உரியவன். சூத்திரன் குணங்களால் உயர்ந்தேன் ஆயினும், அறிவெல்லாம் உடையவன் ஆயினும், பூசிக்க உரியவன் அன்று. (பசு உதைத்தாலும் அதிலிருந்து பால் கறக்கிறோம்: கழுதை சாதுவாக இருந்தாலும் அதைக் கறப்பதில்லை. இது சில பிரதிகளில் உள்ளது. 3,34-1, 2

இராவணனைக் கண்டதும் மாரீசன் கொண்ட எண்ணங்களுள் ஒன்று. சிறிய முரண்பாட்டையும் பெரிய அவமானமாகக் கருதி. சினம் கொண்டு, கேடு விளை விக்கக் கூடிய ஒன்பான் வகை மக்கள்: ஆயுதம் தாங்கியவன், ஒற்றன், அரசன், மூர்க்கன், தனவந்தன், வைத்தியன், புகழ் பாடுவோன் (வந்தி), புலவன், மடைத் தொழில் புரிவோன்-ஆகியவர். அவர்களின் பகைமையைக் கொள்ளலாகாது. 3.25-2

பெண் இனம்

பூ சுண்டி கருடனுக்குக் கூறுவது: அறிவுக் களஞ்சியமானவன் ஆயினும், பற்றற்ற மனத்தினன் ஆயினும், பெண்ணைக்கண்ட மாத்திரத்தில் ஒருவன் மதியை இழப்பது ஏன்? பெண் விஷ்ணு பகவானின் மாயையின் தோற்றம் என்பதாலே 7.115.2
ஆண் மட்டுமே பெண்ணிடம் தன் மதியை இழக்கிறான். எவ்வளவு அழகானவள் ஆயினும், பெண்மீது மற்றொரு பெண் ஆசை கொள்வதில்லை, அவள் பெண்மையையும் அழகையும் மதிப்பதில்லை 7.116.1

மண்டோதரி கூறிய இராமன் பெருமையை ஆற்றாத இராவணன் கூறுகிறான்: பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்த குணங்கள் எண்ணித் துணியாத கருமம், சமயத்துக்கேற்ற பொய்மை, நிலைபெறாத மனம், கபடம், அச்சம், பகுத்தறிவு இன்மை, தூய்மை இன்மை, கொடிய மனப்பான்மை-என்ற எட்டும். இவை உன்னை மீக்கொள, பகைவனின் புகழைக் கூறி என்னை அச்சுறுத்த எண்ணுகிறாய். 6.16.2

திருமணம்

சிவனும் உமையும் கணபதியைத் தொழுது தம் திருமணச் சடங்குகளைத் தொடங்கினர் (100) இமவான் கையில் நீர்கொண்டு, தருப்பையோடு உமையின் கரத்தைப்பற்றி, அவளைச் சிவனுக்கு ஸமர்ப்பணம் செய்தான். சிவன் அவளுடைய கைத்தலம் பற்றினான். முனிவர் வேதமந்திரங்களை ஓதினர் பூமழை பொழிந்தது. பல் இயங்கள் முழங்கின. இமவான் கன்னிகையுடன் பெண்-ஆண் - அடிமைகள், குதிரைகள், தேர்கள், யானைகள், பசுக்கள், ஆடைகள், மணிகள், அன்னம், சுவர்ணப்

பானைகள் யாவற்றையும் சீதனமாகத்தந்து மணமகன் எதிரில் கைகூப்பி, வேண்டுவன ''யாவும் முன்பே பெற்றுள்ள உனக்கு யான் தரக்கூடியது என்ன உள்ளது?'' எனக் கூறினான். இமவான் மனைவி மேனா இவனுடைய பாதக்கமலங்களைப் பற்றிக் கொண்டு தலைவ, என் உயிர் அனைய இந்த உமையை உன் வீட்டு ஏவல்பணி புரிவதற்காக ஏற்றருள் ('க்ருஹ கிங்கரி கரே2') என வேண்டினாள். 101 சிவன் பாதங்களில் தலைதாழ்த்து வணங்கி வீடு திரும்பினாள் பின்னர். பார்வதி அவள் தாய்மடியில், தாங்கி! கண்களில் நீர் பொழிய, மார்பில் சாத்திக்கொண்டு ''பார்வதி, என்றும் சங்கரனைப் பூஜை செய்வாயாக. பெண்ணுக்குக் கணவனே தெய்வம்'' ''உலகில் பிரமன் ஏன் பெண்களைப் படைத்தான்? பெண் என்றுமே பிறருக்கு அடங்கி இருப்பவள், பெண்ணுக்கு சுகம் ஏது? என்றாள். பார்வதி அதை முற்றிலும் ஏற்றுக் கொண்டாள்; சிவனிடம் நான் பெண் என்பதாலே இயற்கையிலே பேதமை உடையவள்; என்னை 'அறிவும் உணர்வும் அற்ற சடப் பொருளாகக் கருதிப் பணிகொள்ள வேண்டும்' என்கிறாள். (120.2)

பெண்

தக்ஷன் மகள் ஸதி சிவனுடைய மனைவி. தக்ஷன் பெருவேள்வி ஆற்றும் போது மகளையும் மருமகனையும் அழைக்கவில்லை. எனினும், ஸதி தன் பிறந்த வீட்டுப் பாசத்தால், அவ் வேள்விக்குச் செல்ல விரும்பி, கணவனிடம் அனுமதி வேண்டினாள்.

சிவன் கூறுவது : ''நண்பன், தலைவன், தந்தை, ஆசான்-இவர்கள் இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கு உரிய அழைப்பு இன்றிச் செல்வதால், நீ தன்மானத்தை இழப்பாய்; பகைமையே எஞ்சும். அவர்களுக்கோ, உனக்கோ நன்மை ஏதும் உண்டாகாது. இதில் எள் அளவும் ஐயம் இல்லை'' சௌ. 61.3 ஸதி தன் பிறந்தகத்துக்குச் சென்ற போது, அங்குக் குழுமி இருந்தவர் எவரும் அவளை வரவேற்கவில்லை. தந்தை உறுமினார், தாய் மட்டுமே மலர்ச்சியுடன் பொங்கினாள், தங்கையர் புன்னகைத்தனர், பிறர் எதுவும் பேசவில்லை. ஸதி துக்கமும் சினமும் குமுறி எழக் கூறுவது: 'துன்பத்துள் எல்லாம் பெருந்துன்பம் பிறந்த இடத்தில் அவமானப்படுவது'' சௌ 62-4

ஸிநயநா (ஸீதையின் தாய்) இராமனிடம் சீதையைக் கையடை செய்து 'இவளுடைய ஒழுக்கத்தையும், அன்பையும் கருதி இவளை உன் ஏவல் பணியாளாக ஏற்றுக்கொள்' (ஷீலு ஸநேஹ லகி நிஜ இங்கரீ கரி) என்கிறாள் 133.6.ச பின்னர், இராமனுடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு நிலத்தில் கிடந்தாள் 337.1

ஸீதையின் தாய் ஸீதை அயோத்திக்குப் புறப்படும்போது அன்புடன் கூறுவது : ''நீ என்றும் உன் பதியின் அன்புக்குப் பாத்திரம் ஆவாய்; மங்களம் தங்குக. மாமன், மாமி, குரு-இவர்களுக்கு ஏவல் செய்க; பதியின் முகக்குறியால் அவன் விருப்பம் அறிந்து அதற்கு ஏற்ப ஒழுகுவாய்'' 334.23 பிரமன் பெண்களை ஏன் படைத்தான்? ஏதேனும் ஒருநாள் அவர்களைப் பிரியவேண்டி உள்ளதே என அங்கலாய்த்தனர் 4.

வனவாசத்துக்குத் துணிந்த சீதைக்கு இராமன் கோசலை முன்னிலையில் சொல்வது: ''மாமியார் மாமனாருக்குப் பணி புரிதலே பெண்ணின் முதல் கடமை. என் பிரிவால் நொந்துள்ள அவர்களைத் தேற்று, அவர்கள் நன்மையை நாடு இதனினும் பெருமை உனக்கில்லை' 2.61.2.3 இதற்கு மறுமொழி கூறும் சீதை கோசலையின் பாதங்களைப்

பற்றிக்கொண்டே இராமனை நோக்கிக் கூறுவாள். 2.64.4 (வால்மீகத்தில் இராமன் -சீதை இருவருடனும் தானும் வனத்துக்கு வருவேன் என்ற இலக்குவன் அவ் இருவர் திருவடிகளையும் பற்றியதாக முனிவர் கூறுகிறார். வால்மீகத்தில் உள்ளது போலவே ஸீதையின் மறுமொழியில் தாய்-தந்தை, உடன் பிறந்தோர், சுற்றம், உற்றார், மாமன் - மாமி, ஆசான், நண்பர், மக்கள்-ஈவரும் கணவனுக்கு இணை ஆகார். கணவனைப் பிரிந்த பெண்ணை எவரும் போற்றார் என்ற கருத்தும் வெளிவருகிறது. நீர் வெளியில் சென்றிருக்கும்போது, வனதேவதைகள் என்னை மாமி-மாமனாரைப்போலக் காப்பர்!

ஸம்ஸ்க்ருதத்தில் பொதுவாக 'ஆடவர் பெண்கள் மனத்தை அறியார்' என்ற கருத்து வழங்குவது உண்டு. அதற்கு மாற்றாக இராமன்-சீதை இடையே மன ஒற்றுமையை வால்மீகியும் (R1.73) பவபூதியும் (URC 1.39) புகழ்ந்து பாடி உள்ளனர், அத்தகைய புகழ்ச்சி துளஸியில் காணப்படுவதில்லை. பெண்களுடைய ஒழுக்கம், நெறி கடல் போன்றது, எவரும் அதன் ஆழத்தை அறியார்; எல்லை அறியார். பெண்மயக்கில் தள்ளாடுவார் அல்லல் படுவார் (2.27.2,3,4) என்ற கருத்துக்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. பால் வேற்றுமை, பால் பிரிவினை வேரூன்றி இருந்த காலம் அது. ஒருவன் கண்ணாடியில் தோன்றும் தன் நிழலையும் பிடிக்கலாம், ஆனால், பெண்ணின் போக்கை அறிய இயலாது (2.47.4) தீ விழுங்காததும், கடல் மூழ்கடிக்காததும், பெண் சாதிக்க முடியாததும், காலம் வெல்லாததும் இல்லை (2.47)

தசரதன் காம பாவசனாய் கைகேயி மனைக்குக் கலவி விருப்பத்துடன் சென்றான். அவளுடைய சினமும், துன்பமும், கலந்த நிலையைக்கண்டு அவன் உடல் வெலவெலத்தது; நா வறண்டது, எனினும், காமம் தணியவில்லை அவளைத் தன் கைகளால் வாரி அணைத்து எடுத்ததைக் கவி கூறுவது : ''எவனுடைய புயவலியால் இந்திரன் காக்கப் படுகிறானோ, எவனுடைய அருளால் அரசர் உலகை ஆளுகின்றனரோ, எவனுடைய உடல் சூலம், குலிசம், வாள் போன்ற ஆயுதங்களையும் தாங்கக் கூடியதோ, அவனையும் மன்மதனுடைய பூ அம்புகள் அழிக்க வல்லன. காமத்தின் பிரதாபம் அத்தகையது''

தசரதன் சுமந்திரனிடம் ஸீதையை இராமனுடன் வனத்துக்குக் கொண்டு சென்று நான்கு நாட்களில் மீண்டு அழைத்து வருமாறு பணிக்கிறான். ஸீதை திரும்பி வந்து விரும்பினால் தந்தை வீட்டிலோ, மாமனார் வீட்டிலோ தங்கி இருக்கலாம் என்கிறான்.
2.82.3

கைகேயி மந்தரையிடம் தன் முடிவைக் கூறும்போது: 'சக்களத்திக்குப் பணி செய்து அயோத்தியில் வாழ்வதினும் என் பிறந்த வீட்டுக்கேனும்போய் என் வாழ்நாளைக் கழிப்பேன்' என்கிறாள். திருமணமானபின் பெண்கள் பிறந்த வீட்டுக்குப் போய்த் தங்குவது பெரும் அவமானமாகக் கருதப்பட்டது.

கணவன் இறந்த பின் மனைவியர் எரிபுகுவது அக்கால வழக்கமாயினும், பரதன் அரசியர் பாதங்களைப் பற்றிக்கொண்டு 'இராமன் வனவாசத்திலிருந்து திரும்புவான்; அவனைக் காணலாம்' என்ற ஆசையைக் கொண்டு அவர் எரிபுகாமல் தடுத்தான்.
2.170.1

பரதன் கைகேயியின் கொடிய செயலைக் கண்டிக்கும்போது; ''அரசன் (தசரதன்) மரண காலம் வந்துற்றமையால் மதி இழந்தான். இன்றேல் உன்னை எவ்வாறு அவன்

நம்பி இருக்க முடியும்? பிரமனும் பெண்ணின் மனப்போக்கை அறியான். பெண்டிர் மனம் வஞ்சனையும், பாவமும், பழியும் நிறைந்த சுரங்கம். தசரதன் நேர்மை, ஒழுக்கம், அறம் இவற்றில் திளைப்பவன்-பாவம், அவன் எவ்வாறு பெண்ணின் சுபாவத்தை அறிவான்? 2.163.3

பரத்துவாசன், பரதனுடன் சென்ற பரிவாரங்களை நீராட்டுவித்து, புத்தாடைகள் அணிவித்து, பலவகை மது பானங்களுடனும், புலால் உணவுடனும் அவருக்கு விருந்து படைத்ததை ஒரு சருக்கம் ( ) முழுவதும் கூறுகிறார். துளஸியும் அவ்விருந்தைக் குறிப்பிடுகிறார். (2.115)

இரு பாலருமே அவ் விருந்தின் இறுதியில்; பூ, சந்தனம், பள்ளி அறையுடன் பெண் இன்பமும் ('வனிதாபோக') தந்ததாகக் கூறுகின்றனர். ஆனால், மக்கள் இவற்றால் மகிழ்ச்சியும் துயரம் ஒருங்கே அடைந்தனர். இன்பப் பொருள்களால் மகிழ்ந்தனர் எனினும், இராமன் உடன் இலன் என்ற துயரில் உழன்றனர். பெண்களை பூ, சந்தனம் போன்ற அசேதனப் பொருள்களுடன் வைத்து எண்ணத்தக்க போகப் பொருள் எனத் துளஸியும், வால்மீகியும் கருதியது குறிப்பிடத்தக்கது. கூண்டில் அடைத்த பறவைகள் இரவிலும் உடல் சேர்க்கை உறாதனபோல, பரதன் மட்டும் இவ் இன்பத்தைத் துய்க்கவில்லை. 2.115.4-D

பரதன் கூற்று :

அடிமைத் தன்மையைக் கடைப்பிடிப்பது மிக மிகக் கடினம். ஏனெனில், அடிமை தன் உடலையும், சிந்தையையும் ஆண்டானுக்கு முற்றிலும் ஒப்படைக்க வேண்டியவன். அவனுக்கென்று ஏதும் இல்லை. ஆண்டான் நலமே அடிமையின் நலமாகக் கருதப்பட வேண்டும். அடிமை தந் நலம் என்ற எண்ணமே உண்டாகாமல் முற்றிலும் தடுக்க வேண்டும். ஏனெனில், அஃது சற்றேறு உண்டாயின், ஆண்டான் நலத்தோடு முரண் படலாம். அடிமை, குருடன், செவிடன், புலன் உணர்வு அற்றவன். அவனுக்கு அன்பும் இருக்க முடியாது. நான் சிறியேன்; கூறும் சொற்களோ பெரியவை. 2.293.4

அடிமைக்குக் கை, கால், கண் யாவும் ஆண்டானுடைய ஆணையை நிறை வேற்றுவதற்காகவே உள்ளன. 2.306 D

சித்திரக்கூடத்துக்குச் சனகன் தன் மனைவி ஸுநயனாவுடன் வந்தான். ஸுநயனா தான் தங்கி இருந்த கூடாரத்துக்குச் சற்று நேரம் சீதையை அழைத்துச் செல்வற்குக் கோசலையின் பாதங்களில் வீழ்ந்து பணிவுடன் அனுமதி கேட்டுப் பெறுகிறாள். 2.285

மகளின் தவக்கோலத்தைக் கண்ட சனகன் பெருமையுடன் 'மகளே, உன்னால் என் குலமும், உன் குலமும் உயர்ந்தது. உன் புகழின் பெண்மை உலகத்தை ஒளிபெறச் செய்தது'. மூ உலகிலும் பாயும் கங்கையையும் வென்றது. உன் கீர்த்தி பல கோடி அண்டங்களில் பரவி உள்ளது. 2.287.1,2

மாலைப் பொழுது ஆக, சீதையின் தாய் அவளிடம் 'திருமணமான பெண் இரவில் தாய் வீட்டில் தங்குவது உசிதம் அல்ல' என அவளைத் திரும்பவும் கோசலையிடம் சேர்ப்பிக்கிறாள்.

அநுசூயை ஸீதைக்குக் கூறும் அறிவுரை :

தாய், தந்தை, உடன் பிறந்தோர் ஒருத்திக்கு நன்மை புரிகிறார்கள் என்பது உண்மையே; ஆனால், அந்த நன்மை அளவுக்கு உட்பட்டது. அளவு கடந்த இன்பத்தை இவ் உலகிலும் பர உலகிலும் தரக் கூடியவன் கணவனே. 3.5.3 கணவனுக்கு எதிர் வழியில் நடக்கும் மனைவி இளமையிலே விதவை ஆவாள் (10) பதியின் திருவடிகளில் அன்பு செலுத்துவது (அன்புடன் பணி புரிவது) பெண்ணின் கடமை. (5)

ஒருவனுடைய உறுதி, அறம், நட்பு, மனைவி ஆகியவை இடுக்கண் வந்துற்ற காலை பரீஷை செய்யத்தக்கவை (சோதிக்கப்பட வேண்டியவை); முதியோன், நோயாளி, முழு மூடன், வறிஞன், குருடன், செவிடன், எளிதில் சினம் கொள்வோன், பேதை - ஆகிய கணவனுடன் வாழும் பெண்ணின் பதிவ்ரத்யம் சோதனைக்கு உட்பட்டது. அத்தகைய கணவனையும் போற்றிப் பணி புரிவதே பெண்ணின் பெருமைக்குரிய ஒழுக்கம். அத்தகைய கணவனை அவமதிப்பவள் யமபுரத்துக்குப் போவாள். 4, 5

இயல்பாகவே பெண் தூய்மை அற்றவள். எனினும், கணவனுக்குப் பணி புரிவதால் நல்ல கதி பெறுகிறாள். 5.1D

சீதையைப் பிரிந்த இராமனின் சோகத்துக்குக் காரணமாக இலக்குவனிடம் கூறுவது; 'வேறொருவனிடம் இருக்கும் பெண் நாளடைவில் கணவனை மறந்து விடுகிறாள்; மனத்தில் நிறுத்திக் கொள்ளாத சாத்திரம் மனத்தைவிட்டு அகல்கிறது தலைவனைப் பிரிந்தபோது சேவகன் அவனை மறந்து விடுகிறான்.

பெண், சாத்திரம், தலைவன் மூவரையும் என்றுமே மனத்தில் இருத்திப் பயில வேண்டும். 3.37.5

சீதையின் பிரிவால் வருந்தும் இராமன் இலக்குவனுக்குக் கூறுவது :

பெரு மரங்களும், அவற்றில் பின்னியுள்ள கொடிகளும் அவன் படைகள், வாழையும் கமுகும் பதாகைகள்; மலர்கள் அம்புகள், புதர்களும், உச்சியில் பூக்கள் உள்ள மரங்களும், சேனாபதிகள்; கூவும் குயில்களும், மதம்கொண்டு பிளிறும் யானைகளும், கனைக்கும் குதிரைகளும், உருமும் ஒட்டகங்களும், அகவும் மயில்களும், டேகைகளும், புறாக்களும், கிளிகளும், சகோரங்களும். அன்னங்களும். நடக்கும் கொக்குகளும், காலாட் படைகள்; மலைகளும் பாறைகளும் தேர்கள்; அருவிகள் முழவுகள்; வண்டுகளின் ரீங்காரம் போர்ப் பாடல்கள்; இனிமையும், தண்மையும், நறுமணமும் கொண்ட மெல்லிய பூங்காற்று தூது வர, காமதேவன் அறைகூவல் விடுக்கிறான்.

எவன் அவனை எதிர்க்க வல்லவனோ அவனே சிறந்த போர்வீரன். அவனுடைய பிரமாஸ்திரம் (பெரும் படைக்கருவி) பெண்ணின் காதல்.

உலகில் ஒருவனுடைய பெரும் பகைவர் காமமும், சினமும் ஆசையுமே. அவை எத்தகைய மனிதனையும் வீழ்த்தவல்லன, என்பர். அவற்றுள், ஆசை செருக்காலும் பற்றாலும் உண்டாகும், சினம் கொடிய சொற்களால் வெளிப்படும்; காமம் பெண்ணால் தோன்றுவது.

இராமன் நாரதனைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கவில்லை. இதன் காரணத்தை நாரதன் அறிய விரும்புகிறான். இராமனுடைய விடை :

''என் பக்தர்களைக் காப்பாற்ற நான் கடமைப்பட்டவன். குழந்தை படமெடுத்தாடும் பாம்பைக் காண தவழ்ந்து ஓடுகிறது; கொழுந்துவிட்டு எரியும் தீயை அணுகுகிறது. தாய் குழந்தையின் விருப்பத்தைப் புறக்கணித்து, அதைத் தடுத்துக் காப்பாற்றுகிறாள். சாதாரண மக்கள் அத்தகையர். காமம், சினம், பொருட்கள்மீது ஆசை, மதம் இவை பெரும் சேனைகள். இவற்றின் மாயை உருவெடுத்தது பெண் வடிவில். பெண் பயங்கர மானவள், துன்பம் தருபவள், வெறுக்கத் தக்கவள். மயக்கம் என்ற வனத்துக்கு வசந்தம்; ஜபம், ஒழுக்கம் என்ற பொய்கையைச்சுவர வைக்கும் கொடும் கோடை. மழைக் காலத்து ஈசலும் தவளைகளும் போல பெண்ணால் காமமும் செருக்கும் சினமும் மங்கி வலுப் பெறுகின்றன. கூதிர் காலத்துப் பூக்கள்போலத் தகாத எண்ணங்கள் மனத்தில் எழுகின்றன. பனிக்காலத்துக் கழுநீர்ப்பூப்போலப் பெண் உள்ள இடத்தில் பக்தி வாடுகிறது. புத்தி, பலம், ஒழுக்கம் (சீலம்), ஸத்யம்-இவை மீன்கள்-பெண இவற்றைப் பிடிக்கும் தூண்டில் முள். வேண்டும்போது இவற்றுள் தனக்கு வேண்டுனவற்றைப் பிடித்து அழித்து விடுகிறாள். தீய ஒழுக்கத்தின் வேர் பெண், கத்தியின் கூர்மை பெண், தீமையின் சுரங்கம் பெண். அவளிடமிருந்து என் பக்தனான உன் மனத்தைக் காக்கவே உன் திருமணத்தைத் தடுத்தேன். 3, 43, 43

பெண் என்னும் தீவட்டியில் விட்டில்கள்போல் வீழ்ந்து மடியாதே என்ற அறிவுரையுடன் ஆரணிய காண்டம் முற்றும்.

ஸுக்ரீவன் இராமனுக்குச் சொல்வது பெண்ணின் கடைக்கண் என்னும் அம்பு பாய்தலால் கலங்காத ஆண் மகன் சினம் என்னும் பயங்கர இருளிலும் விழிப்புடன் இருப்பான். (சினத்தால் மதி அழியான்.)

மக்கள் இயல்பு

ஸத்துவ, ரஜஸ், என்ற முக்குணங்களின் தொகுதியில் அடங்காத மனிதன் யாவன்? நான் என்ற அகந்தையை செருக்கையும் முற்றிலும் துறந்தவன் யாவன்? இளமையின் காய்ச்சலைத் தவிர்த்தவன் யாவன்? எனது என்னும் மனப்பான்மை எவன் புகழை அழிக்கவில்லை? பொறாமை என்னும் களங்கம் எவனுக்கு இல்லை? துயரம் என்னும் பெருங்காற்று எவன்மீது மோதவில்லை? உடலின்மீது பற்று என்ற செயல் எவனை அரிக்கவில்லை? மக்கள், சொத்து, மண் ஆசை எவன் மதியைக் கறைப்படுத்த வில்லை? 71.1-4 இராமன் காக பூசுண்டிக்குக் கூறுவது உயிருள்ளனவை அனைத்தும் என் அன்புக்கு உரியவை. உயிருள்ளவற்றில் சிறந்தவன் மனிதன். அவன்மீது என் அன்பு சிறந்தது.

மனிதனில் சிறந்தவன் இருபிறப்பாளன் (பிராமணன்) ; பிராமணருள் சிறந்தவன் வேதம் அறிந்தவன்; அவர்களுள்ளும் வேதநெறிப்படி ஒழுகுபவன்; அவர்களுள்ளும் ஆசை அற்றவன். பொது அறிவினும் (ஞானத்தை) நிருபிக்கக்கூடிய அறிவு (விஞ்ஞானம்) சிறந்தது 7 86.1,2 விஞ்ஞானியினும் அதிகமாக நான் விரும்புவது என் பணியாளனை. என்மீது பக்தி கொண்டு எனக்குப் பணிபுரிவோன் எத்துணை இழிந்த பிறவியில் பிறந்தோன் ஆயினும், எனக்கு உயிரினும் இனியன்; தூய்மை, நல் ஒழுக்கம், அறிவு, உடைய பணியாளனிடம் எவர்தாம் அன்பு பூணார்? 86.23,4 D இவை யாவும் இறைவனே ஆயினும் அவனுடைய அகந்தையிலிருந்து முளைத்தவை. கண்ணனுடைய இத்தகைய சொற்களைக் கீதையில் காணலாம்.

பூ சுண்டி கருடனுக்குக் கூறுவது : மனித வாழ்க்கையின் கேடுகளாகக் கவி கருதியன கலியுகத்தின் இயல்புகளாகக் கூறப்படும். அவற்றுள் சில : வேதங்களை மறந்து, தத்தம் யுக்திகளுக்கு ஏற்ப வாழ்க்கைக்கு அனுகூலமான புதுக் கோட்பாடுகளை நிறுவ முயல்வர் 7.97.D1; வர்ண, ஆச்ரம தர்மங்களை மக்கள் பயிலார்; பிராமணர் வேதங்களை விற்பார்; அரசர் மக்களை அழிப்பர்; வேதங்களின் ஆணையை மதியார்; ஒவ்வொருவரும் தமக்கு உகந்த வழியில் நடப்பர்; வாயில் வந்தபடி பிதற்றுவோர் பண்டிதராகக் கருதப்படுவர்; பாசாங்கும் பகட்டும் கல்விமான்களாலும் போற்றப்படும்; பிறர்பொருளைத் திருடுவோர் சாமர்த்திய சாலிகளாகக் கருதப்படுவர்; பொய் உரையும், வாய்ச்சாலகமும் நற்குணங்களாக மதிக்கப்படும்; பக்தனாகக் கருதப்படுவதற்குத் தாடியும், சடைமுடியும், வளர்ந்த நகங்களுமே போதும். 7.98.1-4 மனம், மொழி, மெய்யுடன் ஒன்றாத ஒழுக்கம் உடையவனைச் சிறந்த பேச்சாளனாக மக்கள் மதிப்பர் 7.98 ஸோர ஆண்கள் பெண்களுக்கு அடங்கி நடப்பர்; பெண்கள் ஆண்களைக் குரங்குகளைப்போல ஆட்டுவர்; இழிந்த சாதியினரும் பூணூல் பூண்டு பிராமணரிடம் ஞான உபதேசம் பெறுவர், பெண்கள் கற்பு இழப்பர்; கணவன் உள்ள பெண்கள் கலன் அணியார்; கைம்பெண்கள் கலன்களை அணிவர்; ஆசிரியர் கல்வியும் ஒழுக்கமும் இன்றி (குருடராக) அறியாத (குருடர் செவிடர் ஆன) மாணவருக்குக் கல்வி போதிப்பர்; மாணாக்கர் ஆசானை மதியார்; ஆசிரியர் சீடருடைய செல்வத்தை அபகரிப்பர்; கல்வி புகட்டார்; சீடருடைய அக இருளைப் போக்கார். தாய் தந்தையர் மக்களுக்குத் தம் வயிற்றை நிரப்புதற்கு உரிய கல்வியையே கற்றுத்தருவர் 79914; துறவிகள் மாடமாளிகைகளில் வாழ்வர்; புலன் இன்ப நுகர்வுக்கு உரிய பொருட்களை விரும்புவர்; துறவிகள் தனவந்தர் ஆவர்; இல்வாழ்வோர் ஏழைகளாக இருப்பர்; இல்வாழ்வோர் கற்பரசிகளை வீட்டினின்று வெளியேற்றி, தம் கருத்துக்கு இணங்கும் பணிப்பெண்களை அவ் இடத்தில் வைப்பர்; இளைஞர் திருமணமாகி மனைவியின் முகத்தைக் காணும் வரை மட்டுமே தாய் தந்தையருக்கு அடங்கி இருப்பர்; அதன் பின் மனைவி, மாமியார், மாமனார் சொற்படி நடப்பர்; அரசர் தம் கடமைகளை மறந்து கொடுங்கோலாகி மக்களை வாட்டுவர்; பாவச்செயல் செய்பவன் ஆயினும், இழிசாதியினன் ஆயினும் செல்வம் உடையவன் சீரியன் என்ற கருத்து நிலவும் ; கவிஞரை எவரும் ஆதரிக்க மாட்டார் ; அவர் அறிவுரைகளை விரும்பிக் கேட்க மாட்டார். புறங்கூறுவாரை அவமதியார். பஞ்சமும் நோயும் மக்களை நலியும்; பசி மக்களை வாட்டும். எங்கும் தம் நலம் பேணுவோர் பெருகுவர் பிறருடைய நன்மையை எவரும் கருதார். அமைதி இராது; டம்பமும், வெறுப்பும் சமூகத்தில் நிறையும்; மக்கள், சராசரியாகப் பதினைந்து ஆண்டுகளே உயிர் வாழ்வர்; ஒருவன் தானே எல்லோரையும் வெல்லத் திட்டம் வகுப்பான்; தான்வாழும் சமூகத்தைக் குறித்து எண்ண மாட்டான்; இக்கலியுகத்தைக் கடக்க ஒரே துணை இராமன். 7 100-சா

சிறு ஊதியத்துக்காக குருவையும் அத்தனையும் கொன்று விடுவர் 7.99.D2 சூத்திரன் பிராமணனுக்குச் சமமாகத் தன்னை எண்ணி அவனோடு வாதம் புரிவான் 'பிரமத்தை அறிந்தவன் பிராமணன்' என்று கேலி செய்து பிராமணனை அதட்டுவான் D1 'அபேத வாதி' (வேறுபாடு அற்ற தன்மையைக் கூறுவோன்) ஞானி ஆவான் என்ற வேதக்கருத்தை மேற்கோள் காட்டி நிந்திப்பான்.

இழி பிறப்பாளர்-எண்ணெய் ஆட்டி விற்போர், குயவர், காட்டுக்குடி மக்கள், நாய்வளர்ப்போர், வேடர், மது விற்போர் போன்றவர்-தமக்கு இடுக்கண் நேருங்கால், தலையை மழித்து, காவி ஆடை தரித்துத் துறவிக் கோலம் பூணுவர். அவர்கள் உண்மைப்

பிராமணனைத் தமக்குக் குற்றேவல் செய்விப்பர். அந்தப் பிராமணரும் அறியாமையால் ஆசைகளால் உந்தப்பட்டு, தகாத தொழில்களில் ஈடுபட்டு, ஆசாரம் இன்றி, வியபிசாரிகளை மணந்து, தன் புனிதத்தன்மையை இழப்பர். சூத்திரர் பிராமணக் கோலம் பூண்டு உயர்ந்த பீடங்களில் அவர் பெரும் நூல் சொற்பெழிவுகள் ஆற்றி, மந்திரங்களை முணுமுணுத்து, நோன்புகளை நோற்று, வேள்விகள் இயற்றி, மக்களை ஏய்ப்பர் 100 1-5.

தம்பி இறந்துபட்டான் எனக்கருதிய இராமன் அவலநிலையில் அரற்றல் ''மக்கள், செல்வம், மனைவி, வீடு, சுற்றம் - யாவும் வரும், போகும் உடன் பிறந்தானை இழந்தால், என்றும் திரும்பப்பெற முடியாது. ''என் மனைவியைத் தேடும் முயற்சியில் தம்பியை இழந்தேன் என்று எந்த முகம் கொண்டு அயோத்திக்குச் செல்வேன்? மனைவியின் இழப்பால் வரும் தாழ்வைப் பொறுக்கலாம்: அத்தாழ்வு ஒருவனுக்கு ஏற்பட்ட துன்பம் பலருக்கு உண்டாகும் துன்பம் அன்று. ஆனால் தன் மனைவிக்காகத் தம்பியை இழந்தான் என்ற பழி தாங்கொணாதது'' 6.61.6. கம்பனிலும் இராமன் அரற்று உண்டு. (8651, 8659, 8772)

மக்கள் இயல்பு

தக்ஷன் மக்கள் தலைவனாக (ப்ரஜாபதி) பிரமனால் நியமிக்கப்பட்டான். அதனால் அவனுடைய செருக்கு அளவு கடந்தது. அப்போது சிவன் கூற்று :

''தலைமை பூண்டும் செருக்கால் மதி மயங்காதவன் இன்னம் இவ் உலகில் பிறக்கவில்லை'' சௌ 59.4

கவிக்கூற்று : ஞானி, அருந்தவன், வீரன், கவிஞன், கலைத்திறமை மிக்கவன் குணவான் - எவனைத்தான் ஆசை நல்வழியிலிருந்து திசை திருப்பவில்லை? சிந்தனை திறம்ப வில்லை?

(லக்ஷ்மி) செல்வத்தின் மதம் மனத்தை நேர்மையிலிருந்து வளைக்கிறது; காதுகளைச் செவிடாக்குகிறது 70.D1,2 எவரை மோகம் குருடாக்க வில்லை? காமம் அவர் பதவியிலிருந்து கீழே தள்ளவில்லை? சினம் நெஞ்சை எரிக்கவில்லை? புலன் நுகர்வுக்-கான தணியாத விடாய் முரடன் ஆக்கவில்லை?

பரதன் படைகளுடன் வருவதை அறிந்த இலக்குவன் கிளர்ந்து எழுகிறான் : 'அரச பதவி பெற்றும் பித்துறாதவன் உலகில் யார் உளர்?' மனம்திரிந்தவருக்கு உதாரணமாக, சந்திரன், நகுலன், வேன, இந்திரன், திரிசங்கு, கார்த்த வீரியனைக் காட்டுகிறான் 2.228.4 ஆனால், பரதனுடைய பண்பைப்புகழும் இராமன் இலக்குவனுக்குக் கூறுவது : 'அது அவர்பால் உண்மை ஆகலாம்; ஆனால் பரதனுக்கு ஒவ்வாது, ஒரு மோர்த்துளி பாற்கடலை அழிக்குமா? இருள் இரவியை விழுங்குமா? முகில்கள் ஆகாயத்தை முடுமோ? பசுவின் குளம்படி நீரில் அகத்தியன் முழுகி விடுவானா? நிலம் தனக்கு இயற்கையான பொறுமையை இழக்குமா? கொசுக்கள் மேருமலையை எழுப்புமா? இவை நேருமெனின், பரதனுடைய தூயசிந்தனையும் அரச பதவியால் திரியக் கூடும் என்கிறான்.

பரதன் கேகயத்திலிருந்து அயோத்திக்குத் திரும்பும்போது நகரின் பொலிவு இழவைக் கூறும் கவி : பறவைகள், விலங்குகள் யானைகள், குதிரைகள் யாவும்

இராமன்-பிரிவு என்னும் நோயால் பீடிக்கப்பட்டுக் களை இழந்திருந்தன. நகர ஆண்களும் பெண்களும் தாம் இதுகாறும் அடைந்த புகழ், பெருமை செல்வம் யாவற்றையும் ஒருங்கே இழந்ததாகக் காணப்பட்டனர் 158.4

பெரியோரை எவரும் குறைகூறார். நாரதர் இமவானிடம் கூறுவது : விஷ்னு பாம்பணையில் பள்ளிகொண்டுள்ளார். அக்கி குப்பை, கூளம், நெய், சந்தனம் எல்லா-வற்றையும் தின்று விடுகின்றது. சூரியனுடைய ஒளியும் வெப்பமும் நல்லது தீயது என்பதைக் கருதாது யாவற்றின்மீதும் பரவுகிறது. நீர் அழுக்குகளையும் நல்ல பொருட்களையும் கொண்டு செல்கிறது. கங்கையில் கரைத்த மதுவும் கங்கையாகி புனிதத் தன்மையைப் பெறுகிறதன்றோ? வலியாரோடு சேர்ந்தாலிம் வலிமை பெறுவர். பிறருடைய குறையும் தாழ்வும் வலியாரைப் பற்றாது.

இராமன் பாதரக்ஷை இன்றிக் கானில் நடக்க, அவனைக் கொடிய பாம்புகள் தீண்டவில்லை; தேள்கள் கொட்டவில்லை.

பரதன் கூறுவது : ஒருவன் தன் ஆழ்ந்த காதலையும் வெறுப்பையும் மறைக்க இயலாது. பறவைகளும் விலங்குகளும்கூட நல்லோரை அணுக அஞ்சுவதில்லை; வேடனைக் கண்டே அஞ்சுகின்றன. அவற்றிற்கே, நல்லோர்-தீயோர் எனப் பகுத்து அறியும் திறன் இருக்கும்போது, ருணர்த்திற்கும் அறிவுக்கும் நிலைக்களனான மனிதன் இதை அறியானோ? 2.263.2

உடுக்க உடையின்றி ஆபரணங்களைச் சுமப்பது வீண்; பற்றுக்களை விடாது பெரும் ஆராய்ச்சியில் இறங்குவது வீண்; நோயுற்ற உடலுக்கு இன்பங்கள் இல - கடவுள் பக்தி இல்லாத ஜபமும் யோகமும் எற்றுக்கு? உயிர் அற்ற உடலுக்கு அழகு ஏது? இராமன், ஒருவன் இன்றி எந்த நற்பண்புகளும் பயன் தரா. 2178.2,3

பரதன் கூற்று : ஒருவருடைய செயலும் சொல்லும் அவனுடைய நலனை நாடியே இயங்குவது இயற்கை: அதிலும் துன்பத்தால் வருந்துவோருக்குச் சிந்தனை அத்துன்பத்தை நீக்குவதில் முனைந்திருக்குமே அன்றி, நீதி-அநீதிகளின் ஆராய்ச்சியில் ஈடுபடாது.
2.269.2

பெரியோர் பிறருடைய துன்பத்தை நீக்க முற்படுகின்றனரே அன்றி அத்துன் பத்தின் காரணத்தையும் துன்பம் உறுவோருடைய ஒழுக்கத்தையும் ஆராய்வதில்லை. 2.177.4 ஒருவன் துன்பத்துள் உழல்வது நீதிக்கு ஒவ்வலாம். முறையாகத் தக்க காரணத்துக்காக, அவன் தண்டிக்கப்பட்டிருக்கலாம். எனினும் அத்துன்பத்தைத் தவிர்க்க முற்படார் எனின், அது பாவமே 2.177.2

வதிட்டன் பரதனுக்கு ஆறுதல் கூறுவது : தசரதனுக்காக நீ இரங்காதே; அவன் வாய்மையும் மரபும் காத்து விண்புக்கான். நீ யாருக்காக இரங்கவேண்டும்; 'வேதங்களைப் புறக்கணித்து, புலன் இன்பங்களை நாடும் பிராமணனுக்காக; 'அறத்தை மறந்து, மக்களுக்குத் துன்பம் தந்து, தன் நலத்தையே நாடும் அரசனுக்காக; பண ஆசை மிக்கு சமூகத்துக்கும் தீங்கு இழைக்கும் உலுத்தனுக்காக; பிராமணரை அவமதித்து, இறுமாப்புடன் அறிவை நாடும் சூத்திரனுக்காக, கணவனை வஞ்சித்து, புல்லிய நெறியில் செல்லும் பெண்ணுக்காக; ப்ரஹ்மசர்ய விரதத்தைத் துறந்து, குருவின் ஆணைவழி நடவாத மாணிக்காக; மயக்கத்தில் ஆழ்ந்து நல்நெறிகளிலிருந்து இழிந்த

இல்வாழ்வானுக்காக; மெய்யுணர்வும் பற்றின்மையும் அற்று உலகப்போக்குகளில் ஆழ்ந்த துறவிக்காக; காரணம் இன்றிச் சினம் கொள்பவனுக்காக; தாய், தந்தை, குரு, பந்துக்களுடன் பகைமை கொள்பவனுக்காக; எப்போதும் பிறருக்குத் துன்பம் தருபவனுக்காக: தன் உடலை வளர்த்துப் பிறரிடம் அன்பு பூணாது இருப்பவனுக்காக; இவர்களுக்காக இரங்கு. ஏன் தசரதனுக்காக இரங்குகிறாய்?

பரதன் கூற்று : உற்ற நண்பன், நல் அறிஞன், சிறந்த தலைவன்-இவர்களிடம் எதையும் வலியுறுத்திக் கூறுவது தவறு. மென்மையாகக் கூறித் தவிர்க.

இலக்குவன் சூர்ப்பணகைக்குத் தன் அடிமைத்தனத்தைப் பற்றிக் கூறுவது : அடிமை சுகத்தையோ, வறிஞன் மானத்தையோ, சூதாடுபவன் செல்வத்தையோ, ஒழுக்கங்கெட்டவன் நற்கதியையோ, உலுத்தன் புகழையோ, செருக்கு கொண்டவன் புருஷார்த்தங்களையோ (அறம், பொருள், வீடு) விரும்புவது ஆகாயத்திலிருந்து பால்கறக்க முயல்வதை ஒக்கும் 3.17.8

சுக்கிரீவனுடைய துன்பத்தைக் கேட்டு இராமன் கூறுவது :

நண்பனுக்கு உற்ற துயரை அறிந்தும் துயர் உறாதவனுடைய முகத்தைப் பார்ப்பதும் பாவம். ஒருவன் தனக்கு ஏற்பட்ட துன்பம் மலை அளவாயினும் அதைத் துகள் அளவாகவும், நண்பனுடைய துன்பம் துகள் அளவாயினும் அதை மலை அளவாகவும் கருத வேண்டும். இதைக் கடைப்பிடியாத கயவனுடைய நட்பைப் பேணக் கூடாது. துன்பம் வந்து உற்றபோதே உண்மை நட்பு வெளிப்படும்.

மூர்க்கனான சேவகன், உலுத்தனான அரசன், கற்பு தவறிய மனைவி, வஞ்சனை புரியும் நண்பன் - இந் நால்வரையும் அன்றே களைக; இன்றேல், ஏதேனும் ஒருநாள் துன்பம் விளைவிப்பார்கள். 4.7.1,4,5

இராமன் பரசுராமனிடம் : சிறு பிள்ளைகள் குறும்பு செய்தால் பெற்றோரும் ஆசிரியரும் மனத்துள் மகிழ்வர். நான் சிறுவன்; நீ பெரியோய். என்னைச் சேவகனாக எண்ணி விருப்பு - வெறுப்புக்கள் அற்றவரும், ஒழுக்கத்தின் சிகரமும், உறுதி பூண்டவரும், அறிவாளியுமான நீர் பொறுக்க வேண்டும். 277-2

பரசுராமன் இராமனிடம் : உன் தம்பி பெரும் பாவி. அவன் உடல் வெண்மை; உள்ளம் கருமை. வாயில் விஷம் உள்ளது; பால் அன்று. இயற்கையில் செந்நெறியாளன் அன்று. என்னை யமனாக அவன் கருதவில்லை. 1.277-3,4

இத்துணை அழகிய உடலில் அழுக்குப் படிந்த மனம் எவ்வாறு தோன்றியது - பொற்குடத்தில் விஷம் நிறைந்தது போலே-1.278.4

வசிட்டன் இராமனுக்குக் கூறுவது : புரோகிதத் தொழில் யாவற்றினும் தாழ்ந்தது; வேதங்களும் சாத்திரங்களும் அதைப் பழிக்கின்றன. இதை அறிந்திருந்தும் பிரமன் ஆணையால் நான் உன் குலத்திற்குப் புரோகிதம் பூண்டது நெடுங்காலத்துக்குப் பின்னரேனும் உன் திருவடி சம்பந்தம் பெறுவேன் என்ற ஆசையால். 7.48.3;49.4

கருடன் வினாக்களும், பூசுண்டி விடைகளும் :

1. பெறுமவற்றுள் அரிய பிறவி எது ?
   மனிதப்பிறவி - அது அறிவனைத்தும் உடையது.
2. துன்பத்துள் எல்லாம் பெருந்துன்பம் எது ?
   வறுமை
3. இன்பத்துள் எல்லாம் பேரின்பம் எது ?
   நல்லோர் இணக்கம்.

4, 5. நல்லோர் யாவர்? தீயோர் யாவர் ?
   நல்லோர் பிறர் துன்பங்களைத் துடைப்பவர்.
   தீயோர் பிறருக்குத் துன்பம் தருபவர்,

6. மாபெரும் நற்பண்பு எது ?
   அஹிம்சை - பிற உயிர்களுக்குத் தீமை செய்யாமை.
7. மாபெரும் பாவம் எது ?
   புறங்கூறல், பிறரிடம் குற்றம் காணல், தன் நலம் பேணுதல்,
8. மக்களை வருத்தும் பிணிகள் எவை ?
   காமம், வெகுளி, மயக்கம், காமம்=வாதம், வெகுளி=பித்தம், மயக்கம்= ச்லேட்டுமம் (சளி, கபம்)

காரண - காரிய அறிவு.

சிவன் பார்வதிக்குத் திருமாலின் அவதார காரணங்களை ஆராயக் கூடாது எனக் கூறுகிறார். முடிவிலிருந்து முதலுக்குப் போதல் - பயன் விளைவிலிருந்து அதன் காரணத்தை ஆராய முயல்தல் தவறு. காரணங்கள் பல ஆகலாம்; அவை யாவற்றையும் ஆராய்ச்சியாளன் அறியாமல் இருக்கலாம். காரணங்களின் கூட்டு இயற்கையும் அவற்றின் ஒவ்வொன்றன் இயற்கையும் மாறுபடலாம். ஆதலின், அவதாரங்களைக்கொண்டு அவை ஏன் நிகழ்த்தன என ஆராய வேண்டாம். (121.1)

தருக்க சாத்திரம் காரணத்திலிருந்து காரியத்துக்குச் செல்லும் வழிகளைக் கூறும். முறை பிறழ்வது யூகம்; விஞ்ஞானம் அன்று.

அனுமன் இலங்கையில் விடணனைக் கண்டு சொல்வது :

காலையில் குரங்கின் முகத்தில் விழித்தாலும் குரங்கைப் பற்றிப் பேசினாலும் நாள் முழுதும் சோறு கிடைக்காது என்பர்.

எனினும் இராமன் அருள் பெற்றமையால் இந்தப் புன் சாதியில் பிறந்த யானும் உய்ந்தேன். 6.7.4 & D

இராவணன் அனுமனுக்குக் கூறுவது எவருக்கும் தம் உடல் (உடலைப் பேணல்) இனிது. 5.22-2

அனுமன் விடை : ஆயினும் நீ உடல்பால் வைத்துள்ள பற்று அறுக்க வேண்டியது; அதன்மீது கொண்டுள்ள பெருமை, வெறுக்கத்தக்கது. நீ பிறந்த குலத்தையும், உன் குடி மக்களையும் குறித்து எண்ணிப் பார் அழிவை நாடாதே. 4, 5

இராவணனைக் குறித்த கவிக்கூற்று :

அமைச்சன், வைத்தியன், குரு-இம் மூவரும் அரசனுக்கு அஞ்சியோ, பணத்தாசை

யாலோ, அரசனுக்கு இதமானதைச் சொல்லாமல், அவன் எதைக் கேட்க விரும்புவானோ அதையே சொல்வார் எனில், அவ் அரசன் முறையே தன் அரசையும், ஆரோக்கியத்தையும், அறத்தையும் விரைவில் இழப்பான். 5-371

இந் நிலையில், அவையில் வீடணன் இராவணனுக்குக் கூறுவது :

பதினாலு புவனங்களையும் ஒருங்கே ஆண்டாலும், அரசன் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்வான் எனில் நீடு ஆள மாட்டான். 38.4

நற்சகுனங்கள் : மயிலை இடது புறமும், காகத்தை வலது புறமும், கீரியை எதிரிலும் காண்பது; நரி முகத்தைக் காட்டுவது; கன்று ஊட்டும் பசுவைக் காண்பது; மான் குழாம் வலப் புறம் திரிவது; குயில் இடப்புறம் மரத்தில் கூவுவது; பெண் நிறை குடம் சுமந்து குழந்தையுடன் வருதல்; ஆண் மகன் தயிரும் மீனும் சுமந்து செல்வது; இரு அந்தணர் நூல்களுடன் நடந்து போவது, (1.303) இடதுபுறம் ஒருவன் தும்முவது; பின்புறம் இருந்து மெல்லிய பூங்காற்று வீசுதல். (2.192.2)

எந்த இடத்தில் வாழலாம்? என்ற இராமன் வினாவுக்கு வால்மீகியின் விடை :

எங்கு மக்கள் ஆசை, சினம், செருக்கு, தனது என்ற எண்ணம், கலக்கம் அற்று இருக்கிறார்களோ, எங்குப் பிறர் பொருளை வவ்வுதல், பதட்டம், பற்று, வெறுப்பு, வஞ்சனை, பகட்டு, அறிவு மயக்கம் இலதோ, எங்கு ஒவ்வொருவரும் பிறருடைய நன்மைக்காக உழைக்கின்றனரோ, துன்பத்தையும் இன்பத்தையும், புகழையும் இகழ்ச்சியையும் சமமாகக் கருதுகின்றனரோ, உண்மையை இன் சொற்களால் பேசுகின்றனரோ, எவர் பொருள் ஈட்டுவதால் மன மகிழ்ச்சியோ, பொருள் அழிவால் மன வருத்தமோ இலரோ, எவர் பிறரிடம் உள்ள தீக்குணங்களை விட்டு நற்பண்புகளை மட்டும் கைக்கொள்ளுகின்றனரோ, எவர் அந்தணரையும், பசுக்களையும் காக்கத் துன்பங்களை ஏற்றுக் கொள்கிறார்களோ, எங்கு அறத்தாறு ஒழுகுவோரை அனைவரும் மதிக்கிறார்களோ, அங்கு, அவர் இடையில உன் உறைவிடம் ஆகுக. 2-130-1

இராமன் சடாயுவுக்குக் கூறுவது :

எவன் பிறருடைய துன்பத்தைப் போக்க முற்படுகிறானோ அவனுக்கு உலகில் அரியது ஏதும் இல்லை. (உன் புகழ் இவ் உலகில் எஞ்சும் நீ உயர்ந்தோர் உலகம் புகுவாய்.) 3-31-5

சித்திரக் கூடத்தில் இராமனும் சீதையும் புலன் இன்பம் நுகர்ந்தனரா? என்ற பொது வினாவுக்குத் துளஸியின் விடை :

இராமனை நினைத்த மாத்திரத்தில் மக்கள் உடல் இன்பத்தை உடனே துறக்கிறார்கள் என்றால் இராமனுக்கும் உலகத்தின் தாயாகிய சீதைக்கும் இவ் இன்பம் பற்றிய எண்ணங்கள் எழவில்லை என்பதில் சற்றும் ஐயம் இல்லை. 2-140D

இராமன் பரசுராமனிடம் கேட்பது : மாற்றானைத் திட்டுவதால் ஒருவன் ஒளிபெற முடியுமா? 1.274.4

போர்க்களத்தில் ஒருவனுடைய பெருமையை வீரத்தால் காண வேண்டும். தன் பிரதாபத்தைப்பற்றித் தற்புகழ்ச்சியால் பறையடிப்பதால் அன்று. 274 D

காக பூசண்டி கருடனுக்குப் பிறருடைய நன்மையை நாடுவோனுக்கு ஏது துன்பம்? 'ஸ்பர்ஸமணி' (தொட்டால் வேண்டுவன யாவும் தரும் கல்) இருக்கும்போது ஏது வறுமை? பிறருக்கு ஊறு நிகழச் சூழ்வினை ஆற்றுவோன் எவ்வாறு அச்சம் இன்றி வாழ்வான்? ஆசைகள் உடையவனுடைய உள்ளம் எவ்வாறு மறுவின்றி இருக்கும்? 112.1

நீதி அறியாத அரசன் எவ்வாறு நாட்டைத் தன் வசம் வைத்திருக்கமுடியும்? துஷ்டருடன் பழகுவோனுக்கு எவ்வாறு நல்ல புத்தி ஏற்படும்? பிராமணனுக்குக் கேடு செய்வோனுடைய குடி எப்படிச் செழிக்கும்?

இருமை உணர்ச்சி ('தவைத புத்தி') - தான்வேறு, பிறர் வேறு தனது பிறருடையது, வேண்டுதல். வேண்டாமை - பிரிவினைக்கும் சினத்துக்கும் காரணம், அறியாமை (அஞானம்')க்கும் அதுவே காரணம். இருமை உணர்ச்சி அகன்றால் மெய் அறிவு தோன்றும். யாவும் ஒன்றே' என சமதர்சனம் உடையவன் எவ்விதமான இடும்பையும் இலன். இருமை உணர்ச்சி மாயையால் வந்தது. இருமை உணர்ச்சி அற்ற உயிர் ('ஜடம்') கடவுளுக்குச் சமானம். 7,111 D

பற்றுக்களையும் ஆசைகளையும் துறந்தவனே மெண்ணையும் துறக்க முடியும்; காமியால் முடியாது. காமத்தைக் கடக்க இராம பக்தியே வழி. 7.115-D1

கடவுள், ஊழ்

வருணனை வழிவேண்டித் தவம் கிடக்கும் இராமனுக்கு இலக்குவன் கூறுவது:

தலைவ, ஏன் தெய்வங்களில் இந்த நம்பிக்கை? கோழைதான், தன்நம்பிக்கையை இழந்து, வாழ்க்கைக்குக் கடவுளையே ஆதாரமாகக் கருதி, செயல் அற்றுக் கிடப்பான்; துன்பம் வரும்போதெல்லாம் கடவுளைத் துணைக்கு அழைப்பான். 6.51-2

விநாயகப்பிள்ளையார் வழிபாடு சமூகத்தில் நிலை கொண்டிருந்தது. இராமன் வில்லை நாணேற்றப் போகும்போது, நகர மக்களெலாம், முன்னோர், தேவர், யாம் ஆகிய அனைவரும் செய்த தவப் பெருமையால், கணேச இராமன் இவ்வில்லைத் தாமரைத் தண்டின் நாள் நூல்போல இற்று விழ அருள்க' என வேண்டினர். 255 மிதிலைக்குப் புறப்படும்போது தசரதன் பிற கடவுளரோடு கணேசனையும் வணங்கி வாழ்த்துப் பெறுகிறான். 301 ஸீதையை மிதிலையிலிருந்து அயோத்திக்கு அனுப்புப்போதும், சனகன் கணேசனை நினைவு கூர்ந்தான். தே 338, கௌ 339-4 காரியம் தொடங்கு முன் பிள்ளையார் வழிபாட்டைத் துளஸியின் நூலில் பார்க்கக் காணலாம். பரத்துவாசன் பரதனுக்கு 'கணேச' என்ற சொல்லுக்கே பக்திரஸத்தின் சித்தி, மங்களம்' என்ற பொருளைக் கூறுகிறார். 2.208 D

கடவுளர்

தேவர்கள் சாரதாவை அணுகி, இராமன் வனம் சென்றாலே தம் குறை நீங்கும் ஆதலின் அவனை மந்தரை வாயிலாகக் கைகேயியின் தூய சிந்தையைத் திரிக்க வேண்டினர்.

ஸரஸ்வதி தேவரின் தன்நலப் புன்மையைக் குறித்துக் கொண்ட கருத்து: தேவர் வாழ்வது உயர்ந்த உலகில், அவர்களுடைய சிந்தனைகளோ புல்லியன; பிறர் புகழுடன் வாழ்வதைக் காண தேவர் சகியார். 12-123

எனினும், மேலே நடக்க உள்ள நன்மைகளை உத்தேசித்து மந்தரை நாவில் நடமாடுகிறாள். 2.12 D

சித்திர கூடத்தில் பரதனுடைய வேண்டுகோளை ஏற்று இராமன் அயோத்திக்குத் திரும்பினால் 'தங்கள் பயன் கிட்டாதே' என இந்திரன் உள்ளிட்ட தேவர் அஞ்சினர்: இராமனிடம் சரண் புகுந்தனர். அதை அறிந்த இராமன் அவர்களுக்கு அபயம் அளித்தான். 2.265

தேவருடைய செயல்கள் தம் நலம் கருதியவை; நீதியைத் தழுவின அல்ல. இந்திரனுடன் தேவர் மறுபடியும் சாரதாவிடம் சென்று பரதனுக்கு மதிமயக்கம் உண்டாக்கி அவனை அயோத்திக்குத் திரும்பச் செய்ய வேண்டும் என இரக்கின்றனர்.

சாரதா அவர் புன்மையையும் தன்நலக் கருத்தையும் எண்ணி அவ்வாறு செய்ய மறுக்கிறாள். 2-295 D தேவர் நாணி ஒதுங்கினர்.

தசரதன் இராமனை வனம் போவதினின்று தடுக்க முயன்று தோற்றான். தன் தவறுக்காக இராமன் துன்பமுற வேண்டிய நிலைமையை எண்ணிக் கூறுகிறான்.

ஒருவன் தவறு செய்ய, அப்பாவத்தால் பிறன் துன்புறல் என்ன நீதி? கடவுள் வகுத்தது இவ்வாறோ? எனின், அவன் விளையாட்டு எவரும் அறிய ஒண்ணாதது.
2.48 (தோ)

விதியை நோகின்றனர் அவ்விதி என்ன செய்தது? ''வாழும் வழியைக் காட்டி நம்மை மரணத்துக்குக்கொண்டு சென்றது. அமுதத்தைக் காட்டி விஷத்தைத் தந்தது. (2.49-1) தெய்வம் சொன்னது ஒன்று; இன்று நடப்பது வேறொன்று. தெய்வம் முன்பு காட்டியதும் இப்போது, நாம் காண்பதும் வேறு ஆனவை''. 2.48-1

குகன், இலக்குவனிடம் கைகேயியைக் கடுமையாக விமர்சிக்கிறான். பொறுமையுடன் அதைக் கேட்ட இலக்குவன் கூறுவது :

''இவ் உலகில் ஒருவன் பிறன் ஒருவனுக்கு இன்பத்தையோ துன்பத்தையோ தர வல்லவன் அல்லன்: இன்ப துன்பங்கள் அவனவன் செயலின் விளைவுகளே '' (92-2) புணர்தல் - பிரிவு, நன்று - தீது, பகை - நட்பு, பிறப்பு - இறப்பு, நல்குரவு - செல்வம், செயல் - செய்தற்காலம் - யாவும் ஒருவன் தானேயோ, அன்றி அவன் மூதாதையரோ, சூழ் நிலையோ, ஆற்றியதே ; பிறர் தரவாரா (2.92-3)

பரதன் வதிட்டனுக்குக் கூறுவது : தாயும் தந்தையும் ஒருவனுடைய பிறப்புக்கு மட்டுமே காரணம் ஆவர். அவனுடைய வாழ்க்கையில், நிகழக்கூடிய நற்செயல், தீய செயல்கள், அவனுடைய பண்டை வினைகளின் பயனாகத் தெய்வம் தருவன. 2.255-3

இராமன்-சீதை-இலக்குவன் நடந்து செல்வதைக் கண்ட மக்கள் கூற்று ''விதியின் செயல் விபரீதமாக உள்ளது. விதியைக் கட்டுப்படுத்துவோர் இலர், விதி இரக்கமற்றது, பழிக்கு நாணாதது, சந்திரனுக்கு மறுவையும் குறைந்தழுகும் தொழுநோயையும் தந்தது; கல்ப தருவையும் நீர் நிறைந்த கடலையும் உவர்ப்பு ஆக்கிற்று. இந்த இளைஞர்களுக்குத் தந்த துன்பங்களைப் பாருங்கள்.

இவர்கள் காட்டில் வாழ்ந்து துன்பத்தை அநுபவிக்க வேண்டுமெனில், போகங்களை விதி யாருக்காக வகுத்தது? இவர்கள் நடந்து செல்வதாயின், வாகனங்கள் யாருக்கு ? தேர்களை எந்தத் தச்சன் கட்டுவான்? இவர்கள் புல்லில் படுக்க வேண்டியிருந்தால், பஞ்சணைகள் யாருக்காக? விதி இவர்களை மரத்தடியில் வாழவைத்தால், மாடமாளிகைகளை யாருக்காக நிருமித்தான்? இவர்கள் மரஉரிதரிக்க வேண்டியிருந்தால், விதி, ஏன்பட்டு ஆடைகளை வீணாக உண்டாக்குகிறான்? தாம் பெற்ற நன்மைதீமைகளை அளவு கோலாகக்கொண்டு மக்கள் விதியைப் போற்றுகிறார்கள், அன்றிப் பழிக்கிறார்கள்.

கோசலை ஸீதையை வாழ்த்துவது. கங்கையும் யமுனையும் பாயும் வரை உன் புகழ் நிலைபெறுவதாகுக. 2.68-4

ஸீதை கங்கையை வழிபட, கங்கை ஸீதையை வாழ்த்தியது. 'உயிரனைய கணவனுடனும் கொழுந்தனுடனும் நீ திரும்புவாய். உன் விருப்பங்கள் யாவும் நிறைவேறும். உன் புகழின் ஒளி உலகம் பரவும்' (2.103 தோ)

வனம் போகும் வழியில் மக்கள் : ''சேஷன் இந்தப் பூமியைத் தாங்கும் நாள் எல்லாம் நீ உன் கணவனுடன் சேர்ந்து இன்பமுடன் வாழ் வாயாக'' 117

பார்வதியைப் போல (ஒரே மனைவியை உடைய, அன்பைப் பகிர்ந்து கொள்ள வேறு ஒருத்தி இராத) கணவனுடைய காதலைப் பெறுவாயாக. 118.1
இது காளிதாசன் கூறுவது-குமார ஸம்பவம்...

விரதநூல் முனிவன் சொன்ன விதி நெறு வழாமை நோக்கி
வரதனும். இளைஞற்கு ஆங்கன் மா மணி மகுடம் சூட்டி
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து, நாளும்
கரை தெரிவு இலாத போகக் கடலினுள் இருந்தான் மன்னோ ... (1033)

வாழிய, சீர் இராமன்! வாழிய. சீதை கோமான்!
வாழிய, கௌ ச லே சை மணிவயிற்று உதித்த வள்ளல்!
வாழிய, வாலி மார்பும் மரா மரம் ஏழும் சாய
வாழிய கணை ஒன்று ஏவும் தசரதன் மதலை வாழி! (மிகைப்-6-1292)

பக்தி வலையில் படுவோன்...

அயோத்தி மீண்ட இராகவன் முடி சூடிக்கொண்டு தன்னுடன் இருந்த குகன், சுக்கிரீவன் முதலியோருக்கு தக்க பரிசுகளைக் கொடுத்து விடை கொடுத்து அனுப்பு கிறான். இறுதியாக எஞ்சுபவன் அனுமன் ஆவான். அவனுக்கு என்ன பரிசு கொடுப்ப தென்று இராமனுக்கே புரியவில்லை. கைம்மாறு கருதாமல் அனுமன் செய்த தொண்டு களையெல்லாம் அவ்வப்போது பாராட்டி உள்ளான் இராகவன். மருத்துவமலை வந்த பொழுது அனுமனை நோக்கித் தழுதழுத்த குரலில், ''ஐயனே! தசரதன் பிள்ளைகளாகிய நாங்கள் நால்வரும் முன்னரே இறந்துவிட்டோம். இப்பொழுதுள்ள நால்வரும் உன்னிடம் பிறந்த பிள்ளைகளாவோம் என்ற கருத்தில், ''நின்னில் தோன்றினோம் நெறியில் தோன்றினாய்'' (8812) என்று இராகவன் கூறித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். தந்தையின் ஸ்தானத்தில் இருக்கும் ஒருவனுக்கு எந்தப் பரிசினைத் தந்தாலும் அது குற்றமாகிவிடும். எனவே, இராகவன் அனுமனை நோக்கி,

''மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின் நோக்கி,
'ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த
பேர் உதவிக்கு யான் செய் செயல்பிறிது இல்லை; பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய்! பொருந்துறப் புல்லுக!' என்றான். (10351)

இப்பாடலில் உள்ள புதுமையையும், நுணுக்கத்தையும் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டு மரபுப்படி ஒருவரை ஒருவர் தழுவும்பொழுது, தழுவினவர் ஆளுமை மிக்கவர் என்றும் தழுவப்பட்டவர் ஒருபடி குறைந்தவர் என்றும் கருதுவது இயல்பு. இராமன் அனுமனைத் தழுவியிருந்தால் மிகச் சிறப்புடைய செயல் மரபுக்கு ஒத்ததாகும். ஆனால், ''அனுமனே! நீ என்னைப் பொருந்துறப்புல்லுக!'' என்று பேசுகிறான் கோசல நாடுடை வள்ளல். இன்றுவரை சீதைக்கும், இலக்குவனுக்கும், பரதனுக்கும் உரியனவாக இருந்த அத்தோள்கள் அவர்களைப் புல்லினவே தவிர, அவர்களால் புல்லப்படவில்லை. தொண்டின் பரிணாமமாக விளங்கும் அனுமனைப் பார்த்து, நீ என்னைப் புல்லுக என்று இராகவன் கூறும்பொழுது, தன்னைவிடத் தன் நாமத்தையே ஜெபிக்கும் அகங்கார, மமகாரங்களற்ற தொண்டனாகிய அனுமனை ஒருபடி உயர்த்திவிடுகிறான். இராகவன் பரம்பொருள் ஆதலின், தொண்டனை, பக்தனை என்னைப் புல்லுக என்று சொல்லும் பொழுது ஒரு தொண்டனின் பிடியில் பரம்பொருள் அகப்பட்டுக்கொள்ளுகிறான். குறியீட்டு முறையில் சொல்லுவதானால், பக்தனின் இருதயத்துக்குள், பரம்பொருள் புகுந்துவிட்டான் என்பதையே இது குறிக்கிறது.

''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே''

என்று வள்ளலாரும் ''பக்தி வலையிற் படுவோன் காண்க'' என்று மணிவாசகப் பெருந்தகையும் ''இறைவனோ தொண்டர் உள்ளத்து அடக்கம்'' என்று ஔவையும் கூறியது எவ்வளவு பொருத்தமானது என்பதை அறியமுடிகிறது.

[நன்றி : கம்பன் எடுத்த முத்துக்கள் — அ. ச. ஞா.]